தொண்டைமான் செப்பேடுகள்

புலவர் செ.இராசு, பிஎச்.டி.,

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தொண்டைமான் செப்பேடுகள்

1. புதுக்கோட்டை

2. அறந்தாங்கி அரசு

புலவர் செ. இராசு

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 005

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு: 274

திருவள்ளுவராண்டு 2035 கார்த்திகை - திசம்பர் 2004

நூல்	:	தொண்டைமான் செப்பேடுகள்
ஆசிரியர்	:	புலவர் செ.இராசு
மொழி	:	தமிழ்
பொருள்	:	கல்வெட்டியல்
பதிப்பு	:	முதற்பதிப்பு 2004
பக்கம்	:	8 + 231 = 239
தாள்	:	டி.என்.பி.எஸ்.மேப்லித்தோ 16 கிலோ
அளவு	:	டெம்மி 1/8
நூற்கட்டுமானம்	:	சாதாக்கட்டு
விலை	:	உரு. 70/-
படிகள்	:	1000 படிகள்
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் 613005 - இந்தியா

முனைவர் இ.சுந்தரமூர்த்தி
துணைவேந்தர்

அணிந்துரை

தொண்டைமான் மரபினர் தமிழகத்தில் பல்வேறு நிலைகளில் சிறப்புடன் வாழ்ந்தவர்களாவர். அரசில் உயர்ந்த பதவிகளை வகித்தனர். படைத்தலைவர்களாகவும் அமைச்சர்களாகவும் விளங்கினர். புதுக்கோட்டைப் பகுதியில் அரசநிலையிலும் பணியாற்றிப் பெரும் புகழ் பெற்றனர். அறந்தாங்கி அரசு மரபிலும் தொண்டைமான் அரசர்கள் புகழ் பெற்றிருந்தனர். இவர்களுடைய ஆட்சிச் சிறப்புகளைக் கல்வெட்டுகளும், செப்பேடுகளும் பாராட்டிப் போற்றுகின்றன.

தமிழிலும் பழைய இலக்கண இலக்கியங்களிலும் உரைகளிலும் தொண்டைமான் மரபினரைப் பற்றிய செய்திகள் உள்ளன. கலிங்கத்துப் பரணியில் கூறப்பெறும் கருணாகரத் தொண்டைமான் பெரும்புகழ் பெற்றுப் பொலிந்தவன். இங்ஙனம் பெரும்புகழ் பெற்று ஒளிர்ந்த தொண்டைமானைப் பற்றிய செப்பேடுகளை அரிதின் முயன்று ஆராய்ந்து கல்வெட்டறிஞர் முனைவர் புலவர் செ.இராசு இவ்வரிய நூலைத் தொகுத்தளித்துள்ளார். இலக்கண இலக்கியங்களில் காணலாகும் தொண்டைமான் குறித்த வரலாற்றுச் செய்திகளை இந்நூலின் முன்னுரையில் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

புதுக்கோட்டை, அறந்தாங்கிப் பகுதியில் கிடைத்த செப்பேடுகளை ஆராய்ந்து உருவாக்கிய இந்நூல் வரலாற்று ஆய்விற்குப் புதிய தகவல்களைத் தருவன. நூலாசிரியர் முனைவர் செ.இராசு அவர்கள் கல்வெட்டு, செப்பேடு ஆகியவற்றை ஆராய்ந்துரைக்கும் அறிஞர். அவர் உருவாக்கிய இந்நூல் இளம் தலைமுறையினருக்கும் வரலாற்று ஆர்வலருக்கும் அரிய செய்திகளைத் தரும் அரிய நூலாகும்.

நூலாசிரியர் முனைவர் செ.இராசு அவர்கட்கும் இந்நூலை நன்கு உருவாக்கித் தந்த தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறையினருக்கும் இனிய பாராட்டுதல்கள்.

இ.சுந்தரமூர்த்தி

இடம்: தஞ்சாவூர்
நாள்: 1.12.2004

தொண்டைமான் செப்பேடுகள்

1. புதுக்கோட்டை

பதிப்புரிமை பற்றிய குறிப்பு

இப்பதிப்பில் புதுக்கோட்டை: 2, 9, 11, 12, 14, 16, 18, 19, 21, 22. அறந்தாங்கி : 15, 16, 17, 20, 22 எண்ணுள்ள செப்பேடுகள் இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறை, முதன்மைக் கல்வெட்டாய்வாளர் அலுவலகத்தில் (Office of the Chief Epigraphist, Archaeological Survey of India, Mysore-5) பெற்ற ஒளிப்படங்கள், செப்பேட்டுப் படிகள் ஆகியவைகளைக் கொண்டு பதிப்பிக்கப் பெற்றன.

நன்றியுரை

தங்களிடமுள்ள செப்பேடுகளைப் படி எடுத்துக்கொள்ள அன்புடன் உதவிய கீழ்க்கண்டவர்கட்கு மனமார்ந்த நன்றி உரியது.

1) திருவாவடுதுறை ஆதீனத் தலைவர், தவத்திரு சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்.
2) தருமபுர ஆதீனத் தலைவர், தவத்திரு சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்.
3) திருப்பனந்தாள் காசிமடத்துத் தலைவர், தவத்திரு காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்.
4) முனைவர் கே.வி.ரமேஷ் அவர்கள், இயக்குநர், கல்வெட்டியல் பிரிவு, இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறை, மைசூர் - 5.
5) முனைவர் மாதவ் என்.கட்டி அவர்கள், முதன்மைக் கல்வெட்டாய்வாளர், இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறை, மைசூர் - 5.
6) இயக்குநர், அரசு அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை-8
7) காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், புதுக்கோட்டை.
8) பேராசிரியை திருமதி வள்ளி அவர்கள், காரைக்குடி.
9) முனைவர் நடன காசிநாதன் அவர்கள், இயக்குநர், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை - 28.
10) காப்பாட்சியர், இராமநாதபுரம் அருட்காட்சியகம், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, இராமநாதபுரம்.
11) தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர்.

புதுக்கோட்டைத் தொண்டைமான் செப்பேடுகள்

	முன்னுரை	-	1
1.	களத்தூர்ச் செப்பேடு (கி.பி.1709)	-	23
2.	கீரனூர்ச் செப்பேடு I (1732)	-	28
3.	துறுமாச் செப்பேடு (1732)	-	32
4.	காடங்குடிச் செப்பேடு (1739)	-	36
5.	காஞ்சிபுரம் செப்பேடு (1743)	-	40
6.	வாழைக்குறிச்சிச் செப்பேடு (1763)	-	44
7.	ஈரவயல் செப்பேடு -(1790)	-	48
8.	திருவிடைமருதூர்ச் செப்பேடு (1793)	-	53
9.	புதுக்கோட்டைச் செப்பேடு (1794)	-	58
10.	கூடலூர்ச் செப்பேடு (1796)	-	60
11.	கூத்தப்பன் சத்திரச் செப்பேடு I (1797)	-	64
12.	கூத்தப்பன் சத்திரச் செப்பேடு II (1797)	-	71
13.	வெண்ணைமுத்துப்பட்டிக் கல்வெட்டு (1798)	-	73
14.	அம்மணி சத்திரச் செப்பேடு (1799)	-	84
15.	காசிச் செப்பேடு (1800)	-	92
16.	திருக்கோகர்ணச் செப்பேடு (1803)	-	97
17.	மலையூர்ச் செப்பேடு (1803)	-	101
18.	சுப்பிரமணியன் சத்திரச் செப்பேடு (1803)	-	106
19.	கீரனூர்ச் செப்பேடு II (1804)	-	109
20.	முதலிபட்டிச் செப்பேடு (1805)	-	112
21.	திருச்சிராப்பள்ளிச் செப்பேடு (1805)	-	118
22.	தூவூர்ச் செப்பேடு	-	123
23.	சிங்கத்தாகுறிச்சிச் செப்பேடு (1804)	-	125
24.	நாஞ்சியூர்ச் செப்பேடு (1734)	-	128

அறந்தாங்கி அரசு தொண்டைமான் செப்பேடுகள்

1.	திருப்பெருந்துறைச் செப்பேடு I (கி.பி.1327)	-	133
2.	பிள்ளைவயல் செப்டு (1500)	-	135
3.	திருப்பெருந்துறைச் செப்பேடு II (1516)	-	138
4.	திருப்பெருந்துறைச் செப்பேடு III(1518)	-	140
5.	திருப்பெருந்துறைச் செப்பேடு IV(1519)	-	142
6.	திருப்பெருந்துறைச் செப்பேடு V (1526)	-	147
7.	திருப்பெருந்துறைச் செப்பேடு VI (1526)	-	149
8.	குமணப்பிள்ளை காணியாட்சிச் செப்பேடு (1530)	-	153
9.	திருப்பெருந்துறைச் செப்பேடு VII (1534)	-	159
10.	திருப்பெருந்துறைச் செப்பேடு VIII (1563)	-	163
11.	திருப்பெருந்துறைச் செப்பேடு IX (16 நூ)	-	169
12.	களக்குடிச் செப்பேடு (1603)	-	172
13.	கணக்கன்வயல் செப்பேடு (1654)	-	175
14.	புதுவைக்கோட்டைச் செப்பேடு (1680)	-	178
15.	சங்குபட்டணம் காணியாட்சிச் செப்பேடு (1696)	-	181
16.	ஏனாதிச் செப்பேடு (1716)	-	183
17.	ஏம்பல்வயல் செப்பேடு (1726)	-	188
18.	கீழ்ப்பாப்பனூர்ச் செப்பேடு (1728)	-	194
19.	மணமேல்கொடிச் செப்பேடு (1731)	-	198
20.	நாட்டாணிச் செப்பேடு (1740)	-	202
21.	அழுஞ்சியேந்தல் செப்பேடு (1741)	-	205
22.	பண்ணைவயல் செப்பேடு (1759)	-	209
23.	பெருவயல் செப்பேடு I	-	214
24.	பெருவயல் செப்பேடு II	-	217

தொண்டைமான் செப்பேடுகள்

முன்னுரை

'தொண்டைமான்' என்ற சொல்லே அரசர், அதிகாரம் செய்பவர், தலைவர் என்று பொருள் கொள்ளும்வண்ணம் வழங்கி வருகிறது. 'தோட்டி முதல் தொண்டைமான் வரை' என்ற பழமொழி வழங்கி வருவதைக் காணலாம்.

சங்க காலம் தொடங்கிப் பல்வேறு காலங்களிலும் தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும் 'தொண்டைமான்' என்ற பெயர் நின்று நிலவிச் சிறப்புற்று விளங்கி வருகிறது. தமிழகத்தில் 'ஆர்' விகுதி கொடுத்துச் சிறப்பித்துக் கூறும் மரபு தொண்டைமான் மரபேயாகும். பெரும்பாலும் அவர்கள் எல்லா இடங்களிலும் 'தொண்டைமானார்' என்றே அழைக்கப்பட்டுள்ளனர். இது அம்மரபுக்குத் தமிழ்மக்கள் கொடுத்த மரியாதையும், சிறப்பும், பெருமையும் ஆகும்.

இலக்கியங்களிலும், இலக்கண உரை மேற்கோள் பாடல்களிலும், கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் சிறப்புடன் குறிக்கப்பெறும் இம்மரபினர் தமிழகத்தில் பல்வேறு காலங்களில் பல்வேறு அரசர்களிடம் மதிப்புமிக்க உயர் பதவியில் அமர்ந்துள்ளனர். பலர் படைத்தலைவராகவும், அமைச்சர்களாகவும் இருந்துள்ளனர்.

ஆனால் தனி அரசர் என்ற நிலையில் கல்வெட்டுகளும், செப்பேடுகளும் பொறித்து ஆட்சி செய்தது புதுக்கோட்டை மாவட்டப் பகுதியில்தான். புதுக்கோட்டை அரசமரபு கி.பி.1686இல் ஏற்பட்டது. அதற்கு முன்பே 'அறந்தாங்கி அரசு' என்னும் மரபில் தொண்டைமான் அரசர்கள் அறந்தாங்கிப் பகுதியில் அரசு புரிந்துள்ளனர். எனவே தொண்டைமான் பெயர் பொறித்த இச்செப்பேடுகள் அவ்விரண்டு மரபுக்கும் உரித்தாகையால் அவ்வப் பெயர்களிலேயே பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

கிடைத்துள்ள மொத்தம் 48 செப்பேடுகளில் புதுக்கோட்டைத் தொண்டைமான் மரபுக்குரியவை 24. அறந்தாங்கி அரசு தொண்டைமான் மரபுக்குரியவை 24.

இங்குத் தொகுக்கப்பட்டுள்ள 48 செப்பேடுகளில் 6 செப்பேடுகள் ஏற்கனவே பதிப்பிக்கப்பட்டவை. (புதுக்கோட்டை 5, 13, 23, 24) (அறந்தாங்கி 47, 48) அவை து.அ. கோபிநாதராயரின் சங்கரமடத்துச் செப்பேட்டில் ஒன்றும், புதுக்கோட்டைச் சமஸ்தானத்துக் கல்வெட்டுத் தொகுதியில் ஒன்றும் பதிப்பிக்கப்பட்டுள்ளன. நான்கு செப்பேடுகள் ஆவணம் இதழ்களில் பதிப்பிக்கப் பெற்றன. (இதழ் 3, 13).

இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறை கல்வெட்டுப் பிரிவினரால் 15 செப்பேடுகள் படி எடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அவற்றின் மூல பாடங்கள் இன்னும் வெளியிடப்பெறவில்லை. ஏனைய 27 செப்பேடுகள் முதன்முறையாகப் படி எடுக்கப்பட்டு இங்கு வெளியிடப்படுகின்றன. திருவாவடுதுறை ஆதீனச் செப்பேடுகளை ச. கிருஷ்ணமூர்த்தி பதிப்பித்துள்ளார்.

புதுக்கோட்டைத் தொண்டைமான் செப்பேடுகளில் 5 செப்பேடுகள் முற்றுப் பெறாமல் குறையுடையனவாக உள்ளன (9, 12, 18, 19, 22). இவை அனைத்தும் ஒரே அரசருக்குரியவை. பல்வேறு காலங்களில் அளிக்கப்பட்ட இச்செப்பேடுகள் ஒரே காலத்தில் செப்பேட்டில் பொறிக்கப்பட்டிருக்கலாம். அரசன் இறந்தவுடன் இவை செப்பேட்டில் பொறிக்கப்பெறாமல் விடப்பட்டிருக்கலாம். ஏதாவது வேறு காரணங்களும் இருக்கலாம். அவை விளங்கவில்லை.

ஆற்றல்மிகு பழங்குடியினர்

தொண்டைமான்கள் எனப்படும் இம்மரபினர் மிகவும் தொன்மையானதொரு குடியினர். அவர்கள் தொன்றுதொட்டு வழிவழிவந்த அரசர் குடும்பத்தினர் அல்ல. ஆனால் அவர்கள் வலிமையாலும், பெருமையாலும் அரசு நிலைக்கு உயர்ந்தவர்கள்.

திருப்பதிப் பகுதியில் 'தொண்டைமான் கோட்டை' என்ற இடம் அவர்கள் பூர்வீகம் என்று கருதப்படுகிறது. அங்கு வாழ்ந்த கள்வர் மரபினர் வேளாண்மையில் ஈடுபட்டதோடு யானைகளைப் பிடிப்பதிலும், அவற்றைப் பழக்குவதிலும், அவைகளுக்கு ஏற்ற பயிற்சி அளிப்பதிலும் சிறந்து விளங்கினர். ராய தொண்டைமான்மீது பாடப்பெற்ற தொண்டைமான் 'அனுராகமாலை' என்னும் நூல் 'இந்திலமன் சிரங்க ராயனுக்கு ராயத்தொண்டை-மன்னன் பிடித்தனுப்பும் மால்யானை'

என்று கூறுவதால் பிற்காலம் வரை அவர்களுக்கு யானைத் தொடர்பு இருந்தது புலப்படுகிறது. இவர்கள் திறமையை மூவேந்தரும், பல்லவர்களும், தமிழகத்தை ஆட்சிபுரிந்த பிறமன்னர்களும் நன்கு பயன்படுத்திக் கொண்டனர்.

பேரரசர்கள் பலரிடம் பணிபுரிந்த இத்தொண்டைமான்கள் அறந்தாங்கி, அன்பில், கூரைக்குடி போன்ற இடங்களிலும் குடியேறி வாழ்ந்தனர். பிற்காலச் சோழர் காலத்தில் அவர்கள் அங்குக் குடியேறியிருக்க வேண்டும்.

கி.பி.1056ஆம் ஆண்டில் வெட்டப்பட்ட நார்த்தாமலை மலைக் கடம்பர் கோயிலில் உள்ள இரண்டாம் இராசேந்திர சோழன் கல்வெட்டில் 'தொண்டைமானார்' என்னும் அலுவலர் குறிக்கப் பெறுகிறார் (புதுக்கோட்டை சமஸ்தானக் கல்வெட்டுக்கள்-112). திருக்கோகர்ணத்தில் உள்ள இரண்டாம் குலோத்துங்கன் கல்வெட்டொன்றில் (கி.பி.1145) 'தொண்டைநாடு பிறந்துடையார்' என்பவர் குறிக்கப்பட்டுள்ளார் (பு.ச.க.120). இவர்கள் தொன்மையான தொண்டைமான்களுள் சிலர்.

சங்க இலக்கியமும் தொண்டைமான் மரபும்

சங்க காலத்தில் தொண்டைமான் மரபினர் வேங்கடமலைப் பகுதியை ஆட்சிபுரிந்தனர் என்பது

"விசைப்புறு யானை விறல்போர்த் தொண்டையர்
இனமழை தவழும் ஏற்றரு நெடுங்கோட்டு
ஓங்குவெள் அருவி வேங்கடம்"

என்ற அகநானூற்றுப் பாடலால் (213) விளங்குகிறது.

புறநானூற்றுப் பாடல் ஒன்றில் (95) தொண்டைமானின் ஆயுதக் கொட்டில் குறித்து அவ்வையார் அதியனிடம் பாடிய நிகழ்ச்சி இடம்பெறுகிறது. நற்றிணையில் தொண்டைமான் இளந்திரையன் பாடிய பாடல்கள் மூன்று (94, 99, 106) இடம் பெற்றுள்ளன. புறநானூற்றில் ஒரு பாடல் (185) தொண்டைமான் பாடியதாக உள்ளது. பெரும்பாணாற்றுப்படைப் பாட்டுடைத் தலைவனாகத் தொண்டைமான் இளந்திரையன் விளங்குகிறான். 'கொண்டியுண்டித் தொண்டையோர் மருக' (பெரும்.454) எனக் கடியலூர் உருத்திரங்கண்ணனார்

தொண்டைமானை அழைக்கின்றார். 'தொண்டையைச் சூடினோனது குடியில் உள்ளவன்' என்று உரையாசிரியர் நச்சினார்க்கினியர் விளக்கம் தருகிறார்.

'திரைதரு மரபின் உரவோன்' (பெரும்.31) என்னும் தொடருக்கு. உரை எழுதும் நச்சினார்க்கினியர் தொண்டைமான் மரபின் தோற்றச் செய்தியை விளக்குகிறார்.

> 'நாகப்பட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தே நாகலோகத்தே
> சென்று நாக கன்னிகையைப் புணர்ந்த காலத்து அவள்
> யான் பெற்ற புதல்வனை என்செய்வேன் என்றபொழுது
> தொண்டையை அடையாளமாகக் கட்டிக் கடலிலே விட
> அவன் வந்து கரையேறின் அவற்கு நான் அரசுரிமை
> எய்துவித்து நாடாட்சி கொடுப்பல் என்று அவன்கூற
> அவளும் புதல்வனை அங்ஙனம் வரவிடத் திரை
> தருதலின் திரையன் என்று பெயர் பெற்ற'

வரலாறு நச்சினார்க்கினியர் உரையில் காணப்பெறுகிறது. இந்நாக கன்னிகை மணிமேகலையில் (24 : 57) கூறப்பெறும் பீலிவளை என்பர் உ.வே.சாமிநாதய்யர்.

மதுரைக்காஞ்சி உரைப்பகுதியில் (190) சோழமண்டலம் போலத் தொண்டைமண்டலம் ஒரு நாடு என்பதை நச்சினார்க்கினியர் சுட்டுகிறார்.

இலக்கண நூல்களும் தொண்டைமான்களும்

வில்லும் வேலும் என்னும் தொல்காப்பியச் சூத்திர உரையில் (மரபியல் 83) 'மன்னர் மரபின் பின்னோர் எனப்படுவார் அரசு வேறு மரபில் குறுநில மன்னர் எனக் கொள்க; அவை பெரும்பாணாற்றுள்ளும் பிறவற்றுள்ளும் காணப்படும்' என்று பேராசிரியர் எழுதியிருத்தலால் இம்மரபினரைக் குறுநில மன்னராகப் பண்டையோர் கொண்டிருந்தனர் என்பது தெரிகிறது. அகத்திணை இயல் (54) மேற்கோள் பாடல் ஒன்றில்' தொண்டைப் பல்லவன்' என்பான் ஒருவன் குறிக்கப்பெறுகின்றான்.

இறையனார் அகப்பொருள் உரையும், நன்னூல் மயிலைநாதர் உரையும் 'இளந்திரையம்' என்ற ஒரு நூல் தொண்டைமான் இளந்திரையனால் செய்யப்பெற்றதை உணர்த்துகிறது. நன்னூல்

மயிலைநாதர் உரை (பக்.245) திரையனூர் என்ற ஊருக்குத் திரையனால் செய்யப்பட்ட ஊர் அல்லது திரையனது ஊர் என்று பெயர் கூறுகிறது.

யாப்பருங்கல விருத்தியிலும் (51), நேமிநாதத்திலும் (74), தொல்காப்பியச் செய்யுளியலிலும் (91) மேற்கோள் பாடல் ஒன்று எடுத்துக்காட்டப் பெற்றுள்ளது.

'பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ
பாவீற் றிருந்த புலவீர்காள் பாடுகோ
ஞாயிற் றொளியான் மதிநிழற்றே தொண்டையார்
கோவீற் றிருந்த குடை'

என்பது அப்பாடலாகும். மற்றொரு இலக்கண உரை மேற்கோள் பாடல்.

'வஞ்சி எளிய குருகெல்லாம் ; பஞ்சவன்
நான்மாடக் கூடலில் கல்வலிது;
சோழன் உறந்தைக் கரும்பினிது ; தொண்டைமான்
கச்சியுட் காக்கை கரிது'

எனத் தொண்டைமானையும் தலைநகரையும் புகழ்கிறது.

வீரசோழியம் யாப்புப் படலத்தில் (11) 'வெல்படைத் தொண்டைமான் விறற்சே னாபதி' என்பவர் பாராட்டப் பெறுகின்றார்.

அமிதசாகர முனிவரைக் கொண்டு யாப்பருங்கலக்காரிகை பாடுவித்த மரபினன். மிழலைநாட்டுவேள் காரிகைக் குளத்தூர்க் கண்டன் மாதவனைத் 'தொண்டை காவலன்' என்று தஞ்சை மாவட்ட நீடூர்க் கல்வெட்டுக் குறிக்கிறது. (Epigraphiya Indica XVIII, pp.64-69 ; ARE 534 of 1921).

இரும்பல்காஞ்சி என்னும் நூலில்

'கருங்கலி முந்நீரின் மூழ்காத முன்னம்
இருங்கழி மண்மகளை ஏந்தினவே யாயிற்
பெரும்பெய ரேனத் தெயிறனைய வன்றே
சுரும்பறை தொண்டையான் தோள்'

என்ற பாடல் காணப்படுகிறது. புறத்திரட்டில் (1476) இப்பாடல் எடுத்தாளப்பெற்றுள்ளது.

பிற்கால இலக்கியங்களுள் தொண்டைமான்கள்

கலிங்கத்துப்பரணி

கலிங்கத்துப் பரணிப் பாட்டுடைத் தலைவன் முதல் குலோத்துங்க சோழன் (1070–1118). அவனுடைய படைத்தலைவர் கருணாகரத் தொண்டைமான். அவன் தொண்டை நாட்டினன். ஆனால் சோழநாட்டில் குடியேறி வண்டுவாஞ்சேரி – வண்டாழஞ்சேரி என்ற ஊரை இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்தவன்.

கடற்கலிங்கம் எறிந்துசயத் தம்பம் நாட்டிக்
கடகரியும் வயமாவும் தனமும் கொண்டு
சுடர்படைவாள் அபயன்அடி அருளி னோடும்
சூடினான் வண்டையர்கோன் தொண்டை மானே!

என்ற கலிங்கத்துப்பரணி பாடல் மூலம் இது விளங்கும்.

விக்கிரம சோழன் உலா

விக்கிரம சோழன் கி.பி.1118 இல் முடி சூடினான். ஆனால் கி.பி.1096இல் முதல் குலோத்துங்க சோழன் காலத்தில் நடைபெற்ற முதல் கலிங்கப்போரில் விக்கிரம சோழன் பங்கேற்றான். கருணாகரத் தொண்டைமான் பன்னெடுநாள் உயிருடன் வாழ்ந்து விக்கிரம சோழன் காலத்திலும் வாழ்ந்திருக்க வேண்டும். விக்கிரம சோழன் அதிகாரிகளைக் கூறும் ஒட்டக்கூத்தரின் விக்கிரமசோழன் உலா

தென்னவரும் மாளவரும் சிங்களரும் தேற்றுதகை
மன்னவரும் தோற்க மலைநாடு – முன்னம்
குலையப் பொருதொருநாள் கொண்ட பரணி
மலையத் தரும்தொண்டை மானும்

என்று கூறுகிறது.

சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ்

திருக்கழுக்குன்றத்தில் திருத்தேர் செய்தளித்த செம்பிய வளவன் கழுக்குன்றன் தொண்டைமான் என்னும் சிறப்புப் பெயர் பெற்றான் என்று பிள்ளைத்தமிழ் சிறுதேர்ப் பருவப் பாடல் (6) விளக்குகிறது.

'வைவத் துரந்தாடும் உரகக் குலேசன்மகன்
மகனாகும் ஒருதொண்டைமான்
வாரித் திரைநல்கு மன்னன் பெரும்பேர்
வரம்பெற்ற வெற்றிகொண்டான்'

என்பது அப்பாடல் பகுதியாகும்.

கப்பற்கோவை

இந்நூலின் பாட்டுடைத் தலைவன் கருமாணிக்கன் பாண்டியர் அமைச்சனும் தளபதியும் ஆவான். இக்கருமாணிக்கன் அந்நூலில் தொண்டையர்கோன் என்று பாராட்டப் பெறுகின்றான் (11).

சேக்கிழார் புராணம்

பெரியபுராணம் பாடிய சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்க சோழனின் அமைச்சராகவும் (1133-50) விளங்கினார். அவருக்குப்பின் அவர் தம்பி சோழனின் அமைச்சர் ஆனார். அவர் பெயர் பாலறாவாயர். அவருக்குக் குலோத்துங்கச் சோழன் அளித்த பட்டங்களில் 'தொண்டைமான்' என்பதும் ஒன்றாகும்.

'என்று சொல்லஅவர் தமைஅழைத் தரசர்
இவரமைச் சரிவர் பட்டமும்
மன்றல் மாலைபுனை தொண்டை மான்என
வகுத்தபின் தமது மண்டலம்
அன்று வறுமைவர வந்த டைந்தவரை
ஆற்றல் செய்துதொண் டைமண்டலம்
நின்று காத்த பெருமான் எனத்தமது
பெயரை எங்கணும் நிறுத்தினார்'

என்பது சேக்கிழார் புராணப் பாடலாகும் (99).

கல்வெட்டுப் பாடல்கள்

முதற் குலோத்துங்கச் சோழனின் (1070 – 1118) படைத்தலைவராக விளங்கியவர் அரும்பாக்கிழான் மணவிற்கூத்தனான காலிங்கராயன் என்பவர். அவருக்குத் தொண்டையார்கோ, தொண்டையர்கோன், தொண்டையர்வேந்து, தொண்டையர்மன் என்றெல்லாம் பல சிறப்புப் பெயர் விளங்கின. அவர் தில்லையிலும், திருவதிகையிலும் பல்வேறு

திருப்பணிகள் செய்ததாக அத்தலப்பாடல் கல்வெட்டுகள் பல புகழுகின்றன.

'ஆடும் தெளிதேனை ஆயிர நாழிநெய்யால்
ஆடும் படிகண்டான் அன்றினர்க - ளோடும்
திறங்கண்ட தாளன் சினக்களிற்றான் ஞாலம்
அறங்கண்ட தொண்டையர்கோன் ஆங்கு'

'ஈசன் அதிகையில்வா கீசன் எழுந்தருள
மாசில் பெருங்கோயில் வந்தமைத்தான் - பூசல்
விளைவித்த வேணாடும் வெற்பனைத்தும் செந்தீ
வளைவித்தான் தொண்டையார் மன்'

என்பன முறையே தில்லை, திருவதிகைக் கல்வெட்டுப் பாடல்களாகும்.

கல்வெட்டில் தொண்டைமான்கள்

தமிழகம் முழுவதும் கல்வெட்டுகளில் தொண்டைமான்கள் என்ற பெயரைப் பரவலாகக் காண்கின்றோம். அவற்றுள் சில இயற்பெயராகக் காணப்படுகின்றன. சில பெயர்கள் அரசியல் அலுவலர்கட்கு அரசன் அளித்த பட்டப்பெயர் போலத் தெரிகிறது. பெரும்பாலும் கையெழுத்திடும் உரிமையுடைய அலுவலர்களாக அவர்கள் இருந்துள்ளனர்.

கரூர்-பசுபதீசுவரர் கோயில் – இரண்டாம் இராசேந்திரன் காலம்: 1051 – 1063

'இவை திருமந்திர ஓலை நாயகன் தொண்டைமான்
எழுத்து'

(தெ.இ.க. 3 – 22)

மேற்படி கோயில் – இரண்டாம் இராசராசன் காலம்: 1146 – 1163

'அற்சுதன் இராஜநாராயணன் தொண்டைமான்
எழுத்து'

(தெ.இ.க.3 – 20)

திருநள்ளாறு – இராசாதிராசன் காலம் : 1166 – 1186

'நித்த விநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து
விழியூருடையான் செந்நாடுடையான் உடைய

நம்பியாரான தொண்டைமானார்'

(தெ.இ.க.7 – 1026)

வேளூர் (செங்கம்) – இராசகேசரி காலம் : 10ஆம் நூற்றாண்டு

'மீய் கொன்றை நாட்டு மேல் வேளூருடைய
பொங்கல்த் தொண்டைமான்'

(தெ.இ.க.13 – 268)

திருப்புலிவனம் (செங்கல்பட்டு) – இரண்டாம் குலோத்துங்கன் காலம் : 1133 – 1150

'ஒய்மா நாட்டு ஆழ்ச்சியாக்கத்துக் குழபள்ளி
சிங்கநாத தொண்டைமான் சோழப் பெரியரையர்'

(தெ.இ.க. 6 – 327)

திருவோத்தூர் (செய்யாறு) – இரண்டாம் இராசராசன் காலம் : 1146 – 1163

'விளத்தூர் கிழவன் செந்தாமரைக் கண்ணன்
தொண்டைமானார்'

(தெ.இ.க. 6 – 327)

பனையவரம் (விழுப்புரம்) – முதற் குலோத்துங்கன் காலம் : 1070 – 1122

'ஜயங்கொண்டசோழ மண்டலத்து மனையில்
கோட்டத்து மனையில் நாட்டு அரும்பாக்கிழான்
அரையன் பொன்னம்பலக் கூத்தனான தொண்டைமானார்'

(தெ.இ.க. 8 – 752)

திருவாரூர் – முதலாம் குலோத்துங்கன் காலம் : 1070 – 1122

'நங்கொல்லரில் தொண்டைமான் கொல்லன்'

(தெ.இ.க. 6 – 327)

காளஹஸ்தி – முதலாம் இராசராசன் காலம் : 985 – 1014

'தொண்டைமாநார் ஆன கவிர பிடாரன்'

(தெ.இ.க. 17 – 328)

பெரியகுளம் – சடையவர்மன் குலசேகர பாண்டியன் காலம் : 1190 – 1218

'பாண்டி மண்டலத்து சீவல்லவன் திருநீல கண்டனான தொண்டைமான்'

(தெ.இ.க. 6 – 23 – 445)

வீரபாண்டியன் காலம் : 1254 – 1263

'அளநாட்டுப் புலிநல்லூர்த் தொண்டைமான்'

(தெ.இ.க. 23 – 425)

கல்லிடைக்குறிச்சி – சடையவர்மன் வீரபாண்டியன் காலம் : 1254 – 1263

'அளநாட்டுப் புதுவூர்த் திருநீலகண்டன் இராசாக்கள் நாயகரான தொண்டைமானார்'

(தெ.இ.க. 23 – 117)

இப்பெயர்கள் போலச் சிறப்பு அடைமொழிகள் எதுவும் இல்லாமல் தொண்டைமான் என்ற மட்டும் திருமுல்லைவாசல் (தெ.இ.க. 17 – 730), திருப்பலாத்துறை (தெ.இ.க. 8 – 577), திருத்துறைப்பூண்டி (தெ.இ.க.263), நங்கவரம் (தெ.இ.க. 8 –643), ஒட்டக்குடி (நன்னிலம் கல்வெட்டு 378 – 1978) போன்ற பல்வேறு ஊர்க் கல்வெட்டுகளில் குறிக்கப்பெறுகின்றன.

இவை 'தொண்டைமான்' என்ற பெயர் நாட்டில் பெற்றிருந்த பெருமையையும், சிறப்பையும், தலைமையையும் உணர்த்துகிறது.

பல்லவர் சிறப்புப் பெயர்

பல்லவ அரசர்கள் தொண்டைநாட்டுப் பகுதியை ஆட்சிபுரிந்த காரணத்தால் அவர்கள் 'தொண்டைமான்' என்று பெயர் பெற்றனர். ஒரு சிலர் பல்லவம் என்பது தொண்டைக் கொடிக்குப் பெயர் என்றும் தொண்டைக் கொடியோடு தொண்டைமான்கள் தொடர்புபடுத்தப் பெறுவதால் பல்லவர்களையும் தொண்டைமான்களையும் ஒரே மரபினர் ஆக்குவர். இது ஆய்வுக்குரியது. தொண்டைக்காய் என்பதும் ஒரு காயின் பெயர்.

(அ) தளவானூரில் உள்ள முதலாம் மகேந்திரவர்ம பல்லவனின் தமிழ்க் கல்வெட்டு அவனைத் தொண்டையந்தார் வேந்தன் என்று புகழுகிறது (பல்லவர் செப்பேடுகள் – முன்னுரை – 2).

(ஆ) பிற்காலப் பல்லவ மன்னன் கோப்பெருஞ்சிங்கன். அவனை ஒரு கல்வெட்டுப்பாடல் தொண்டைமன்னவர் என்று புகழுகிறது (வ.ஆ.மாவட்டம், வாயலூர்க் கல்வெட்டு, எபிகிராபியா இண்டிகா 23, ப.174).

(இ) பல்லவர்குலச் சிற்றரசன் பல்லவாண்டானான காடவராயன் என்பவன். வடஆர்க்காடு மாவட்டம் அத்திக்குளம் என்னும் ஊரில் உள்ள பாடல் கல்வெட்டொன்று அவனைத் தொண்டைமன்னன் என்று புகழுகிறது (தென்னிந்தியக் கல்வெட்டுக்கள், தொகுதி 12-எண் 125).

மேற்கண்ட கல்வெட்டுக்கள் மூலம் பல்லவர்கட்கும் தொண்டைமான்களுக்கும் ஏதோ தொடர்பு இருப்பதை நாம் அறியலாம்.

கொங்கு நாட்டில் தொண்டைமான்கள்

கொங்கு நாட்டில் கொங்கு வேளாளர்குடித் தலைவர்கள் சிலர் தொண்டைமான் என்ற சிறப்புப்பட்டம் பெற்றிருந்தனர். கொங்கு வேளாளர்கள் காஞ்சிபுரத்தோடு தங்களைத் தொடர்புபடுத்திக் கொள்ளுவர். காஞ்சி, நன்காஞ்சி என்று ஆறுகட்கும், காஞ்சிக்கோயில் என்று ஊருக்கும், காஞ்சிக்கூவல் நாடு, காஞ்சித்துண்டம் என்ற நாட்டுப் பகுதிகட்கும் பெயர்கள் கொங்கு நாட்டில் வழங்கப் பெறுகிறது.

(அ) திரிபுவன வீரபாண்டியன் என்ற கொங்குப் பாண்டியன் கல்வெட்டு பாரியூர் அமரபணீசுவரர் கோயிலில் கிடைத்துள்ளது. மூன்றாம் குலோத்துங்க சோழனின் விருதுப்பெயர்கள் சிலவற்றை இவன் சூடியுள்ளான். இவன் காலத்தில் வடகொங்கு நாட்டின் உட்பிரிவுகளான 20 நாடுகளில் அரசன் ஒட்டச்சு என்ற வரியைத் தளர்த்தினான் என்று அக்கல்வெட்டில் காணப்படுகிறது. அக்கல்வெட்டில் தொண்டைமானாருக்குக் கொடுக்க வேண்டிய 100 அச்சும் கட்டின பிறகு வேறு ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லை என்ற குறிப்பினைக் காணுகின்றோம். 13ஆம் நூற்றாண்டு இறுதியில் கொங்கு நாட்டார் வரி செலுத்தக்கூடிய தொண்டைமானார் என்ற சிறப்புப் பட்டம் பெற்ற தலைவனை இங்கு காணுகின்றோம்.

(ஆ) சேலம் மாவட்டத்தில் பருத்திப்பள்ளி அருகே உள்ள சௌதாபுரம் என்னும் ஊரில் வாழும் கொங்கு வேளாளர்களின் விழியகுலத் தலைவர்கட்குத் தொண்டைமான் என்னும் பட்டம் உண்டு. கீழ்கரைப்

பூந்துறை நாட்டின் இணைநாடு பருத்திப்பள்ளி நாடு. காஞ்சிபுரம் தொண்டைமான் மன்னர் தங்களுக்கு இந்தப் பட்டப்பெயரை அளித்ததாகக் கூறிக்கொள்ளுகிறார்கள். இன்றும் அவர்கள் தொண்டைமான் என்னும் பெயரைச் சூடிக் கொள்கின்றனர்.

கார்மேகக் கவிஞர் பாடிய கொங்கு மண்டல சதகத்தில் (71) இம்மரபினர் பற்றிய பாடல் ஒன்று உள்ளது.

பண்டைய நாளில்ஒன் னார்பஞ்சு போலப் பறந்தகலத்
திண்டிறல் காட்டிய காளையை நோக்கிஅச் செம்பியனும்
தொண்டைமான் என்னும் தனதுநற் பேரும் துரைத்தனமும்
வண்டரை மீதினில் பெற்றவ னுங்கொங்கு மண்டலமே.

(இ) பெரியார் மாவட்டம் தாராபுரம் வட்டம் மூலனூரில் கொங்கு வேளாளர்களில் பூச குலத்தினர் வாழ்ந்து வருகின்றனர். அக்குலத் தலைவர் தொண்டைமான் என்று அழைக்கப் பெறுகிறார். சேர சோழ பாண்டியர் மூவரையும் களப்பிர அரசர் சிறைவைத்தபோது மூவேந்தரையும் சிறையிலிருந்து விடுவித்துப் பெருமை கொண்டதால் காஞ்சிபுரம் தொண்டைமான் மன்னன் இவர்கள் முன்னோர் ஒருவருக்குத் தொண்டைமான் என்னும் பட்டம் கொடுத்தார் என்று கூறிக் கொள்ளுகின்றனர்.

ஒருமுறை சங்ககிரி சென்று நவாபு அரசரின் பேட்டி கிடைக்காமையால் அரசரின் ஆட்டுக்கிடாய்க் காதை அறுத்துப் பேட்டி கண்டார். அதனால் இம்மரபினர் வளர் கிடாயைக் காதறுத்த தொண்டைமான் பகதூர் என்ற பட்டப் பெயரைப் பெற்றனர். இவர்கள் மரபினர் அனைவருக்கும் தொண்டைமான் என்றே பெயர். இன்னும் அப்பெயரைச் சூட்டிக் கொள்ளுகின்றனர். இவர்களைப் பற்றிப் பல தனிப்பாடல்கள் கிடைத்துள்ளன. வாலசுந்தரக் கவிராயரின் கொங்கு மண்டல சதகத்தில் (72) இம்மரபைப் பற்றிய பாடல் ஒன்றுள்ளது.

கரையது மேல்கரை நாற்பத்தெண் ணாயிரம் கண்டகொங்கில்
முறையது கூறிய ஆதொண்டை மான்வந்து மூவர்தமைச்
சிறையது வாங்கிய பூசநல் தொண்டைமான் செம்மலென
மரபது காத்து நிலைகொள்ளு வோன்கொங்கு மண்டலமே.

கம்பநாத சுவாமியின் கொங்கு மண்டல சதகத்திலும் இம்மரபைப் பற்றிய பாடல் ஒன்று உள்ளது. அப்பாடலிலும் (16) தொண்டை மண்டலத்துத் தொண்டைமான் பட்டம் அளித்த செய்தி குறிக்கப்படுகிறது.

ஆதொண்டை மாலை தனைச்சூடிச் சொன்ன அகளங்கனும்
மோதண்ட மாகச் சமர்விடு ஆனையை முடிக்கிவிட்டே
நீதொண்ட மான்என்று பூசதன் கோத்திரம் நிலைமைகண்டு
வாதொண்ட மான்தொண்ட மானாக வாழ்கொங்கு மண்டலமே.

இத்தொண்டைமானின் முன்னோன் ஒருவன் களப்பிரரால் சிறை வைக்கப் பெற்றிருந்த மூவேந்தர்களை விடுதலை செய்தான் என்றும் கொங்கு, 24 நாட்டுத் தலைவனாக்கித் தன் பெயரான தொண்டைமான் என்னும் பட்டமும் அளித்தான் என்றும் அப்பாடல்கள் மூலம் தெரியவருகிறது.

பார்மீதில் வருகின்ற பரிதாபி வருஷத்தில்
  பங்குனிமூன் றாந்தியதியில்
பாண்டியன் சேரனுடன் சோழரை அச்சுதக்
  களப்பாளன் சிறையில்வைத்து
ஆராய்ந்து வருகின்ற போர்மன்னர் அவர்வெல்வாய்
  ஆதொண்டை மான்அழைத்து
அன்புபெறு மூவெட்டு நாடுனக் கெய்தவே
  ஆதொண்ட மண்டலத்தில்
தீராத இருபது நாலுகோட் டமுமளித்துத்
  தென்திசைக்கு ஏகுநாளில்
திறமான பூசகுல நல்லவன் எந்நாளும்
  செம்பொனால் செய்த முடியால்
தோராத வெற்றிபுனை ஆதொண்ட மான்வந்து
  தொண்டைமான் நீயென்றுதான்
சூழுலகில் இருபத்து நாலுநாடும் கண்டினிது
  தொண்டமாப்பட்டம் சூட்டினரே.

கண்ண குலத்தார் பட்டயம் தொண்டைமான் மூலனூர்ப் பகுதியில் ஆட்சி செய்ததை

'மூலனூர்த் தொண்டைமான் சாவடி கட்டிக்கொண்டு
சாவடி வாசலில் இருந்தார்கள்'

என்று குறிப்பிடும்.

ஓதாளர் குறவஞ்சியும்

'சொற்புகழ் மூலனூர் பூசகுலன் வாதுரு
தொண்டைமான் கொடுத்தது துணிந்துபார் சிங்கா'

என்ற தொண்டைமான் கொடையைப் பாராட்டும்.

(ஈ) பெரியார் மாவட்டம் தாராபுரம் வட்டம் வள்ளிஎறிச்சில் என்னும் ஊரில் கொங்கு வேளாளர்களில் பில்லகுலத்தைச் சேர்ந்த தலைவர்கள் தொண்டைமான் கவுண்டர் என அழைக்கப் பெறுகின்றனர்.

கொங்கு நாட்டில் நடைபெற்ற வேட்டுவர் வேளாளர் போராட்டத்தில் வேட்டுவப் படைத் தலைவன் கொங்குராயன் தலையை வெட்டி வேட்டுவர் ஆதிக்கத்தை ஒழித்து மதுரை மன்னனிடம் பரிசில் பெற்றிருக்க வேண்டியவர்கள் நாங்கள் என்று பழைய வரலாற்று நிகழ்ச்சிக்கு உரிமை கொண்டாடி மெக்கன்சி துரையிடம் விண்ணப்பம் செய்து கொண்டவர்கள். இம்மரபினர் இன்னும் இப்பெயரை வைத்துக் கொள்கின்றனர்.

(உ) சேலம் மாவட்டம் இராசிபுரம் கைலாசநாதர் கோயிலின் வெளியே ஒரு குத்துக்கல்லில் உள்ள ஒரு கல்வெட்டில்

'ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம பாண்டியத்
தொண்டைமான் ஓலை'

என்ற தொடர் காணப்படுகிறது.

புதுக்கோட்டை தொண்டைமான் மரபினர்

காஞ்சியிலிருந்து அன்பிலுக்கு வந்த இம்மரபினர் பல இடங்களில் குடியேறினர். பிலாவிடுதி, வடக்கலூர், கல்லாக்கோட்டை, கரம்பக்குடி, நெய்வேலி, நரங்கியப்பட்டு, அம்மணிப்பட்டு, பந்துவாக்கோட்டை, மங்கள வெள்ளாள விடுதி போன்ற இடங்களில் குடியேறினர்.

இங்குக் குடியேறிய கள்ளர் மரபினர் வடக்கு, தெற்குத் தெருவினர் எனப் பிரிந்தனர். வடக்குத் தெருவில் மணிக்கிரான், பன்றிகொண்டான், பிற்பன்றி கொண்டான், காடுவெட்டி, மேனாட்டரையன் என்ற 5 பிரிவினரும், தெற்குத் தெருவில் பல்லவரையன், தொண்டைமான், ராங்கியன், போர்ப்பன்றி கொண்டான், கலியிரான் என்ற 5 பிரிவினரும் அடங்குவர்.

கி.பி.1750இல் புதுக்கோட்டைச் சமஸ்தானத்தின் அரசவைக் கவிஞரான வெங்கண்ணா என்பவர் எழுதிய தொண்டைமான் வம்சாவளி என்னும் தெலுங்குக் காவியத்தில் இந்திரன் வழிவந்தவர்களே புதுக்கோட்டை மரபினர் என்று கூறப்படுவதுடன் அம்மரபில் வந்த பதினைந்து பெயர்களை அந்நூல் வரிசைப்படுத்திக் கூறுகிறது. (1) திருமால் (2) நமனா (3) பச்சை (4) தண்டகா (5) நமனா (6) திருமா (7) நமனா (8) பச்சை (9) நமனா (10) பச்சை (11) கிண்கிணி (12) தண்டகா (13) திருமா (14) பச்சை (15) ஆவுடை ராயத் தொண்டைமான் என்பன அப்பெயர்கள்.

விருதுகள் பெற்ற வீரர்

பதினைந்தாம் தலைமுறையினராக வந்த ஆவுடைத் தொண்டைமான் இராமேசுவர யாத்திரை வந்த விஜயநகர மன்னர் இரண்டாம் வெங்கடராயருக்குப் பாதுகாப்பு உதவிகள் பல செய்து, விஜயநகர மன்னரின் மதம் பிடித்த யானையை அடக்கினார். யாத்திரை வெற்றியடைய உதவினார். அதனால் மகிழ்ந்த விஜயநகர மன்னர் 'இராய' பட்டமும், அம்பாரி, முரசு, சிங்கமுகப் பல்லக்கு, மானியநிலம் அளித்துப் பாராட்டினார். இக்காலத்திலிருந்துதான் புதுக்கோட்டை அரசு வரலாறு தொடங்குகிறது. ஆவுடை இராயத் தொண்டைமான் 1661இல் இயற்கை எய்தினார்.

புதுக்கோட்டை மரபுத் தோற்றம்

ஆவுடை ராயத் தொண்டைமானுக்கு இரகுநாதராயத் தொண்டைமான் என்ற மகன் இருந்தான். தஞ்சை நாயக்க மன்னன் விஜயராகவ நாயக்கரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகி இராமேசுவர யாத்ரீகர் பாதுகாப்பை உறுதிப்படுத்தினார். தஞ்சை அரசரால் சிறப்பிக்கப்பட்டார்.

மதுரை நாயக்க மரபில் ஏற்பட்ட அதிகார மோதல் காரணமாக மன்னர் சொக்கநாதருக்கு எதிராக அதிகாரத்தைக் கைப்பற்றிய அழகாத்திரியை வென்ற ருஸ்தும்கான் என்ற மதுரைக் குதிரைப்படைத்

தலைவன் ஆட்சியைக் கைப்பற்றினான். மதுரைச் சொக்கநாதரின் மனைவி மங்கம்மாள் ஆலோசனையின்பேரில் இராமநாதபுரம் மன்னர் கிழவன் சேதுபதி ருஸ்தும்கானை வென்று ஆட்சியைச் சொக்கநாதரிடம் ஒப்படைத்தான். அப்போரில் இரகுநாதராயத் தொண்டைமான் சேதுபதி படையுடன் இணைந்து போரில் பேராற்றல் காட்டினார்.

முதலில் திருச்சி அரசு காவலராகப் பொறுப்பேற்ற இரகுநாதராயத் தொண்டைமானைச் சேதுபதி தம் படையில் சேர்த்துக்கொண்டார். சேதுபதிக்காகத் தொண்டைமான் எட்டயபுரப் போரில் வெற்றி பெற்று எட்டயபுரம் மன்னரைக் கொன்றார். இரகுநாதராயத் தொண்டைமானின் ஒரே தங்கையான காதலி நாச்சியாரைக் கிழவன் சேதுபதி திருமணம் செய்து கொண்டார்.

தம் நெருங்கிய உறவினரான இரகுநாதராயத் தொண்டைமானுக்குத் தனக்கு நிகரான அந்தஸ்துக் கொடுக்க வேண்டும் என்று எண்ணிய கிழவன் சேதுபதி புதுக்கோட்டைப் பகுதியைப் பன்னெடுங் காலமாக ஆட்சிபுரிந்த பல்லவராயர் மரபில் வந்த சிவந்தெழுந்த பல்லவராயரைக் கொன்று புதுக்கோட்டைத் தொண்டைமான் அரச மரபை 1686இல் ஏற்படுத்தி இரகுநாதராயத் தொண்டைமானைப் புதுக்கோட்டை மன்னராக்கினார்.

புதுக்கோட்டை மன்னர்கள்

இரகுநாதராயத் தொண்டைமான்	1686 – 1730
விஜய இரகுநாதராயத் தொண்டைமான் I	1730 – 1769
இராய இரகுநாதத் தொண்டைமான்	1769 – 1789
விஜய இரகுநாதத் தொண்டைமான்	1789 – 1807
விஜய இரகுநாதஇராயத் தொண்டைமான் II	1807 – 1825
இரகுநாதத் தொண்டைமான்	1825 – 1839
இராமச்சந்திரத் தொண்டைமான்	1839 – 1886
மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான்	1886 – 1928
இராஜகோபாலத் தொண்டைமான்	1928 – 1948

புதுக்கோட்டைத் தொண்டைமான் செப்பேடுகள்

புதுக்கோட்டைத் தொண்டைமான் செப்பேடுகள் 24 கிடைத்துள்ளன. இச்செப்பேடுகள் புதுக்கோட்டை அருங்காட்சியகத்திலும், திருப்பனந்தாள், திருவாவடுதுறை, தருமபுரம்,

சங்கர மடம் போன்ற மடங்களிலும், மத்தியத் தொல்பொருள் அளவீட்டுத்துறை கல்வெட்டுப் பிரிவிலும், ஒரு செப்பேடு தனிப்பட்டவரிடமும் கிடைத்தன. அவற்றுள் 23 செப்பேடுகள் தமிழிலும், ஒரு செப்பேடு தெலுங்கிலும் உள்ளன. 9 செப்பேடுகள் திருமடங்களுக்கு உரியன (5 திருப்பனந்தாள் காசிமடம், 1 திருவாவடுதுறை மடம், 1 தருமபுரம் மடம், 1 சங்கரமடம், 1 சூரியனார் கோயில் சிவாக்கிர யோகிகள் மடம்).

திருப்பனந்தாள் செப்பேடுகள் காசியில் செய்யப்பட்ட கொடைகளை உணர்த்துவன.

6 செப்பேடுகள் சத்திரங்களுக்கு உரியன. அடப்பன் கூத்தப்பன் சத்திரம் 2, அம்மணி சத்திரம் 1, அடப்பம் சுப்பிரமணியன் சத்திரம் 1,இருசப்ப முதலியார் சத்திரம் 1, சத்திரத்திற்குப் பாத்திரங்கள் 1.

4 செப்பேடுகள் அக்கிரகாரங்களுக்கு உரியவை (இரகுநாத காதலி ஆயிபுரம் அக்கிரகாரம், கீரனூர் பேரய்யா அக்கிரகாரம், கீரனூர் மங்களாம்பா சமுத்திர அக்கிரகாரம், நமணராய சமுத்திரம், மலையூர் இராமச்சந்திரபுர அக்கிரகாரம்).

தருமபுரம் மடத்துச் செப்பேடு வைத்தீசுவரன் கோயிலுக்கு உரியது. இதுவேயன்றித் திருச்சிராப்பள்ளித் தாயுமானவர் கோயிலுக்கும், திருக்கோகர்ணம் கோகருணேசுவரர் கோயிலுக்கும் கொடுக்கப்பட்ட கொடையை இரு செப்பேடுகள் விளக்குகின்றன. ஒரு செப்பேடு சிங்கத்தாகுறிச்சி சஞ்சீவிராயர் கோயிலுக்குரியது.

பெரும்பான்மையான கொடைகள் அமாவாசை, பவுர்ணமி நாட்களிலும் சில குறிப்பாகக் கிரகணம் வந்த நாட்களிலும் அளிக்கப்பட்டுள்ளன.

பெரும்பான்மையான செப்பேடுகளில் 'ஸ்ரீ ராமஜெயம்' என்ற தொடர் பெரிய தெலுங்கு எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன. பல செப்பேடுகளில் அழகான வரைகோட்டு ஓவியங்கள் உள்ளன. அவை ஆங்காங்கு விளக்கப்பட்டுள்ளன.

செப்பேடுகளில் ஊர்ப்பகுதிகளும் ஊரில் அனுபவிக்கப்படும் உரிமைகளுமாகக் கீழ்க்கண்ட சொற்கள் பயின்று வந்துள்ளன.

அனாதிதரிசு, ஆவிரை, உடைப்பு, ஊரணி, ஏந்தல், ஓடை, கிணறு, குட்டை, குளம், குரப்பிணி, குளிப்பு, கொளிஞ்சி, திட்டு, திடல், தேன்படுபொதும்பு, தொரவு, தோப்பு, நஞ்சை, நத்தம், நிட்சேபம், நிதி, படுகை, பாசி, பிறவடை, புன்செய்,மரம், மரவடை, மாவடை, மீன்படுபள்ளம் என்பன அவை.

பல்வேறு வரிகள், வருவாய்த்துறை பற்றிய சொற்கள் இச் செப்பேடுகளில் இடம்பெற்றுள்ளன. ஆளமஞ்சி, இடங்கை, இடுகாடு, இடை, இறை, ஊழியபாழியும், காணிக்கை, கிணறு, கொட்டிய எருது, சுரபிப்பசு, சேத்துக் காணிக்கை, செம்புவிலை, சீட்டு, சொர்ணாதாயம், நீராணிக்கம், படுதுறை, பலவரி, பள்வரி, பல சுதந்திரம், பொடிவிலாடம், பாசிவிலை, புல்லுவரி, பெட்டி, பைங்குடி, மடத்துவரி, யாவிரை, வகையறுப்பு, வண்டில்மாடு, வரிவலை, வலங்கை, வேண்டுகோள்வரி, விருட்சம் என்பன அவை.

அறந்தாங்கி அரசு தொண்டைமான்கள்

வரலாற்றுப் பெருமையும், இலக்கியச் சிறப்பும் உடைய தொண்டைமான் மரபில் தோன்றிய ஒரு கிளையினரே அறந்தாங்கி அரசு தொண்டைமான்கள் ஆவர். அவர்கள் எப்பொழுதும் ஆதிக்கம் செலுத்தும் பேரரசர்களுக்கு உட்பட்டு அவர்கட்குப் பணிந்து தம் அதிகாரத்தைச் செலுத்தி வந்தனர். தேவைப்பட்டபோது அவர்கட்குப் போர் முதலியவற்றில் பேருதவியாக இருந்துள்ளனர்.

பெருந்தொகையில் மு.இராகவையங்கார் தொகுத்துள்ள பாடல் ஒன்றில் (எண் 1183) அறந்தாங்கும் தொண்டை அரசர்கள் சோழர்கட்கும், பாண்டியர்கட்கும், சேரர்கட்கும் பெரும் நிழலாய்த் தோன்றுபவர்கள்; அவர்கள் கற்றறிந்த புலவர்களைத் தாங்குபவர்கள்; உலகம் முழுவதையும் தாங்கக் கூடியவர்கள் என்ற அறந்தாங்கி அரசர்கள் (தொண்டைமான்கள்) சிறப்பிக்கப் பெறுகின்றனர். அப்பாடல்

'வெற்றிபுனை தாதகிக்கும் வேம்புக்கும் பெண்ணைக்கும்
சுற்றும் பெருநிழலாய்த் தோன்றுமே - கற்றோர்
திறம்தாங்கும் தாங்கும் செகமுழுதும் தாங்கும்
அறம்தாங்கும் தொண்டை அரசு'

என்பதாகும்.

15ஆம் நூற்றாண்டிலிருந்து 18ஆம் நூற்றாண்டுவரை அறந்தாங்கி அரசு மரபில் வாழ்ந்த பலருடைய பெயர்கள், அவர்களைவிட அதிகாரத்தில் சிறந்து விளங்கிய அரசர் பெயர்களைத் தாங்கி உள்ளமை புலப்படும்.

விக்கிரம பாண்டியத் தொண்டைமான்
சுந்தர பாண்டியத் தொண்டைமான்
குலசேகரத் தொண்டைமான்
இலக்கண தெண்ணாயக்கத் தொண்டைமான்
நரசநாயக்கத் தொண்டைமான்
அச்சுதநாயக்கத் தொண்டைமான்
இரகுநாதநாயக்கத் தொண்டைமான்
அச்சுதப்ப நாயக்கத் தொண்டைமான்

போன்ற பெயர்களில் பாண்டியர், விசயநகர அரசர், சேதுபதிகள், தஞ்சை நாயக்கர் பெயர்களின் தாக்கத்தை காணுகின்றோம். இப்பெயர்கள் அவ்அரசர்கட்கும் அறந்தாங்கி அரசுக்கும் உள்ள தொடர்பை நன்கு விளக்குகிறது.

ஆவுடையார் கோயில், ஆளப்பிறந்தான், பிள்ளைவயல், அறந்தாங்கி, கோவிலூர், பரமண்டூர், வளவர்மாணிக்கம், பழுங்கரை, பிரான்மலை, திருவரங்குளம், தாஞ்சூர், மணியம்பலம், குறும்பூர் போன்ற ஊர்களில் அறநதாங்கி அரசுத் தலைவர்கள் பற்றிய பல கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன.

புதுக்கோட்டை அரச மரபு தோன்றுமுன் ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகட்கு முன்பே தோன்றி ஆண்ட பரம்பரை அறந்தாங்கி அரசு பரம்பரையாகும். அம்மரபில் பலருடைய பெயர்கள் கிடைத்துள்ளன. இவர்களுட் சிலர் அறந்தாங்கி அரசுத் தலைவர்களின் முன்னோராக இருக்கலாம்.

வளர்த்து வாழ்வித்த பெருமாள் தொண்டைமான் – 1201
திருநெல்வேலியுடையாரான தொண்டைமான் – 1293
(இரண்டாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் அமைச்சர்)
விக்கிரம பாண்டியத் தொண்டைமான் – 14 நூற்.
குலசேகரத் தொண்டைமான் – 1426

ஆளுடை நயினாத் தொண்டைமான் – 1434
சூரியதேவர்த் தொண்டைமான் – 1443
மழவல்லப் பெருமாள் தொண்டைமான் – 1443
அழகிய மணவாளப்பெருமாள் தொண்டைமான் – 1443
இலக்கண தெண்ணாயக்கத் தொண்டைமான் – 1453
திருநெல்வேலிப் பெருமாள் தொண்டைமான் – 1465
இன்பவனப் பெருமாள் தொண்டைமான் – 1476
சுந்தரபாண்டியத் தொண்டைமான் – 1484
ஏகப்பெருமாள் தொண்டைமான் – 1482
தேவராயத் தொண்டைமான் – 1482
அதிசூரராமத் தொண்டைமான் – 1485
தீராவினை தீர்த்தான் தொண்டைமான் – 1497
ஆவுடை நயினாத் தொண்டைமான் – 1499
பொன்னம்பலநாதத் தொண்டைமான் – 1514
வீர வினோதத் தொண்டைமான் – 1536
ஆண்டியப்ப அச்சுத நாயக்கத் தொண்டைமான் – 1577
தியாகராசர் நரசநாயக்கத் தொண்டைமான்– 1577
அச்சுத நாயக்கத் தொண்டைமான்
இரகுநாத வணங்காமுடித் தொண்டைமான் – 1713
அருணாச்சல வணங்காமுடித் தொண்டைமான் – 1740

ஆகியோர் பெயர்கள் கல்வெட்டுகளில் காணக் கிடைக்கின்றன. இவர்களுள் பொன்னம்பலநாதத் தொண்டைமான், ஏகப்பெருமாள் தொண்டைமான் ஆகிய இருவர் கல்வெட்டுகளே மிகுதியாக அகப்படுகின்றன.

அறந்தாங்கி அரசு தொண்டைமான் செப்பேடுகள்

அறந்தாங்கி அரசு தொண்டைமான் செப்பேடுகள் 24 கிடைத்துள்ளன. அவற்றுள் 12 திருப்பெருந்துறைக்கு (ஆவுடையார் கோயில்) உரியன (1, 2, 3, 4, 5, 6, 7, 9, 10, 11, 12, 14). இரண்டு செப்பேடுகள் (16, 17) அக்கிரகாரம் அமைத்ததைக் கூறுகின்றன. நான்கு செப்பேடுகள் நிலம் விற்பனை செய்தது, காணியாட்சியாக நிலம் கொடுத்தது ஆகிய செய்திகளைக் கூறுகின்றன (8, 13, 15, 22). இரண்டு செப்பேடுகள் திருவாவடுதுறை ஆதீனத்திற்கும் (9, 21), ஒரு செப்பேடு (18) காசி மடத்திற்கும் (20) திருவாரூர்க் கோயிலுக்கும் உரியதாகத் திகழுகிறது.

இச்செப்பேடுகள் 24இல் 16 செப்பேடுகள் திருவாவடுதுறை ஆதீனத்தில் கிடைத்தன. 4 செப்பேடுகள் எழும்பூர் அரசு அருங்காட்சியகத்திலும், ஒரு செப்பேடு இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறையின் கல்வெட்டுப் பிரிவிலும், ஒரு செப்பேடு திருப்பனந்தாள் காசி மடத்திலும் கிடைத்தன. திருவாவடுதுறை ஆதீனத்திற்கும் அறந்தாங்கி அரசு தொண்டைமான் குடும்பத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பு அதிகமான செப்பேடுகள் அங்குக் கிடைத்ததன் மூலம் புலனாகிறது.

இச்செப்பேடுகளில் எட்டுச் செப்பேடுகள், செப்பேடுகளின் அமைப்பிலிருந்து மாறுபட்டுக் கல்வெட்டின் நகல்களாகத் தோன்றுகின்றன (1, 2, 3, 4, 5,6, 7, 11). பல்வேறு காலங்களில், பல்வேறு இடங்களைச் சேர்ந்த அவை ஒருகாலத்தில் தொகுத்து ஒரே அளவுள்ள செப்பேடுகளில் ஒரேமாதிரியான எழுத்தமைதியில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். அவற்றுள் ஒருசிலவற்றிற்குக் கல்வெட்டு நகலும் கிடைத்துள்ளன.

அவற்றுள் மூன்று பிற்காலப் பாண்டியர் காலத்தன என்பது குறிப்பிடத்தக்கது (மாறவர்மன் குலசேகரன், மாறவர்மன் வீரபாண்டியன், மாறவர்மன் ஸ்ரீவல்லபதேவர்).

கிராமத்திற்கு உரியவர்கள் அனுபவிக்கும் உரிமைகளாகவும் வரிகளாகவும் கீழ்க்கண்டவை கூறப்படுகின்றன.

காய்மரம், குழைமரம், நிதி, நிட்சேபம், ஜலம், பாஷாணம், நத்தம், குளம், சேத்தலைக்கூலம், நஞ்சை, புஞ்சை, படுகை, பட்டமரம், குளவாய்த்தலை, கோயில் சுவந்திரம், குளச்சுவந்திரம், வலையடுமை, பறையடுமை, பட்டடை, தலைவரி, செக்கிறை. அட்டபோக சுவாமியங்கள், தொண்டைமான் கொள்ளும் திறை உபாதிகள் என்பன.

18 சுதந்திரம் என்பவையும் சுட்டிக் கூறப்படுகின்றன. அவை ஆவிரை, கொளிஞ்சி, அறுகு, தாளிவைப்பு, செம்பு, மாவடை, மரவடை,மேல் நோக்கிய விருட்சம், கீழ் நோக்கிய கிணறு, கோவில், குளம், பெருநீர்நிலை, சிறுநீர்நிலை, நீர்வரும் ஆறு, தான் போகும் குளக்கால், பறைமை, வலைமை, அம்பலம், உம்பலம் (சொல் சுவந்திரம்) என்பன.

நன்றியுரை

'தொண்டைமான் செப்பேடுகள்' என்னும் ஆய்வை மேற்கொண்ட போது அதற்கு அனுமதி அளித்து வேண்டிய உதவிகளையெல்லாம் செய்து உதவிய முன்னாள் துணைவேந்தர் முனைவர் ச.அகத்தியலிங்கம் அவர்கட்கும், இந்நாள் துணைவேந்தர் முனைவர் சி.பாலசுப்பிரமணியம் அவர்கட்கும் நன்றி உரியதாகுக.

ஆய்வு நிகழுங்கால் ஏற்பட்ட ஐயங்களையெல்லாம் போக்கித் தக்க அறிவுரைகள் வழங்கி வழிகாட்டியாகத் திகழ்ந்த சுவடிப்புலத் தலைவரும், கல்வெட்டியல்துறைத் தலைவருமாகிய முனைவர் எ.சுப்பராயலு அவர்கட்கும், என் ஆய்வில் ஆர்வம் காட்டிய கல்வெட்டியல்துறையைச் சார்ந்த முனைவர் அ.கிருட்டினன், முனைவர் கா.இராசன், அரிய கையெழுத்துச் சுவடித்துறையைச் சேர்ந்த முனைவர் ம.சா.அறிவுடைநம்பி ஆகியோருக்கும் என் நன்றி உரியதாகுக.

'தொண்டைமான் செப்பேடுகள்' என்னும் இத்தொகுப்பு நூலை வெளியிட அனுமதியளித்த தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்கட்கும், விரைந்து அச்சிட ஏற்பாடு செய்து பதிப்புப் பணிக்கு உதவிய தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை, இயக்குநர் பொறுப்பு முனைவர் ஆறு. இராமநாதன் அவர்கட்கும் என் மனமார்ந்த நன்றி உரியதாகுக.

செ. இராசு

1. களத்தூர்ச் செப்பேடு

இருக்கும் இடம்	:	காரைக்குடி தமிழ்ப் பேராசிரியை வள்ளி அவர்கள் இல்லம்
அரசன்	:	ரகுநாத சேதுபதி காத்த தேவர் (ராய தொண்டைமானார், ரகுநாதராய தொண்டைமானார்)
காலம்	:	20-11-1709
மொழி	:	தமிழ்
அளவு	:	27 செ.மீ. x 16 செ.மீ.

அமைப்பும் செய்தியும்

இச்செப்பேடு துளை இல்லாத அழகிய கைப்பிடியை உடையது. கைப்பிடியின்கீழ் 'ஸ்ரீ ஸுபமஸ்து' என எழுதப்பட்டுள்ளது. கிரந்தச் சொற்கள் சற்று அதிகம் கலந்துள்ள செப்பேடு.

1639இல் விசயநகர மன்னர் பெரிய வேங்கடராயர் (1630 – 1642) இராமேசுவரம் யாத்திரை வந்தார். யாத்திரை சிறப்பாக நடைபெற உதவி புரிந்தவர் கரம்பக்குடி ஆவடை தொண்டைமான் என்னும் கள்ளர் சமூகப் பெருவீரர். அவருக்கு விசயநகர மன்னர் 'ராய' என்னும் பட்டம் கொடுத்துச் சிறப்பித்தார். ஆவடைராயத் தொண்டைமான் என அவர் அழைக்கப்பெற்றார். அவர் சேதுபதிமீது பாசம் கொண்டவர். தன் மகனுக்கு இரகுநாதராயத் தொண்டைமான் என்னும் பெயரைச் சேதுபதி நினைவாகச் சூட்டினார். ஆவடைராயத் தொண்டைமான் 1661இல் காலமானார்.

கிழவன் சேதுபதி என்னும் ரகுநாத சேதுபதி காத்த தேவரவர்கள் கரம்பக்குடியைச் சேர்ந்த அந்த ஆவுடை தொண்டைமானார் அவர்கள் மகன் ரகுநாதராயத் தொண்டைமானார் அவர்களைத் தம் படைத்தலைவராக நியமித்தார். ஆவடைராயத் தொண்டைமானார் மகளும் ரகுநாதராயத் தொண்டைமானாரின் சகோதரியுமான காதலி நாச்சியாரைக் கிழவன் சேதுபதி (ரகுநாத சேதுபதி காத்த தேவர்) திருமணம் செய்து கொண்டார். கிழவன் சேதுபதியின் 47 மனைவிமாருள் இவர் இரண்டாமவர்.

தம்முடைய மைத்துனர் இரகுநாதராயத் தொண்டைமானுக்குப் பெருமை தரவேண்டும் என்பதற்காகவே புதுக்கோட்டைத் தொண்டைமான் அரச மரபினை கி.பி.1686இல் கிழவன் சேதுபதி ஏற்படுத்தினார். இரகுநாதராயத் தொண்டைமான் தன் 45ஆம் வயதில் புதுக்கோட்டை அரசராசனார் (1686 – 1730).

இச்செப்பேட்டில் காதலி நாச்சியார் 'ரெகுநாத சேதுபதி காத்த தேவரவர்கள் தர்மபத்நியான ராய தொண்டைமானார் புத்ரி ரெகுநாதராய தொண்டைமானார் சஹோதரியரான காதலி நாச்சியாரவர்கள்' என்று குறிக்கப் பெறுகிறார். அப்பெயர் இராமேசுவர அம்மன் 'மலைவளர் காதலி' என்ற பெயரின் ஒரு பகுதியாகும்.[1] அப்பெயர் 'பர்வதவர்த்தினி' என்ற பெயரின் தமிழாக்கமாகும். 20–11–1709 அன்று தேர்போகி நாட்டில் உள்ள களத்தூருக்கு 'ரெகுநாத காதலி ஆயிபுரம்' என்று பெயர் மாற்றி 55 பாகமாகப் பிரித்து 55 அந்தணர்களைக் குடியேற்றிக் கொடையாக அளிக்கப்பெற்று அக்கிரகாரம் ஏற்படுத்திய கொடைச் செய்தி இச்செப்பேட்டில் குறிக்கப் பெற்றுள்ளது.

அப்பகுதியில் பல களத்தூர்கள் இருப்பதால் இக்களத்தூர் தேர்போகி களத்தூர் என்று அழைக்கப்பட்டது. இன்று மக்கள் சுருக்கி, அதனை டி.களத்தூர் என அழைக்கின்றனர்.

இக்கொடை இராமேசுவரத்தில் தனுஷ்கோடிக் கரையில் வீரம நல்லூரில் இருக்கும் வெங்கடேஸ்வர ஐயர் மகன் சங்கர நாராயண ஐயர் கையில் தானமாகக் கொடுக்கப்பட்டது. இக்கொடை கொடுக்கப்பட்ட நாள் அமாவாசை என்பது குறிப்பிடத்தக்கது.

களத்தூருக்கு எல்லையாகக் கிள்ளிக்குடிக் கண்மாய், தேர் போகியில் தேனாறு, கொட்டாங்குடி வயல், திருத்தங்கூர் பாம்பாறு ஆகியவை கூறப்பட்டுள்ளன.

---

1. இப்பெயரைக் (1)கதலி என்றும் (சிரஞ்சீவி, சேதுபதி வரலாறு, ப.63 மனோகரன்,மீ., கிழவன் சேதுபதி, ப.72) (2)காத்தாயி என்றும், (தமிழக வரலாறு, மணிமேகலைப் பிரசுரம்), (3)காட்டேரி என்றும் (நரசிம்ம நாயுடு, தட்சிண இந்திய சரித்திரம்) குறிக்கின்றனர். அவை பிழையானவை. திருஞானசம்பந்தர் தேவாரம் 3 : 101 : 3. தாயுமானவர் இப்பெயரைக் குறிக்கிறார்.

நஞ்சை, திட்டு, திடல், மாவடை, மரவடை, கிணறு, மரம், குளம், குட்டை, ஏந்தல், பிறவடை, பாசி, படுகை, ஆவிரை, கொளுஞ்சி, தேன்படு பொதும்பு, ஊரணி, உடைப்பு, மீன்படு பள்ளம், குரப்பிணி, குளிப்பு முதலிய எல்லாம் கொடையாக அளிக்கப்பெற்றன.

பள்வரி, பலவரி, மடத்துவரி, வேண்டுகோள்வரி, செம்புவிலை, காணிக்கை, வண்டில்மாடு, கொட்டில் எருது, சுரபிப்பசு, பெடிவிலாடம், நீராணிக்கம் இவைகளில் உண்டான சகல வரியையும் நீக்கிச் சர்வமானியமாகக் கொடையாக இவ்வூர் கொடுக்கப்பட்டது.

இச்செப்பேடு சேதுபதி செப்பேடாயினும் இரண்டு தொண்டைமானார் பெயரும், தொண்டைமானார் குடும்பத்துப் பெண் காதலி நாச்சியாரும் குறிக்கப்பட்டுத் தொண்டைமான் - சேதுபதி வரலாற்றுத் தொடர்பைக் கூறும் காரணத்தால் இத்தொகுப்பில் சேர்க்கப்பெற்றது.

இன்றைய புதுக்கோட்டை மரபுத் தொண்டைமானார் பெயர் குறிக்கப்பெறும் முதல் செப்பேடு என்னும் பெருமை இச்செப்பேட்டுக்கு உண்டு.

மூலம்

முதல் பக்கம்

ஸ்ரீ ஸுபமஸ்து

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாஹந சகாப்தம் 1631 இதின் செல்லாநின்ற விரோ
2. திநாம ஸம்வத்ஸரத்தில் தெக்ஷிணாயநத்தில் ஸரம ரிதுவில் கார்த்திகை மீ ல் கிர்ஷ்ண
3. பக்ஷத்தில் அமாவாஸையும் ஆதித்யவாரமும் அனுராயர் நட்சத்திரமும் ப்ரிதிநாம யோக
4. மும் நாகவாகரணமும் ஸுபயோக ஸுபகரணமும் கூடின புண்ணியதிநத்தில், தே
5. வை நகராதிபந், ஸேதுமூல ரக்ஷாதுரந்தரந்.(ராமநாதஸ்வாமி கார்யா துரந்தர)

6. ராமநாத ஸ்வாமி கார்ய துரந்தரந், ஸிவபூஜா துரந்தரந், பரராஜ சேகரன்,
7. பரராஜகஜ ஸிம்ஹும், ரவிகுலசேகரந், ரவிமாத்தாண்டன், சொரிமுத்துவன்
8. னியன், ஸ்வஸ்தி ஸ்ரீமந் மகாமண்டலேஸ்வரந், அரியராயதள விபாடன், பாஷை
9. க்குத் தப்புவார் கண்டன், மூவராயிர கண்டன், கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடாதா
10. ன், பட்டமானங் காத்தான், துட்டராயிர கண்டன், புவநேக வீரன், வீரகஞ்சுகன், வீரவள
11. நாடன், வீரவெண்பாமாலை, இளஞ்சிங்கந் தளஞ்சிங்கம், பகைமன்னர் சிங்கம், துரை
12. ராயன், ஆத்திறப்பாச்சி, கடலில்ப்பாச்சி, மதப்புலி, அடைக்கலங்காத்தான், தாலிக்கு
13. வேலி, சத்துருவாதியள் மிண்டன், வன்னியராட்டந் தழைத்தான், மேவலர்கள் கோளரி.
14. மேவலர்கள் வணங்குமிரு தாளினான், வீரமஹா கெம்பீரன், கீற்திப் பிரதாபந், ஆரியம
15. ரநங்காத்தான், தொண்டியந்துறை காவலன், துர்க ரேபந்தன், அனுமகேதநன், பரதள
16. விபாடன்,குடைக்குக் கர்ன்னன், பரிக்கு நகுலன், அரசராவணராமன், அடியார் வேளைக்கா
17. றன், உரிகோல் சுரதாநன்,அந்தம்பிர கண்டன், மூவராயிர கண்டன், சாடிக்காறர் கண்ட
18. ன், ஸ்வாமித்துரோகியள் மிண்டன், பஞ்சவன்ன ராயராவுத்தன், பனுக்குவார் கண்டன், இ
19. வுளிபாவடி மிதித்தேறுவார் கண்டன், கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடாதா
20. ன், பாண்டிமண்டல ஸ்தாபனாசாரியன், சோழமண்டலப் பிறதிட்டாபனாசாரிய
21. ன், பூர்வ தெக்ஷிண பச்சிம உத்திர சப்த ஸமுத்திராதிபதி, ஈளமுங் கொங்கும் யாட்பாண
22. பட்டணமும் கெசவேட்டை யாடியறுளிய ராசாதிராசன், ராசபரமேஸ்வரந், நவகோடி

23. நாராயணன், நவகண்ட சக்ரவத்தி, மலைகலங்கிலும் மனங்கலங்காத கண்டன், கொட்ட
24. மடக்கி, வையாளி நாராயணன், காவிக்குடையான், பரதநாடகப் பிரவீணன், கருணாக
25. டாக்ஷன், காமிநி கந்தற்பன், சத்யபாஷா ஹரிச்சந்திரன், சங்கீத சாகித்ய வித்யா விநோதந்,

இரண்டாம் பக்கம்

26. வீரதண்டை சேமத்தலை விளங்குமிரு தாளிநான், ஸத்ரஜனா ஸேதுகா
27. வலன், வம்சாதிபநாதன் துகவூர்க் கூற்றத்துக் காத்தூரான குலோத்துங்க சோழ நல்லூர் கீழ்ப்ப
28. ால் விரையாத கண்டனில் இருக்கும் ஸ்ரீ ஹிரண்ய கர்ப்பயாஜி ரெகுநாத ஸேதுபதி காத்ததேவரவ
29. ர்கள் புத்ரன் ஸ்ரீ ஹிரண்ய கர்ப்பயாஜி ரெகுநாத ஸேதுபதி காத்த தேவரவர்கள் தர்மபத்நியா
30. ன ராய தொண்டமானார் புத்ரி ரெகுநாத ராய தொண்டைமானார் சஹோதரியரான கா
31. தலி நாச்சியாரவர்கள். நானா கோத்ர த்தில் நானா சூத்ரத்தில் நானா ஸாகாத்யாயியா
32. ளான ஷந்யமருஷ்ண கோத்திரத்தில் ஆபஸ்தம்ப ஸூத்ரத்தில் யஜுஸ்ஸாகாத்யாயியா
33. ன குமரண்டுர் வீரமநல்லூரில் இருக்கும் வெங்கடேஸ்வரய்யன் புத்ரந் ஸங்கரந
34. ாராயணய்யன் முதலாகிய பிராமணருக்கு ராமீஸ்வரத்தில் தனுஷ்கோடிக்கரை
35. ரயில் அக்ரஹாரத்துக்கு ஸங்கரநாராயணய்யன் கய்யில் ஸஹிரண்யோதக தா
36. ராபூர்வமாக ப்ரமாநம் பண்ணிக் கொடுத்தோம். கிராமமாவது தேர்போகி நாட்டி
37. ல் களத்தூருக்கு எல்கையாவது : கிள்ளிகுடி கண்வாய்க்கு மேற்கு, தேர்போகியி
38. ல்த் தேனாற்றுக்கு வடக்கு, கொட்டங்குடி வயலுக்கு கிழக்கு, திருத்தங்கூர் பாம்பாற்றுக்குத் தெ

39. ற்கு. இந்தப் பெருனான்கெல்லைக்குள்பட்ட களத்தூருக்குப் ரதிநாமமான ரெகுநாத
40. காதலி ஆயிபுரம் கணஸங்கைய பாகம் 55. இந்த பாகம் இதிலுள்ள நஞ்சை திட்டுத் திட
41. ல் மாவடை மறவடை கீழ்நோக்கியகிணறு மேல்நோக்கிய மரம் குளகுட்டம் ஏந்தல் பிறவடை
42. பாசி படுகை ஆவிரை கொழிஞ்சி தேன்படுபொதும்பு ஊறணி உடைப்பு மீன்படுபள்ளம்
43. குரப்பிணி குளிப்பு இதிலுள்ள பள்வரிப் பலவரி மடத்துவரி வேண்டுகோள் செம்புவிலை
44. காணிக்கை வண்டில்மாடு கொட்டிய எருது சுரவிப்பசு பெடிவிலாடம் நீராணி
45. க்கம் யிதிலுண்டான சகலவரியும் தங்களுக்கு ஸர்வமாந்யமாகக் கட்டளை இட்டபடியி
46. னாலே யிதிலுள்ள நிதி நிக்ஷேப ஜல தரு பாஷாணாக்ஷியாகாம்ய ஸித்த ஸாத்யமென்
47. று சொல்லப்பட்ட அஷ்டபோக தேஜஸ்வாமியங்களும் சந்திரார்க்கஸ்தாயியாக புத்ர பௌத்ர பா
48. ரம்பர்யமாக தாநாதி விநிமய விக்ரயங்களுக்கும் யோக்கியமாக ஆண்டனுபவிக்க
49. க்கடவாராகவும், இந்த தம்மத்தைப் பரிபாலநம் பண்ணினபேர் கோடி சிவலிங்
50. க பிரதிஷ்டையும், கோடி பிரம்ம பிரதிஷ்டையும் பண்ணின ஸுகத்தை யடைவாராகவும்
51. இந்த அக்ரஹாரத்துக்கு யாதாமொருவன் துரோகம் பண்ணினவன் கெங்கைக் கரையி
52. லே காராம்பசுவைக் கொன்ற பாவத்திலே போவானாகவும்.

2. கீரனூர்ச் செப்பேடு

இருக்கும் இடம் : அரசு அருங்காட்சியகம், திருக்கோகர்ணம், புதுக்கோட்டை

அரசர் : விசைய ரகுநாதராயத் தொண்டைமானார் (1730-1769)

காலம் : 28-5-1732
மொழி : தெலுங்கு
அளவு : 30 செ.மீ × 20.5. செ.மீ.

அமைப்பும் செய்தியும்

புதுக்கோட்டை தொண்டைமானார் மரபினரின் தெலுங்குச் செப்பேடு இஃதொன்றேயாகும். புதுக்கோட்டை தொண்டைமான் மரபில் கிடைத்துள்ள முதல் செப்பேடும் இதுவேயாகும். உயரம் குறைவான சிறு கைப்பிடியின் மையப்பகுதியில் துளையுள்ளது. துளையின் இருபுறங்களிலும் சூரியன் சந்திரன் வரையப்பட்டுள்ளது. பிற செப்பேடுகளில் உள்ள சூரியன், சந்திரன் போல இல்லாமல் இச்செப்பேட்டின் கைப்பிடியில் வரையப்பட்டுள்ள சூரிய சந்திரன் கீழ் வளைகோடுகள் இணைக்கோடுகளாக வரையப்பெற்றுள்ளன. அவை ஆகாயத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம். ஆகாயத்தில் சூரியனும் சந்திரனும் மிதந்து கொண்டுள்ளது போன்ற காட்சி எளிய முறையில் உயர்வாகக் காட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. தெலுங்குச் செப்பேட்டின் தமிழாக்கம் இங்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

செப்பேட்டின் மையத்தில் ஒரு ஓரத்தில் சிறு துளை உள்ளது. இத்துளை வேறு எந்தச் செப்பேட்டிலும் காணப்பெறாத அமைப்பினை உடைய துளையாகும். இரண்டாம்பக்க இறுதியில் 'ஸ்ரீ ராமஜெயம்' என்று தெலுங்கில் பெரிய எழுத்துக்களில் எழுதியுள்ளனர்.

இச்செப்பேட்டை மைய அரசின் தொல்லியல் அளவீட்டுத்துறையின் கல்வெட்டுப் பிரிவினர் படி எடுத்துள்ளனர்.[1]

விசையரகுநாதராயத் தொண்டைமானார் அவர்கள் 28-5-1732 அன்று சந்திரகிரகணப் புண்ணியநாளில் ஸ்ரீவத்ச கோத்திரத்தைச் சேர்ந்தவரும், யஜுர்வேதம் பயின்றவரும், ஆதப்பையரின் பேரனும், எல்லமரசய்யா மகனும் ஆன பேரய்யா அவர்களுக்குக் கீரனூரைக் கொடையாகக் கொடுத்ததை இச்செப்பேடு கூறுகிறது. கீரனூரில் பேரய்யாவிற்கு அக்கிரகாரம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

1. ARE (A) 26 0f 1950.

விசையரகுநாதராயத் தொண்டைமானார் முதல் அரசரின் மகன். திருமலைராயத் தொண்டைமானுக்கும் பன்றி கொண்டார் குடும்பத்துப் பெண்ணான நல்லாயி ஆயிக்கும் 1713இல் பிறந்தவர். இவர் தந்தை திருமலைராயத் தொண்டைமான் 1729இல் இறந்துவிடவே தன் தாத்தாவை அடுத்து 1730இல் பட்டம் ஏற்றார். புதுக்கோட்டை தொண்டைமான் மரபின் முதல் அரசர் ரகுநாதராயத் தொண்டைமானின் பேரரான இவர் புதுக்கோட்டை மரபின் இரண்டாவது அரசராவார்.

திருச்சிராப்பள்ளிச் சாவடிக்குத் தெற்கு கபிலநாடு மாகாணத்துக்கு நாயகம் ஆன புதுக்கோட்டைக்குக் கிழக்கேயுள்ள கோனாடு மாகாணத்தில் கீரனூர் உள்ளதெனக் கூறப்பட்டுள்ளது.

இதே கீரனூரில் 22-7-1804 அன்று ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமானார் அடப்பம் சுப்பிரமணியன் பெயரில் மங்களாம்பா சமுத்திரம் என்ற அக்கிரகாரம் ஒன்றை ஏற்படுத்தினார் (காண்க :கீரனூர்ச் செப்பேடு – 2).

கீரனூரின் எல்லைகளாக நல்லூர் எல்லை, இல்லனிப்பட்டி, சித்தூர், நிலையப்பட்டி ஆகியவை கூறப்பட்டுள்ளன.

இறுதிப்பகுதியில் தானத்தைக் காப்பதைப் பற்றிய சில வடமொழிச் சுலோகங்கள் தெலுங்கு எழுத்துக்களிலேயே எழுதப்பட்டுள்ளன.

'தொண்டைமான் வம்ச சரித்திரம்' என்ற நூலொன்று தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது. இச்செப்பேடு உள்ளது மட்டுமின்றி இந்தச் செப்பேட்டிற்குப் பின்னர் வெளியிடப்பெற்ற புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர் செப்பேடுகள் பலவற்றில் சேதுபதி செப்பேடுகள் போலவே 'ஸ்ரீ ராமஜெயம்' என்று தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது.

செப்பேடு

மொழி பெயர்ப்பு

ஸ்வஸ்தி ஸ்ரீ விஜயாப்புதைய சாலிவாகன சகாப்தம் 1654 கலியப்தம் 4833 பரிதாபி வருடம் ஜேஷ்ட சுத்தம் 15க்கு ஞாயிற்றுக்

கிழமை கேட்டை நட்சத்திரம் சௌபாக்கிய நாம யோகம் பத்ரவாகரணம் சுவடிய இந்நாளில் சந்திர கிரகணம் என்னும் புண்ணிய காலத்தில் ஸ்ரீமத் ராஜாதிராஜ ராஜ பரமேஸ்வர ராஜவீர பிரதாப ஸ்ரீ வீர வெங்கடதேவ மகாராயர் அவர்கள் விஜயநகரத்தில் வாழ்ந்துகொண்டு ரத்தின சிம்மாசனத்தில் வீற்றிருந்து பிருத்விராஜ்ய பரிபாலனம் செய்து கொண்டுவரும் நாளையில் காஷ்யப கோத்திரம் இந்திரவம்சம் ரகுநாத ராய தொண்டைமானார் அவர்களின் பேரன் திருமலை ராய தொண்டைமானார் அவர்களின் மகன் விசைய ரகுநாத ராய தொண்டைமானார் அவர்கள் ஸ்ரீவத்ச கோத்திரம் யஜுர் வேதம் பயின்ற ஆதப்பையா அவர்களின் பேரன் எல்லமரசய்யா அவர்களின் மகன் பேரய்யா அவர்களுக்குக் கொடுத்த தாமிர சாசனம் என்னவென்றால் திருச்சிராப்பள்ளிச் சாவடிக்குத் தெற்கு கபிலநாடு மாகாணத்திற்கு நாயகம்ஆன புதுக்கோட்டைக்குக் கிழக்கு கோனாடு மாகாணத்திற்குச் சேர்ந்த கீரனூர் எல்லைக்கு விபரம் நல்லூர் எல்லைக்குக் கிழக்கு இல்லனிப்பட்டிக்கு வடக்கு சித்தூருக்குக் கிழக்கு, நிலையப்பட்டிக்குத் தெற்கு ஆக உள்ள கீரனூர் அக்கிரகாரம் காஷ்யப கோத்திரம் இந்திர வம்சம் ரகுநாத ராய தொண்டைமானார் அவர்களின் பேரன் திருமலை ராய தொண்டைமானார் அவர்களின் மகன் விசைய ரகுநாத ராய தொண்டைமானார் அவர்கள் ஸ்ரீவத்ச கோத்திரம் யஜுர் வேதம் பயின்ற ஆதப்பையா அவர்களின் பேரன் எல்லமரசய்யா அவர்களின் மகன் பேரய்யா அவர்களுக்குத் தாரைவார்த்து அக்கிரகாரம் செய்து கொள்ளுமாறு கொடுத்தோம் ஆகையினாலே இதற்கு உண்டான நஞ்சை புஞ்சை நத்தம் படுகை பூமியில் கண்ட வாஸ்து விஷேசங்களும் மாவடை மரவடை சகலமான சமுதாய பிராப்திகளும் நிதி நிட்சேப ஜல தரு பாஷாண ஆச்சண்ய ஆகாமி சுத்த சாத்தியம் எனும் அஷ்ட போகங்கள் முதலிய எல்லாவற்றையும் தானாதி விநிமய விக்கிரய யோக்கியமாக ஆச்சந்திரார்க்க ஸ்தாயி ஆக புத்திர பௌத்திர பாரம்பரியமாக அனுபவித்துக் கொள்ளுமாறு காஷ்யப கோத்திரம் இந்திர வம்சம் ரகுநாத ராய தொண்டைமானார் அவர்களின் பேரன் திருமலை ராய தொண்டைமானார் அவர்களின் மகன் விசைய ரகுநாத ராய தொண்டைமானார் அவர்கள் ஸ்ரீவத்ச கோத்திரம் யஜுர் வேதம் பயின்ற ஆதப்பையா அவர்களின் பேரன் எல்லமரசய்யா அவர்களின் மகன் பேரய்யா அவர்களுக்கு அக்கிரகாரத்துக்குக் கொடுத்த தாமிர சாசனம்.

(இதற்குப் பின்னர் தானத்தைக் காப்பதைப் பற்றிய மூன்று வடமொழிச் சுலோகங்கள் தெலுங்கு எழுத்துக்களிலேயே எழுதப்பட்டுள்ளன.)

3. துறுமாச் செப்பேடு

இருக்கும் இடம்	:	காசிமடம், திருப்பனந்தாள், தஞ்சாவூர் மாவட்டம்
அரசர்	:	விசைய ரகுநாதத் தொண்டைமானார் (1730–1769)
காலம்	:	22–7–1732
மொழி	:	தமிழ்
அளவு	:	28 செ.மீ × 19.5 செ.மீ.

அமைப்பும் செய்தியும்

இச்செப்பேட்டில் துளையுடன் கூடிய கைப்பிடி உள்ளது. கைப்பிடியின் மேல் பகுதியில் சந்திர, சூரியன் உருவம் வரைகோட்டில் வரையப்பட்டுள்ளது. அதன்கீழ்ச் சிவலிங்க வடிவில் காசி விசுவநாதரும், இடப்புறம் நின்றநிலையில் விசாலாட்சியும் வரைகோட்டு ஓவியத்தில் வரையப்பட்டுள்ளனர். அதனை அடுத்து முத்தலைச் சூலமும், இறுதியில் நந்தி உருவமும் வரையப்பட்டுள்ளன. சிவலிங்கத்திற்குக் கிரீடம் சூட்டப் பெற்றுள்ளது. அதன் கீழ்ப்புறம் செப்பேட்டுச் செய்திப் பொறிப்புக்கு முதலில் 'ஸ்ரீ ராமஜெயம்' என்று தெலுங்கில் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது. பிள்ளையார் சுழியுடன் செப்பேடு தொடங்குகிறது.

இடையிடையே சில கிரந்த எழுத்துக்களும் இறுதியில் பிறர் அளித்த கொடைகளைப் பாதுகாப்பதால் ஏற்படும் பயன் குறித்தஇரு வடமொழிச் சுலோகங்களும் கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன. சாசனத்தின் இறுதியில் 'சம்பிரதி ஈசுரப்பையன் கையெழுத்து' என்று காணப்பெறுகிறது. இறுதிப்பகுதியிலும் ஒரு பிள்ளையார் சுழி உள்ளது,

விசைய ரகுநாத தொண்டைமானாரவர்கள் 22–7–1732 அன்று காசியில் விசுவேசுவரர் விசாலாட்சி அம்மன் அபிடேகம் நைவேத்தியம் அன்னதானத்துக்குத் தருமபுரம் திருஞானசம்பந்த பண்டார சன்னதி அவர்கள் சீடரான திருப்பனந்தாள் காசிவாசி தில்லைநாயகத் தம்பிரான்

அவர்கள் வசம் கானாட்டுப் பகுதியில் உள்ள துருவாசபுரமான துறுமா என்ற ஊரைக் கொடையாகக் கொடுத்ததை இச்செப்பேடு கூறுகிறது. துறுமாவின் எல்லைகள் கூறப்படவில்லை. இத்தொண்டைமானாருக் குரிய ராய பட்டம் இச்செப்பேட்டில் பொறிக்கப்பெறவில்லை.

தொண்டைமானார் இந்திரகுல வங்கிஷன், அன்பில்நாடன், தென்கோடி ஆதிபன், வடகரைப்புலி, வாகைமாலை புயன் என்று சிறப்பிக்கப் பெறுகிறார். தென்கோடி என்பது தனுஷ்கோடியைக் குறிக்கும்.

துறுமாவின் நான்கெல்லைக்குட்பட்ட நன்செய், புன்செய், ஏந்தல், புறவடை, திட்டு திடல், நத்தம், படுகை, நிதி, நிட்ஷேபம், அனாதிதரிசு, பெருமரக்காடு, மாவடை, மரவடை, பாசிவிலை, சேத்துக் காணிக்கை. சொர்னாதாயம், பலசுதந்திரம், வலை, இடை, பைங்குடி, கீழ்நோக்கிய கிணறு, மேல்நோக்கிய விருட்சம், இடுகாடு, படுதுறை உட்பட அனைத்தும் கொடையாக அளிக்கப்பெற்றன.

துறுமாவின் வருவாயிலிருந்து துறுமாவில் உள்ள சிவபெருமான் திருமேனி நாதருக்கு மூன்றில் ஒரு பங்கும், காசித் தர்மத்துக்கு மூன்றில் இரண்டு பங்கும் கொடையாக அளிக்கப்பட்டுள்ளது.

இச்செப்பேட்டில் மதுரை நாயக்க மரபில் கி.பி.1529 தொடங்கி ஆட்சிபுரிந்துவரும் அனைத்து மன்னர்கள் பெயரும் வரிசையாகக் கொடுக்கப்பட்டிருப்பது சிறப்பானதாகும். இறுதியில் ஸ்ரீ விசையரெங்க முத்துவீர சொக்கநாத நாயக்கர் (1706-1732) ஆட்சிக்காலத்தில் இக்கொடை அளிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இக்காலத்தில் புதுக்கோட்டைத் தொண்டைமானார்தம் மேலாண்மையாளர்களாக மதுரை நாயக்கர் இருந்தனர். அதனால் தெலுங்கில் செப்பேடும், தமிழ்ச் செப்பேடுகளிலும் தெலுங்கு எழுத்துப் பொறிப்புக்களும் காணப்படுகின்றன போலும்.

மூலம்

முதல் பக்கம்

ஸ்ரீ ராமஜெயம்

1. உ சுவஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுரன். அரியராய தழ
2. விபாடன், பாஷைக்கு தப்புவராய கண்டன். மூவராயிர க
3. ண்டன். கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான்.ப
4. ரிமேல் நகுலன். கரிமே லுதையன். வில்லால் விசையன். சொ
5. ல்லால் தருமன். வாளுக்கு வீமன். அழகுக் கனங்கன். அறி
6. வுக்கு அகஸ்த்தியன். கொடைக்கு கன்னன். பூலோக புரந்தரன்
7. புட்க பேரிபட்ச பாஞ்சாலதேசஞ் சாதகமான உத்தண்ட தொர
8. த்தண்ட சண்டமதருணி மண்டலேசுரன். அஷ்ட்ட திக்கும்
9. ராசமனோ பயங்கரன். துஷ்ட்ட நிக்கிரக சிஷ்ட்ட பரிபாலன்.பி
10. றிதிக்கினையான். பரசுராமன். படைகண்டு தத்தளிப்பார் கண்ட
11. ன். பாண்டிமண்டலத் தாபனாசாரியன். சோழமண்டலப்
12. பிறதிஷ்டாபனாசாரியன். தொண்டமண்டல சண்டப்
13. பிறசண்டன். சேர சோழ பாண்டிய வல்லாள பயங்கரன். பூ
14. றுவ தெட்சண பச்சிம உத்தர சத்த சமுத்திராதிபதி. எம்மண்
15. டலமும் கொண்டு ஈழமுந் திறைகொண்டு யாட்பாணமு
16. ம் அழித்து கெசவேட்டை கண்டருளிய ராசாதிராசன்.ராசபர
17. மேசுவரன். ராசமாத்தாண்டன். ராசகண்டீரவன். ராசாக்கள் தம்பிரா
18. ன். ராசநரேந்திரன். மன்னரில்மன்னன். மன்னர்கெம்பீரன். சாடிக்கா
19. றர் கண்டன். சாமத்துரோகிகள் மிண்டன். கட்டாரிச் சாளுவன். கலங்
20. காத கண்டன். குமட்டிராமன். சம்மட்டி நாராயணன். ஒட்டியர்தள விபா
21. டன். ஒட்டியர்மோகந் தவிள்த்தான். துலுக்கர்தள விபாடன். துலுக்கர்
22. மோகந் தவிள்த்தான், மறுமன்னியர் சுரதானன். மன்னியராட்டந் த
23. விள்த்தான். அசுபதி. கெசபதி. நரபதி. நவகோடி நாராயணன். ஸ்ரீ வீர

24. ப்பிறதாபனாகிய அரிஅரதேவ மகாராயர், புட்கராயர், மல்லிகா
25. ர்சுனதேவ மகாராயர், விருப்பாட்சிதேவ மகாராயர், பிறபுடதேவ
26. மகாராயர். வீரநரசிங்கதேவ மகாராயர், நரசாஉடையதேவ மகாரா
27. யர். கிஷ்ட்டிணதேவ மகாராயர், சதாசிவராயர், ராமராயர், திருமலை
28. தேவ மகாராயர், சீரங்கராயர், வெங்கிடபதிதேவ மகாராயர், சிக்கரா
29. யர், ஆனைகொந்தி வெங்கிடபதிதேவ மகாராயர், ஸ்ரீரங்கதேவ
30. மகாராயர், காரியத்துக்குக் கற்த்தரான கச்சி விசுவநாத நாயக்கர், கிஷ்
31. ட்டிணப்ப நாயக்கர், வீரப்ப நாயக்கர், குமாரகிஷ்ட்டிணப்ப நாய
32. கர், கஸ்த்தூரி ரெங்கப்ப நாயக்கர், முத்துக்கிஷ்ட்டிணப்ப நாயக்
33. கர், முத்துவீரப்ப நாயக்கர், திருமலை நாயக்கர், முத்துவீரப்ப
34. நாயக்கர்.சொக்கநாத நாயக்கர், ரெங்ககிஷ்ட்டிண முத்துவீர
35. ப்ப நாயக்கர், ஸ்ரீவிசையரெங்க கிஷ்ட்டிண முத்துவீர சொக்க
36. நாத நாயக்கரய்யனவர்கள் பிறிதிவி ராச்சியம்பண்ணி அருளா நி
37. ன்ற சாலிவாகன சகார்த்தம் 1653 இதன்மேல் செல்லாநி
38. ன்ற பரிதாபி வருசம் ஆடி மீ 2உஸ்திரவாரமும் பூறுவபட்சத்து
39. ஏகாதெசியும் மூல நட்சத்திரமுஞ் சுபநாம யோகமுந் தைது
40. லாகரணமும் பெற்ற சுபதினத்தில் ஸ்ரீமது இந்திரகுல வங்கிஷ
41. ன், அன்பில்நாடன், தென்கோடி ஆதிபன், வடகரைப் புலி, வா
42. கைமாலைப புயனான ஸ்ரீமது ரெகுனாதத் தொண்டைமானா ரவர்க
43. ள், திருமலைத் தொண்டைமானாரவர்கள், ஸ்ரீமது விசையரெகு
44. நாதத் தொண்டைமானாரவர்கள் காசியில் விசுவேசுர
45. சுவாமி விசாலாட்சி அம்மன் அபிஷேகம் நைவேத்தி
46. யம் அன்னதானத்துக்குத் தருமபுரம் திருஞாந சம்ப
47. ந்த பண்டார சன்னதிச் சீஷரான காசிவாசித்

இரண்டாம் பக்கம்

48. தில்லைநாயக தம்பிரானவர்கள் பாரிசமாக
49. க் காசித் தற்மத்துக்குத் தாம்பிர சாதனப்பட்டையங் கொ
50. டுத்தபடி, கானாட்டில் தூறுவாசபுரமான துறுமா நா

51. ன்கெல்லைக் குட்பட்ட நஞ்சை புஞ்சை ஏந்தல் புறவ
52. டை திட்டுத் திடல் நத்தம் படுகை நிதி நிட்சேபம் அனாதி
53. தரிசு பெருமரக்காடு மாவடை மரவடை பாசிவிலை சே
54. த்துக்காணிக்கை சொற்னாதாயம் பலசுவந்திரம் வலை இடை
55. பைங்குடி கீழ்நோக்கிய கிணறு மேல்நோக்கிய வி
56. ருட்சம் இடுகாடு படுதுறை உற்படத் துறுமாத் திருமே
57. னிநாத சுவாமிக்கு ஒரு பங்கும், காசித் தற்மத்துக்கு
58. இரண்டு பங்குஞ் சறுவமானியமாக நேமிச்சுத்
59. தாராபூறுவமாகத் தாம்பிரசாதனப் பட்டையங் கொ
60. டுத்தபடியினாலே சந்திராதித்த ருள்ளவரைக்கும்
61. புத்திர பவுத்திர பாரம்பரியமாக அனுபவித்துக்கொ
62. ண்டு தற்மத்தை உத்திரோத்திரமாய் நடத்திவிச்சுக்
63. கொண்டு சுகத்திலே யிருக்கக்கடவாராகவும். இந்தத் த
64. ற்மத்துக்கு வாக்குச் சகாயம் சரீர சகாயம் அற்த்த சகாயம் ப
65. ண்ணினபேர்கள் காசியிலே கங்கைக் கரையிலே கோடி
66. சிவலிங்கப் பிறதிட்டை பண்ணின பலனை அடைவர்கள்
67. இந்தத் தற்மத்துக்கு அகிதம் பண்ணிநபேர்கள் காசியிலே
68. கெங்கைக்கரையிலே கோடி காராம்பசுவைக் கொன்
69. ற தோஷத்திலே போவாராகவும் சம்பிறிதி ஈசுரப்
70. பையன் கையெழுத்து உ.ஸ்வதத்தாத்வி குணம்
71. புண்யம் பரதத்தாநு பாலநம் பரதத்தாப ஹாரே
72. ண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேத் : ஸ்வதத்தாம் பரதத்தா
73. ம் வாயோகரேத் வஸுந்தராம் ஷஷ்டி வர்ஷ ஸஹ
74. ஸ்ராணி விஷ்டாயாம் ஜாயதே கிருமி:

4. காடங்குடிச் செப்பேடு

இருக்கும் இடம்	:	திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்
அரசர்	:	விசைய ரகுநாதராயத் தொண்டைமானாரவர்கள் (1730–1769)
காலம்	:	13–1–1739
மொழி	:	தமிழ்
அளவு	:	23 செ.மீ × 16.5 செ.மீ.

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு துளையையுடைய கைப்பிடியுடன் கூடியது. கைப்பிடிப்பகுதியில் பிள்ளையார்சுழி மட்டும் வரையப்பட்டுள்ளது. முதல் பக்கம் நடுவே 'ஸ்ரீ ராமஜெயம்' எனத் தெலுங்கில் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது.

ரகுநாதராயத் தொண்டைமானார் அவர்கள் 13-1-1739 அன்று சந்திர கிரகணம் ஏற்பட்டதால் அதையொட்டித் திருவாவடுதுறை ஆதீனத்தலைவர் அவர்கட்குத் திருமடத்தில் அன்னதானம் செய்யும் பொருட்டுத் தெற்குச் சீமையில் மிழலைநாட்டில் உள்க்கிடை காடங்குடி என்னும் ஊரைச் சர்வமானியமாக அளித்ததை இச்செப்பேடு கூறுகிறது. அப்போது திருவாவடுதுறை ஆதீனத்தில் அருளாட்சி நடத்தியவர்கள் 12ஆம் பட்டத்தில் எழுந்தருளியிருந்த தவத்திரு திருச்சிற்றம்பல தேசிகர் அவர்கள் ஆவர்.

தொண்டைமானார் அளித்த காடங்குடியின் எல்லைகளாகப் பண்ணியூர்க் குளக்கரைமுடங்கு, பழந்தாமரைக்குளம், திருவாகுடி வடவயல் ஊரணி, பொன்பற்றி ஆத்தூரணி, மருதங்குடி கீழ்வயல், மசுத்தான் ஊரணி, பெருநாவலூர் உள்க்கிடை வலையனேந்தல் தென்கரை, கள்ளிப்பெருச்சி ஊரணி ஆகியவை கூறப்படுகின்றன.

இதே கொடைக்கு நகலாக மற்றொரு செப்பேடும் திருவாவடுதுறை ஆதீனத்திலேயே உள்ளது.

மூலம்

முதல் பக்கம்

ஸ்ரீ ராமஜெயம்.

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவரன், அரியராயிரதள
2. விபாடன், பாஷைக்குத் தப்புவராயர் கண்டன், மூவராயர் கண்டன்
3. கண்டர்கண்டன், கண்டையப் பிறதாபன்
கட்டாரிச்சாளுவன், கண்டநாடு கொ
4. ண்டு கொண்டநாடு கொடாதான், ஒருபரிகொண்டு
திரள்பரிவெட்டு முபை

5. ய குலோத்துங்கன், எம்மண்டலங்கொண்டு யீளமுந் திறைகொ
6. ண்ட ராசாதிராசன், ராசமாத்தாண்டன், ராசகண்டீரவன், ராசாக்க
7. ள் தம்பிரான், கோட்டத்துமன்னியர் கண்டன், சொரிமன்னியர் சூரிய
8. ன், கெடிமன்னியர் காலாந்தகன், தொண்டமண்டலத் தாபனாசாரியன்,
9. சோழமண்டலப் பிறதிஷ்டாபனாசாரியன், பாண்டிமண்டலப் பற்பனா சாரியன்
10. மறுமன்னியர் கோடாரி, குறுமன்னியர் கோளரி, ஒட்டியர்தள விபாடன், ஒட்
11. டியர்மோகந் தவிள்த்தான், துலுக்கர்தள விபாடன், துலுக்கர்மோகந் தவி
12. ள்த்தான், தொட்டியர்தள விபாடன், தொட்டியர்மோகந் தவிள்த்தான், படைக
13. ண்டு தத்தளிப்பார்கள் மிண்டன், பஞ்சபாணாவதாரன், தற்க்காற்குத் தற்கன், தற்கவி
14. னோதன், தண்டுவார் மிண்டன், சண்டப்பிறசண்டன், பூறுவ தெட்சண
15. பட்சிம உத்தர சத்த சமுத்திராதிபதி, அசுபதி, கெசபதி, நரவேட்டை கண்ட
16. ருளிய மல்லிகாற்சுனதேவ மகாராயர், பிறபுடதேவ மகாராயர், ராமதே
17. வ மகாராயர், யானைகுந்திதேவ மகாராயர், கிஷ்ணதேவ மகாராயர், விருப்பா
18. ட்சிதேவ மகாராயர், சீரங்கதேவ மகாராயர் பிறிதிவிராச்சியம் பண்
19. ணியருளாநின்ற சாலிவாகன சகாத்தம் 1659 இதன்மேற் கலியுகம்
20. 4839 இதன்மேற் செல்லாநின்ற காலயுத்தி வருஷம் தை மீம் 15உ ராச ராசவ
21. ளநாடு ராசேந்திரசோழவளநாடு பன்றிசூள்நாடு அழும்பில்த் தெற்குலூ ரிலிரு
22. க்குங் காணியுடைய அரையர்மக்களில் ஸ்ரீமது திருமலையப்பத் தொண்டமானாரவ

23. ர்கள் குமாரன் விசைய ரெகுனாதராயத்
தொண்டமானாரவர்கள் சோள மண்டலத்தி
24. ன் உள்க்கடை திருவாவடுதுறைப் பண்டாரச் சன்னதி
அவர்களுக்குத் தானசா
25. தனங்குடுத்தபடி தானசாதனமாவது தெற்கில் சீர்மையில்
மிழலைநாடு உள்
26. க்கடை காடங்குடிக்கு யெல்கையாவது பண்ணியூர்க்
குளத்துக்கரை முடங்
27. குக்கும் பழந்தாமரைக்குளத்து நீர்ப்பிடிக்கு மேற்கு,
திருவாகுடி வடவயலூற
28. ணிக்கும் பொன்பத்தி ஆத்தூறணிக்கும் வடக்கு, மருதங்குடி
கீள்வயலுக்
29. கும் மசுத்தாணூ றணிக்குங் கிளக்கு, பெருநாவலூர்
உள்க்கடை வலையானேந்த
30. ல்த் தென்கரைக்குங் கள்ளிப்பெரிச்சி ஊறணிக்குங் தெற்கு
ஆகச் சூள்ந்த பெரு
31. நான்கெல்லைக்குள்ப்பட்ட நஞ்சை புஞ்சை
மேல்நோக்கியமரங் கீள்நே
32. ாக்கியகிணறு திட்டுத்திடல் நிதி நிட்சேப செல தரு பாஷாணஞ்
சகலமுஞ் சந்தி
33. ராதித்தாளுள்ளவரைக்கும் ஆதீனபாரம்பரைக்கும்
ஆண்டுகொள்ளக்கட
34. வோர்களாகவும் இந்தச்சாதனம் தை மீம் 15உ இஸ்த்ர
வாரமும் பவற்ணையும்

இரண்டாம் பக்கம்

35. பூச நட்செத்திரமுங் கடின சுபதினத்தில்க் கிறாணம்
வந்தபடியினாலே
36. அந்தக் கிராணத்திலே தற்மத்துக்கு நாம் அன்னதானத்துக்கு
நம்முடைய கிறா
37. மத்தை விட்டுக்குடுத்தோம். இப்படி ஆளுமிடத்தில்
யாதாமொருத்தர் தற்மத்து
38. க்கு நடக்கிற கிறாமத்துக்கு வாக்குசகாயம் அற்தசகாயம்
பண்ணினபேர் காசி

39. யிலேயும் ராமேசுவரத்திலேயும் கோடிசிவாலையம்
 மடவாலையம் அன்ன
40. சத்திரமுங் கட்டிவைத்தவர்களுக்கு யெந்தப்பலனோ
 அந்தப்பலனை அடைவாரா
41. கவும். இந்தக்கிறாம தற்மத்துக்கு விரோதம் பண்ணினபேர்
 கெங்கைக் கரை
42. யிலே கோஹத்தி பிரமத்தி ஸ்ரீஅத்தி பண்ணினவன்
 எந்தத்தோஷத்தை அ
43. டைவானோ அந்தத்தோஷத்தை அடைவானாகவும். இந்தப்படிக்
44. கு ஸ்ரீமது விசைய ரெகுனாத ராயத்
 தொண்டைமானாரவர்கள் திருவாவ
45. டுதுறைப் பண்டாரச் சன்னதி அவர்கள் அன்னதானத்துக்கு
 தற்மசாதன
46. ங் குடுத்தோம்.

5. காஞ்சிபுரம் செப்பேடு

இருக்கும் இடம்	:	சங்கரமடம், காஞ்சிபுரம்
அரசர்	:	விசைய ரகுநாத தொண்டைமானார்
காலம்	:	13-1-1743
மொழி	:	தமிழ்
அளவு	:	18 செ.மீ. × 11 செ.மீ

அமைப்பும் செய்தியும்

இச்செப்பேடு அரைவட்ட வடிவம் உள்ள துளை இல்லாத சிறு கைப்பிடியை உடையது. கைப்பிடியின் முன்பக்கம் மாலை சாத்தப்பெற்ற சிறு சிவலிங்கமும், அருகில் நான்கு திருக்கரங்களுடன் நின்ற நிலையில் ஒரு அம்மன் உருவமும் வரையப்பட்டுள்ளது. கைப்பிடியின் பின்பக்கம் ஸ்ரீ ராமஜெயம் என்று கிரந்தத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இச்செப்பேட்டின் மேல்கீழ் முனைப்பகுதிகள் கொஞ்சம் உடைந்துள்ளன.

முன்பக்கம் உள்ள இலிங்கம், அம்மன் உருவங்களை இச்செப்பேட்டைப் பதிப்பித்துள்ள து.அ.கோபிநாதராவ் அவர்கள்[1] திருவானைக்காவல் ஜம்புகேசுவரராகவும், அம்மன் அகிலாண்டேசுவரி தேவியாகவும் கருதுகிறார். செப்பேட்டில் திருவானைக்காப் பற்றி எவ்விதக் குறிப்பும் இல்லை. செப்பேட்டுக் கொடை காஞ்சிபுரத்தில் உள்ள அந்தணருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே அவ்வுருவங்களைக் காஞ்சி ஏகாம்பரரேசுவரராகவும், காஞ்சி காமாட்சியம்மனாகவும் கருதவும் வாய்ப்பு உண்டு. இச்செப்பேடு மைய அரசு தொல்லியல் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவினரால் படி எடுக்கப்பட்டுள்ளது.[2]

கல்வெட்டுப் பிரிவினர் இச்செப்பேடு விசயநகர மன்னன் சீரங்கராயருக்கு உரியதென்று குறித்துள்ளனர். செப்பேட்டின் காலம் ஆகிய கி.பி.1742 – 43இல் விசயநகர மன்னர் ஆட்சி புதுக்கோட்டைப் பகுதியில் நடைபெறவில்லை என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

13–1–1743 அன்று புதுக்கோட்டை அரசர் விசைய ரகுநாதத் தொண்டைமானார் அவர்கள் காஞ்சிபுரம் உள்க்கடை பவனிலிருக்கும் பவனி வெங்கிட்டய்யன் மகன் வெங்கிடகிஷ்ணய்யனுக்குக் கீழ்வருமாறு சாசனமுறி எழுதிக் கொடுத்துச் செப்பேடும் வெட்டித் தந்தார்.

1) தொண்டைமானார் ஆட்சிக்குட்பட்ட எல்லாவகை ஊழியக்காரர்களும் மாதச்சம்பளம் வாங்குகிறவர்கள் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்குக் குறுணி தானியம் கொடுக்கவேண்டும்.
2) சீவிதம் பத்தி இருக்கும் ஊழியக்காரர் எல்லோரும் பத்து ஆள் சீவிதத்துக்கு ஒருஆள் சீவிதம் உம்பளம் போக மற்ற ஆட்களுக்கு வருடத்திற்கு எட்டு மரக்கால் நெல் கொடுக்கவேண்டும்.
3) பள்ளையச் சோத்துக் கட்டளைக்கு நாள்தோறும் மூன்றுபடி அரிசி கொடுக்க வேண்டும்.

---

1. T.A.Gopinatha Rao, Copper Plate inscriptions belonging to the Sankaracharya of the Kamakoti- Pitha, Madras, 1915, pp.89-97
2. ARE(A) 5 of 1915 கோபிநாதராயரவர்கள் வருடம் 1613 என்று படித்துள்ளார். செப்பேட்டில் சகம் 1663 என்றே உள்ளது. கல்வெட்டு ஆண்டறிக்கையில் 1663 என்று சரியாகப் படிக்கப்பட்டுள்ளது.

4) வருடத்திற்கு 2 சோடி சோமனும், இரண்டு சேலைகளும் கொடுக்க வேண்டும்.

இக்கொடைகளைச் சந்திர சூரியர் உள்ளவரை அளித்துவர வேண்டும். இவ்வாறு தொடர்ந்து கொடுத்து இக்கொடையைப் பேணுவோர் புண்ணியமும் இதற்குத் தடை செய்தவர் பாவமும் அடைவர் என்று கூறப்பட்டுள்ளது.

மூலம்

முதல் பக்கம்

ஸ்ரீ ராமஜெயம்

1. ஸ்வஸ்தி ஸ்ரீமன் மகாமண்டலேசுவரன், அ
2. ரியராய விபாடன், பாஷைக்குத் தப்புவ ராய
3. கண்டன். மூவராயர கண்டன், கண்டர்கண்டன் க
4. ண்டையப் பிறதாபன், கட்டாரிச் சாளுவன், கண்ட நா
5. டு கொண்டு கொண்டநாடு கொடாதான், ஒரு பரி கொ
6. ண்டு திரள்பரி வெட்டு முபைய குலோத்துங்கன், எ
7. ம் மண்டலங் கொண்டு யீழமுந் திறை கொண்ட ரா
8. சாதி ராசன், ராச மாற்தாண்டன், ராசகண்டீரவன், ரா
9. சாக்கள் தம்பிரான்,கோட்டத்து மன்னியர் கண்டன்,
10. சொரிமன்னியர் சூரியன், கெடிமன்னியர் காலாந்
11 தகன், துங்காபிராமன், துர்க ரேபந்தன், படைக
12. ண்டு தத்தளிப்பார்கள் மிண்டன், பஞ்ச பாணாவ
13. தாரன், தற்காற்குத் தற்கன், தற்க வினோதன், தண்
14. டுவார் மிண்டன், சண்டப் பிறசண்டன், துங்க
15. ாபிராமன், துர்க ரேவந்தன் பூறுவ தெட்சண
16. பச்சிம உத்தர சத்த சமுத்திராதிபதி, அசுபதி, கெ
17. சபதி, நரவேட்டை கண்டருளிய மல்லிகாற்சு
18. னதேவ மகாராயர், பிறபுடதேவ மகாராயர்,
19. யானைகுந்தி தேவ மகாராயர், கிஷ்ணதே
20. வ மகாராயர், ராமதேவ மகாராயர்,
21. விருபாட்சிதேவ மகாராயர், சீரெ
22. ங்கதேவ மகாராயர் பிறிதிவி ரா

23. ச்சியம் பண்ணியருளாநின்ற சாலி
24. வாகன சகாத்தம் 1663 இத
25. ன்மேல் செல்லாநின்ற துந்துபி
26. தை மீ 15உ ராசராச வளநாடு ரா
27. சேந்திரசோழ வளநாடு பன்றிசூழ்
28. நாடு அம்பில் தெற்குலூ ரிலிருக்
29. குங் காணியுடைய அரைய மக்க
30. ளில் ஸ்ரீமது திருமலையப்பத் தொண்
31. டைமானாரவர்கள் குமாரன் ஸ்ரீமது வி
32. சைய ரெகுனாதராய தொண்டைமா
33. னாரவர்கள் வகை ஊழியக்காறர் எ
34. ண்ணப்பட்ட சகலமான பேர்களும்
35. இந்த தற்மம் விளங்கச் சம்மதித்து காஞ்
36. சி புரத்தில் உள்க்கடை பவனிலிருக்கும
37. பவனி வெங்கிட்டய்யன் குமாரன் வெ
38. ங்கிட கிஷ்ணய்யனுக்கு தாம்பரசாச
39. ன முறி குடுத்தபடி, சாஸன முறியாவது

இரண்டாம் பக்கம்

40. மாதப் படிவாங்கிற பேர்கள் சகல
41. பேர்க்கும் சனம் 1க்கு மாதம் ஒண்ணு
42. க்கு நெல்லுக் குறுணியும், சீவிதம்
43. பத்தி இருக்குற ஊழியக்காறர் ச
44. கலருக்கும் பத்து ஆள் சீவிதத்
45. துக்கு ஒருஆள் சீவிதம் உம்ப
46. ளம் போக மத்தஆள் ஒன்றுக்கு
47. வருஷாவதி எட்டுமரக்கா நெல்
48. லும், பள்ளையச்சோத்து கட்டளை
49. அரிசி தினம் மூணுபடியும், வருஷ
50. ாவதி ரெண்டு சோடு சோமனும், ரெ
51. ண்டு சேலையும் குடுக்க கடவோமாக
52. வும். இந்த தற்மம் இந்தப்பிறகாரம் ச
53. ந்திராதி சூரியாதித்தவரைக்கும் வாங்கி
54. கொண்டு சுகத்திலே யிருக்க கடவேனாக

55. வும். இந்த தற்மத்துக்கு யாதா மொருத்த
56. ன் தடை பண்ணினாலும் பக்குவம் பண்
57. ணினாலும் காசியிலே கெங்கை கரை
58. யிலே காராம்பசுவை கொண்ணவன்
59. பிறம்மத்தியை ஸ்ரீகத்தியை பண்ணி
60. னவன் எந்த தோஷத்தில் நரகத்தில் அ
61. னுபவிப்பானோ அந்த தோஷம் அ
62. னுபவிப்பானாகவும் இந்ததற்மம் ஊழி
63. யக்காறர் எண்ணப்பட்ட சகலமான
64. பேர்களுக்கும் சரி இந்ததற்மம் யாதாமொ
65. ருத்தர் விளங்க நடப்பிக்குராகளோ அ
66. வர்களுக்கு ஆயிரத்தெட்டு சிவாலயம்
67. அக்கிறகார சத்திரங்கள் பண்ணின ப
68. லன்னுண்டாய் செரிஞ்சீவியாய் புத்தி
69. ர பவுத்திராதி சம்பத்தோடே யிரு
70. ப்பார்கள். இந்தபடி எழிதினது பெரி
71. யாசாரியர் குமாரன் வேலாயுதம் கைய்
72. யெழுத்து பெரியனாயகி அம்மன் துணை.

6. வாழைக்குறிச்சிச் செப்பேடு

இருக்கும் இடம்	:	காசிமடம், திருப்பனந்தாள், தஞ்சாவூர் மாவட்டம்
அரசர்	:	விசைய ரகுநாதராயத் தொண்டைமானார் (1730–1769)
காலம்	:	21–2–1763
மொழி	:	தமிழ்
அளவு	:	25 செ.மீ. × 20.5 செமீ.

அமைப்பும் செய்தியும்

இச்செப்பேடு மையத்தில் சிறு துளையையுடைய வரைகோட்டு உருவங்கள் ஏதுமில்லாத கைப்பிடியை உடையது. முதல் பக்கத்தின் இறுதிப் பகுதியில் 'ஸ்ரீராமஜெயம்' என்று தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது.

21-2-1763 அன்று புதுக்கோட்டை அரசர் விசையரகுநாதராயத் தொண்டைமானரவர்கள் தருமபுரம் சிவஞான சம்பந்த தேசிகர் சீடரான திருப்பனந்தாள் காசிவாசி குமரகுருபரத் தம்பிரான் அவர்கள் வசம் காசியில் அன்னதானக் கட்டளைக்காக வாழைக்குறிச்சி என்ற ஊரைக் கொடையாகக் கொடுத்ததை இச்செப்பேடு கூறுகிறது.

வாழைக்குறிச்சியின் எல்லைகளாகப் பனையூர் வடக்குக்குளம், தெற்குக்குளத்து உள்வாய், குழிப்பிறை வாகைவயல், கோவலூர் புதுவயல், நெல்வேலி விஷமூலிகைவயல், கொத்திவயல் ஆகியவை கூறப்பட்டுள்ளன.

இவ்வெல்லைக்குள் ஈரவயலும் அதைச் சேர்ந்த புன்செய் 30 ஏர்க்காடும் போக மற்றப் பகுதி முழுவதும் அளிக்கப்பட்டது.

திருப்பனந்தாள் காசிமடத்தினர் என்றென்றும் சீஷ பரம்பரையாக இவ்வூரை அனுபவித்துக் கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது.

இச்செப்பேட்டை பழனியப்ப வாத்தியார் என்பவர் எழுதியுள்ளார். இறுதியில் தானத்தைக் காப்பது பற்றிய வடமொழிச் சுலோகம் ஒன்று கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.

இச்செப்பேட்டில் உள்ள 'நரிவேட்டை கண்டருளிய' என்ற தொடர் 'நரவேட்டையாக' இருக்கலாம்.

இச்செப்பேட்டில் கூறப்பட்ட எல்லையினுள் அமைந்து, தானம் அளிக்காமல் நீக்கம் பெற்றுள்ள ஈரவயலும் அதைச் சேர்ந்த 30 ஏர்ப் புன்செய் நிலமும் 25-7-1790 அன்று விசைய ரகுநாதராயத் தொண்டைமானார் அவர்கள் காசிக்கு அன்னதானத்துக்காகக் கொடுக்கப்பட்டது என்ற விபரம் மற்றொரு காசிமடத்துச் செப்பேட்டில் உள்ளது (எண் 7).

மூலம்

முதல் பக்கம்

ஸ்ரீ ராமஜெயம்

1. ஸ்வஸ்தி ஸ்ரீமன் மகாமண்டலேசுவரன், அ
2. ரியராய விபாடன், பாஷைக்குத் தப்பு
3. வராயர்கண்டன், கண்டர் கண்ட
4. ன், கண்டையப்பிறதாபன், கட்டாரி
5. சாளுவன், கண்டநாடு கொண்டு
6. கொண்டநாடு கொடாதான், ஒருப
7. ரிகொண்டு திரள்பரி வெட்டுமுபைய
8. குலோத்துங்கன், எம்மண்டலங் கொ
9. ண்டு யீழமுந் திறைகொண்ட ரா
10. சாதிராசன், ராசகெம்பீரன், ராசா
11. க்கள் தம்பிரான், கோட்டத்து மன்
12. னியர்கண்டன், சொரிமன்னியர் சூ
13. ரியன், கெடிமன்னியர் காலாந்
14. தகன், தொண்ட மண்டல ஸ்தாபநா
15. சாரியன், சோழமண்டலப் பிறதி
16. ஷ்டாபநாரியன், பாண்டிமண்டில
17. த்துப் பத்மநாசாரியன், மறுமன்
18. னராயர் கோடரி, குறுமன்னியர்
19. கோளரி, துலுக்கர்தள விபாட
20. ன், துலுக்கர்மொகரந் தவிழ்த்தா
21. ன், தற்காற்குத் தற்கன், தற்கவினோ
22. தன், தண்டுவார் மிண்டன், சண்டப்பிற
23. சண்டன், சகலகுணாபிராமன், துங்கா
24. பிராமன், துர்கரேபந்தன், பூறுவ தெ
25. ட்சண பச்சிம உத்தர சத்த சமுத்திராதிபதி,
26. அசுபதி, கெசபதி, நரிவேட்டை கண்டரு
27. ளிய மல்லிகாற்சுனதேவ மகாராய
28. ர், பிறபுடதேவ மகாறாயர், யானைகு
29. ந்திதேவ மகாராயர், விருப்பாட்சிதே
30. வ மகாராயர், ராமதேவ மகாராயர், சீரெ

31. ங்கதேவ மகாராயர். பிறிதிவிராச்சி
32. யம் பண்ணியருளாநின்ற சாலி

இரண்டாம் பக்கம்

33. வாகன சகாத்தம் 1684 கலி
34. 4863 யிதன்மேற் செல்லாநின்ற
35. சித்திரபானு வருஷம் மாசிமாதம் 13 சோமவார
36. மும் பூறுவபட்சத்து அஷ்டமியும் ரோகணிநட்
37. செத்திரமும் கூடின சுபதினத்தில் ராசராச
38. வளநாடு ராசேந்திரசோழ வளநாடு பன்றிசூ
39. ழ்நாடு அன்புத்தெற்குளூரிலிருக்குங் கா
40. ணியுடைய அரைய மக்களில் ரெகுந
41. ாதராய தொண்டைமானார் பவுத்திரன் தி
42. ருமலை ராய தொண்டைமானார் புத்திரன் வி
43. சைய ரெகுநாத ராய தொண்டைமானார்
44. தருமபுரம் சிவஞான சம்பந்த தேசிகர் சீஷரான
45. காசிவாசி குமரகுருபரத் தம்பிரான் அவர்கள் பா
46. ரிசமாக காசியில் அன்னதானக் கட்டளைக்குக்
47. கோனாட்டில் வாழைக்குறிச்சி தாராபூறுவமா
48. கத் தாம்பிறசாதனம் குடுத்தபடி வாழைக்குறிச்சிக்
49. கெல்லையாவது கீழ்பாற்கெல்லை பனையூர் வடக்குக்கு
50. ளம் தெற்குக் குளத்துள்வாய்க்கு மே (ா)ற்கு. தென்பாற்
51. கெல்லை குழிபிறை வாகைவயலுக்கு வடக்கு. மேல்
52. பாற்கெல்லை கோவலூர் புதுவயலுக்குக் கிழக்கு.
53. வடபாற்கெல்லை நெல்வேலி விஷமூலிகைவயல்க் கொ
54. த்தி வயலுக்குத் தெற்கு. ஆகச் சூழ்ந்த பெருநான் கெல்
55. லைக்குள்ள நிலத்தில் யீரவயலும் அதைச் சேந்த
56. புஞ்சை 30 ஏர்க்காடும் போக மத்த நஞ்சை புஞ்
57. சை சொற்ணாதாயம் வகையறுப்பு யிடங்கை வ
58. லங்கை பலசுவந்திரம் யிதுமுதலான எப்பேர்
59. ப்பட்ட வரியும் நீதி நிட்சேபம் மேல்நோக்கிய மர
60. ம் கீழ்நோக்கிய கிணறு சறுவமானியமாக தாரா
61. பூறுவமாக தாம்பிரசாதன பட்டையம் குடுத்த
62. படியினாலே சந்திராதித்தருள்வரைக்கும் எங்கள்

63. புத்திர பவுத்திர பாரம்பரியமாகத் தங்கள் சீஷ பாரம்ப
64. ரியமாக அனுபவித்துக்கொண்டு தற்மத்தைப் பரிபாலன
65. ம் பண்ணிக்கொண்டு வரக்கடவராகவும், இந்தப்படி சம்ம
66. தித்து காசி அன்னதானக்கட்டளைக்கு விசையரெ
67. குனாதராய தொண்டைமானார் தாம்பிரசாதனம் பண்
68. ணிக் குடுத்தோம்
69. யிந்தத் தற்மத்துக்
70. கு அகிதம் பண்ணினபேர்கள் காசியிலே கெங்கைக்கரை
71. யிலே கோடி காராம்பசுவைக் கொன்ற தோஷத்
72. திலே போவாராகவும், யிந்தசாதனம் பழனிய
73. ப்ப வாத்தியார் எழுத்து உ. ஸ்வதத்தாம் பரதத்தா
74. ம் வாயோ உறரேது சி வசுந்தராம் ஷஷ்டி வர்ஷ சகஸ்ர
75. ாநி விஷ்ட்டாயாம் ஸாயதே கிரிமி:

7. ஈரவயல் செப்பேடு

இருக்கும் இடம்	: காசி மடம், திருப்பனந்தாள், தஞ்சாவூர் மாவட்டம்
அரசர்	: விசைய ரகுநாதராயத் தொண்டைமானார் (1789 – 1807)
காலம்	: 25–7–1790
மொழி	: தமிழ்
அளவு	: 29 செ.மீ. × 22.5 செ.மீ.

அமைப்பும் செய்தியும்

இச்செப்பேட்டின் கைப்பிடியின் மையத்தில் சிறு துளையும் இருபுறமும் சந்திர சூரியர்களும் வரையப்பட்டுள்ளனர். செப்பேடு தொடங்கும்முன் முதலில் காளை வாகனத்தில் சிவலிங்க வடிவில் காசி விசுவநாதரும், அடுத்து நடுநாயகமாக உயர்ந்த பீடத்தில் விசாலாட்சியும், மூன்றாவதாக அலங்கரிக்கப்பெற்ற திரிசூலமும் வரையப்பட்டுள்ளனர்; சிவலிங்கம் முகலிங்கமாக அமைக்கப்பட்டு மலர்மாலை அணிவிக்கப்பட்டுள்ளது. திரிசூலத்தின் இடையிலும் மாலை அணிவிக்கப்பட்டுள்ளது. முதல்பக்க இடையில் 'ஸ்ரீராமஜெயம்' என்று தெலுங்கில் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது.

பிற்காலச் செப்பேட்டில் பொதுவாகக் காணப்பெறும் மெய்க்கீர்த்திப் பகுதிகளுக்குப் பின்னர் விசயநகர அரசர்கள் சிலர் பெயரும், மதுரை நாயக்க அரசர் அனைவர் பெயர்களும் கூறப்பட்டுள்ளன.

விசய ரகுநாதராயத் தொண்டைமானாரவர்கள் தம் பெரியப்பா மகன் ராய ரகுநாதத் தொண்டைமானார் (1769–1789) இறந்தபின் அரசரானவர். இவருடைய தந்தை திருமலைத் தொண்டைமானார் 1789இல் நோய்வாய்ப்பட்டிருந்ததால் மூத்த மகனான இவர் பதவி ஏற்றார். இவர் பதவி ஏற்றபின் 5 ஆண்டுகள் உயிர்வாழ்ந்து இவர் தந்தை 1794இல் காலமானார். இவர் தாயார் பெயர் பெருந்தேவி ஆயி என்பதாகும்.

25–7–1790 அன்று விசய ரகுநாதராயத் தொண்டைமானார் அவர்கள் காசியில் அன்னதானக் கட்டளைக்காகத் தருமபுரம் சிவஞான சம்பந்த தேசிகர் சீடரான காசிவாசி சிதம்பரனாத தம்பிரானவர்கள் வசம் கோனாட்டு ஈரவயலைச் சர்வ மானியமாகக் கொடுத்ததை இச்செப்பேடு கூறுகிறது. காலக்குறிப்பின்படி 25–7–90 அன்றே பவுர்ணமி தொடங்கியதெனத் தெரிகிறது.

நிலம் அளிக்கப்பெற்ற ஈரவயல் வாழைக்குறிச்சி எல்லைக்குட்பட்டது என்றும், அது நன்செய் நிலப்பகுதி என்றும் கூறப்பட்டுள்ளது. அதைச் சேர்ந்த 30 ஏர்ப் புன்செய் நிலமும் கொடையாக அளிக்கப்பெற்றது. ஈரவயலுக்குத் தனியாக எல்லை கூறாமல் வாழைக்குறிச்சி எல்லைக்குட்பட்டது என்று மட்டும் கூறப்பட்டுள்ளது.

இந்தச் செப்பேட்டுச் செய்தியைப் பழனியப்ப வாத்தியார் மகன் ரகுநாத வாத்தியார் எழுதியுள்ளார். இறுதியில் பிறர் செய்த தானத்தைக் காப்பது பற்றிய இரண்டு வடமொழிச் சுலோகங்கள் எழுதப்பட்டுள்ளன.

இச் செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ள ஈரவயலும், அதைச் சேர்ந்த முப்பது ஏர்ப் புன்செய் நிலமும் போக வாழைக்குறிச்சியின் மற்றப் பகுதிகள் ஏற்கனவே 21–2–1763இல் காசியில் அன்னதான தர்மத்துக்காக விசய ரகுநாதராயத் தொண்டைமானார் அவர்கள் ஏற்கனவே கொடையாக அளிக்கப்பட்ட செய்தி காசிமடத்தின் மற்றொரு செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது (எண் 6).

மூலம்

முதல் பக்கம்

ஸ்ரீ ராமஜெயம்

1. உ ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுபரன், அரியராயதள விபாட
2. ன், பாஷைக்கு தப்புவராய கண்டன், மூவராய கண்டன், கண்டநா
3. டு கொண்டு கொண்டநாடு குடாதான், பரிமேல் நகுலன், கரிமே லுதை
4. யன், வில்லால் விசையன், சொல்லால்த் தருமன், வாளுக்கு வீம
5. ன், அளகுக்கு அனங்கன், அறிவுக்கு அகஸ்த்தியன், கொடைக்குக் க
6. ற்ணன், பூலோக புரந்தரன், புஷ்ப்ப கபேரி பட்ச பாஞ்சால தேசன், சா
7. தகமான உத்தண்ட தோறத் தண்ட சண்டமாருத மண்டலேசுபரன்,
8. அஷ்ட்டதிக்கு மார்க்க மனோபயங்கரன், துஷ்ட்ட நிக்கிறக சிஷ்ட்ட பரி
9. பாலனன், பிறிதிக்கினையான், பரசுராமன், படைகண்டு தத்தளிப்
10. பார் கண்டன், பாண்டி மண்டல ஸ்தாபனாசாரியன், சோளமண்ட
11. லம் பிறதிஷ்ட்டாபனாசாரியன், தொண்டமண்டலச் சண்டப் பிரச
12. ண்டன், சேரர் சோழ பாண்டிய வல்லாழ பயங்கரன், பூறுவ
13. தெட்சண பட்சிம உத்தர சத்த சமுத்திராதிபதி, எம்மண்டலமுங்
14. கொண்டு யீழமுந் திறை கொண்டு யாள்ப்பாணமும் அழித்து கெ
15. ச வேட்டை கண்டருளிய ராசாதிராசன், ராசபரமேசுபரன்,
16. ராசமாத்தாண்டன், ராசகண்டீரவ
17. ன், ராசாக்கள் தம்பிரா
18. ன், ராசநரேந்திரன், மன்
19. னரில்மன்னன், மன்னர்கெம்பீரன், சாடிக்காரறற் கண்டன், சாமத்
20. துரோகியள் முண்டன், கட்டாரிச் சாளுவன், கலங்காத கண்டன்,
21. கும்மட்டி ராமன், சம்மட்டி நாறாயணன், ஒட்டியர்தள விபாடன், ஒட்
22. டியர் மோகந் தவிழ்த்தான், துலுக்கர்தள விபாடன், துலுக்கர் மோ

23. கந் தவிள்த்தான். மறுமன்னியர் சுந்தரன். மன்னிய ராட்டந் தவிழ்
24. த்தான். அசுபதி. கெசபதி. நரபதி. நவகோடி நாறாயணன். ஸ்ரீவீரப்
25. பிறதாபனாகிய அரிஅரதேவ மகாராயர். புசங்க ராயர். மல்லிகாற்
26. சுனதேவ மகாராயர். விருப்பாட்சிதேவ மகாராயர். புறபுடதேவ ம
27. காராயர். நரசிங்கதேவ மகாராயர். நரசருடையதேவ மகாராயர்
28. கிஷ்டிணதேவ மகாராயர். சதாசிவராயர். ராம ராயர். திருமலை
29. தேவ மகாராயர். சீர்ரெங்க ராயர். வேங்கிடபதிதேவ மகாராயர். சி
30. க்க ராயர். ஆனைகொந்தி வேங்கிடபதிதேவ மகாராயர்.
ஸ்ரீரெங்கதே
31. வ மகாராயர் காரியத்துக்குக் கற்த்தரான கச்சி விசுவனாத நாய
32. க்கர். கிஷ்டிணப்ப நாயக்கர். வீரப்ப னாயக்கர். குமார கிஷ்
டிணப்ப நா
33. யக்கர். கஷ்த்தூரி ரெங்கப்ப நாயக்கர். முத்துக் கிஷ்டிணப்ப நாயக்
34. கர். முத்துவீரப்ப நாயக்கர். திருமலை நாயக்கர்.
முத்துவீரப்ப நாயக்
35. கர். சொக்கநாத நாயக்கர். ரெங்க கிஷ்டிண முத்துவீரப்ப நா
36. யக்கர். ஸ்ரீவிசையரெங்க கிஷ்டிண முத்துவீரச் சொக்கனா
37. த நாயக்கரய்யரவர்கள் பிறிதிவி ராச்சியம்பண்ணி அருள

இரண்டாம் பக்கம்

38. [illegible] சாலிவாகன சகாற்த்தம் 1712 கலியுக சகா
39. ற்த்தம் 4891 இதின்மேல்ச் செல்லாநின்ற சாதாருண வருஷம்
40. ஆடி மீ 13உ ஆதித்த வாரமும் பூறுவ பட்சமும் சதுற்த்தெசியும்
41. உத்திராட நட்செத்திரமும் விஷ்க்கம்பநாம யோகமும் பாலவா
42. கரணமுங் கூடின சுபதினத்தில் ராசராச வளநாடு ராசேந்திர
43. சோள வளநாடு பன்றிசூள் நாடு அன்ம்பில் தெற்குளூ ரிலிருக்கு
44. ங் காணியுடைய அரையமக்களில் யிந்திரகுல வங்கிஷன். தெ
45. ன்கோடி ஆதிபன். வடகரைப்புலி. வாகைமாலைப் புயனான
46. மது திருமலைத் தொண்டைமானார் பவுத்திரன்.
திருமலையப்ப ராய
47. தொண்டைமானார் புத்திரன். விசைய ரெகுனாத ரா தொண்டை
48. மானாரவர்கள் காசியில் அன்னதானக் கட்டனைக்
தருமபுரஞ் சி

49. வஞான சம்பந்த தேசிகர் சீஷரான காசிவாசி சிதம்பரனா
50. த தம்பிரானவர்கள் பாரிசமாகக் காசித் தற்மத்துக்கு தாம்
51. புர சாதனப் பட்டையங் குடுத்தபடி கோனாட்டில் யீரவயல்
52. தாராபூறுவமாக சறுவமானியமாக தாம்பூர சாதனப் பட்டை
53. யம் கொடுத்தபடி, யீரவயலுக்கு எல்லையாவது, வாளைக்குறிச்
54. சி பரிநான்கெல்லைக் குள்ப்பட்ட நிலத்தில் யீரவயல் நஞ்சையு
55. ம் அதைச் சேர்ந்த முப்பதுஏர்ப் புஞ்சையும் திட்டுத் திடல் நத்தம்
56. படுகை தோப்புத் தொரவு மாவடை மரவடை
சொற்னாதாயம் வகைய
57. றுப்பு யிடங்கை வலங்கை பலசுவந்திரம் யிதுமுதலான யெப்பேர்
58. ப்பட்ட வரியும் கீள்நோக்கிய கிணறு மேல்நோக்கிய விருட்சம் சில த
59. ரு பாஷாணம் நிதி நிட்சேபம் சறுவமானியமாக
தாராபூறுவமாகத் தா
60. ம்பிர சாதனப் பட்டையங் குடுத்தபடியினாலே
சந்திராதித்தருள்ளவ
61. ரைக்கும் யெங்கள் புத்திர பவுத்திர பாரம்பரையமாக தங்கள்
சீஷ பார
62. ம்பரையமாக அனுபவித்துக் கொண்டு தற்மத்தை
உத்திரகோத்திரமா
63. க நடத்திவிச்சுக்கொண்டு சுகத்திலேயிருக்கக் கடவராகவும்,
யிந்தத் தறு
64. மத்துக்கு வாக்குச் சகாயம், சரீர சகாயம், அற்த்த சகாயம்
பண்ணின
65. பேர்கள் கெங்கா தீரத்திலே கோடி சிவலிங்கப் பிறதிஷ்டை பண்ணி
66. ன பலனை அடைவார்கள். யிந்தத் தற்மத்துக்கு அகிதம் பண்ணின
67. பேர்கள் கெங்கைக் கரையிலே கோடி காராம்பசுவைக் கொன்ற
68. தோஷத்திலே போவாராகவும். இந்தச் சாதனமெழுதின நன்மை
69. பளனியப்ப வாத்தியார் குமாரன் ரெகுனாத வாத்தியார்
நெட்டெளுத்து.
70. ஸ்வதத்தாத்வி குணம் புண்யம் பரதத்தாநு பா
71. லநம் பரதத்தாப ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம்
72. பவேது: ஸ்வதத்தாம் பரதத்தாம் வாயோஹரே
73. து வசுந்தரம் சஷ்டி வர்ஷ சகஸ்ராணி விஷ்டா
74. யாம் ஜாயதே க்ருமி:

8. திருவிடைமருதூர்ச் செப்பேடு

இருக்கும் இடம் : திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை தஞ்சாவூர் மாவட்டம்.
அரசர் : விசைய ரகுநாதராயத் தொண்டைமானார் (1789 - 1807)
காலம் : 29-7-1793
மொழி : தமிழ்
அளவு : 31 செ.மீ. × 23 செ.மீ.

அமைப்பும் செய்தியும்

இச்செப்பேடு முக்கால் வட்டப்பகுதி போன்ற கைப்பிடியையும் சிறுதுளையையும் உடையது. கைப்பிடியினுள் இருபுறங்களில் முத்தலைச் சூலம் இரண்டும் இடையில் பீடத்தின் மேல் அழகிய நந்தியும் உள்ளது. நந்தியின் மேல் பகுதியில் அழகிய விதானம் போன்ற அமைப்பு மூன்று கோடுகளில் வரையப்பட்டுள்ளது. விதானத்தின் உச்சியில் ஒரு கலசம் வைக்கப்பட்டுள்ளது. அதனை விமானத்தின் உச்சியாகவும் கருதலாம். முதல் பக்கம் இடையில் 'ஸ்ரீராமஜெயம்' என்று பெரிய தெலுங்கு எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.

29-7-1793 அன்று திருமலைத் தொண்டைமானார் பேரனும், திருமலையப்ப ராயத் தொண்டைமானார் மகனும் ஆகிய விசையரகுநாத ராயத் தொண்டைமானார் அவர்கள் காவேரிக்குத் தென்திசையில் உள்ளதும், கைலாசத்திற்குச் சமமானதும், மணல் எல்லாம் இலிங்கமாகவும், சலமெல்லாம் கங்கையாகவும், மனிதர்கள் எல்லாம் முனிவர்கள், விண்ணவர்களாக இருப்பதும், சோழன், பாண்டியன் பிரமகத்தி தீர்த்த தலமும், தம்மைத்தாம் அர்ச்சனை பண்ணப்பட்டதும், மத்தியார்ச்சுனம் என வழங்கப்படுவதுமாகிய திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமிக்கு திருவனந்தல் உஷக்காலக் கட்டளைப் பூசைக்குச் சூரியனார்கோயில் அதிவர்ன ஆசிரமமான சிவாக்கிரயோகிகள் சீடரான நீலகண்டத் தம்பிரான்வசம் பல ஊர்ப்பகுதிகளைக் கொடையாகக் கொடுத்ததை இச்செப்பேடு கூறுகிறது.

மருதம்பட்டம் (இதன் பழம்பெயர் பட்டத்திக்காடு), பட்டத்திக்குளம், வாச்சான்குளம், மின்னாங்குளம் இவைகட்குட்பட்ட நன்செய் நிலங்கள்,

இதைச் சேர்ந்த தொண்டைமான் புன்செய் நிலம் (இவைகளின் எல்லைகளில் மஞ்சிற்குளம் நீர்நிலை, பிரமி வயல், இருங்குளம், பாம்பன் வயல், தேவதானம், இருங்குளம் வடக்குக் கடைக்கோம்பு, வாரிகால், குமரவாணக்கன் புன்செய், கண்டியன் புன்செய், மஞ்சிவிடுதி, மஞ்சிவிடுதி கூம்பாரம் புஞ்சை, குசவன் புஞ்சை, கச்சிரான் புஞ்சை, வேப்பல், பட்டத்திக்குளம், முத்தன்பட்டி புன்செய், மின்னங்குளம் நீர்நிலை, வடக்குக் கடக்கோம்பு, பிரமிக்குளம் புன்செய், மஞ்சிற்காடு வேப்படிக் கொல்லை மேல்கரு, கோட்டி புன்செய்,தொண்டைமான் ஊரணி, பெரிய உடையான் குளம், பாம்பனோடை, இருங்குளங்குளம் வாரிகால் ஆகியன கூறப்படுகின்றன) ஆகியவை கொடையாக அளிக்கப்பட்டன. நான்கு ஊர்கள் இவற்றில் அடங்கியிருந்தன.

மருதம்பட்டம் என்ற பெயர் திருவிடைமருதூர் கோயில் தொடர்பான பெயர். தொண்டைமான் புன்செய். தொண்டைமான் ஊரணி ஆகியவை அரசர் தொடர்பான பகுதிகள்.

இறுதியில் பிறர் செய்த கொடைகளைக் காப்பதால் ஏற்படும் புண்ணியத்தைக் குறிக்கும் மூன்று வடமொழிச் சுலோகங்கள் கிரந்த எழுத்துக்களில் எழுதப் பெற்றுள்ளன. இந்தச் செப்பேட்டுச் செய்தியைப் பழனியப்ப வாத்தியார் மகன் ரகுநாத வாத்தியார் எழுதியதாகக் குறிப்பொன்று இறுதியில் உள்ளது.

மூலம்

முதல் பக்கம்

ஸ்ரீ ராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுபரன், அரியராய விபாடன், பா
2. ஷைக்குத் தப்புவராயர் கண்டன், மூவராயர் கண்டன், கண்டர் க
3. ண்டன், கண்டையப் பிறதாபன், கட்டாரிச் சாளுவன், கண்டநாடு கொ
4. ண்டு கொண்டநாடு கொடாதான், ஒருபரி கொண்டு திரள்பரி வெட்டு முபைய
5. குலோத்துங்கன், எம்மண்டலங் கொண்டு யீழமுந் திறைகொண்ட ராசா

6. திராசன், ராசமாத்தாண்டன், ராசகெம்பீரன், ராசாக்கள் தம்பிரான்
7. கோட்டத்து மன்னியர் கண்டன், சொரிமன்னியர் சூரியன், கெடிமன்
8. னியர் காலாந்தகன், தொண்டமண்டல ஸ்தாபனாசாரியன், சோழமண்
9. டலப் பிறதிஷ்ட்டாபனாசாரியன், பாண்டிமண்டலத்து பத்மனாசாரியன், ம
10. றுமன்னியர் கோடாரி, குறுமன்னியர் கோளரி, ஒட்டியர்தள வி
11. பாடன், ஒட்டியர்மோகந் தவிழ்த்தான், துலுக்கர்தள விபாடன், து
12. லுக்கர்மோகந் தவிழ்த்தான், படைகண்டு தத்தளிப்பார்கள் மிண்டன்,
13. பஞ்ச பாணாவதாரன், தற்காற்குத் தக்கன், தற்க விநோதன்.
14. தண்டுவார் மிண்டன், சண்டப் பிறசண்டன், பூறுவ தெ
15. ட்சண பச்சிம உத்தர சத்த சமுத்திராதிபதி, அசுபதி கெ
16. சபதி தனபதி நரபதி நரவேட்டை கண்டருளிய மல்லிக
17. ார்ச்சுனதேவ மகாராயர்,பிறபுடதேவ மகாராய
18. ர், ஆனைகுந்திதேவ மகாராயர்,விருப்பாட்சிதேவ மக
19. ாராயர், கிஷ்ணதேவ மகாராயர், நரசிங்கதேவ மகா
20. ராயர், வெங்கிடதேவ மகாராயர், அரிகரதேவ மகாரா
21. யர், ராமதேவ மகாராயர், சீரெங்கதேவ மகாராயர், பி
22. றிதிவி ராச்சியம் பண்ணியருளாநின்ற சாலிவாக
23. ன சகார்த்தம் 1715 கலியுக சகார்த்தம் 489
24. 4 யிதன்மேல்ச் செல்லாநின்ற பிறமாதீட்ச வருஷம் ஆடி மீ 17உ
25. சோமவாரமும் கிஷ்ணப
26. ட்சமும் சத்தமியும் அ
27. சுபசி[1] நட்செத்திரமும் சூலநாம யோகமும் பத்திர வாகறணமுங்
28. கூடின சுபதினத்தில் ராசராச வளநாடு ராசேந்திர சோழ
29. வளநாடு பன்றிசூழ் நாடு அன்பில் தெற்குலூரிலிருக்கு
30. ங் காணியுடைய அரையன் மக்களில் யிந்திரகுல வ
31. ங்கிஷன், அன்பில் னாடன், தென்கோடி யாதிபன், வடக
32. ரைப் புலி,வாகைமாலை புயனான ஸ்ரீமது திருமலைத்
33. தொண்டைமானார் பௌத்திரன், ஸ்ரீமது திருமலையப்ப
34. ராய தொண்டைமானார் புத்திரன், ஸ்ரீமது விசைய ரெகுனா

1. அசுவதி

35. த ராய தொண்டைமானார் அவர்கள் காவேரிக்கு தெஷ்ச
36. ண பாரிசமாயிருக்கிற கயிலாசத்துக்கு சமானமாயி
37. ருக்கிற மணலெல்லாம் லிங்கம் செலமெல்லாங் கெ
38. ங்கை மனுவெல்லா முனிவர் விண்ணவராயிரு

இரண்டாம் பக்கம்

39. க்கப்பட்ட சோழபாண்டியன் பிறும்மஅத்தி
40. மோசமான தம்மைத்தாம் அற்சனை பண்ண
41. ப்பட்ட மத்தியாற்சன மகாலிங்க சுவாமிக்கு தி
42. ருவனந்தல் உஷக்காலக் கட்டளைப் பூசைக்கு சூரிய
43. னார்கோவில் அதிவற்ன்னா ஆசிறமம்மான சிவாக்கிற
44. யோகிகள் சீஷரான நீலகண்ட தம்பிரான் அவர்கள்
45. பாரிசமாக தொண்டைமானாரவர்கள் கட்டளைக்கி தாம்புர சாதன
46. பட்டையங் குடுத்தபடி கீழ்ச்சீமையில் வீரக்குடி னாடு கறுக்கா
47. க்குறிச்சி மாகாணந் தெற்குத்தெருச் சேற்கையான பட்டத்திக் க
48. ாட்டுக்கு பிறிதிநாமமான மருதம்பட்டம் பட்டத்திக்குளம் வாச்சான்
49. குள மின்னங்குளம் யிதுக்குள்பட்ட நஞ்சையு மிதிற்சேர்ந்த தொ
50. ண்டமான் புஞ்சையுள்பட புஞ்சைற்குங்[2] கீழ்பாற் கெல்லையாவது
51. மஞ்சிற்குளம் நீர்நிலைற்கு [3] பரமி வயலுக்கு மேற்கு. தென்பாற் கெல்லையா
52. வது யிருங்குளன் பாம்பன் வயலுக்குந் தேவதானத்துற்கும் யிருங்கு
53. ளன்குளம்வடக்குக் கடைக்கோம்பு வாரிகாலுக்கும் வடக்கு. மேற்பாற்
54. கெல்லையாவது குமர வாணக்கன் புஞ்சைற்குங் கண்டியன் புஞ்சைற
55. கு மஞ்சி விடுதி எல்லைற்குங் கிழக்கு. வடபாற் கெல்லையாவது மஞ்சி விடு
56. தி கூம்பாரம்புஞ்சை குசவன்புஞ்சை கச்சிரான்புஞ்சை மேல்ப்பாடி
57. வேப்பலூற்கும் பட்டத்திகுளம் எதுவாய் மேலைவாகைக்கு முத்தன்பட்டி பு

---

2. புன்செய்க்குங் 3. நீர்நிலைக்கும்

58. ஞ்சைக்கு மின்னாங்குளம் நீர்நிலைட தும் வடக்குக் கடக்கோம்புக்குந்
59. தெற்கு. யிதிற்சேர்ந்த பிரமிக்குளம் நஞ்சை புஞ்சைக்குங் கீழ்பாற் கெல்
60. லையாவது மஞ்சிறகாடு வேப்படிக்கொல்லை பே கருவுற்குங் கோ
61. ட்டிபுஞ்சைற்குந் தொண்டைமானூ ரணிற்கு மேற்கு. தென்பாற்கெல்லையா
62. வது பெரிய உடையான் குளத்துக்கரைற்கும் பாம்பனோடைக்கும் வடற்
63. கு. மேல்பாற்கெல்லையாவது யிருங்குளன்குளம் வாரிகாலுக்குங்
64. கிழற்கு. வடபாற்கெல்லையாவது வாத்தலைற்கு தெற்கு. யிந்தப்பரிநான்
65. கெல்லைற்குள்ப்பட்ட ஏந்தல னாலுற்கும் நஞ்சை புஞ்சை திட்டுத் திடல்
66. நத்தம் படுகை மாவடை மரவடை பெட்டி சொற்னாதாயம் வகையறுப்பு
67. சீட்டு யாவிரை புல்லுவரி யிடங்கை வலங்கைவரி ஊழிய பாழிய
68. ம் ஆளமஞ்சி எபேர்ப்பட்ட வரியும் செல தரு பாஷாணம் நிதி நிட்சேபம்
69. உள்பட சறுவமானியமாகத் தாராபூறுவமாகத் தாம்புர சாதனப் பட்டை
70. டயங் கொடுத்தபடியினாலே சந்திராதித்தர் வரைற்கும் எங்கள் புத்திர
71. பௌத்திர பாரம்பரையமாக தங்கள் சீஷ பாரம்பரையமாக உஷ
72. க்காலக் கட்டளை தற்ம்மத்தைப் பரிபாலனம் பண்ணிக்கொண்
73. டு சுகத்திலேயிருக்கக் கடவாராகவும். யிந்த தற்மத்துற்கு வாக்
74. குச் சகாயஞ் சரீர சகாயம் அற்த்த சகாயம் பண்ணின பேர்க
75. ள் காசியிலே கெங்கா தீரத்திலே கோடி சிவலிங்கப் பிறதிஷ்டை
76. பண்ணின பலனையடைவார்கள். இந்த தற்மத்துற்கு அகிதம் ப
77. ண்ணின பேர்கள் கெங்கைக் கரையிலே கோடி காராம் பசுவைக்
78. கொன்ற தோஷத்திலே போவாராகவும். தாநபாலந யோர்மத்யே த
79. ாநாச் சிரயோநுபாலநம் தாநாத் ஸ்வர்க்க மவாப்நோதி பாலநாத்அச்சுதம்
80. பதம்:ஏகைவ பகநீலோகே சர்வேசா மேவ பூபுஜாம் நகோஜ்ய

81. ா ந கரக் ராஹ்யா லிப்ரதத்தா வசுந்தரா: ஸ்வதத்தாத்வி குணம் பு
82. ண்யம் பரதத்தாநு பாலநம் பரதத்தா பஹாரேண ஸவதத்தம் நிஷ்ப
83. லம் பவேது: யிந்தச் சாசனம் எளுதினது பழனியப்ப வா
84. த்தியார் மகன் ரெகுநாத வாத்தியார் கையி எளுத்து.

9. புதுக்கோட்டைச் செப்பேடு

இருக்கும் இடம்	: அரசு அருங்காட்சியகம், திருக்கோகர்ணம், புதுக்கோட்டை
அரசர்	: ராசா விசையரகுநாதராய பாதர் தொண்டைமானார் (1789 – 1807)
காலம்	: 14–2–1794
மொழி	: தமிழ்
அளவு	: 31செமீ × 21.5 செ.மீ.

அமைப்பும் செய்தியும்

இச்செப்பேடு இருதுளைகளையுடைய சிறு கைப்பிடியை உடையது. வலக்கையில் கமண்டலமும் இடக்கையில் குடையும் உடைய வாமனர் உருவம் சிறிய அளவில் வரையப்பட்டுள்ளது. இச்செப்பேட்டில் கண்ட கொடை ஒரு சந்திர கிரகண நாள் அன்று அளிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்பச் சந்திரனை ஒரு பாம்பு விழுங்க வருவதுபோல வரைகோட்டு ஓவியம் கைப்பிடியில் வரையப்பட்டுள்ளது. கைப்பிடியையும் செப்பேட்டுச் செய்தியையும் பிரிக்க இடையில் ஒரு கோடு வரையப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை அருங்காட்சியகத்தில் உள்ள குறைச் செப்பேட்டில் இதுவும் ஒன்று. வழக்கமான மெய்க்கீர்த்திப் பகுதிக்குப்பின் காலக்குறிப்பும் புதுக்கோட்டைத் தொண்டைமானாரது பொதுவான சிறப்புமட்டும் எழுதப்பட்டுள்ளது. அடுத்து ஸ்ரீமது என எழுதிப் பெயர்ப்பகுதியும் கீழ்வரும் பிற பகுதிகளும் பொறிக்கப் பெறவில்லை. முதல் பக்கத்தின் இடையிலேயே செப்பேடு நின்று விடுகிறது. காலக்குறிப்பை வைத்து இங்கு அரசன் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. ஒரு பௌர்ணமி தினத்தன்று இக்கொடை அளிக்கப்பட்டுள்ளது.

முதல் பக்கத்தின் கீழ்ப்பகுதியில் 'ஸ்ரீராமஜெயம்' என்று தெலுங்கில் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது.

மூலம்

முதல்பக்கம்

ஸ்ரீராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் அரியராய
2. விபாடன் பாஷைக்குத் தப்புவராயர் கண்டன் மூ
3. வராயர் கண்டன் கண்டர் கண்டன் கண்டை
4. யப்பிறதாபன் கட்டாரிச் சாளுவன் கண்டனாடு
5. கொண்டு கொண்டனாடு குடாதான் ஒருப
6. ரி கொண்டு திரள்பரி வெட்டு முடையகுலோத்து
7. ங்கன் எம்மண்டலங்கொண்டு யீழமுந் திறை
8. றகொண்ட ராசாதிராசன் ராசமாறத்தாண்ட
9. ன் ராசாக்கள் தம்பிரான் கோட்டத்து மன்னி
10. யர் கண்டன் சொரிமன்னியர் சூரியன், கெ
11. டிமன்னியர் காலாந்தகன், தொண்டமன்
12. டல ஸ்தாபனாசாரியன், சோழமண்டலப்
13. பிறதிட்டாபனாசாரியன், பாண்டி மண்டலத்துப்
14. பற்மனாசாரியன், மறுமன்னியர் கோடாரி, குறும
15. ன்னியர் கோளரி, ஒட்டியர்தள விபாடன் ஒட்டிய
16. ர் மோகந் தவிழ்த்தான், துலுக்கர்தள விபாடன், து
17. லுக்கர் மோகர்ந் தவிழ்த்தான், படை கண்டு
18. தத்தளிப்பார்கள் மிண்டன், பஞ்சபாணாவதா
19. ரன் தற்காற்குத் தற்கன், தற்கவினோதன், தண்டுவா
20. ர் மிண்டன், சண்டப் பிறசண்டன் பூறுவ தெட்சண பச்சிம
21. உத்தர சத்த சமுத்திராதிபதி அசுபதி கெசபதி ந
22. ர வேட்டை கண்டருளிய மல்லிகாற்சுனதேவ ம
23. காராயர், பிறபுடதேவ மகாராயர், யானைகுந்தி
24. தேவ மகாராயர், ராமதேவ மகாராயர், கிஷ்ண
25. தேவ மகாராயர், விருப்பாட்சிதேவ மகாராயர், சீ
26. ரங்கதேவ மகாராயர் பிறிதிவி ராச்சியம் பண்
27. ணியருளாநின்ற சாலிவாகன சகாத்தம்
28. 1715 கலியுக சகாப்தம் 4894 இதின்
29. மேல்ச் செல்லாநின்ற பிறமாதீச்ச வருஷம் மாசி மாதம்
30. 6௨ சுக்கில பட்சமும் வெள்ளிக்கிழமையும் பௌணா
31. மாவாஸ்யையும் ஆயில்ய நக்ஷத்ரமும் சோபநநாம யோகமும்

32. பத்ரவாகரணமும் கூடின சுபதினத்தில் சந்த்ர கிரஹண
புண்ய காலத்தி
33. ல் ராசராசவளனாடு ராசேந்திரசோழவளனாடு பன்றிசூழ்னாடு அ
34. ம்பில் தெற்க்
35. கிலூரிலி
36. ருக்குங் க
37. ாணியுடைய ராசர்மக்களில் ஸ்ரீமது

10. கூடலூர்ச் செப்பேடு

இருக்கும் இடம்	: காசிமடம், திருப்பனந்தாள், தஞ்சை மாவட்டம்
அரசர்	: விசையரெகுநாதராய தொண்டைமானார் (1789 - 1807)
காலம்	: 2-5-1796
மொழி	: தமிழ்
அளவு	: 31 செ.மீ. × 18.5 செ.மீ.

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேட்டில் முக்கால் வட்டவடிவில் அமைக்கப்பெற்ற கைப்பிடியின் இடையில் சிறுதுளை ஒன்று உள்ளது. கைப்பிடியின் முன்பக்கத்தில் துளையின் மேல்பகுதியில் பிள்ளையார் சுழியும், அதன் இருபுறங்களில் சூரியனும் சந்திரனும் வரைகோட்டு ஓவியமாக வரையப்பட்டுள்ளனர். முதல் பக்க நடுவில் 'ஸ்ரீராம ஜெயம்' என்று தெலுங்கில் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது.

வழக்கமான மெய்க்கீர்த்திப் பகுதிக்குப் பின்னர் விசயநகர அரசர்கள் சிலர் பெயரும், மதுரை நாயக்க அரசர்கள் பெயரும் எழுதப்பெற்றுள்ளன. மதுரை நாயக்க அரசரில் முதல்மன்னர் விசயநகர அரசரின் காரியத்துக்குக் கர்த்தர் என்றும் கச்சி விசுவநாத நாயக்கர் என்றும் எழுதியிருப்பதால் சாசனம் எழுதியவரின் வரலாற்றறிவு புலப்படுகிறது.

2-5-1796 அன்று திருமலைத் தொண்டைமானார் பேரனும், திருமலையப்பராயத் தொண்டைமானார் மகனும் ஆன விசைய ரகுநாதராயத் தொண்டைமானார் அவர்கள் தருமபுரம் ஆதீனம் சிவஞான

சம்பந்த தேசிக சுவாமிகள் சீடர் திருப்பனந்தாள் காசிமடத்து அதிபர் சடையப்பத் தம்பிரான் அவர்கள் மூலமாகக் கோனாட்டுப் பகுதியில் உள்ள கூடலூர் என்னும் ஊரைக் காசித் தர்மத்துக்குக் கொடையாக அளித்த விவரம் இச்செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது. கோனாட்டின் உள்நாடு 64 நாடுகளில் கூடலூர் நாடு ஒன்றாகும்.

கூடலூரின் எல்லைகளாக ராராபுரம் தன்மணிக்குளம், சித்தூர், சாணியோடை, தென்னாட்டம்பட்டி, கீரங்குடிப்பட்டி, பனையூர் ஆகியவை கூறப்பட்டுள்ளன. ராராபுரம் என்பது இராசராசபுரம் ஆகும்.

நான்கெல்லைக்குட்பட்ட நன்செய், புன்செய், திட்டு, திடல், நத்தம், படுகை, தோப்பு, துரவு, மரவடை, சொர்னாதாயம், வகையறுப்பு,இடங்கை, வலங்கை, பல சுதந்திரம் இது முதலான எல்லா வரிகளும் கொடையாக அளிக்கப்பெற்றன. ஏற்கனவே கூடலூரில் அளிக்கப்பெற்றிருந்த தேவதாயம், பிர்மதாயம், உம்பளம்,தவிட்டுப் பண்டாரம், கவிராயர் கொடைகள் நீக்கப்பெற்ற பின்னரே இச்சாசனம் எழுதித் தரப்பட்டுள்ளது.

கொடையைக் காப்போர், அழிப்போர் முறையே அடையும் நன்மை தீமைக் குறிப்புகளுக்குப் பின்னர்த் தானத்தைக் காப்பது தொடர்பான மூன்று வடமொழிச் சுலோகங்கள் கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன.

இந்தச் சாசனம் எழுதியவர் பழனியப்ப வாத்தியார் மகன் ரெகுநாத வாத்தியார் என்று இறுதியில் பொறிக்கப்பெற்றுள்ளது.

மூலம்

முதல் பக்கம்

ஸ்ரீராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுபரன். அரியராயதள விபாட
2. ன். பாஷைக்கு தப்புவராய கண்டன். மூவராயர் கண்
3. டன். கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடாதான்.
4. பரிமேல் நகுலன். கரிமே லுதையன். வில்லால் விசைய
5. ன். சொல்லால் தருமன். வாளுக்கு வீமன்.அழகுக் கனங்க

6. ன், அறிவுக் ககத்தியன், குடைக்குக் கற்னன், பூலோக பு
7. ரந்தரன், புட்கபேரி பட்ச பாஞ்சாலதேசன், சாதகமா
8. ன உத்தண்ட தொரத்தண்ட சண்டமாருத மண்டலேசுப
9. ரன், அஷ்டதிக்கும் ராசமனோபயங்கரன், துஷ்ட நிக்கிறக
10. சிஷ்ட்ட பரிபாலனன்,பிறிதிக்கினையான், பரசுரா
11. மன், படைகண்டு தத்தளிப்பார் கண்டன், பாண்டிமண்ட
12. ல ஸ்தாபனாசாரியன், சோழமண்டலப் பிறதிஷ்ட்டாபனா
13. சாரியன், தொண்டமண்டல சண்டப் பிறசண்டன்,
14. சேரா் சோழ பாண்டிய வல்லாள பயங்கரன், பூறு
15. வ தெட்சண பச்சிம உத்தர சத்த சமுத்திராதிபதி, எம்ம
16. ண்டலங் கொண்டு யீழமுந் திறைகொண்டு யாட்ப்
17. பாணமும் அழித்து கெசவேட்டை கண்டருளிய ரா
18. சாதிராசன், ராசபரமேசுபரன், ராசமாற்த்தாண்
19. டன், ராசகண்டீரவன், ராசாக்கள்தம்பிரான், ரா
20. சநரேந்திரன், மன்னரில் மன்னன், மன்னர் கெ.
21. ம்பீரன், சாடிக்காறர் கண்டன், சாமத்துரோகி
22. யள் முண்டன், கட்டாரிச் சாளுவன், கலங்காத க
23. ண்டன், கும்மட்டி ராமன், சம்மட்டி நாறாயணன்,
24. ஒட்டியர்தள விபாடன், ஒட்டியர்மோகந் தவிழ்
25. த்தான், துலுக்கர்தள விபாடன், துலுக்கர்மோகந்
26. தவிழ்த்தான், மறுமன்னியர் சுந்தரன், மன்னிய
27. ராட்டந் தவிழ்த்தான், அசுபதி கெசபதி தனபதி நர
28. பதி நவகோடி நாறாயணன், ஸ்ரீவீரப் பிரதாபனா
29. கிய அரிஅரதேவ மகாராயர், புசங்கராயர், மல்லி
30. கார்ச்சுனதேவ மகாராயர், விருப்பாட்சிதேவ மக
31. ரராயர், பிறபுடதேவ் மகாராயர், நரசிங்கதே
32. வ மகாராயர், நரசாருடையதேவ மகாராயர்,
33. கிஷ்ணதேவ மகாராயர், திருமலைதேவ மகாரா
34. யர், வேங்கிடபதிதேவ மகாராயர், சிக்கதேவ ம
35. காராயர், ஆனைகொந்திதேவ மகாராயர், ஸ்ரீரெ
36. ங்கதேவ மகாராயர் காரியத்துக்குக் கற்த்தரான க
37. ச்சி விசுவனாத னாயக்கர், கிஷ்ணப்ப னாயக்கர், வீரப்
38. ப னாயக்கர், கஸ்தூரி ரெங்கப்ப னாயக்கர், முத்துகிஷ்ண
39. ப்ப னாயக்கர், முத்துவீரப்ப னாயக்கர், திருமலை னாயக்க
40. ர், முத்துவீரப்ப னாயக்கர், சொக்கனாத னாயக்கர், ரெங்ககி

41. ஷ்ண முத்துவீரப்ப னாயக்கர். ஸ்ரீவிசையரெங்ககிஷ்
42. ண முத்துவீர சொக்கனாத னாயக்கரைய்யர் அவர்க
43. ள் பிறிதிவி ராச்சியம்பண்ணி அருளாநின்ற சாலிவ
44. ாகன சகார்த்தம் 1718 கலியுக சகார்த்தம் 4
45. 897 யிதின்மேல் செலாநின்ற நள வருஷம் சித்திரை
46. மீ 23உ திங்கள்கிளமையும் அமரபட்சமும் திச
47. மியும் சதைய நட்செத்திரமும் அயிந்திரநாம யோ

இரண்டாம் பக்கம்

48. கமும் வணிக வாகறணமுங் கூடிய சுபதினத்தில்
49. ராசராச வளனாடு ராசேந்திரசோழ வளனாடு பன்
50. றிகூழ்னாடு அன்பில் தெற்குலூ ரிலிருக்குங் காணியு
51. டைய அரசர் மக்களில் யிந்திரகுல வங்கிஷன் அன்பி
52. ல் னாடன் தென்கோடியாதிபன் வடகரைப் புலி வாலை
53. க மாலை புயனான ஸ்ரீமது திருமலைத் தொண்டைமா
54. னார் பௌத்திரன் திருமலையப்ப ராய தொண்டைமா
55. னார் புத்திரன் விசைய ரெகுனாதராய தொண்டைமா
56. னார் அவர்கள் காசியில் அன்னதானக் கட்டளைக்கி
57. தருமபுரம் சிவஞான சம்பந்தர் தேசிகர் சீஷரான காசி
58. வாசி சடையப்ப தம்பிரான் அவர்கள் பாரிசமாக கா
59. சித் தற்மத்துக்கு தாம்புர சாதன பட்டையங் கொடு
60. த்தபடி. கோனாட்டில் கூடலூரு தாராபூருவமாக சறு
61. வ மானியமாகத் தாம்புர சாதன பட்டையங் கொடு
62. த்தபடி கூடலூருக் கெல்லையாவது கீள்பாற்கெல்
63. லை ராராபுரந் தன்மனிக் குளத்துக்கு மேற்கு. வடபா
64. ற் கெல்லையாவது சித்தூர் சாணியோடைக்கு தெற்கு.
65. மேல்பாற்கெல்லையாவது தென்னாட்டாம்பட்டி கீரங்
66. குடிப்பட்டிக்குக் கிளக்கு. தென்பாற் கெல்லையாவது
67. பனையூர் எல்லைக்கு வடக்கு யிந்தப் பரினான் கெல்லை
68. க்குள்ப்பட்ட நஞ்சை புஞ்சை திட்டுத் திடல் நத்தம் படுகை
69. க தோப்புத் துரவு மாவடை மரவடை சொற்னனாதாய
70. ம் வகையறுப்பு யிடங்கை வலங்கை பல சுவந்திரம் யீ
71. து முதலான எப்பேர்ப்பட்ட வரியும் யிதில் தேவதாயம்
72. பிற்ம்மதாயம். உம்பளம். தவிட்டுப் பண்டாரம். கவிராயர்

73. நீங்கலாக யிதுக்குப் பிறாக்கு அத்தபடி யிறைவரி சுவந்திர முள்
74. ளதும் நீ ாக்கிய கிணறு மேல்நோக்கிய விருட்சம் செல
75. தரு பாஷாணம் நிதி நிட்சேபம் சறுவமானியமாக தாம்பு
76. ர சாதனப் பட்டையாங் கொடுத்தபடியினாலே சந்திராதி
77. த்தாள் உள்ளவரைக்கும் எங்கள் புத்திர பவுத்திர பார
78. ம்பரையமாக தங்கள் சீஷ பாரம்பரையமாக அனுபவி
79. த்துக்கொண்டு தற்ம்ம மத உத்திர கோத்திரமாக நடத்தி
80. விச்சுக் கொண்டு சுகத்திலே யிருக்கக் கடவாராகவும்
81. யிந்த தற்மந்துக்கு வாக்குச் சகாயம் சரீர சகாயம் அ
82. ற்த்த சகாயம் பண்ணின பேர்கள் காசியிலே கெ
83. ங்கா தீரத்திலே கோடி சிவலிங்கப் பிறதிஷ்ட்டை
84. பண்ணின பலனை அடைவார்கள். யிந்த தற்ம்ம
85. த்துக்கு ீதம் பண்ணினவர்கள் காசியிலே கெங்கை
86. கக் கல லே கோ காராம்பசுவைக் கொன்ற தே
87. ாஷத்திே போவாராகவும். தாந பாலந யோர்மத்ே
88. ய தாநா ஸ்ரயோநு பாலநம் தாநாத் ஸ்வர்க்க மவாப்
89. நோதி பாலநாதச்சுதம் பதம்: ஏகைவ பகிநீ லோே
90. க சர்வேசா மேவ பூபுஜாம் ந கரக் ரா
91. ஹ்யா விப்ர தத்தா வசுந்தராம்: ஸ்வதத்தாத்வி குணம் பு
92. ண்யம் பரதத்தாநு பாலநம் பரதத்தாப ஹாரேண
93. ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேத் : யிந்த சாதனம் எழுதின
94. நன்மை பழனியப்ப வாத்தியார் புத்திரன் ரெகு
95. னாத வாத்தியார்.

11. அடப்பங் கூத்தப்பன் சத்திரச் செப்பேடு I

இருக்கும் இடம்	: அரசு அருங்காட்சியகம், திருக்கோகர்ணம், புதுக்கோட்டை.
அரசர்	: ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமானார் (1789 – 1807)
காலம்	: 9–6–1797
மொழி	: தமிழ்
அளவு	: 41 செ.மீ. × 28 செ.மீ.

அமைப்பும் செய்தியும்

இச்செப்பேடு பல வரைகோடுகளால் அழகூட்டப்பெற்ற மேல் பகுதியில் துளையையுடைய கைப்பிடியுடன் அமைக்கப்பட்டுள்ளது. மேல் பகுதியில் துளைக்கு இருபக்கங்களிலும் இரு மலர்கள் வரையப்பட்டுள்ளன. அதன்கீழ்ச் சந்திரசூரியர்கள் வரையப்பட்டுள்ளனர். கைப்பிடியின் அடிப்பகுதியில் அமைக்கப்பெற்ற பீடம் ஒன்றில் விஷ்ணுவின் ஐந்தாம் அவதாரமான வாமனாவதார உருவம் நின்ற நிலையில் வரையப்பட்டுள்ளது. வாமனரின் வலக்கையில் கமண்டலமும், இடக்கையில் அழகிய குடையும் உள்ளன. பாதம் வரை வேட்டி அணிந்துள்ள வாமனரின் தலையின் பின்புறம் குடுமியும், மார்பில் முப்புரி நூலும் உள்ளது. கைகளில் வாகுவலயம், கடகம் ஆகியவை உள்ளன.

கைப்பிடியின் பின்பக்கம் நடுநாயகமாக ஒரு தெப்பக்குளமும், அதனுள் நான்கு மலர்க்கொடிகளும் உள்ளன. குளத்தின் கீழ்ப்பகுதியில் அழகிய செடி ஒன்றும் அதன் அடிப்பகுதியில் இருபுறமும் இரு அன்னப்பறவைகளும் உள்ளன. செடியின் இருபக்கங்களிலும் இரு குருவிகள் உள்ளன. குளத்தின் இருபுறங்களில் இரு கிளிகளும், இரு பசுக்களும் உள்ளன. ஏறக்குறைய 9 செ.மீ. சதுர அளவினுள் இத்துணை வரைகோட்டு ஓவியங்களையும் மிகமிக அழகிய முறையில் வரைந்த வரைகோட்டு ஓவியனை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

கொடைதரும் நிலஎல்லைகளில் வாமன முத்திரைக் கற்கள் நடுவதைப் பல கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் கூறுகின்றன. மாபலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண்கேட்ட வாமனாவதார வரைகோட்டு ஓவியங்களைக் குறிப்பாக நிலக்கொடைச் செப்பேடுகளில் வரைந்திருப்பது பொருத்தமானதேயாகும்.

திருமலைராய தொண்டைமானார் பேரனும், திருமலைப்பராய தொண்டைமானார் மகனும் ஆகிய ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமானார் அவர்கள் கானாட்டுப் பகுதி சுபேதாராக இருந்த செங்கமலம்பிள்ளை மகன் அடப்பங்கூத்தப்பன் பெயரில் திருக்கோகர்ணத்துக்கு மேற்கு கபிலை வளநாட்டில் சேதுமார்க்கத்தில் கட்டியா குளத்திற்கு மேற்கு மாம்பட்டிக்குத் தென்கிழக்கு சிறுகுட்டியாவயல் குளத்துக்கு வடகிழக்கு பிரகதாம்பாள் சமுத்திர அக்கிரகாரத்துக்குக் கிழக்கு ஆகிய எல்லைகளின் நடுவில் என்றென்றும் நிலைக்க

அன்னதான தர்மச்சத்திர மண்டபம் ஒன்றைக் கல்லிலே கட்டி அதற்கு வேண்டும் கொடைகளை ஒரு பௌர்ணமியன்று விட்டதை இச்செப்பேடு கூறுகிறது. இச்செப்பேட்டை மைய அரசின் தொல்லியல் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவினர் படி எடுத்துள்ளனர்.*

அடப்பங்கூத்தப்பன் மரணத்திற்குப்பின் அவன்பால் அன்பு கொண்ட அரசர் அவன் நினைவாக இந்தச் சத்திரத்தை ஏற்படுத்தியிருக்கலாம். கட்டியா வயல், ஒல்லியூர்க்கூற்றம், கோனாடு பிறமலை சூழ்ந்த பொன்னமராவதி நாட்டு வடபத்துக் கொவ்வனூர், மெய்க்கினிப்பட்டி ஆகிய ஊர்ப்பகுதிகள் அடப்பங்கூத்தப்பன் சத்திரத்துக்குத் தொண்டைமானாரால் கொடையாக அளிக்கப்பட்டன. ஒல்லியூர் என்பது சங்க இலக்கியம் கூறும் ஒல்லையூர் ஆகும்.

கட்டியாவயலின் எல்லைகளாக நசிரான்குளம், கவண்டன் வயல், காளிகோட்டை வடக்குக் கொத்தளம், கவிநாட்டுக்குளம் தண்ணீர்ப்புடி ஈச்சங்காடு, சிறுகுட்டியாவயல், புரைகரைவயல், பெரியகுட்டியாகுளம் கீழ்க்கடைக் கோம்பு, இலுப்பைத் தோப்பு மேலைக்கரு, தெப்பக்குளம் வடக்குக்கரை மதகு, சத்திரம், பெரிய கொல்லை, மலைக்குன்று, கீர்த்தாவயல், கட்டியாகுளம் தண்ணீர்ப்புடி அறுதி, குண்ணவயல் மேலைக்கரு தென்புரம் வயல்பரப்பு அறுதி, நசிறாங்குளம் குளவாய் ஆகியவைகளும்,

கொவ்வனூரின் எல்லைகளாக வாழைக்குறிச்சி எல்லை, செவ்வலூர்க் கோனாடன் புன்செய், சுந்திரம் எல்லை, அரசுமலை எல்லைக்குத் தெற்குக்கரு ஆகியவைகளும்,

மெய்க்கினிப்பட்டிக்கு எல்லைகளாகச் செவ்வலூர் மின்னக்காத்தான் மேடு, செவ்வலூர்க் கோனாடன் புன்செய், சுந்தரம் பாப்பான் புன்செய், கொவ்வனூர்க் கண்மாய் ஆகியவைகளும் கூறப்படுகின்றன.

இவை தவிர அன்னவாசல், மேட்டுப்பட்டி, கீரனூர், திருமெய்யம், செவ்வலூர் ஆகிய ஊர்களின் மகமைகளும் அளிக்கப்பட்டன. இடங்கை, வலங்கைக் குடிகள் குடிக்குக் கால் பணமும், வாணியர்

* ARE (A) 22 of 1950

உள்ளிட்டார் பல்லவன் படியில் 230 படி கொடுக்கவேண்டும் என்றும் நிர்ணயிக்கப்பட்டது. பல்லவராயர் மரபினர் புதுக்கோட்டைத் தொண்டைமானார் மரபிற்குமுன் புதுக்கோட்டைப் பகுதியை ஆட்சி புரிந்தனர். சேதுபதிகள் துணையுடன் அவர்களை அழித்தே தொண்டைமானார் மரபினர் புதுக்கோட்டையில் ஆட்சியில் அமர்ந்தனர். பல்லவன்படி பல்லவராயர் காலத்திய அளவையாகலாம்.

2204 1/8 சேர் எடையுள்ள 70 பாத்திரங்கள் சத்திரத்திற்கு வழங்கப்பட்டன. அத்துடன் 100 பசுமாடுகளும் 200 ஆடுகளும் அளிக்கப்பட்டன. இப்பசுமாடுகளும் ஆடுகளும் பழங் கல்வெட்டுக்களில் சாவாமூவாப்பசு, சாவா மூவாப்பேராடுகள் என்று கூறப்பெறும்.

தானங்களைப் பற்றிய சுலோகங்களுக்குப்பின் செப்பேட்டின் இறுதியில் பழனியப்ப வாத்தியார் மகன் ரகுநாத வாத்தியார் இச் செப்பேட்டுச் செய்தியை எழுதிய விவரம் குறிக்கப்பட்டுள்ளது.

மூலம்

முதல் பக்கம்

ஸ்ரீ ராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுபரன், அரியராயதள விபாடன், பா
2. ஷைக்குத் தப்புவராயர் கண்டன், மூவராயர் கண்டன், கண்
3. டர் கண்டன், கண்டையப் பிறதாபன், கட்டாரிச் சாளுவன்,
4. கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான், ஒருபரி செ
5. லாண்டு திரள்பரி வெட்டு முபையகுலோத்துங்கன், எம்மண்
6. டலங்கொண்டு யீழமுந் திறைகொண்ட ராசாதிராசன், ரா
7. சகெம்பீரன், ராசநாறன குதைிலகன, ராசகண்டீரவன்,
8. ராசாக்கள் தம்பிரான், கோட்டத்து மன்னியர் கண்டன், சொரி
9. மன்னியர் சூரியன், கெடிமன்னியர் காலாந்தகன், தொண்ட
10. மண்டல ஸ்தாபனாசாரியன், சோழமண்டல பிறதிஷ்ட்டாப
11. னாசாரியன், பாண்டிமண்டலத்து பத்மனாசாரியன், மறுமன்னி
12. யர் கோடாரி, துலுக்கர்தள விபாடன், துலுக்கர்மோகந் தவி
13. ழ்த்தான், அரியதள விபாடன், அரியர்மோகந் தவிழ்த்தான், தொ

14. ட்டியர் தளவிபாடன், தொட்டியர்மோகந் தவிழ்த்தான், தற்கா
15. ற்குத் தற்கன், தற்க வினோதன், தண்டுவார் மிண்டன், சண்டப்பிற
16. சண்டன், சகல குணாபிராமன், துங்காபிராமன், துர்க ரேபந்த
17. ன், சொல்லுக் கரிச்சந்திரன், வில்லுக்கு விசையன், பரிக்கு நகுல
18. ன், குடைக்கு கற்ன்னன், பொறுமைக்கு தற்ம்மர், பூற்வ தெட்சண
19. பட்சிம உத்தர ஸப்த ஸமுத்திராதிபதி, அசுபதி கெசபதி தனபதி நரப
20. தி நரவேட்டை கண்டருளிய மல்லிகாற்சுனதேவ மகாராயர், பிரபு
21. டதேவ மகாராயர், யானைகுந்திதேவ மகாராயர், ராமதேவ மகார
22. ாயர், கிஷ்ட்டிணதேவ மகாராயர், விருப்பாட்சிதேவ மகாராயர்
23. ஸ்ரீரெங்கதேவ மகாராயர் பிறிதிவி ராச்சியம்பண்ணி யருளாநி
24. ன்ற சாலிவாகன சகார்த்தம் 1719 கலியுக சகார்த்
25. தம் 4898 யிதன்மேல்ச் செலாநின்ற பிங்கள வருஷம்
26. வைய்யாசி மீ 30உ வெள்ளிக்கிழமையும் பௌர்நமாவா
27. ஸ்யயும் கேட்டை நட்செத்திரமும் ஸாத்திநாம யோகமும் பவ
28. கரணமும் யிதுகள் கூடின ஸோமோபராக புண்ணிய கா
29. லத்திலே ராசராச வளநாடு ராசேந்திரசோழ வளநாடு பன்றி
30. சூழ்நாடு அன்பில் தெற்குலூ ரிலிருக்குங் காணியுடைய அரை
31. யன்மக்களில் காசிப கே
32. காத்திரத்தில் விள
33. ங்கும் ஸ்ரீமது திரு
34. மலைராய தொண்
35. டைமானார் பௌத்ரந் திருமலையப்ப ராய தொண்டைமானார் பு
36. த்ரந் ரா ராசா விசையரெகுனாதராய பாதர் தொண்டைமானா
37. ரவர்களுக்கு மன்சுபா[1] நடந்த கானாட்டில் செங்கமலம்பிள்ளை
38. மகன் அடப்பங் கூத்தப்பன் பேருக்கு திருக்கோகருண ஸ்தலத்து
39. க்கு மேற்கு கபிலை வளநாட்டில்[2] சேதுமார்க்கத்திலே க[illegible]டி
40. யாகுளத்துக்கு மேற்கு மாம்பட்டிக்குத் தென்கிழக்கு சிறுகுட்டியா
41. வயல்குளத்துக்கு வடகிழக்கு பிரகதாம்பாள்சமுத்திரம் அக்கிறாக
42. ாரத்துக்கு கிழக்கு மத்தியத்திலே புண்ணியபூமியிலே ஸ[illegible]சு
43. வதிக அன்னதான தற்ம்மத்துக்கு சத்திரங் கல்மண்டபந் [illegible]தெற்ப்ப
44. க்குள[3] முண்டுண்ணிவிச்சபடியினா[illegible]லே யிந்த தற்ம்மத்[illegible]தக் க
45. ட்டியாவயல் நஞ்சை புஞ்சைக்கு எல்லையாவது, கீழ்பா[illegible]க

1. 'மன்சப்தார்' என்னும் பதவி
2. பழங்கல்வெட்டில் 'கவிநாடு' என்று குறிக்கப்பெறும் பகுதி.
3. தெப்பக்குள

46. ல்லையாவது நசிறான் குளத்துக்குக் கிழக்கு. கவண்டன் வயலு
47. க்கு மேற்க்கு, தென்பார்க்கெல்லையாவது காளிகோட்டை வ
48. டக்கு. கொத்தளம் யிங்குவிட்டு மேற்க்கு. கவினாட்டுக்குளம் தண்
49. ணீர்ப்புடி யீச்சங்காடு யிதின் மேற்க்கு. சிறுகுட்டியா வயல்

இரண்டாம் பக்கம்

50. புறைகரை வயல். மேல்பாறக் கெல்லையாவது பெரியகுட்டியாகு
51. ளங் கீள்க்கடக்கோம்பு யிதின்விட்டு வடபுறம் யிலுப்பை தோ
52. ப்பு மேலைக்கரு கிளக்கு தெற்ப்பக்குளம் வடக்குக்கரை மதவுக்குக் கி
53. ழக்கு. வடபாறக்கெல்லையாவது சத்திரத்துக்கு வடக்கு பெரியகொ
54. ல்லை வடக்கு மலைக்குண்ணு யிங்குவிட்டுக் கிழக்கு கீர்த்தா வய
55. ல் கட்டியாகுளந் தண்ணீர்ப்புடிஅறுதி யிங்குவிட்டுக் கிழக்கு
56. குண்ணவயல் மேலைக்கரு தென்புரம் வயல் வரப்புஅறுதி ந
57. சிறங்குளங் குளவாய் உள்பட யிந்தப் பரிநான்கெல்லைக்குள்
58. ப்பட்ட நத்தம் படுகை தோப்புத்துறவு மாவடை மரவடையும்
59. ஒல்லியூர்கூத்தங் கோனாடு பிறமலை[4] சூழ்ந்த பொன்னமராப
60. தி னாட்டு வடபத்து கொவ்வனூருக் கெல்லையாவது கீழ்பாற
61. க்கெல்லை வாழைக்குறிச்சியெல்லைக்கி மேற்க்கு. தென்பாறக்
62. கெல்லையாவது செவ்வலூர்க் கோணாடன் புஞ்சைக்கி வடக்கு. மே
63. மல்பாற கெல்லையாவது சுந்திரம் யெல்லைக்கிக் கிழக்கு. வட
64. பாறக்கெல்லையாவது அரசுமலை யெல்லைக்கி தெற்குகரு யிந்த
65. ப் பரிநான் கெல்லைக்குள்பட்ட நஞ்சை புஞ்சை திட்டுத்திடல்
66. தோப்புத் துறவு மாவடை மரவடையும் மெய்க்கிணிப்பட்டிக்
67. கெல்லையாவது. கீழ்பாறகெல்லை செவ்வலூர் மின்னக்காத்தா
68. ன்மேட்டுக்கு மேற்க்கு. தென்பாறகெல்லையாவது செவ்வலூர்
69. கோனாடன்புஞ்சைக்கு வடக்கு. மேல்பாறக்கெல்லையாவது சு
70. ந்தரம் பாப்பான்புஞ்சைக்கு கிழக்கு வடபாறக் கெல்லையாவ
71. து கொவ்வனூர்க் கம்மாயிக்கு தெற்கு ஆ(க)ச் சூழ்ந்த பரிநான்கெல்
72. லைக் குள்ப்பட்ட நஞ்சை புஞ்சை திட்டுத் திடல் நத்தம் படுகை
73. தோப்புத் துறவு மாவடை மரவடை சொற்ன்னாதாயம் வ
74. கையறுப்பு யிடங்கை வலங்கைவரி பலசுவந்திரம் யி
75. துமுதலான யெப்பேர்ப்பட்ட வரியும் கீழ்நோக்கிய கிண

4. பிரான்மலை

76. று மேல்நோக்கிய விருட்சம் செலதரு பாஷாணம் நிதி நி
77. ட்சேபம் சறுவமானியமாகவும் யிந்த தற்ம்மத்துக்காக
78. உண்டு படுத்தின அண்ணவாசல்மகமையும் மேட்டுப்பட்டிம
79. கமையும் கீரனூர்மகமையும் திருமையஞ் செவ்வலூர்மகமையும் யிட
80. [illegible] வலங்கைகுடி 1ற்கு பணம் 1/4 பணம் வீதமும் வா[illegible] ள்ளி
81. ட்டார் மகமை எ[illegible] பல்லவன்படி 230 தற்ம்மத்து
82. க்கு குடுத்த பாத்திரம் உருப்படி [illegible] சேர் 2204 அரைக்கால். பசும
83. ாடு 100 ஆடு 200 இந்தப்படிக்கு கல்லுங் காவேரியும் புல்லு
84. ம் பூமியும் யுன்றாந[5] மட்டுக்கும் தாம்புர ஸாதனப்பட்டையந் தார
85. ா பூறுவமாகக் கொடுத்தபடியினாலே கோகருணேசுபரரும் பிற
86. கதாம்பாளும் நாகனாதேசுபரரும் பெரியனாயகி அம்மனும் குடுமி
87. னாதேசுபரரும் அகிலாண்டேசுபரியும் வியாக்கிறபுரியீசுபர
88. ரும் பிறகதம்பாளும் யிவர்கள் சாட்சியாக யிந்த தற்ம்மத்தை
89. சந்திர சூரியாள் யுள்ளமட்டும் பரிபாலனம் பண்ணிக்கொண்டு வ
90. ரச்சொல்லிக் கட்டளையிட்டோம். யிந்த தற்ம்மத்துக்கு வாக்குச்சகா
91. யம் சரீரசகாயம் அற்த்தசகாயம் பண்ணினபேர்கள் அசுவமேதயாக ப
92. லமும். காசியிலே கெங்காஸ்நாந பலமும். ராமேசுபரத்திலே கோடி சிவ
93. லிங்கப் பிறதிஷ்ட்டை பண்ணின பலனை அடயக்கடவோராகவும்
94. யிந்த தற்ம்மத்துக்கு யாதாமொருவர் விகாதம் பண்ணுகுறார்களோ அவ
95. ர்கள் காசியிலே கெங்கைக்கரையிலே காராம்பசுவைக் கொண்ண தோஷ
96. த்திலே போகக் கடவோராகவும். தாந பாலந யோர்மத்யே தாநா ஸ்ரயோநு
97. பாலநம் தாநாத் ஸ்வர்க்க மவாப்நோதி பாலநாத் அச்சுதம் பதம்: ஏகைவ
98. பஹிநீ லோகே ஸர்வேஷா மேவ பூபுஜாம் நஹோஜ்யா நகரக் ராக்யா வி

5. யுண்டான

99. ப்ர தத்தா வஸுந்தரா: ஸ்வதத்தாத்வி குணம் புண்யம்
பரதத்தாநு பாலநம் பரதத்தாப
100. ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது: யிந்தத் தாம்புர
சாதனம் பழனியப்
101. ப வாத்தியார் குமாரன் ரெகுனாத வாத்தியார் கையி எழுத்து.

12. அடப்பங் கூத்தப்பன் சத்திரச் செப்பேடு II

இருக்கும் இடம்	: அரசு அருங்காட்சியகம், திருக்கோகர்ணம், புதுக்கோட்டை
அரசர்	: ராசா விசையரகுநாதராய பாதர் தொண்டைமானார் (1789 – 1807)
காலம்	: 3-11-1797
மொழி	: தமிழ்
அளவு	: 39 செ.மீ. X 22.5 செ.மீ

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு மேல் பகுதியில் துளையையுடைய வரைகோட்டு ஓவியம் எதுவுமில்லாத கைப்பிடியை உடையது. கைப்பிடியையும் செப்பேட்டுச் செய்திகளையும் பிரிக்கும் வண்ணம் நீண்ட கோடு ஒன்று வரையப்பட்டுள்ளது. ஒரு பக்கம் மட்டுமே எழுதப்பட்டுள்ள இச்செப்பேடு முற்றுப்பெறவில்லை. 'ஸ்ரீ ராமஜெயம்' என்ற சொல் தெலுங்கு எழுத்தில் பெரிதாக முதல் பக்கம் பொறிக்கப்பட்டுள்ளது. இச்செப்பேட்டை மைய அரசின் தொல்லியல் அளவீட்டுத்துறையின் கல்வெட்டுப் பிரிவினர் படி எடுத்துள்ளனர்.[1]

3-11-1797 அன்று புதுக்கோட்டை மன்னர் ராசா விசைய ரகுநாத பாதர் தொண்டைமானார் அவர்கள் தன் ஆட்சிக்குட்பட்ட கானாட்டில் செங்கமலம்பிள்ளை மகன் அடப்பம் கூத்தப்பன் பெயரில் பௌர்ணமி கூடிய நாளில் ஏற்படுத்திய அன்னதானச் சத்திரம் பற்றிய செய்தி இச்செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது.

1. ARE (A) [illegible] of 1950

அன்னதானச் சத்திரம் கபிலை வளநாட்டில் திருக்கோகர்ணத் தலத்துக்கு மேற்கும், திருவேங்கவாசல் தலத்திற்குத் தெற்கும், செல்லிகுடி அய்யனார் கோயிலுக்கு கிழக்கும், கவநாட்டில் கலிங்குக்கு வடக்கும் ஆகிய எல்லையில் சேதுமார்க்கத்தில் புண்ணியபூமியான பிரகதாம்பாள்புரம் பிரகதாம்பாள் பிரதியர்த்தமாக அமைக்கப்பட்டது. என்றென்றும் அங்கு அன்னதானம் நடந்துவர ஏற்பாடு செய்யப்பட்டது. செப்பேட்டின் பிற்பகுதியில்லை. புதுக்கோட்டை மன்னர்களின் குறைச்செப்பேட்டில் இதுவும் ஒன்று.

மூலம்

முதல் பக்கம்

ஸ்ரீ ராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீமந் மஹாமண்டலேசுபரன், அரியராயதள வி
2. பாடன், பாஷைக்குத் தப்புவராயர் கண்டன், மூவரா
3. யர் கண்டன், கண்டர் கண்டன், கண்டயப் பிறதாபன், க
4. ட்டாரிச் சாளுவன், கண்டனாடு கொண்டு கொண்டனாடு கெ
5. ாடாதான், ஒருபரி கொண்டு திரள்பரி வெட்டு முபையகு
6. லோத்துங்கன், எம்மண்டலங் கொண்டு யீழமுந்திை
7. ற கொண்ட ராசாதிராசன், ராசகெம்பீரன், ராசமனோ பய
8. ங்கரன், ராசாக்கள் தம்பிரான், கோட்டத்து மன்னியர் க
9. ண்டன், சொரிமன்னியர் சூரியன், கெடிமன்னியர் கால
10. ாந்தகன், தொண்டமண்டல ஸ்த்தாபனாசாரியன், சோழ
11. மண்டல ப்ரதிஷ்ட்டாபனாசாரியன், பாண்டிமண்டலத்
12. து பத்மனாசாரியன், மறுமன்னியர் கோடாரி, குறுமன்
13. னியர் கோளரி, துலுக்கர்தள விபாடன், துலுக்கர்மோ
14. கந் தவிழ்த்தான், தொட்டியர்தள விபாடன், தொட்டியர்
15. மோகந் தவிழ்த்தான், அரியதள விபாடன் அரியர்மோகந்
16. தவிழ்த்தான், தற்க்காற்கு தற்க்கன், தற்க்க வினோதன், த
17. ண்டுவார் மிண்டன், சண்டப் பிறசண்டன், சகல குணாபி
18. ராமன், துங்காபி ராமன், துர்க ரேபந்தன், சொல்லுக் கரிச்ச
19. ந்திரன், வில்லுக்கு விசையன், பரிக்கு நகுலன், குடைக்குக் க
20. ற்னனன், பொறுமைக்கு தற்மமர், பூறுவ தெட்சண பச்சிம
21. உத்தர ஸத்த ஸமுத்திராதிபதி, அசுபதி கெசபதி தனபதி நரபதி
22. நரவேட்டை கண்டருளிய மல்லிகார்ச்சுனதேவ மகா

23. ராயர், பிறபுடதேவ மகாராயர், யானைகுந்திதேவ மகா
24. ராயர், விருப்பாட்சிதேவ மகாராயர், ராமதேவ மகாரா
25. யர், கிஷ்ட்டிணதேவ மகாராயர், சீரெங்கதேவ மக
26. ாற ... பிறிதிவி ராச்சியம் பண்ணியருளா நின்ற
27. சாலிவாகன சகார்த்தம் 1719 கலியுக சகார்த்
28. தம் 4898 யிதன்மேல் செல்லா நின்ற பிங்க
29. ள வருஷம் அற்ப்பிசி மீ 21உ சுக்கில படசஞ் சதுற்த்தெசி சுக்
30. கிரவாரம் அசுபதி நட்செத்திரம் சித்திநாமயோகம் கவுல
31. வாகறணம் கூடின புண்ணிய காலத்திலே ராச
32. ராச வளநாடு ராசேந்திரசோழ வளநாடு பன்றிசூழ்நா
33. டு அன்பில் தெற்குஹூரிலிருக்குங் காணியுடைய அரச
34. ர் மக்களில் ஸ்ரீ
35. மது திருமலை
36. ராய தொண்
37. டைமானார் பெ
38. ளத்ரந் திருமலையப்ப ராய தொண்டைமானார் புத்ரந் ராச
39. ஸ்ரீ ராசா விசைய ரெகுனாத ராய பாதர் தொண்டைமானா
40. ரவர்களுக்கு மன்சுபா நடந்த கானாட்டில் செங்கமலம்
41. பிள்ளை மகன் அடப்பம் கூத்தப்பர் பேருக்கு அன்ன
42. தானத்துக்கு சத்திரங் கட்டிவிக்கச் சொல்லி கட்டளை யி
43. ட்டது, கபிலை வளநாட்டில் திருக்கோகருணை ஸ்தலத்துக்
44. கு மேற்கு திருவேங்க வாசல் ஸ்தலத்துக்கு தெற்கு செல்லிகு
45. டி அய்யனார் கோயிலுக்குக் கிழக்கு கவனாட்டில் கலிங்
46. கிக்கி வடக்கு சேது மார்க்கத்தில்ப் புண்ணிய பூமியான
47. பிரஹதம்பாள்புரம் பிரஹதம்பாள் பிறிதியற்த்தம
48. ாக சாசுவதிக அன்னதான தற்ம்மத்துக்கு சத்திரங் கல்
49. மண்டபமாக கட்டிவிச்சு இந்த தற்ம்மத்துக்கு கபிலை வ...
50. . . . .

13. வெண்ணைமுத்துப்பட்டிக் கல்வெட்டு

இருக்கும் இடம் : புதுக்கோட்டை மாவட்டம், வெண்ணை முத்துப்பட்டிக் கிராமத்தில் நடப்பட்டுள்ள ஒரு பெரிய குத்துக்கல்லின் நான்கு புறங்களிலும் இக்கல்வெட்டு எழுதப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு புதுக்கோட்டை மாநிலக் கல்வெட்டுத் தொகுதியில் 763ஆம் கல்வெட்டாக அச்சாகியுள்ளது.

அரசர் : ராசா விசைய ரகுநாதராய பாதர்
தொண்டைமானார் (1789 – 1807)
காலம் : 20-11-1798

அமைப்பும் செய்தியும்

இது கல்வெட்டாயினும், தொண்டைமானாரின் செப்பேட்டு நகல் என்ற குறிப்பு கல்வெட்டிலேயே வருவதால் செப்பேடுகளில் ஒன்றாகக் கருதி இங்குப் பதிப்பிக்கப்படுகிறது. இக்கல்வெட்டில் 15,16 வரிகளுக்கு நடுவே ஸ்ரீ ராமஜெயம் என்று தெலுங்கு எழுத்துக்களில் பிற செப்பேடுகளைப் போலவே பொறிக்கப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி (திருசிரபுரம்)யில் எழுந்தருளியுள்ள தாயுமான சுவாமியார், சுகுந்த குந்தளாம்பிகை ஆகியோரின் சாயரெட்சைக் கட்டளை, அபிஷேக நைவேத்தியம், உச்சிக்கால நைவேத்திய பிராமண போஜனம், சிவ சகஸ்ரநாம அர்ச்சனை, லலிதா சகஸ்ரநாம அர்ச்சனை, அகண்ட தீபம், பாயசம் சம்பா நெய்வேத்தியம் ஆகியவைகளை நாள்தோறும் நடத்துவதற்காகத் தருமபுரம் சிவஞான சம்பந்த தேசிகர் சந்ததியான மவுனத்தம்பிரான் அவர்கள் வசம் கோனாட்டில் இடையாட்டி, கோனாட்டுச் சேர்க்கையில் கோமங்கலம், செங்கை நாட்டுப் புலியூர்ச் சேர்க்கை வெண்ணைமங்கலம், கோனாபட்டியில் புஞ்சைக்காடு ஆகிய இடங்களில் 16 அடிக்கோலால் அளந்து 27800 குழி நிலம் கொடையாக அளிக்கப்பட்டது.

பாதிகாவல் கிராமங்கள் சில அளிக்கப்பட்டன.
வடமுகமாத்தூர் 16 பொன்,
நாகமங்கலம் 7 பொன்,
கொட்டாப்பட்டி 6 பொன் நன்செயில் 1 செய்,
மேல்க்குடி 8 பொன் 2 பணம்,
ஆதம்பட்டி 35 பணம்,
பொத்தப்பட்டி 40 பணம்
ஆகியவை பாதிகாவல் கிராமங்களிலிருந்து அளிக்கப்பெற்ற கொடையாகும்.

நான்கு இடங்களில் அளிக்கப்பட்ட இடங்களுக்கு மிக விரிவாக எல்லைகள் கூறப்பட்டுள்ளன. எல்லைகளில் தேங்காய் தின்னிப்பட்டி,

செட்டிப்பட்டி, சீவல்பட்டி, சீராளபட்டி, விராலூர், காளப்பநல்லூர், கதவனூர், சுனையூர், மாத்தூர், அழுந்தூர், இறங்குடி, குளத்தூர், ஊமச்சிகுளி ஊரணி, கண்ணங்குடி, நாட்டாவழி, தேனிப்பட்டி, பழைய கொளுப்பட்டி நத்தம், விசலிகோயில், கிளவிகுளம், ஒசுவங்காட்டுக்கரை ஆகிய ஊர்களும் இடங்களும் குறிக்கப்படுகின்றன.

மூலம்

முதல் பக்கம்

ஸ்ரீராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமந் மஹாமண்டலேசுபரன் அரியரா
2. யதள விபாடன், பாஷைக்குத் தப்புவரா
3. யர கண்டன், மூவராயிர கண்டன், கண்டர்
4. கண்டன், கண்டையப்பிறதாபன், கட்டாரி
5. ச்சாளுவன், கண்டநாடுகொண்டு கொ
6. ண்டநாடு, கொடாதான், ஒருபரி கொ
7. ண்டு திரள்பரி வெட்டுமுனையப் குலோந்
8. துங்கன், எம்மண்டலங் கொண்டு
9. ஈழமுந்திறைகொண்ட ராசாதிராசன், ரா
10. சகெம்பீரன், ராசநாறன குலதிலக
11. ன், ராசாக்கள் தம்பிரான் கோட்டத்
12. து மன்னியர் கண்டன் சொரிமன்னி
13. யர் சூரியன், கெடிமன்னியர் காலாந்தக
14. ன், தொண்டமண்டல ஸ்தாபனாசாரி
15. யன், சோழமண்டல
16. பிரதிஷ்டாபனாசாரிய
17. ன், பாண்டிமண்டலத்து பதுமனாசாரியன்,
18. மறுமன்னியர் கோடாரி, குறுமன்னி
19. யர் கோளரி, துலுக்கர்தள விபாடன்,
20. துலுக்கர்மோகந் தவிள்தான், அ
21. ரியதள விபாடன், அரியர்மோகந்
22. தவிள்த்தான், ஒட்டியர்தள விபாட
23. ன், ஒட்டியர்மோகந் தவிள்த்தான், தெ
24. ாட்டியர்தள விபாடன், தொட்டியர்மொக

25. ந் தவிள்த்தான், தற்காற்குத் தற்கன், தற்
26. க்க வினோதன், தண்டுவார் மி
27. ண்டன். சகலகுணாபிராமன், து
28. ங்காபிராமன் துர்க ரேபந்தன்
29. சொல்லுக் கரிச்சந்திரன், வில்லு
30. க்கு விசையன், பரிக்கு நகுலன்,
31. குடைக்குக் கற்னன், பொறு
32. மைக்கு தற்ம்மர், பூறுவ தெக்ஷி
33. ண பட்சிம உத்தர ஸத்த சமுத்த
34. ராதிபதி, அசுடதி கெசபதி தன
35. பதி நரபதி நரவேட்டை கண்ட
36. ருளிய மல்லிகாற்சனதேவ ம
37. காராயர், பிறபுடதேவ மகாரா
38. யர், ராமதேவ மகாராயர், கிஷ்
39. ணதேவ மகாராயர், விருப்பா
40. ஷ்சிதேவ மகாராயர், ஆனைகு
41. ந்திதேவ மகாராயர், திருமலை
42. தேவ மகாராயர், ஶ்ரீரங்கரெங்
43. கதேவ மகாராயர் பிறிதிவி
44. ராச்சியம் பண்ணியருளாநின்ற
45. சாலிவாகன சகாற்த்தம் 17
46. 21 கலியுக சகாற்த்தம் 4
47. 899 யிதன்மேல்ச் செல்
48. லாநின்ற காலயுத்தி வருஷம் காற்
49. த்திகை மீம் 8உ மங்களவா
50. ரமும் பூறுவபட்சமும் துவாதெ
51. சியும் அசுபதி நட்செத்திரமும்
52. விதிபாதம்நாம யோகமும் பா
53. ல வாகரணமுங்கூடின சுப
54. தினத்தில் யிந்திரகுல வங்கி
55. ஷன் தென்கோடி யாதிபன்
56. வடகரைப்புலி, வாகைமா
57. லைப் புயனான காசிப கோ
58. த்திரத்தில் விளங்கும் ஶ்ரீமது
59. திருமலைராயத் தொண்டமா

60. னார் பௌத்ரந் திருமலையப ராய
61. தொண்டமானார் புத்ரந் ஸ்ரீ ராசா
62. விசைய ரகுனாத ராய பாதர்
63. தொண்டமானாரவர்கள் திரு
64. சிரபுரந் தாயுமானசுவாமி
65. யாருக்கும் அம்மன் சுகந்தகொ
66. ந்தளாம்பாளுக்கும் சாயரெட்
67. சைக்கட்டளை அபிஷேக நை
68. வேத்தியத்துக்கும் உச்சிக்கா
69. ல நைவேத்திய பிராமண
70. போசனத்துக்கும் சிவ சகஸ்
71. த்திரநாம அற்சனைக்கும் ளளி
72. தா சகஸ்த்ரனாம அர்ச்சனைக்கு
73. ம் அகண்ட தீபத்துக்கும் பாய
74. சம் சம்பா நெய்வேத்தியத்து
75. க்குமாக யிந்தப்பிறகாரத்து
76. க்கு நித்தியப்படிக் கட்டளையாக
77. நடப்பிவிச்சுக்கொண்டு வர சொல்லி

இரண்டாம் பக்கம்

78. தருமபுரஞ் சிவஞானசம்ப
79. ந்த தேசிகர் சந்ததியான
80. மவுனத் தம்பிரானவர்கள்
81. பாரிசமாக தாம்பிர சாத
82. ன பட்டையந் தாராபூறு
83. வமாகப் பண்ணிக் கொடு
84. த்தபடி, கோனாட்டில் யிடைய
85. பட்டி யெல்லையாவது தே
86. ங்காய்திண்ணிப்பட்டி குட்
87. டியான் சோலைப் புஞ்சை
88. க்குக்கிளக்கு, செட்டிப்பட்டி யெ
89. ல்லை கருப்பிடி குளத்துக்குக் கி
90. ளக்குச் சீவல்ப்பட்டி யெல்லை
91. பாலைமேட்டுக்குக் கிளக்கு, வி

92. ருதாபட்டி பசுமேய்க்கிப்பட்டி
93. பட்டியார்குளத் துள்வாய்க்
94. குக் கிளக்குக் சீறாளபட்டி யெல்
95. லை திருவகவண்டன் மாந்தே
96. ாப்புக்குத் தெற்கு. விராலூர் எ
97. ல்லை தேசிகாலைக்கு மேற்கு.
98. காளப்பனல்லூ ரெல்லைத் தே
99. ரான் புளியமேட்டுக்கு மேற்குக் க
100. தவனூ ரெல்லை பள்ளிகொ
101. ண்டான் புஞ்சை புளியமரத்து
102. க்கு வடக்கு. சுனையூரெல்லை
103. கோமுட்டிச்சி காலைக்கு வடக்
104. கு ஆகப்பெருநான்கெல்லைக்
105. குள்பட்ட நஞ்சை புஞ்சையும்
106. யிதுவும் கோனாட்டுச் சேற்கை
107. யில் கோமங்கலத்துக் கெல்
108. லையாவது ஊருக்குக் கிளக்
109. குக் கீள்பார்க்கெல்லையாவ
110. து மாத்தூர் எல்லை கூனிய
111. ன் மேடுகாட்டுக்கு மேற்கு இதன்
112. தெற்கு அளுந்தூர் எல்லை மே
113. ல்ப்படி பறயனூறணி முன்
114. வாயில்ப் பாறைக்காட்டுக்
115. கு மேற்கு இதன் தெற்கு அளுந்தூர்
116. கொம்பளகி மேடு காட்டுக்கு மே
117. ற்கு தென்பார்க்கெல்லையாவது
118. யிறங்குடி எல்லை மேல்படி க
119. ன்னிமார் கோவில் மறியல்
120. க்காட்டுக்கு வடக்கு. இதன் மே
121. ற்குக் குளத்தூர் எல்லை வளியா
122. னகாட்டுக்கு வடகிழக்கு. மேல்
123. பார்க்கெல்லையாவது குளத்தூ
124. ர் பக்கிரிசாயபு குளத்து நஞ்சை
125. சக்குக் கிழக்கு இதன் வடக்குக்
126. குளத்தூர் கீள்ப்பட்டி மந்தை

127. ஆலமரத்துக்கு மேல்ப்படியூர்
128. வேலிக்குங் கிழக்கு இதன் வட
129. க்கு குளத்தூர் பெரியகுளத்து
130. க்கீழ்வயல் நஞ்சைக்குத் தெ
131. ன்கிழக்கு வடபார்க்கெல்லை
132. யாவது, குளத்தூர் நஞ்சை வயல்
133. க்களிவு கிராய்வளிக்குந் தெற்கு
134. இதன் கிளக்கு மாத்தூர் எல்லை
135. மேல்படி பெரியகுளத்து முன்
136. வாய் புங்கங்காட்டுக்குத் தெற்கு
137. ஆகப்பெருநாங்கெல்லைக்குள்ப்ப
138. ட்ட நஞ்சை புஞ்சையுமிதுவும்
139. செங்கைநாட்டுப் புலியூர்ச்சேற்
140. கை வெண்ணமங்கலத்துக்கெ
141. ல்லையாவது மேல்படி வயலுக்
142. கெல்லையாவது கீள்பார்க்கெல்லை
143. ஊமச்சிக்குளியூரணி மேல்கூரை
144. க்கு மேற்கு தென்பார்க்கெல்
145. லையாவது கண்ணங்குடி வயலு
146. க்கு வடக்கு மேல்பார்க்கெல்
147. லை நாட்டாவழிக் களறங்காட்டுக்
148. குக் கிளக்கு வடபாற்கெல்லை தேன
149. ரிப்பட்டியெல்லை வேப்படிவாரிக்
150. குத்தெற்கு யிந்தப் பரிநான்கெல்
151. லைக்குள்ப்பட்ட நஞ்சை புஞ்சையு
152. ம் யிதுவுங் கொளுப்பட்டிப் புஞ்லை
153. சக்காட்டுக்கெல்லை பழயகொ
154. ளுப்பட்டி நத்தத்து ஊறணிக்
155. கிக் கிழக்கு விசலிகோவில்ப்
156. புஞ்சைக்கு வடக்கு கிளவிகுள
157. த்துக் கீள்க்கரைக்கு மேற்கு
158. கண்ணங்குடிக் கரையடி பு
159. ஞ்சை ஒசுவல் கட்டுக்கரைக்
160. குத் தெற்கு யிந்த பரிநான்கெல்
161. லைக் குள்ப்பட்ட புஞ்சையில் கிள

162. விகுளவாய்ப் பஞ்சாப்பஸ் பு
163. ஞ்சை நீங்கலாச ... ..ாறடி

மூன்றாம் பக்கம்

164. க்கோலால்க்
165. குழி 27Ϛ ၁O
166. ஆக கிறாமமூனறு
167. க்குள்ப்பட்ட நஞ்
168. சை புஞ்சை திட்
169. டுத்திடல் நத்த
170. ம் படிகை தோப்
171. புத் துறவு மாவி
172. டை மரவிடை
173. சொற்னாதாயம்
174. வகையறு இட
175. ங்கை வலங்கை
176. பலசுவந்திரம்
177. யாவினை விசேஷ
178. வகை யிது முத
179. லான எப்பேர்
180. ப்பட்ட வரியுங்கீ
181. ள்நோக்கிய கிண
182. று மேல்நோக்கி
183. ய விருட்சஞ் செல
184. தரு பாழாண நித
185. நிட்சேபமும் பா
186. திகாவல் இடை
187. யபட்டு கோமங்
188. கலத்துக்குள்
189. ள டணமும் வட
190. முக மாத்தூர்ப்
191. பாதிகாவல்ப்
192. பதினாறு பொன்
193. நாகமங்கலம்

194. ஏழு பொன் கெ
195. ரட்டப்பட்டியி
196. ல் ஆறு பொன்
197. னும், நஞ்சையி
198. லொரு செய்யு
199. மேல்க்குடி யே
200. முபொன் பிட
201. ங்குப்பட்டி எட்டு
202. ப்பொன்னும்
203. ரெண்டு பண
204. மும், ஆதம்பட்டி
205. முப்பத்தஞ்சு ப
206. ணமும் பொத்
207. தப்பட்டு நாற்ப
208. த்துபணமு மி
209. ந்தப் பாதி காவ
210. ல் கிறாமங்களி
211. ல் யெப்பேர்ப்ப
212. ட்ட குத்தங்களி
213. ருந்தாலும் தாங்
214. களே தீத்து வா
215. ங்கிக்கொள்ளு
216. கிறது. யிந்தப்
217. படிக்கி தாம்பி
218. ரசாதனபட்ட
219. யங்கொடுத்த
220. படியினாலே
221. சந்திராதித்தர்
222. உள்ளவரைக்கு
223. ங்கல்லுங்காே
224. வரியும் புல்லு
225. ம் பூமியுமுள்ள
226. வரைக்கும் எங்
227. கள் புத்திர பவுத்
228. திர பரம்பரை

229. யாகவும் தங்க
230. ள் சந்ததி பாரம்
231. பரையமாகவு
232. மிந்தச் சிவதற்
233. மத்தை உத்திரே
234. காத்திரமாக ந
235. டப்பிவிச்சுக் ெ
236. காண்டு சுகத்தி
237. லேயிருக்கக் க
238. டவார்களாக
239. வும். யிந்த தற்ம
240. த்துக்கு வாக்கு
241. சகாயம் சரீ
242. ர சகாயம் அற்
243. த்த சகாயம் ப
244. ண்ணின பேர்
245. கள் காசியிலே
246. கெங்கைக் கை
247. ரயிலே கோடி
248. சிவலிங்கப் பி
249. றதிட்டை பண்
250. ணின பலனைய
251. டைவார்களாக
252. வுமிந்த தற்மத்
253. துக்குங் கிறாமங்
254. களுக்கும் பாதிக
255. ாவலுக்கும் அகுதம்
256. பண்ணின பேர்
257. கள் கெங்கைக்க
258. ரையில் கோடி
259. காராம்பசுவை
260. க் கொன்ற தோ
261. ஷத்திலே போ
262. வார்களாகவும்.

நான்காம் பக்கம்

263. யிந்த தற்ம க
264. ாரியத்துக்
265. கு போக்கு வ
266. ரத்து ஸ்தா
267. ணாபத்திய
268. ம் பண்ணு
269. குறவற்கு ச
270. ம்பளம் வ
271. ருஷம் ஒண்
272. ணுக்கு நா
273. ற்பத்து ரெண்
274. டு பொண்ணு
275. ம் யிந்தக்
276. கட்டளைப்
277. பணத்தில்
278. குடுத்து வரு
279. வார்களா
280. கவும். நவ
281. ராத்திரி தி
282. ருவா
283 திரை சி
284. வராத்திை
285. ரக்கட்டளை
286. யும் நடப்பி
287. விச்சு வரு
288. வார்களா
289. கவும். யிந்
290. த ஸாசன
291. ம் எழுதின
292. நன்மை ப
293. ழுணியப்ப
294. வாத்தியார்
295. குமாரன்ரெ

296. குனாத வாத்தி
297. யார் கையி
298. எழுத்து உ.

14. அம்மணிசத்திரச் செப்பேடு

இருக்கும் இடம்	:	அரசு அருங்காட்சியகம், திருக்கோகர்ணம், புதுக்கோட்டை
அரசர்	:	ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமானார் (1789 - 1807)
காலம்	:	8-5-1799
மொழி	:	தமிழ்
அளவு	:	46 செ.மீ × 30.5 செமீ.

அமைப்பும் செய்தியும்

இச்செப்பேடு அழகான வேலைப்பாடுடன் கூடிய பெரிய கைப்பிடியை உடையது (14.5 செ.மீ. உயரம் 12 செ.மீ. அகலம்). கைப்பிடியின் உச்சியில் துளை உள்ளது. கைப்பிடியின் கீழ்ப்பகுதி கோயில் பலிபீடம் போல் அழகான வேலைப்பாட்டுடன் அமைந்துள்ளது. அப்பீடத்தின் மேல் பகுதியில் வாமனர் அடி எடுத்து வைப்பது போன்று வரைகோட்டு ஓவியம் வரையப்பட்டுள்ளது. வாமனரின் வலக்கையில் கமண்டலமும், இடக்கையில் குடையும் உள்ளது. இடையில் சிறு துண்டும் கோவணமும் அணிந்து வாமனர் காணப்படுகிறார். முப்புரி நூலும் உடலில் திகழுகிறது.

செப்பேட்டின் பின்புக்கம் கைப்பிடிப் பகுதியில் நான்கு பக்கமும் படிகள் அமைந்த ஒரு தெப்பக்குளம் வரையப்பட்டுள்ளது. அத்தெப்பக்குளத்தின் கீழ்ப்பகுதியில் நீர் வேட்கையால் நிமிர்ந்து செல்லும் ஒரு பசு வரையப்பட்டுள்ளது. அத்தெப்பக்குளம் பற்றிய குறிப்பு இச்செப்பேட்டிலும் வருகிறது.

இச்செப்பேட்டை மைய அரசு தொல்லியல் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவினர் படி எடுத்துள்ளனர். *

*ARE (A) 19 of 1950.

பொதுவாகப் பிற்காலச் செப்பேட்டில் காணும் அரசர் புகழ் மொழிகளுக்குப்பின் விசயநகர அரசர் சிலரின் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. அப்பெயர்கள் முன்பு ஆட்சிபுரிந்தவர்கள் என்ற பொருளில்தான் குறிக்கப்பெற்றுள்ளன. கல்வெட்டு ஆண்டறிக்கையில் சீரங்கராயர் ஆட்சிக்காலத்தில் இச்செப்பேட்டுக் கொடை அளிக்கப்பெற்றிருப்பதாகக் கூறப்படுவது பொருந்தாது. இச்செப்பேட்டின் காலம் 8-5-1799 ஆகும். அப்போது இப்பகுதியில் ஆங்கிலேயரே ஆட்சிப் பொறுப்புக்கு வந்துவிட்டனர்.

ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமான் அவர்கள் ஆட்சிக்காலத்தில் (கி.பி.1789 - 1807) தொண்டைமானார் அவர்கள் தமையனார் அவர்களின் மனைவியார் அம்மணி ஆயி அவர்கள் கானாட்டில் சேது மார்க்கத்தில் சுவேத நதிக்குத் தெற்கு சிராயன்குளத்துக்கு மேற்கு அருமேளம் பாலுடையார் கோயிலுக்கு வடக்கு ஓணாங்குடி அக்கிரகாரத்துக்குக் கிழக்கு பிரான்மலைக்கு வடகிழக்கு இந்த எல்லைகளின் மத்தியில் அன்னதான தர்மத்துக்குக் கல்மண்டபமாக ஒரு சத்திரம் கட்டிய செய்தியை இச்செப்பேடு கூறுகிறது.

இச்செப்பேட்டில் காணும் ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமானின் தமையனார் (பெரியப்பாவின் மகன்) ராயரகுநாத தொண்டைமானார் (கி.பி.1769-1789) அவர்களே இச்சத்திரம் கட்டிய அம்மணி ஆயி அவர்களின் கணவர் ஆவர். அம்மணி அம்மாள் என்று எழுதி அம்மாள் என்பது ஆயி என்று திருத்தப்பட்டது போல் தோன்றுகிறது.

கீழ்வரும் பட்டியல் இவர்கள் உறவை விளக்கும்.

திருமலைராய தொண்டைமானார் – நல்லாயி ஆயி
(மறைவு 1729) | (பன்றிகொண்டார் குடும்பம்)

விசைய ரகுநாதராய தொண்டைமானார் (1730 - 1769)
|
ராய ரகுநாத – அம்மணிஆயி
தொண்டைமானார்
(1769 - 1789)

திருமலை தொண்டைமானார்– பெரும்தேவி ஆயி (மறைவு 1789)
|
விசையரகுநாத
தொண்டைமானார்
(1789 - 1807)
–பிருகந்நாயகி ஆயி

ராய ரகுநாத தொண்டைமானார் குடும்பத்தைப் புதுக்கோட்டையில் மேல அரண்மனை என்று வழங்குவர். தம் கணவர் இறந்து 10 ஆண்டுகட்குப்பின் இந்தச் சத்திரத்தை அம்மணி ஆயி கட்டினார். இன்றும் அவர் பெயரால் இச்சத்திரம் அம்மணி சத்திரம் என்று வழங்கப் பெறுகிறது. இன்று இப்பெயரில் சத்திரத்தின் அருகில் ஒரு ஊரே ஏற்பட்டுவிட்டது.

இச் சத்திரத்திற்காக அம்மணி ஆயி மிரட்டுநிலை மாகாணச் சேர்க்கையில் புதுக்குளம் பிறகரைவயல் நன்செய், புன்செய் இவைகளைக் கொடையாக அளித்தார். கொடையாக அளிக்கப் பெற்ற நிலங்களுக்கு அணைஞ்சிக்குளம், அக்குளக் கால்வாய், ஹாக்க குத்தகை மறியல் புன்செய், குளம் பிறகரை, பிறகரை புளியடி மறமடக்கி அமரம் புன்செய், இவைகளுக்குத் தண்ணீர் பாய்ச்சல் குளம் ஒன்று ஆகியவை கூறப்படுகின்றன. இவ்வகையில் 10000 குழி கொடையாக அளிக்கப்பட்டது.

இவை தவிர அருமேளம் (அரிமழும் ஆக இருக்கலாம்) சேர்க்கையில் சிராயன் வயலும் கொடையாகக் கொடுக்கப்பட்டது. அந்நிலத்துக்கு கொக்காசனவயல், வாத்திசெல்லி வீட்டுத்திடல், விளக்கு மூக்குத்தலை, கொக்காசனக் குளம், பிறகரைக் கச்சல்க்கொல்லை, சிராயன்குளம், கொக்காசனக் குளம் வடகடைக்கோம்பு, வேப்படிப் புஞ்சையில் கீழ்க்கடைத் தாக்கு, சேத்துக்குளம் வாத்தலை நீர்ப்பிடி ஆகியவை எல்லைகளாகக் கூறப்படுகின்றன. இவ்வகையில் 1101 3/4 குழி கொடையாகக் கொடுக்கப்பட்டது. மொத்தம் நன்செய் புன்செய் 10101 3/4 குழி அளிக்கப்பட்டது. இவற்றுடன் தெப்பக்குளம் தோட்டமும் ஆலங்குடிச் சேர்க்கை அருமேளம் (அரிமழம்) சுங்கமும், வாணியன் செக்குக் குத்தகை எ்ண்ணெய் 70 படியும் தர்மத்துக்குக் கொடுக்கப்பட்டது.

சத்திரற்குத் தேவையான கீழ்க்கண்ட பாத்திரங்களும் அம்மணி ஆயி அவர்களால் கொடையாகக் கொடுக்கப்பெற்றது.

பித்தளை செப்புக்குடம்	:	2
தபிலை	:	2
சின்னத்தபிலை	:	2

செம்பு	:	3
போகணி	:	2
சறுவ சட்டி	:	2
கறண்டி	:	2
கொப்பரை	:	1
பெரிய வெங்கலப்பானை	:	1
பித்தளைத் தாம்பாளம்	:	2
கமலம்	:	1
குத்துவிளக்கு	:	1
ஆக உருப்படி மொத்தம்		21

இவை தவிரப் பசுமாடு நாற்பதும், ஆடுகள் அறுபதும் கொடையாக அளிக்கப்பெற்றன.

மேலைக் கோட்டையில் அணைவயல், கோணவயல் ஆகியவற்றில் 9400 குழி நன்செயும், ஊரணி வயலில் 1383 அரையே அரைக்கால் குழி நன்செயும் ஆக மொத்தம் 10783 அரையே அரைக்கால் குழி நன்செயும் புன்செயில்100ம் அளிக்கப்பட்டது.

ஆயிபட்டியில் தேதரவடி புன்செய்
ஆமணக்கன் புன்செய்
கோணப் புன்செய்
ஒச்சன் புன்செய்
கழுதை கட்டிப் புன்செய்
கட்டுக்கரைப் புன்செய்
ஆகிய 6 தாக்குகள் 2000 குழியும்,
ஊரணிக்குத் தெற்கு புளக்கடைப் புன்செய்
அரண்மனை வெட்டிக்காட்டுப் புன்செய்
மதுரைமூலை பறையன் புன்செய்
வேப்படி புன்செய்
கருங்காலிப் புன்செயும் ஆக மொத்தம் 11
தாக்குகள் புன்செய் நிலங்களும் அம்மணி ஆயி அவர்கள் தம்மால் கட்டிய சத்திரத்திற்கு வழங்கினார்.

இச்செப்பேட்டுச் செய்தியைப் பழனியப்ப வாத்தியார் மகன் ரெகுனாத வாத்தியார் எழுதினார் என்ற குறிப்பு செப்பேட்டின் இறுதியில் காணப்படுகிறது.

மூலம்

முதல் பக்கம்

ஸ்ரீ ராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுபரன், அரியராயதள
விபாடன், பாஷைக்கு த
2. ப்புவராயர் கண்டன், மூவராயிர கண்டன், கண்டர்
கண்டன் கண்டை
3. யப் பிறதாபன் கட்டாரிச் சாளுவன் கண்டநாடு கொண்டு
கொண்டநாடு கொ
4. டாதான் ஒருபரி கொண்டு திரள்பரி வெட்டு
முபையகுலோத்துங்கன், எம்மண்
5. டலங்கொண்டு யீழமுந் திறைகொண்ட ராசாதிராசன்,
ராசபரமேசுபரன், ரா
6. சமாற்த்தாண்டன், ராசகண்டீரவன், ராசநாறனகுல திலகன்
ராசாக்கள் த
7. ம்பிரான், கோட்டத்து மன்னியர் கண்டன், சொரிமன்னியர்
சூரியன்,கெடி
8. மன்னியர் காலாந்தகன் தொண்டமண்டல
ஸ்தாபனாசாரியன், சோழமண்
9. டலப் பிறதிஷ்ட்டாபனாசாரியன். பாண்டிமண்டலத்து
பத்மனாசாரியன், மறும
10. ன்னியர் கோடாரி, குறுமன்னியர் கோளரி, துலுக்கர்தள
விபாடன், துலுக்கர்
11. மோகந் தவிழ்த்தான், அரியதள விபாடன், அரியர்மோகந்
தவிழ்த்தான், தொ
12. ட்டியர்தள விபாடன், தொட்டியர்மோகந் தவிழ்த்தான்,
தற்க்காற்குத் தற
13. க்கன் தற்க்கவினோதன், தண்டுவார் மிண்டன், சண்டப்
பிறசண்டன்.ஸ

14. கல குணாபிராமன், துங்காபிராமன், துர்க ரேபந்தன், சொல்லுக்
15. கரிச்சந்திரன், வில்லுக்கு விசையன், பரிக்கு நகுலன், குடைக்கு
16. க் கற்ன்னன்,பொறுமைக்கு தற்ம்மர், பூறுவ தெட்சண பச்சிம
17. உத்தர ஸத்த ஸமுத்திராதிபதி, அசுபதி கெசபதி தனபதி நரபதி, ந
18. ரவேட்டை கண்டருளிய மல்லிகாற்ச்சுனதேவ மகாராயர்,பி
19. றபுடதேவ மகாராயர், ஆனைகுந்திதேவ மகாராயர், ராமதே
20. வ மகாராயர்,கிஷ்ட்டிணதேவ மகாராயர், விருப்பாட்சிதேவ
21. மகாராயர், நரசிங்கதேவ மகாராயர், அரிகரதேவ
மகாராயர், புசங்
22. கதேவ மகாராயர், திருமலைதேவ மகாராயர்,
ஸ்ரீரெங்கதேவ மகா
23. ராயர் பிறிதிவி ராச்சியம் பண்ணியருளா நின்ற சாலிவாஹந
24. சகாப்தம் 1721 கலியுக சகாப்தம் 4900 யிதன்மேல்
25. செல்லாநின்ற சித்திராத்தி வருஷம் சித்திரை மீ 29 தீ சுக்லபக்ஷ
26. மும் புதவாரமும் திரிதியையும் ம்ருகசீர்ஷ நக்ஷத்திரமும் ஸுகர்ம்
27. மநாம யோகமும் பிரஜவாகரணமும் கூடின அக்ஷயத்திரிதிய பு
28. ண்யகாலத்திலே ராசராசவளநாடு ராசேந்திரசோழ வளநா
29. டு பன்றிசூள்நாடு, அன்பில் தெற்குலூரிலிருக்குங் காணியுடை
30. ய அரசர்மக்களில் யிந்திரகுல வங்கிஷன் அன்பில்னாடன் தென்கே
31. காடியாதிபன் வடகரைப்புலி வாகைமாலை புயனான ஸ்ரீமது திரு
32. மலை ராய தொண்டைமானார் பௌத்ரந் திருமலையப்ப ராய தொ
33. ண்டைமானார் புத்ரந், ராசஸ்ரீ ராசா விசைய ரெகுனாத ராய பா
34. தர் தொண்டைமானரவ
35. ர்கள் தமையனார் தர்ம்மப
36. த்நி அம்மணி ஆயி அவர்கள் பண்ணின தற்மம், கானா
37. ட்டில் சேதுமார்க்கத்திலே சுவேதநதிக்கு தெற்கு சிராயன்
38. குளத்துக்கு மேற்கு அருமேளம்பாலுடையார் கோவிலுக்கு
39. வடக்கு ஒணாங்குடி அக்கிறாகாரத்துக்குக் கிழக்கு, பெராமலை
40. க்கு வடகிழக்கு மத்தியத்திலே புண்ணிய பூமியிலே சாசுவதி
41. க அன்னதான தற்ம்மத்துக்கு சத்திரங் கல்மண்டபமாககட்டி
42. விச்சு இந்த தற்ம்மத்துக்கு மிரட்டுநிலை மாகாணஞ் சேர்க்கை
43. புதுக்குளம் பிறகரைவயல் நஞ்சை புஞ்சைக்கு எல்லையாவது
44. கீழ்பாற்கெல்லை அணஞ்சிக்குளம் தாஞ்சிமான் முக்கூட்டுக்கல்
45. லுக்கு மேற்கு, தென்பாற் கெல்லை அணஞ்சிக்குளம் கால்வாய்
46. க்கு வடக்கு, மேல்பாற்கெல்லையாவது ரொக்ககுத்தகை மறியல்

47. ப் புஞ்சைக்குக் கிழக்கு. வடபாற்கெல்லையாவது குளம் பிறகை
4 .. ரக்குத் தெற்ககு யீசானியமூலை பிறகரை புளியடி மறமடக்கி
49. அமரம்புஞ்சைக்கு தெற்க ஆக நான்கெல்லைக் குள்பட்ட நஞ்
50. சை புஞ்சை குழி 10000யிந்த நிலத்துக்கு தண்ணீர்ப் பாச்சல் குளம்
51. ஒண்ணு. யிதுவும் அருமேளம் சேற்க்கை சிராயன் வயலுக்கெல்
52. லையாவது கீழ்பாற்கெல்லை கொக்காசனவயல் வாத்தி செல்லி
53. வீட்டுத் திடலுக்கும் விளக்குமூக்குத்தளைக்கு மேற்கு தென்பாற்கெ

இரண்டாம் பக்கம்

54. கல்லையாவது கொக்காசன குளம் பிறகரைக் கச்சல்க் கொ
55. ல்லைக்கு வடக்கு மேல்பாற் கெல்லையாவது சிராயன் குளம்
56. தென்கடையில் கொக்காசன குளம் வடகடைக்கோம்பு வே
57. ப்படிப் புஞ்சையில் கீள்க்கடைய்தாற்கு ஒண்ணுக்கு புஞ்சை
58. குழி 1101 3/4 வடபாற்கெல்லையாவது சேத்துக்குளம் வாத்தலை
59. நீர்ப்பிடிக்கு தெற்கு ஆக நான்கெல்லைக்குள்பட்ட நஞ்சை பு
60. ஞ்சை குழி 10101 3/4 யிந்த நான்கெல்லைக்குள்பட்ட
நஞ்சை புஞ்சை
61. திட்டுத் திடல் தோப்புத் துறவு நத்தம் படுகையும் சத்திரத்துக்குள்ப்
62. பட்ட புஞ்சையும் தெற்பக்குளந் தோட்டமும் யிந்த தற்மமத்துக்கு
63. உண்டு பண்ணின ஆலங்குடிச் சேற்கை அருமேளம் சுங்கமும் வ
64. ாணியன் செக்குக் குத்தகை எண்ணை படி 70 தற்மமத்துக்குக்
65. குடுத்த பாத்திரம் பித்தளை செப்புக்குடம் ரெண்டு தபிலை ரெண்
66. டு சின்னத்தபிலை ரெண்டு செம்பு மூணு போகணி ரெண்டு சறு
67. வசட்டி ரெண்டு கறண்டி ரெண்டு கொப்பரை ஒண்ணு பெரி
68. ய வெங்கலப்பானை ஒண்ணு பித்தளைதாம்பாளம் ரெண்டு க
69. மலம் ஒண்ணு குத்துவிளக்கு ஒண்ணு ஆக உருப்படி 21ற்குபடி
70. பசுமாடு நாற்பது ஆடு அறுவது சொற்ன்னாதாயம் வகையறுப்
71. பு யிடங்கை வலங்கைவரி பலசுவந்திரம் யிதுமுதலான யெப்பெய
72. ர்ப்பட்ட வரியும் கீழ்நோக்கிய கிணறு மேல்நோக்கிய விருட்ச
73. ம் ஜல தரு பாஷாணம் நிதி நிக்ஷேபம் ஸர்வமாந்யமாக தார
74. ா பூர்வமாக தாம்மிர சாஸநப் பட்டையங் கொடுத்தபடியினா
75. லே கோகருணேசுவரரும் பிரகதாம்பாளும், நிம்பவந யீசுவரரும்
76. பிரகதம்பாளும் திருவிடையாரும் திருவிருந்த னாயகியும்
ஆத்மநாே

77. தசுவரரும் சிவயோக னாயகியும் ஸாக்ஷியாக யிந்த தர்ம்மம் சந்தி
78. ராதித்யற்வரைக்கும் யெங்கள் புத்ரபௌத்ர பாரம்பரைக்கும்
79. தர்ம்மத்தை உத்திர கோத்திரமாக நடப்பிவிச்சுக் கொண்டு வ
80. ரச்சொல்லி குடுத்தோம் யிந்த தர்ம்மத்துக்கு வாக்குஸ்ஸஹாயம்
81. சரீரசகாயம் அர்த்தஸஹாயம் பண்ணிநபேருகள் காசியில்
82. கங்கா தீரத்திலே கோடி சிவலிங்க பிரதிஷ்ட்டை பண்ணிந ப
83. லநை அடையக்கடவோறாகவும். யிந்த தற்ம்மத்துக்கு அகிதம் ப
84. ண்ணின பெயர்கள் கோடி காராம்பசுவைக் கொன்ற தோஷ
85. த்திலே போகக்கடவாராகவும். தாந பாலந யோர்ம்மத்யே தாநா
86. ஸ்ரயோநு பாலநம் தாநாத் ஸ்வர்க்க மவாப்நோதி பாலநாத
87. ச்சுதம் பதம்: ஏகைவ பஹிநீ லோகே ஸர்வேஷா மேவ
88. பூபுஜாம் நஹோஜ்யா நகரக் ராஹ்யா விப்ர தத்தா வஸுந்தர
89. ா: ஸ்வதத்தாத்வி குணம் புண்யம் பரதத்தாநு பாலநம் பரதத்தாப
90. ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது: மேலைக்கோட்டையில் அ
91. ணைவயல் கோணவயலில் நஞ்சை குளி 9400 யிதுவும்
92. ஊரணிவயலில் நஞ்சை குளி 1383 அரையே அரைக்கால் ஆக நஞ்சை
93. குளி 10783 அரையே அரைக்கால், யிதுவும், புஞ்சையில் 100 ஆயிபட்டியி
94. ல் தேதரவடி புஞ்சை தாற்கு1, யிதின்வடக்கு ஆமணக்கன் புஞ்சை தாற
95. கு 1, யிதின்வடக்கு கோணபுஞ்சை தாற்கு 1, யிதன் வடக்கு ஒச்சன் புஞ்சை
96. ச தாற்கு 1, யிதின்கிழக்கு களுதைகட்டி புஞ்சை தாற்கு 1 யிதின்தெற்கு கட்டுக்
97. கரை புஞ்சையில் மேல்பிறத்தில் குளி 2000ற்கு தாற்கு1, யிதின்தெற்கு ஊறணி
98. க்கு தெக்கு புளக்கடை புஞ்சை தாற்கு 1 யிதின்கிழக்கு அரமனை வெட்டிக்காட்டு
99. புஞ்சை தாற்கு1, யிதின் தெற்கு மதுரைமூலை பறையன் புஞ்சை தாற்கு 1, யிதி

100. ன் கிளக்கு வேப்படிபுஞ்சை தாற்கு 1 யிதின்வடகிழக்கு கருங்காலிபுஞ்சை
101. ச தாற்கு 1. ஆக புஞ்சை தாற்கு 11 யிந்த தாம்பர சாஸநப்பட் டையம் எ
102. முதின நன்மை பழணியப்ப வாத்தியார் மகன் ரெகுனாத வாத்தியார் கையி எ
103. முத்து.

15. காசிச் செப்பேடு

இருக்கும் இடம்	:	காசிமடம், திருப்பனந்தாள், தஞ்சாவூர் மாவட்டம்
அரசர்	:	ராசா விசைய ரெகுனாத ராய தொண்டைமானார் (1789–1807)
காலம்	:	1–12–1800
மொழி	:	தமிழ்
அளவு	:	36.5 செ.மீ.× 21.5 செ.மீ.

அமைப்பும் செய்தியும்

இச்செப்பேட்டில் துளையுடன் கூடிய கைப்பிடியில் செப்பேட்டின் கொடைக்கேற்பக் காசி விசுவநாதரும், விசாலாட்சியும் முன்பக்கம் அழகாக வரையப்பட்டுள்ளனர். விசுவநாதர் முகலிங்கம் போன்ற அமைப்பில் மாலையுடன் அலங்கார வடிவில் காட்சியளிக்கிறார். இடப்புறம் நான்கு திருக்கரங்களுடன் நின்ற நிலையில் விசாலாட்சி காட்சியளிக்கின்றார். இருவருக்கும் பின்னர் பிரபை பொதுவாகக் காட்சியளிக்கிறது. ஒரு கோடு ஒன்று இடையில் விசுவநாதரையும், விசாலாட்சியையும் பிரிக்கிறது.

கைப்பிடியின் பின்புறத்தில் காசித் தலத்தின் சிறப்புத் தெய்வம் கால பைரவர் தம் வாகனமான நாயுடன் இரண்டு திருக்கரங்களோடு நின்ற நிலையில் வரைகோட்டு உருவில் உள்ளார். வலக்கையில் செண்டு ஒன்றை ஏந்தியுள்ளார். பைரவருக்கு முன் தண்டு ஒன்று காட்சியளிக்கிறது.

செப்பேட்டின் முதல் பக்கம் இடையில் பெரிய எழுத்துக்களில் 'ஸ்ரீராமஜெயம்' என்று தெலுங்கில் எழுதப் பெற்றுள்ளது:

பிற்காலச் செப்பேடுகளில் காணப்பெறும் அரசர்களுக்குரிய பொதுவான புகழ்மொழிகள் பல உள்ளனவேயன்றித் தொண்டைமானார் மரபுக்குரிய சிறப்பு அடைமொழிகள் எதுவுமில்லை. ராசா விசைய ரெகுநாத பாதர் தொண்டைமானார் அவர்கள் (1789-1807) 1-12-1800 அன்று, தம் ஆட்சியில் கானாட்டுப் பகுதிக்குச் சுபேதாராக விளங்கிய செங்கமலம்பிள்ளை மகன் அடப்பங் கூத்தப்பன் பெயரில் சைவர்களுக்கு முத்திநகரமாகத் திகழும் பெரும் தலம் காசியில் செய்த சில கொடைகளை இச்செப்பேடு விளக்குகிறது.

அவர் காசியில் அடப்பங் கூத்தப்பன் பெயரில் செய்த அறச்செயல்கள்

(1) காசியில் கங்காதீரக் கரையில் சோமேசுரக் கட்டத்தில் தர்மசாலை சத்திரம் ரூபாய் 1250 செலவில் கட்டப்பட்டது.
(2) காசி விசுவநாதர் விசாலாட்சியம்மன் அபிஷேகம் நைவேதனம் வில்வார்ச்சனை திருவிளக்குக் கட்டளைகள் நாள்தோறும் 1 1/4 பணம் செலவில் நடத்தப்பட்டது.
(3) நாள்தோறும் ஆறுபேருக்கு அன்னதான தர்மம் நடைபெற்றுவர மூலப்பொருளாக ரூபாய் 625 அளிக்கப்பட்டது.
(4) சோமேசுரக் கட்டத்தில் கட்டப்பட்ட சத்திரத்துக்கு கொவ்வனூருக்கு உள்க்கடையான கூத்தனூரில் பாந்தலைவயல் புதுவயல் நன்செய் புன்செய் விடப்பட்டது.

இவையனைத்தும் தருமபுரம் திருஞானசம்பந்த தேசிகர் சீடரான காசிவாசி சடையப்பத் தம்பிரான் அவர்கள்வசம் அளிக்கப்பட்டது.

கொடையாக அளிக்கப்பெற்ற நிலங்களுக்கு எல்லையாக வாழைக்குறிச்சி புலவன் புன்செய், வாமன முத்திரைக்கல், புனங்கி புன்செய் அனாதிகளர், பொன்னமராபதி பாதை, பூவாலைக்குடி பள்ளன் ஊறணி, மாணிக்க நாச்சியார் ஊறணி ஆகியன கூறப்பட்டுள்ளன.

கொடையைக் காப்போர் அடையும் புண்ணியமும், தீங்கு செய்வோர் அடையும் பாவங்களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. தானத்தைக் காப்பது பற்றிய இரு வடமொழிச் சுலோகங்கள் இறுதியில் பொறிக்கப்பட்டுள்ளன.

இச் சாசனத்தை பழனியப்ப வாத்தியார் மகன் ரெகுனாத வாத்தியார் என்பவர் எழுதியதாகக் கூறப்பட்டுள்ளது.

மூலம்

முதல் பக்கம்

ஸ்ரீ ராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுபரன், அரியராயத
2. ள விபாடன், பாஷைக்கு தப்புவராயர் கண்டன்,
3. மூவராயர் கண்டன், கண்டர் கண்டன், கண்ணை
4. டயப் பிறதாபன், கட்டாரிச் சாளுவன், கண்டநா
5. டு கொண்டு கொண்டநாடு கொடாதான், ஒருபரி ெ
6. காண்டு திரள்பரிவெட்டு முபைய குலோத்துங்கன்,
7. எம்மண்டலங் கொண்டு யீழமுந் திறைகொண்ட ரா
8. சாதிராசன், ராசபரமேசுபரன், ராசகெம்பீரன், ரா
9. சநாறன குலதிலகன், ராசகண்டீரவன், ராசாக்க
10. ள் தம்பிரான், கோட்டத்து மன்னியர் கண்டன், சொரி
11. மன்னியர் சூரியன், கெடி மன்னியர் காலாந்தகன்,
12. தொண்டமண்டல ஸ்தாபனாசாரியன், சோழமண்
13. டலப் பிறதிஷ்ட்டாபனாசாரியன், பாண்டிமண்ட
14. லத்து பத்மனாசாரியன், மறுமன்னியர் கோடாரி, கு
15. றுமன்னியர் கோளரி, துலுக்கர்தள விபாடன், துலு
16. க்கர்மோகந் தவிழ்த்தான், அரியதள விபாடன், அரிய
17. ர் மோகந் தவிழ்த்தான், தொட்டியர் தளவிபாடன், தெ
18. ாட்டியர்மோகந் தவிழ்த்தான், தறக்காறகு தறக்கன், தற
19. க்க விநோதன், தண்டுவார் மிண்டன், சண்(ட)ப்பிறசண்ட
20. ன், ஸகல குணாபிராமன், துங்காபிராமன், துர்(க)ரேப
21. ந்தன், சொல்லுக் கரிச்சந்திரன், வில்லுக்கு விசையன்,
22. பரிக்கு நகுலன், குடைக்குக் கறன்னன், பொறுமைக்
23. கு தறம்மர், பூறுவ தெட்சண பச்சிம உத்தர சத்த சமுத்திரா
24. திபதி அசுபதி கெசபதி தனபதி நரபதி, நரவேட்டை கண்
25. டருளிய மல்லிகாற்சுனதேவ மகாராயர், பிறபுடதே
26. வ மகாராயர், ஆனைகுந்திதேவ மகாராயர், ராமதே
27. வ மகாராயர், கிஷ்ட்டிணதேவ மகாராயர் விருப்பா

28. ட்சிதேவ மகாராயர். ஶ்ரீரெங்கதே ்வ மகாராயர் பிற
29. திவி ராச்
30. சியம் ப
31. ண்ணிய
32. ருளாநின்ற சாலிவாகன சகாற்த்தம் 1722
33. கலியுக சக ாத்தம் 4901 இதன்மேல் செலாநின்
34. ற ரவுத்திரி வருஷம் காற்த்திகை மீ 19உ திங்கள்க் கிழ
35. மையும் பௌறமாவாஸ்யையும் ரோகணி நட்செத்தி
36. ரமும் சித்தினாம யோகமும் பவகறணமும் யிதுக
37. ள் கூடின புண்ய காலத்திலே ராசராச வளனாடு ர
38. ாசேந்திரசோழ வளநாடு பன்றிசூழ்நாடு அன்பில்
39. தெற்குலூரிலிருக்குங் காணியுடைய அரசர்மக்க
40. ளில் காசிப கோத்திரத்தில் விளங்கும் ஶ்ரீமது திருமலை
41. ராய தொண்டைமானார் பௌத்ரன் திருமலையப்பரா
42. ய தொண்டைமானார் புத்ரர் ராசஶ்ரீ ராசா விசை
43. ய ரெகுனாத பாதர் தொண்டைமானார் அவர்களு
44. க்கு மன்சுபா நடந்த கானாட்டில் செங்கமலம்பிள்ளை

இரண்டாம் பக்கம்

45. மகன் அடப்பங் கூத்தப்பன் பேருக்கு காசியில் கெங்கா
46. தீரக் கரையில் சோமேசுர கட்டத்தில் தற்ம்ம சாலை ச
47. த்திரங் கட்ட ரூபாயி 1250 குடுத்து கட்டிவைச்சு
48. காசியில் விசுவேசுரர் விசாலாட்சியம்மன் அபிே
49. ஷகம் நைவேதனம் வில்வாற்ச்சனை திருவிளக்கு
50. நித்தப்படி ஒண்ணேகால்ப் பணம் நடந்துவரவும் அ
51. ன்னதான தற்மத்துக்கு நித்தப்படி ஆறுபேருக்கு
52. நடந்து வரவு முதல் ரூபாயி 625 கொடுத்து ச
53. த்திரக் கிறாமங் கொவ்வனூருக்கு உள்க்கடையா
54. ன கூத்தனூரில் பாந்தலைவயல் புதுவயல் நஞ்சை
55. புஞ்சையும் விட்டு தருமபுரந் திருஞானசம்பந்த தே
56. தசிகர் சீஷரான காசிவாசி சடையப்ப தம்பிரானவ
57. ர்கள் பாரிசமாக தாராபூறுவமாக தாம்பிர ஸாத
58. னப் பட்டையங் கொடுத்தபடி கூத்தனூர் பாந்தலை
59. வயல் புதுவயலுக் கெல்லையாவது கீழ்பாற்கெ

60. ல்லை வாழைக்குறிச்சி புலவன் புஞ்சை மேலக் கரு
61. வில் வாமன முத்திரைக்கல்லுக்கு மேற்கு, தென்பாற்
62. கெல்லை முனாங்கி புஞ்சை அனாதிகளர் பொன்னம)ராப
63. தி பாதைக்குவடக்கு, மேல்பாற்கெல்லை பூவாலைக்
64. குடி பள்ளன் ஊறணி சனிமூலை வாமனமுத்திை
65. ர கல்லுக்குக் கிழக்கு, வடபாற்கெல்லை மாணிக்க னாச்
66. சியார் ஊறணி பாதியில் படுபாறையில் வாமனமுத்தி
67. ரை உருவுக்கு தெற்க்கு ஆகப் பரினான்கெல்லைக் குள்பட்
68. ட நஞ்சை புஞ்சை திட்டுத் திடல் நத்தம் படுகை தோப்புத் து
69. றவு மாவடை மரவடை நிதி நிட்க்ஷேபங் கீழ்னோக்கிய
70. கிணறு மேல்னோக்கிய விருட்சஞ் செல தரு பாஷா
71. ணம் சொற்ன்னாதாயம் வகையறுப்பு பலசுவந்திரம்
72. வலங்கை இடங்கை எப்பேர்ப்பட்ட வரியும் தாராபூ
73. றுவமாக தாம்புர ஸாஸனப்பட்டையங் கொடுத்தப
74. டியினாலே சந்திராதித்தாளுள்ளவரைக்கு எங்கள் பு
75. த்ர பௌத்ர பாரம்பரையமாக தங்கள் ஸ்ரீஷ பா
76. ரம்பரையமாக தற்ம்மத்தை உத்திரகோத்திரமாக ஆச
77. சந்திரார்க்கஸ்தாயியாக பரிபாலனம் பண்ணிக் கொண்
78. டு வருவார்களாகவும், இந்தத் தற்ம்மத்துக்கு வாக்கு ஸ
79. காயம் சரீர ஸகாயம் அற்த்த ஸகாயம் பண்ணின
80. பேர்கள் காசியிலே கெங்கா தீரத்தில் கோடி சிவலிங்
81. கப் பிறதிஷ்ட்டை பண்ணின பலனையடைவார்களாக
82. வும். யிந்தத் தற்ம்மத்துக்கு யாதாமொருத்தர் அகிதம் பண்ணினபே
83. ர்கள் காசியிலே கெங்கா தீரக்கரையில் கோடி காராம்பசு
84. வைக் கொன்ற தோஷத்திலே போவாராகவும். ஸ்வதத்தாத்வி
85. குணம் புண்யம் பரதத்தாநு பாலநம் பரதத்தாப ஹாரே
86. ன ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேத்:தானபாலன யோர்மத்யே தானா
87. ஸ்ரயோநு பாலநம் தானாத் ஸ்வர்க்கமவாப்நோதி பாலநாத
88. ச்சுதம் பதம்: யிந்த தாம்புர சாதனம் பழணியப்ப வாத்தி
89. யார் குமாரன் ரெகுனாத வாத்தியார் கையி எழுத்து உ.

16. திருக்கோகர்ணச் செப்பேடு

இருக்கும் இடம்	:	**அரசு அருங்காட்சியகம், திருக்கோகர்ணம், புதுக்கோட்டை.**
அரசர்	:	**ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமானார் (1789 – 1807)**
காலம்	:	**29–1–1803**
மொழி	:	**தமிழ்**
அளவு	:	**41 செ.மீ × 26 செ.மீ.**

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு உச்சிப் பகுதியில் துளையையுடைய பெரிய கைப்பிடியை உடையது. கைப்பிடியில் வரைகோட்டு ஓவியம் எதுவுமில்லை. முதல் பக்க நடுப்பகுதியில் ஸ்ரீராமஜெயம் என்று தெலுங்கில் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது. முற்றுப்பெறாத புதுக்கோட்டை அருங்காட்சியகச் செப்பேடுகளில் இதுவும் ஒன்று.

29–1–1803 அன்று புதுக்கோட்டை மன்னர் ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமானார் அவர்கள் தம்முடைய காணாட்டு சுபேதார் செங்கமலம்பிள்ளை மகன் அடப்பங்கூத்தப்பன் பெயரில் திருக்கோகர்ணம் கோகர்ணேசுவரருக்கும், பிரகதம்மனுக்கும் விழா, பூசைக் கட்டளை, அபிடேகம், நெய்வேத்தியம், அர்ச்சனை, குளித்தளிகை, சித்திரைத் திருவிழா ஐந்தாம் திருநாள் மண்டகப்படி இவைகளுக்காகக் கபிலைவளநாட்டில் நாங்கூர் ஏந்தல் மூலங்குளத்தில் பல பகுதிகளைக் கொடையாக அளித்ததை இச்செப்பேடு கூறுகிறது.

கொடை அளிக்கப்பெற்ற பகுதிகளின் எல்லைகளாகக் குண்டாறு கணக்கன்பட்டி அணை, கணக்கன்பட்டி அக்கிரகாரப் புளக்கடைக் கொல்லை, வாய்க்கால், கணக்கன்குளம் வடகரைப் பிறவாகால், நாங்குக் குளவாயில் தண்ணீர்ப்பிடி, கீரி காலாடி சீவிதஅறுதி, சிறுனாங்குளம், தெற்குக் கடக்கோம்பு, சிறுனாங்கு வயல் ஓடை, ஆத்தோடிப்பள்ளம், பிச்சன் அணை, ஆறு, சந்திரன் வயக்கல் அணை, குண்டாறு நத்தம் பண்ணையில் வயிராளி உம்பளம், நெட்டி வேலைக்காரன் உம்பளம், தட்டான்தளை, நத்தம்பண்ணை ஊறணி வடகரை, ராசபாதை, கோயில் தென்னந்தோப்பு, மடப்புறிகால், வரப்பிடாரி

செய், தெற்குத்தளை, நாட்டார் உம்பளம், சிறுவயக்கல் வட வரப்பு, சாத்தன் வயக்கல் தெற்குவரப்பு, பட்டார் வயக்கல், கடப்பஞ்செய் ஓடை, கேப்பை அரக்கிவெட்டிச்செய், தீத்திவயக்கல், சந்திர புஷ்கரணி ஊரணி ஆகியன எல்லைகளாகக் கூறப்பட்டுள்ளன.

இப்பகுதியில் வரும் பல வருவாயுடன் திருகப்பூர் மகமை, புதுக்கோட்டை மகமை, ஆலங்குடி வழிச்சாரி உள்பட மகமை, தெற்காட்டூர் உள்பட விராச்சிலை மகமை, புல்வயல் மகமை ஆகியவையும் கொடையாக அளிக்கப்பட்டன.

இச்செப்பேட்டிற்கு 30 வரியளவு மட்டும் பொறிக்கப்பட்டுள்ள மற்றொரு குறைச் செப்பேட்டு நகலும் உள்ளது. இவ்விரு செப்பேடுகளையும் மைய அரசு தொல்லியல் அளவீட்டுத்துறையின் கல்வெட்டுப் பிரிவினர் படி எடுத்துள்ளனர்.[1]

மூலம்

முதல் பக்கம்

ஸ்ரீ ராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுபரன்,அரியராயதள விபாடன்,
2. பாஷைக்குத் தப்புவராயர் கண்டன், மூவராயிர கண்டன், கண்டர்
3. கண்டன், கண்டையப் பிறதாபன், கட்டாரிச் சாளுவன், கண்டநாடு கெ
4. காண்டு கொண்டநாடு கொடாதான், ஒருபரி கொண்டு திரள்பரி வெட்டு
5. ம் உபையகுலோத்துங்கன், எம்மண்டலங்கொண்டு யீழமுந் திறைகெ
6. காண்ட ராசாதிராசன், ராசபரமேசுவரன், ராசமாற்த்தாண்டன், ரா
7. ச நாறண குலதிலகன், ராசகண்டீரவன், ராசாக்கள் தம்பிரான், கே
8. ாட்டத்துமன்னியர் கண்டன், சொரி மன்னியர் சூரியன், கெடிமன்னி
9. யர் காலாந்தகன், தொண்டமண்டல ஸ்தாபனாசாரியன், சோழமண்ட

---

1. ARE (A) 23 of 1950.

10. லப் பிறதிஷ்ட்டாபனாசாரியன், பாண்டிமண்டலத்து பத்மனாசாரிய
11. ன், படைகண்டு தத்தளிப்பார்கள் கண்டன், பஞ்சபாணாவதாரன், தற்க்
12. காற்கு தற்க்கன், தற்க்க வினோதன், தண்டுவார் மிண்டன், சண்டப்பி
13. றசண்டன், ஸகல குணாபிராமன், துங்காபிராமன், துர்க ரேபந்தன்,
14. சொல்லுக் கரிச்சந்திரன், வில்லுக்கு விசையன், பரிக்கு நகுலன், குடை
15. க்குக் கற்ன்னன், பொறுமைக்கு தற்ம்மர், பூறுவ தெட்சண பச்சிம உத்த
16 ர ஸத்த ஸமுத்திராதிபதி, அசுபதி கெசபதி தனபதி நரபதி, நரவேட்டை கண்
17. டருளிய மல்லிகாற்சுனதேவ மகாராயர், பி(ரு)புடதேவ மகாராயர், ராமதே
18. வ மகாராயர், கிஷ்ணதேவ மகாராயர், விருப்பாட்சிதேவ மகாராயர். திரு
19. மலைதேவ மகாராயர், யானைகுந்திதேவ மகாராயர், ஸ்ரீரெங்கதேவ ம
20. காராயர் பிறிதிவி ராச்சியம்பண்ணி யருளாநின்ற சாலிவாஹந ச
21. கார்த்தம் 1724 கலியுக சகார்த்தம் 4903 யிதன்மேல்
22. செல்லாநின்ற துந்துபி வருஷம் தையி மீ 18உ அசுபதி நட்சத்திரமும் ஸ்தி
23. ர வாரமும் சுக்குல பக்ஷ சத்தமியும் ஸாத்திநாம யோகமும் கெறசவ
24. ாகறணமுங் கூடின மனுவாதிரத சத்தமி புண்ணிய காலத்திலே
25. ராசராச வளநாடு ராசேந்திர சோழவளநாடு பன்றிசூழ்நாடு அன்
26. பில் தெற்குலூ ரிலிருக்குங் காணியுடைய அரசர்மக்களில் காஸ்யப
27. கோத்ரத்தில் விளங்கும் ஸ்ரீமது திருமலைராய தொண்டைமானார் பௌ
28. த்ரந் திருமலையப்பராய தொண்டைமானார் புத்ரந் ராசஸ்ரீ ராசா வி
29. சைய ரெகுனாதராய பாதர் தொண்டைமானாரவர்களுக்கு மன்சுப
30. ா நடந்த கானாட்டில் செங்கமலம் பிள்ளை மகன் அடப்பங் கூத்தப்பன்

31. பேருக்கு திருக்கோகருணம் கோகர்ணேஸ்வர ஸ்வாமிக்கும் அம்மன்
32. பிரஹறதம்பாளுக்கு
33. ம் விளா பூசைக் கட்ட
34. ளைக்கும் அபிஷேக
35. நெய்வேத்திய அற
36. ச்சனைக்கும் குளித்த
37. ளிகைக்கும் சித்திரைத்திருவிளா அஞ்சாந் திருநாள் மண்டகப் படிக்கும்
38. கபிலை வளநாட்டில் நான்கூர்ஏந்தல் மூலங்குளப் பிறமாணப்படி
39. க்கு கீள்பிற மேபாற்க்கெல்லை தெற்கு வடற்கு ஓடிய குண்டாறு கண
40. க்கன்பட்டி அணைக்கு மேற்கு தென்பிறம் வடபாற்கெல்லை கணக்க
41. ன்பட்டி அக்கிறகாரப் புளக்கடைக்கொல்லைக்கி வடக்கு வாய்க்கா
42. லுக்கு வடக்கு கணக்கன்குளம் வடகரை பிறவாகாலுக்கு வடக்கு மே
43. மல்பிறம் கீழ்பாற்கெல்லை நாங்குக் குளவாயில் தண்ணீர்ப்பிடி
44. கீரி காலாடி சீவிதஅறிதிக்கி வடபிறஞ் சிறுனாங்குளந் தெற்குக் க
45. டக்கோம்புக்கு தெற்கு சிறுனாங்குவயல் ஓடைக்கி தெற்கு ஆத்மே
46. தாடிபள்ளத்துக்கு தெற்கு பிச்சன்அணை ஆத்துக்கு தெற்கு யிந்த நா
47. ன்கெல்லைக்குள்பட்ட நஞ்சை புஞ்சை திட்டுத் திடல் தோப்புத் துற
48. வு மாவடை மரவடையும் நத்தம் பண்ணைக்கு வடக்குக் கீழ்புறம் மேல்
49. பாற்கெல்லை சந்திரன்வயக்கல்அணைக்கு தெற்கு குண்டாறு தெற
50. கு வடக்கு ஓடிய ஆத்துக்கு மேற்கு வடபாற்கெல்லை தென்புறம் நத்தம்
51. பண்ணையில் வயிராவிஉடம்பளம் நெட்டி வேலைகாறன் உம்பள
52. ம் தட்டான்தளை நத்தம் பண்ணைஊறணி வடகரை ராசபாதை
53. க்கு மேற்கு கோவில்தென்னந்தோப்பு மடப்பறி கால் வடக்கு வ
54. ரப்பு பிடாரிசெய் தெற்கு தளைக்கு வடக்கு வரப்பு நாட்டார் உம்பளம் சிறு
55. வயக்கல் வடவரப்பு சாத்தன் வயக்கல் தெற்கு வரப்பு பட்டார் வயக்க
56. லுக்கு வடக்கு வரப்பு யிது வடக்கு மேல்பிறங் கீழ்பாற்கெல்லை கட

இரண்டாம் பக்கம்

57. ப்பஞ்செய் ஓடை கீள்வரப்புக்குக் கிழக்கு கேப்பை அரைக்கி வெட்டி
58. ச்செய் மேல்வரப்புக்குக் கிழக்கு கீழ்தீத்தி வயக்கலுக்கு தெற்கு சந்திர
59. புஷ்க்கரணி ஊறணிக்கி கிழக்கு வடபிறந் தென்பாற் கெல்லை குண்
60. டாத்துக்கு தெற்கு ஆக நான்கெல்லைக்குள்பட்ட நஞ்சை புஞ்சைக் குழி
61. 10000 யிதில்ச்சேர்ந்த நஞ்சை புஞ்சையும் திட்டுத் திடல் தோப்புத் துற
62. வு நத்தம் படுகை மாவடை மரவடை சொற்னாதாயம் வகையறுப்பு யி
63. டங்கை வலங்கைவரி பலசுவந்திரம் யிதுமுதலான எப்பேர்ப்பட்ட வ
64. ரியும் கீழ்நோக்கிய கிணறும் மேல்நோக்கிய விருட்சம் ஷல தரு பாஷ
65. ாணம் நிதி நிட்சேபம் சறுவ மான்னியமாகவும் யிந்த தற்ம்மத்துக்கா
66. க உண்டு பண்ணின திருகப்பூர்மகமையும் புதுக்கோட்டைமகமையும்
67. ஆலங்குடிவழிச்சாரி உள்பட மகமையும் தேற்க்காட்டூர் உள்பட விரா
68. சிலை மகமையும் புல்வயல் மகமையும் யிந்தப்படிக்குக் ...
69. . . . .

17. மலையூர்ச் செப்பேடு

இருக்கும் இடம்	:	**அரசு அருங்காட்சியகம், திருக்கோகர்ணம் , புதுக்கோட்டை**
அரசர்	:	**ராசா விசைய ரகுநாத ராய பாதர் தொண்டைமானார் (1789 – 1807)**
காலம்	:	**17–8–1803**
மொழி	:	**தமிழ்**
அளவு	:	**27 செ.மீ. × 19 செ.மீ.**

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு பரந்த அடிப்பகுதியை உடைய கைப்பிடியின் மேல் பகுதியில் துளையுடன் கூடியது. வலக்கையில் கமண்டலமும், இடக்கையில் குடையும் ஏந்திக் கோவணமும் முப்புரி நூலும் கொண்டு நடக்கும் கோலத்தில் வாமனாவதார உருவம் சிறியதாக அழகிய முறையில் வரைகோட்டு ஓவியமாக வரையப்பட்டுள்ளது. முதல் பக்கம் இடையில் 'ஸ்ரீராமஜெயம்' எனத் தெலுங்கில் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது. இச் செப்பேட்டுச் செய்தியை ரகுநாத வாத்தியார் மகன் பழனியப்ப வாத்தியார் எழுதியுள்ள குறிப்பு இறுதியில் காணப்படுகிறது.

ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமானார் அவர்கள் கௌண்டின்ய கோத்திரம் ஆபஸ்தம்ப சூத்திரம் யஜுச் சாகாத்யாயியான வெங்கடேசய்யங்கார் பேரனும், சேஷாத்ரி அய்யங்கார் மகனும் ஆன தஞ்சாவூர் குப்பனய்யங்காருக்கு வாராப்பூர் நாட்டைச் சேர்ந்த மலையூருக்கு இராமச்சந்திரபுரம் என்று பெயர் மாற்றிச் சர்வமானியமாக 17-8-1803 அன்று அளித்தார் என்ற செய்தி இச்செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது. அமாவாசை நாளன்று இக்கொடை அளிக்கப்பட்டுள்ளது.

மலையூரின் எல்லைகளாகக் கீழ்வயல் தெக்குக் கருவாத்தலை, குடிக்காடு, வாத்தலை, குடிக்காட்டுத் திடல், சிங்கப்புலி வாழைத்தோட்டம், வடக்குக் கரு, வளவித்திடல் ஆவான தம்பிரான் வெட்டிக்காட்டுக் களர்ப்பள்ளம், நகிலானோடை வடக்குத்தாணி, நவ்வல், அரியாண்டி கொடிக்கால்ச்செய் வடக்கு வரப்பு, மாவடிச்செய், நாவிதன் ஓடை, பொங்கல்ச்செய் வடக்குவிப்பு, குளகமாத்தி, தேர் மடை, தன்று கரை, அரியாண்டி வாழைவயல், செக்கடிப் புன்செய், வேப்படிப் புன்செய், புழுக்கடைப் புன்செய், மேல்வாரி, மல்லிகைக் குன்று, பறைய குளம், பஞ்சாங்கம் வரதய்யங்கார் பட்டவிருத்திப் புன்செய், மறவளவு, தட்டான்வெளிப் புன்செய் வடக்குக் கரு, கல்லுத்தோண்டி வடக்குக் கரு, செட்டி ஊரணி, முனியன்கோயில், கொசவன் சூளை, பெருந்துறையான் கட்டையால், பீச்சிப் புன்செய் மேல்கரு, பெருந்துறையான் மேல்கரு, மண்ணுக்கிடாயிவெட்டி வடக்குக்கரு, பொன் விளைஞ்சான் புன்செய் வடக்குக்கரு, மலையூர்க்குளம், அரியாண்டிக்குளம் தண்ணீர்ப்பிடி, வாமன முத்திரைக்கல் ஆகியன கூறப்பட்டுள்ளன.

இக்கொடையைக் காப்பவர்களுக்குக் கிடைக்கும் புண்ணியமும், அழிப்பவர்கள் அடையும் பாவமும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

இறுதிப் பகுதியில் தானத்தைக் காப்பது தொடர்பான இரு வடமொழிச் சுலோகங்கள் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன.

மூலம்

முதல் பக்கம்

ஸ்ரீ ராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மஹாமண்டலேசுபரன், அரியராயதள வி
2. பாடன், பாஷைக்கு தப்புவராயர் கண்டன், மூ
3. வராயர் கண்டன், கண்டர் கண்டன், கண்டைய
4. ப் பிறதாபன், கட்டாரிச் சாளுவன், கண்டனாடு கொ
5. ண்டு கொண்டனாடு கொடாதான், ஒருபரி கொண்டு
6. திரள்பரி வெட்டு முபையகுலோத்துங்கன், எம்மண்
7. டலங் கொண்டு யீழமுந் திறைகொண்ட ராசாதிரா
8. சன், ராசபரமேசுபரன், ராசகெம்பீரன், ராசநாறன
9. குலதிலகன், ராசகண்டீரவன், ராசாக்கள் தம்பிரா
10. ன், கோட்டத்து மன்னியர் கண்டன், சொரிமன்னிய
11. சூரியன், கெடிமன்னியர் காலாந்தகன், தொண்டமண்
12. டல ஸ்தாபனாசாரியன், சோழமண்டலப் பிறதிஷ்ட்ட
13. ாபனாசாரியன், பாண்டிமண்டலத்து பத்மனாசாரிய
14. ன், மறுமன்னியர் குடாரி, குறுமன்னியர் கோளரி, து
15. லுக்கர்தள விபாடன், துலுக்கர்மோகந் தவிழ்த்தான்,
16. அரியதள விபாடன், அரியர்மோகந் தவிழ்த்தான், தொ
17. ட்டியர்தள விபாடன், தொட்டியர்மோகந் தவிழ்த்தான்
18. தற்காற்கு தற்கன், தற்க விநோதன், தண்டுவார் மிண்ட
19. ன், சண்டப் பிறசண்டன், ஸகல குனாபிராமன், துங்க
20. ாபிராமன், துர்க ரேபந்தன், சொல்லுக் கரிச்சந்திரன், வி
21. ல்லுக்கு விசையன், பரிக்கு நகுலன், குடைக்குக் கற்னன்,
22. பொறுமைக்கு தற்ம்மர் பூறுவ தெட்சண பச்சிம உ
23. த்தர ஸத்த ஸமுத்திராதிபதி அசுபதி கெசபதி தனப
24. தி நரபதி நரவேட்டை கண்டருளிய மல்லிகாச்சு

25. னதேவ மகாராயர் பிறபுடதேவ மகாராயர் ராமதே
26. தவ மகாராயர் கிஷ்ட்டிணதேவ மகாராயர் விருப்ப
27. ராட்சிதேவ
28. மகாராய
29. ர் ஆனகுந்திதே
30. ததேவ மகாராயர் ஸ்ரீரெங்கதேவ மகாராயர் பிறிதி
31. விராச்சியம் பண்ணியருளாநின்ற சாலிவாஹ
32. ந சகாப்தம் 1725 கல்யப்தம் 4904 யிதின்
33. மேல்ச் செல்லாநிண்ட[1] ருத்திரோத்காரி வருஷம் ஆவணி
34. மீ 3உ கிற்ஷ்ணபக்ஷமும் புதவாரமும் அமாவாஸை
35. ஸயும் மகரநக்ஷத்ரமும் பரிகனாம யோகமும் நாகவா
36. கறமும் கூடின புண்யதினத்தில் கோகற்ண க்ஷே
37. த்ரத்தில் ராசராச வ்ளனாடு ராசேந்திரசோழ வளனாடு ப
38. ண்டி[2] சூழ்நாடு அன்பில் தெற்குலூரிலிருக்குங் காணி
39. யுடைய அரயற்[3] மக்களில் காஸ்யப கோத்ரத்தில் விளங்
40. கும் ஸ்ரீமது திருமலைராய தொண்டமானாற் பௌத்ரந் தி
41. ருமலையப்ப ராய தொண்டமானாற் புத்ரந் ராசஸ்ரீராசா
42. விசைய ரெகுனாத ராய பாதற் தொண்டமானாற் அவற்
43. கள் கௌண்டிந்ய கோத்ரம் ஆபஸ்தம்ப ஸூத்ரம் யஜுச்ச
44. ாகாத்யாயியான வெங்கடேசய்யங்கா(ர்) பௌத்ர
45. ந் சேஷாத்ரி அய்யங்காற் புத்ரந் தஞ்ச நகரத்திலிருக்கும்

இரண்டாம் பக்கம்

46. குப்பனய்யங்காருக்கு வாராப்புர்[4] நாட்டில் சேந்த ம
47. ளையுருக்கு[5] ப்றதினாமமான ராமசந்திரபுரத்தை ஸ
48. ஹிரண்யோதக தாராபூர்வமாக சர்வமாந்யமாக தானம்
49. பண்ணி தாம்பிரசாஸனம் பண்ணிகுடுத்தபடியினா
50. லே யிதுக்கு எல்லை கீள்வயல் தெற்குக் கருவாத்தலை
51. க்கும் குடிக்காட்டு வடக்கு வாத்தலைக்கும் குடிக்காட்
52. டுத் திடலுக்கும் சிங்கப்புலி வாளைத்தோட்டம் வடக்
53. குக் கருவுக்கு வளவித் திடலுக்கும் ஆவான தம்பிர(ா)ன்
54. வெட்டிக்காட்டுக் களறப்பள்ளத்துக்கும் நகிலானோடை

---

1. செல்லாநின்ற 2. பன்றி 3. அரையர்
4. வாராப்பூர் 5. மலையூருக்கு

55. வடக்குத் தாணிக்கும் நவ்வலுக்கும் அரியாண்டி கொ
56. டிக்கால்ச்செயி வடக்கு வரப்புக்கும் மாவடிச்
57 செயி மாவுக்கும் நாவிதன் ஓடைக்கும் பொங்கல்ச்
58. செயி வடக்கு வரப்பு குளக மாத்திக்கும் யிதுகளுக்கெ
59. ல்லாம் தெற்கு தேற்மடை வடக்கு தன்றுகரைக்கி கி
60. ளக்கு அரியாண்டி வாளைவயலுக்கும் மேற்படியூர் செக்க
61. டி புஞ்சைக்கும் கிளக்கு வேப்படி புஞ்சை புளக்கடைப்
62. புஞ்சை மேல்வாரிக்கும் மல்லிகை குன்றுக்கும் பழை
63. றய குளத்து மேல்க்கரைக்கும் பங்சாங்கம் வறதய்ய
64. ங்காற் பட்டவிற்த்தி புஞ்சைக்கு மறவளவுக்கும் பெரி
65. ய பிஞ்சை கீள்ப்பங்குக்கும் யிதுகளுக்கெல்லாம் மே
66. ற்க்கு தட்டான் வெளி புஞ்சை வடக்குக்கருவுக்கும் க
67. ல்லுத் தோண்டி வடக்குக் கருவுக்கும் செட்டி ஊறணி
68. க்கு முனியன் கோவிலுக்கு ஒ நங்கைக்கு கொசவன் கூ
69. ளைக்கு பெருந்துறையான் கட்டையாலுக்கும் யிதுகளு
70. க்கெல்லாம் வடக்கு பீச்சி பிஞ்சை மேல்க்கருவுக்கு
71. பெருந்துறையான் மேல்க்கரைக்கும் மேற்க்கு மண்ணு
72. க் கிடாயிவெட்டி வடக்குகருவுக்கு பொன்விளஞ்ச
73. ான் பிஞ்சை வடக்குகருவுக்கும் வடக்கு மனையூர்க்கு
74. ளம் அரியாண்டிக் குளம் தண்ணீப் பிடியல் உள்பட
75. வாமன முத்திரைக் கல்லுக்கு உள்ப்பட்ட நாங்கெல்லையும்
76. நஞ்சை புஞ்சை திட்டு திடல் தோப்புத் துரவு மாவடை ம
77. ரவடை யெப்பேற்ப்பட்ட சகல சமுதாயமும் உள்பட நி
78. தி நிக்ஷேப செல தரு பாஷாணாக்ஷிண்யாகெம்மியா ஸி
79. த்த ஸாத்ய மென்னபட்ட அஷ்டபோக தேச ஸ்வாம்யங்களும்
80. உள்பட ஸறுவ மானியமாக தானம் பண்ணினபடியினாலே
81. தானாதி வினிமய விக்ரயாங்களுக்க யோக்கியமாக ஆசந்திரார்க்க ஸ்த
82. ாயியாக புத்ர பௌத்ர பாரம்பரியமாக சர்வ மான்னியமாக தாமே ஆண்
83. டு அனுபவித்துகொள்ளக் கடவராகவும். யிந்தப்படி சம்மதிச்சு ராமசந்
84. திரபுரத்தை குப்பனய்யங்காருக்கு சர்வமானியமாக தான சாஸன
85. ம் பண்ணிகுடுத்தோம். ராசஸ்ரீ திருமலையப்ப ராய தொண்டமானாற்

86. புத்ரனான ஸ்ரீ ராசா விசைய ரெகுனாத ராய பாதற் தொண்டமானாற் அ
87. வர்கள் பண்ணின தற்மத்துக்கு யாதாமொருதர் விகாதம் பண்ணு
88. குறாற்களோ அவற்கள் பிரஹஸ்வாபஹார தோஷத்துக்கு உள்ப்பட்ட
89. பேற்களாகப் போகக்கடவாராகவும். தாந பாலந யோர்மத்யே தாநா
90. த் ஸ்ரயோநு பாலநம் தாநாத் ஸ்வர்க்க மவாப்நோதி பாலநாத்
91. அச்சுதம் பதம்: ஏகைவ பஹிநீ லோகே ஸர்வேஷா மேவ பூபுஜ
92. ாம் நகோஜ்யா நகரக் ரஹ்யா விப்ர தத்தா வஸுந்தரா: யிந்தச் சாத
93. ன எழிதிநன்மைக்கி ரெகுனாத வாத்தியார் குமாரன் பழனியப்ப வா
94. த்தியாற் கைய் எளுத்து உ.

18. சுப்பிரமணியன் சத்திரச் செப்பேடு

இருக்கும் இடம்	:	அரசு அருங்காட்சியகம், திருக்கோகர்ணம், புதுக்கோட்டை
அரசர்	:	ராசா விசையரகுநாதராய பாதர் தொண்டைமானார் (1789 – 1807)
காலம்	:	28-11-1803
மொழி	:	தமிழ்
அளவு	:	37 செ.மீ. × 27.5 செ.மீ.

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு முனையில் துளையையுடைய பெரிய கைப்பிடியைப் பெற்றுள்ளது. வரைகோட்டு ஓவியங்கள் எதுவும் இல்லை. ஒருபக்கம் மட்டுமே எழுதப் பெற்றுள்ள இச்செப்பேடு முற்றுப்பெறாமல் உள்ளது. முதல் பக்க நடுவில் 'ஸ்ரீராமஜெயம்' என்று தெலுங்கில் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது. கோடு வரைந்து அதன்மீது நேராக எழுதப்பட்ட அடையாளம் இறுதிப்பகுதியில் நன்கு தெரிகிறது. இச்செப்பேட்டை மைய அரசு தொல்லியல் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவினர் படி எடுத்துள்ளனர்.[1]

1. ARE (A) 21 of 1950.

28-11-1803 அன்று புதுக்கோட்டை மன்னர் ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமான் அவர்கள் தம் சுபாவுக்கு அடங்கிய கானாட்டில் செங்கமலம்பிள்ளை மகன் அடப்பம் சுப்பிரமணியன் பெயரில் சிறுவாகைநாட்டில் கீரனூருக்குத் தெற்கு, தெப்பக்குளத்துத் தெற்குக் கரையில் இருக்கும் விக்கினேசுபரன் கோயிலுக்கு மேற்கு, குளத்தூர் வரதராசப் பெருமாள் கோயிலுக்கும் மங்களாம்பா சமுத்திரம் அக்கிரகாரத்துக்கும் வடக்கு,சேனங்குடி அய்யநார் கோயிலுக்குக் கிழக்கு இதன் மத்தியில் சேது மார்க்கத்திலே அன்னதானச் சத்திரமும், தெப்பக்குளமும் என்றென்றும் நிலைத்திருக்கும்படி எற்பாடு செய்த விபரத்தை இச்செப்பேடு கூறுகிறது.

மூலம்

ஸ்ரீராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீமந் மஹாமண்டலேஸ்பரன், அரியராயதள விபாடன், பா
2. ஷைக்கு தப்புவராயர்கண்டன், மூவராயிர கண்டன், கண்டர் கண்ட
3. ன் கண்டையப் பிறதாபன், கட்டார்ச் ச ளுவன், கண்டநாடு கெ
4. ாண்டு கொண்டநாடு கொடாதான், ஒருபரி கொண்டு திரள்பரி வெ
5. வட்டு முடையகுலோத்துங்கன், எம்மண்டலங் கொண்டு யீழமுந்திறை
6. கொண்ட ராசாதிராசன், ராசபரமேஸ்வபரன், ராசகெம்பீரன், ராசநா
7. ரண குலதிலகன், ராசகண்டீரவன், ராசாக்கள் தம்பிரான், கோட்டத்து
8. மன்னியர் கண்டன், சொரிமன்னியர் சூரியன், கெடிமன்னியர் கால
9. ாந்தகன் தொண்டமண்டல ஸ்தாபனாசாரியன், சோழமண்டலப் பிற
10. திஷ்டாபனாசாரியன், பாண்டிமண்டலத்து பத்மனாசாரியன், மறுமன்னி
11. யர் கோடாரி, குறுமன்னியர் கோளரி, துலுக்கர்தள விபாடன், துலுக்கர்
12. மோகம் தவிழ்த்தான், அரியதள விபாடன், அரியர் மோகந் தவிழ்த்தான், வெ

13. தாட்டியர்தள விபாடன், தொட்டியர்மோகந் தவிழ்த்தான், தற்காற்கு
14. தற்க்கன், தற்க்க விநோதன், தண்டுவார் மிண்டன், சண்டப் பிறசண்ட
15. ன், ஸகல குணாபிராமன், துங்காபி ராமன், துர்க ரேபந்தன், சொல்லு
16. க்கரிச்சந்திரன், வில்லுக்கு விஜையன், பரிக்கு நகுலன், குடைக்கு கற்
17. ன்னன், பொறுமைக்கு தற்ம்மர், பூறுவ தெட்சண பச்சிம உத்தர ஸ
18. த்த ஸமுத்திராதிபதி, அசுபதி கெசபதி, தனபதி நரபதி, நரவேட்டை கண்டரு
19. ளிய மல்லிகார்ச்சுனதேவ மகாராயர், பிறபுடதேவ மகாராயர், யானை
20. குந்திதேவ மகாராயர், ராமதேவ மகாராயர், நரசிங்கதேவ மகாராயர்,
21. அரிகரதேவ மகாராயர், புசங்கதேவ மகாராயர், திருமலைதேவ மகா
22. ராயர், ஸ்ரீரெங்கதேவ மகாராயர் பிறிதிவி ராச்சியம் பண்ணி யரு
23. ளாநின்ற சாலிவாகந சகார்த்தம் 1725 கலியுக சகார்
24. ப்தம் 4904 யிதன்மேல் செல்லாநின்ற ருதிரோற்க்காரி வருஷம்
25. கார்த்திகை மீ 15உ ஸோமவாரமும் பௌணமாவாசையும் ரோக
26. ணி நட்செத்திரமும் சிவநாம
27. யோகமும் பத்ரவாகரண
28. மும் கூடின சுபதினத்தி
29. ல் ராஜராஜ வளநாடு, ராசே
30. ந்திர சோழவளநாடு, பன்றிசூழ்நாடு அன்பில் தெற்குலூரிலிருக்குங் க
31. ாணியுடைய அரசர் மக்களில் காஸ்யப கோத்திரத்தில் விளங்கும் யிந்தி
32. ரகுல வங்கிஷன் அன்பில்னாடன், தென்கோடியாதிபன் வடகரைப்புலி
33. வாகைமாலை புயனான ஸ்ரீமது திருமலைராய தொண்டைமானார் பௌத்ரந்
34. திருமலையப்பராய தொண்டைமானார் புத்ரந் ராஜஸ்ரீராஜ விஜை
35. சய ரெகுனாத ராய பாதர் தொண்டைமானாரவர்களுக்கு மன்சுபா நட

36. ந்த கானாட்டில் செங்கமலம்பிள்ளை மகன் அடப்பஞ் சுப்பிறமணிய
37. ன் பேருக்கு சிறுவாக னாட்டில் கீறனூரு ஸ்தலத்துக்கு தெற்க்கு
தெப்பக்கு
38. ளத்து தெற்க்குகறையில் இருக்குர விக்கினேசுவரன் கோவிலுக்கு மே
39. ற்க்கு குளத்தூரு வரதராஜபெருமாள் கோவிலுக்கு வடக்கு
மாங்களாம்பா
40. ஸமுத்திரம் அக்கிறகாறத்துக்கு வடக்கு சேனாங்குடி அய்யனாற்
கோவிலு
41. க்கு கிழக்கு யிதின்மத்தியிலே சேது மாக்கற்த்திலே[1]
யிப்படிக்கொற்ற[2]
42. புண்ணிய பூமியிலே சாசுவதிக தன்னதான தறும்மத்துக்கு சத்திரம்
43. கல்மண்டபம் தெப்பக்குளமும் உண்டுபண்ணிவிச்ச படியனாலே யி
44. ந்த தறும்மத்துக்கு . . . .

19. கீரனூர்ச் செப்பேடு

இருக்கும் இடம்	:	அரசுஅருங்காட்சியகம், திருக்கோகர்ணம், புதுக்கோட்டை
அரசர்	:	ராசா விசைய ரகுநாதராய பாதுர் தொண்டைமானார் (1789 – 1807)
காலம்	:	22-7-1804
மொழி	:	தமிழ்
அளவு	:	38 செ.மீ. × 28 செ.மீ.

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு உச்சியில் துளையையுடைய பெரிய (8செ.மீ. உயரம்) கைப்பிடியை உடையது. வரைகோட்டு ஓவியங்கள் எதுவும் இல்லை. புதுக்கோட்டை அருங்காட்சியகத்தில் உள்ள குறைச் செப்பேடுகளில் இதுவும் ஒன்று. முதல் பக்கம் மட்டும் முக்கால் அளவுக்கு எழுதப்பட்டுள்ளது. இடையில் 'ஸ்ரீராமஜயம்' என்று தெலுங்கு எழுத்துக்களில் பெரிய அளவில் எழுதப்பட்டுள்ளது. இச் செப்பேடு மைய அரசு தொல்லியல் அளவீட்டுத்துறையின் கல்வெட்டுப் பிரிவினரால் படி எடுக்கப்பட்டுள்ளது.[3]

1. மார்க்கத்திலே 2. யிப்படிக் கொத்த 3. ARE (A) 18 of 1950

22-7-1804 அன்று சந்திரகிரகண நாளில் புதுக்கோட்டை அரசர் ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமானார் அவர்கள் தம் ஆட்சிக்குட்பட்ட கானாட்டில் செங்கமலம்பிள்ளை மகன் அடப்பம் சுப்பிரமணியன் பெயரில் கீரனூரில் ஒருபகுதியில் மங்களாம்பா சமுத்திரம் என்ற பெயரில் அக்கிரகாரம் ஒன்றை ஏற்படுத்திக் கற்றறிந்த பல கோத்திரம் சூத்ரத்தைச் சேர்ந்த அந்தணர்களுக்குக் கொடையாக அளித்ததை இச்செப்பேடு கூறுகிறது.

அக்கிரகாரத்துக்கு எல்லை என்பதுவரை மட்டுமே உள்ளது. எல்லை விபரம் கூறும் பகுதியும் அதற்கு மேற்பட்ட பகுதிகளும் செப்பேட்டில் பொறிக்கப்படவில்லை.

மூலம்

ஸ்ரீராமஜயம்

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேஸ்வரன், அரியராய தள விபாடன், பா
2. ஷைக்கு தப்புவராயர் கண்டன், மூவராயிர கண்டன், கண்டர் கண்
3. டன், கண்டையப் பிறதாபன், கட்டாரிச் சாளுவன், கண்டநாடு கொண்
4. டு கொண்டநாடு கொடாதான், ஒருபரி கொண்டு திரள்பரி வெட்டு முனை
5. பய குலோத்துங்கன். எம்மண்டலங் கொண்டு யீழமுந் திறை கொ
6. ண்ட ராசாதிராசன், ராசபரமேஸ்வரன், ராசகெம்பீரன், ராசனாறண குல
7. திலகன், ராசகண்டீரவன், ராசாக்கள் தம்பிரான், கோட்டத்து மன்னிய
8. ர் கண்டன், சொரிமன்னியர் சூரியன், கெடிமன்னியர் காலாந்தகன், செ
9. தாண்டமண்டல ஸ்தாபனாசாரியன், சோழமண்டலப் பிறதிஷ்டாபனாசா
10. ரியன், பாண்டிமண்டலத்து பத்மனாசாரியன், மருமன்னியர் கோடாரி, கு
11. றுமன்னியர் கோளரி, துலுக்கர் தள விபாடன். துலுக்கர் மோகந் தவிழ
12. த்தான், அரிய தள விபாடன்,அரியர் மோகந் தவிழ்த்தான், தொட்டியர் தள

1. ARE (A) 18 of 1950

13. விபாடன். தொட்டியர் மோகந் தவிழ்த்தான். தற்க்காற்கு தற்க்கன். தற்க்
14. க வினோதன். தண்டுவார் மிண்டன். கண்டய பிறசண்டன். ஸகல குணா
15. பி ராமன். துங்காபி ராமன். துர்க ரேபந்தன். சொல்லுக் கரிச்சந்திரன். வில்லு
16. க்கு விஜையன். பரிக்கு நகுலன். குடைக்கு கற்ன்னன். பொறுமைக்கு தற்ம்மர். பூ
17. றுவ தெட்சண பச்சிம உத்தர ஸத்த ஸமுத்திராதிபதி. அசுபதி கெசபதி தனபதி ந
18. ரபதி. நரவேட்டை கண்டருளிய மல்லிகார்ச்சுனதேவ மகாராயர். பிறபுடதேவ
19. வ மகாராயர். யானைகுந்திதேவ மகாராயர். ராமதேவ மகாராயர். நரசிங்கதேவ
20. மகாராயர். அரிகரதேவ மகாராயர். புசங்கதேவ மகாராயர். திருமலை தேவ மக
21. ாராயர். ஸ்ரீரெங்கதேவ மகாராயர் பிறிதிவி ராச்சியம் பண்ணியருளா நின்
22. ற சாலிவாஹந சகாப்தம் 1726 கலியுக சகாப்தம் 4905
23. யிதன்மேல் செல்லாநின்ற ரத்தாட்சி வருஷம் ஆடி மீ 9உ ராசராச வளனாடு
24. ராசேந்திரசோழ வளனாடு பன்றிசூள் நாடு அன்ம்பில் தெற்குலூரிலிருக்
25. குங்காணி உடைய
26. அரயர் மக்களில்
27. காஷ்யப கோத்ரத்
28. தில் விளங்கும் யி
29. ந்திர குல வங்கிஷ
30. ன் அன்ம்பில்னாடன் தென்கோடி யாதிபன் வடகரைப் புலி வாகை மாலை
31. புயனான ஸ்ரீமது திருமலைராய தொண்டைமானார் பௌத்ரந் திருமலையப்
32. பராய தொண்டைமானார் புத்ரந் ராஜஸ்ரீராஜா விஜய ரெகுனாத ராய பா

33. தா் தொண்டைமானாரவா்களுக்கு மன்சுபா நடந்த காலாட்டில் செங்கமல
34. ம் பிள்ளை மகன் அடப்பம் சுப்பிரமணியன் பேருக்கு நாயித்திகிளமையும் உ
35. த்திராட னக்ஷத்திரமும் விஷ்கம்பனாம யோகமும் பத்ரவாகறணமும் யி
36. துகள் கூடின ஸோமோவராஹ புண்ணிய காலத்தில் கீரநூருக்கு பி
37. றதி நாமமான மங்களாம்பா ஸமுத்ரம் அக்ரஹாரம் பண்ணி ஸஹி
38. ரண்யோதக தாராபூருவமாக னானா கோத்ரத்து னானா ஸூத்ரத்து ப்ராஹ்ம
39. ணாளுக்கு ஸர்வமாந்யமாக தானம் பண்ணி தாம்பிர சாஸனமும் பண்
40. ணிகுடுத்தபடியினாலே யிந்த அக்ரஹாரத்துக்கு எல்லை...

20. முதலிபட்டிச் செப்பேடு

இருக்கும் இடம்	:	தருமபுர ஆதீனம், தருமபுரம்,
அரசர்	:	ராசா விசைய ரகுநரதராய பாதர் தொண்டைமானார் (1789 – 1807)
காலம்	:	3–2–1805
மொழி	:	தமிழ்
அளவு	:	34 செ.மீ. × 26 செ.மீ.

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு வளைந்த கைப்பிடியையும் அதன் நடுவே துளையையும் உடையது. செப்பேட்டின் முதல் பக்கம் பாதி அளவுக்குத் திருப்புள்ளிருக்கு வேளூர் (வைத்தீசுவரன் கோயில்) தொடர்பான பல வரைகோட்டு உருவங்கள் வரையப்பட்டுள்ளன.

செப்பேட்டின் நடுநாயகமாக முத்துக்குமாரசுவாமி (தலமுருகன்) மயில் வாகனத்துடன் நான்கு திருக்கரங்களுடன் நின்ற நிலையில் உள்ளார். அவரின் இருபுறமும் வள்ளி, தெய்வானை உள்ளனர். முத்துக்குமாரசுவாமியின் முன்வலக்கை வேலேந்தியுள்ளது. பின்னிருகரங்களில் முத்தலைச் சூலமும், பாசமும் உள்ளன. பின்பு பிரபை

காணப்படுகிறது. மலர் வேலைப்பாடுகளும் மண்டபம், தூண்கள், விதானம் ஆகியவற்றின் அழகான காட்சியும் நன்கு காட்டப் பெற்றுள்ளது.

வலப்பக்கம் பெரிய அளவில் சிவலிங்கம் வரையப்பட்டுள்ளது. இலிங்கத்தின் பீடமும் ஆவுடையாரும் நன்கு அழகூட்டப்பட்டுள்ளன. இலிங்கத்திற்கு அழகிய மலர்மாலைகள் சாத்தப்பட்டுள்ளன. இலிங்கத்தின்மேல் நாகாபரணம் விளங்குகிறது. மேல் விதானம் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

இடப்பக்கம் நான்கு திருக்கரங்களுடன் அம்மன் தையல்நாயகி நின்றருளும் திருக்கோலம் உள்ளது. அம்மனின் இரு திருக்கரங்களில் சங்கு சக்கரம் உள்ளது. சிவலிங்கத்திற்கு மேல்பகுதி அழகூட்டப் பெற்றிருப்பதுபோல அம்மனுக்கு மேலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இம்மூன்று தெய்வீகத் திருக்கோலங்களும் தனித்தனி சந்நிதிகளில் இருப்பனவாகக் காட்டப்பட்டுள்ளது. இடையிடையே போதிகைகளுடன் அழகிய தூண்கள் உள்ளன.

மேலே உள்ள மூன்று சந்நிதிகள் போலக் கீழ்ப்பகுதியில் அழகான நான்கு சந்நிதிகள் உள்ளன. முதலில் விநாயகப் பெருமான் நின்றநிலையில் உள்ளார். அடுத்து வில்லுடனும் அம்பறாத் தூணியுடனும் இராமரும் இலட்சுமணரும் உள்ளனர். இருவரும் சிவபெருமானையும் முத்துக்குமார சுவாமியையும் வணங்கும் நிலையில் உள்ளனர். அடுத்து ஜடாயு, வேதம் இருவரும் வணங்கிய நிலையில் உள்ளனர். இறுதியில் சிவபெருமானே வணங்கும் நிலையில் உள்ளார். சிவபெருமான் அருகில் சூரியனும் செவ்வாயும் நின்று வணங்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளனர். வேதம் என்பதைக் குறிக்கும் வகையில் ஓலைச்சுவடியும், சூரியன் என்பதைக் குறிக்கக் கிரீடத்தின்மேல் வட்டவடிவும் காட்டப்பட்டுள்ளது.

முதல்பக்கம் 'ஸ்ரீராமஜெயம்' என்று பெரிய எழுத்துக்களில் தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது. இச் செப்பேட்டுச் செய்தியைப் பழனியப்ப வாத்தியார் மகன் வடமலை வாத்தியார் என்பவர் எழுதியுள்ளார் இச்செப்பேட்டை மைய அரசின் தொல்லியல் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவினர் படி எடுத்துள்ளனர்.[1]

---

1. ARE (A) 9 of 1924

முதலில் இத்தலத்தை வணங்கிப் பேறு பெற்றவர்களைப் பற்றிக் குறிக்கும் வடமொழிச் சுலோகம் ஒன்று முதலில் எழுதப்பட்டுள்ளது. பிற்காலச் செப்பேடுகளில் காணும் வழக்கமான மெய்க்கீர்த்திகளுக்குப் பின்னர் விசையநகர அரசர்கள் சிலர் பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

3-2-1805 அன்று ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமானாரவர்கள் வைத்தீசுவரன்கோயில் ஸ்ரீவைத்தியநாத சுவாமி, தையல்நாயகி அம்மன் ஆகியோரின் காலைசந்திக் கட்டளைக்கும், ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி கார்த்திகை நட்சத்திர மண்டகப்படிக்கும், பங்குனி உத்திரம் தீர்த்தவாரி மண்டகப்படிக்கும் தர்மபுரம் ஆதீனம் திருஞான சம்பந்த தேசிகர் சந்நதியில் கட்டளை அட்சயலிங்கத் தம்பிரான் அவர்கள் வசம் கிளாங்காடு மாகாணச் சேர்க்கையில் உள்ள முதலிப்பட்டி என்ற ஊருக்கு வைத்தியநாதபுரம் என்று பெயர் மாற்றம் செய்து சர்வமானியமாக அளித்ததை இச்செப்பேடு கூறுகிறது.

முதலிப்பட்டிக்கு எல்லைகளாகக் கோனூர் கருக்காடியத்தை நிலம், வடக்களூர் செங்கமேடு நிலம், கல்லுமடை நிலம், ஒடப்பமனை ஆறு, தாளையடி, கிளாங்காடு உள்ளூர் மேட்டுப் புன்செய், சதுரப் பனையடி வெட்டிக்காட்டு ஆறு, கோனூர் ஆதனகோட்டை எல்லை ஆகியன கூறப்பட்டுள்ளன.

மூலம்

முதல்பக்கம்

ஸ்ரீராமஜெயம்

1. உ ஸ்ரீராம சௌமித்ர ஜடாயு வேத ஷடாந நாதித்ய கூஜார்ச்சிதா
2. யா ஸ்ரீநீலகண்டாய தயாமயாய ஸ்ரீவைத்யநாதாய நமஸ்ஸிவாய உ
3. உ ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேஸ்வரன், அரியராயதள விபாடன், பாஷைக்கு தப்
4. புவராயர் கண்டன், மூவர
5. ராயிர கண்டன், கண்டர் க
6. ண்டன், கண்டையப் பிரதா

7. பன், கட்டாரிச் சாளுவன்,
8. கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான், ஒருபரி கொண்டு திரள்ப
9. ரி வெட்டு முபையகுலோத்துங்கன், எம்மண்டலங் கொண்டு யீழமுந் திறைகெ
10. ாண்ட ராசாதிராசன், ராசபரமேஸ்வரன், ராசமாற்த்தாண்டன், ராச கண்டீரவ
11. ன், ராசாக்கள் தம்பிர(ா)ன், கோட்டத்து மன்னியர் கண்டன், சொரி மன்னியர் சூரி
12. யன், கெடி மன்னியர் காலாந்தகன், தொண்டமண்டல ஸ்தாபனாசாரியன், சோழ
13. மண்டல பிறதிஷ்ட்டாபனாசாரியன், பாண்டிமண்டலத்து பத்மனாசாரியன், பல
14. டகண்டு தத்தளிப்பார்கள் கண்டன், பஞ்சபாணாவதாரன், துலுக்கர்தள விபாட
15. ன், துலுக்கர்மோகந் தவிழ்த்தான், ஆரியர்தள விபாடன், ஆரியர்மோகந் தவிழ்
16. த்தான், தொட்டியர்தள விபாடன், தொட்டியர்மோகந் தவிழ்த்தான், ஒட்டி
17. யர்தள விபாடன், ஒட்டியர்மோகந் தவிழ்த்தான், தற்காற்கு தற்க்கன், தற்க்க
18. விநோதன், தண்டுவார் மிண்டன், சண்டப் பிறசண்டன், ஸகல குணாபிரா
19. மன், துங்காபிராமன், துர்க ரேபந்தன், சொல்லுக் கரிச்சந்திரன், வில்லுக்கு வி
20. சையன், பரிக்கு நகுலன், குடைக்கு கற்ன்னன், பொறுமைக்கு தற்ம்மா், பூறு
21. வ தெட்சண பச்சிம உத்தர ஸத்த ஸமுத்திராதிபதி, அசுபதி கெசபதி தனபதி நரபதி, ந
22. ர வேட்டை கண்டருளிய மல்லிகார்ச்சுனதேவ மகாராயர், பிறபுடதேவ ம
23. காராயர், ஆனைகுந்திதேவ மகாராயர், அரிகரதேவ மகாராயர், நரசிங்கதே
24. வ மகாராயர், கிஷ்ணதேவ மகாராயர், ராமதேவ மகாராயர், புசங்கதேவ

25. மகாராயர், திருமலைதேவ மகாராயர், ஸ்ரீரெங்கதேவ மகாராயர் பிறுதி
26. வி ராச்சியம் பண்ணி யருளாநின்ற சாலிவாகன ஸகார்த்தம் 172
27. 6 கலியுக சகார்த்தம் 4905 யிதின்மேல் செல்லாநின்ற

இரண்டாம் பக்கம்

28. ரத்தாட்சி வருஷம் தையி மீ 24உ சதுர்த்தியும் சுக்கில பஷ
29. மும் ஆதித்தவாரமும் உத்திராட்டாதி நஷ்செத்திரமும் சிவனாம
30. யோகமும் வணிக கறணமும் கூடின சுபதினத்தில் ராசராச
31. வளநாடு ராசேந்திர சோழவளநாடு பன்றிசூழ் நாடு அன்மபில்
32. தெற்குனூரிலிருக்கும்ங் காணியுடைய அரசமக்களில் காசி
33. ப கோத்திரத்தில் விளங்கும் யிந்திரகுல வங்குஷம் அன்மபி
34. ல்னாடன் தென்கோடி யாதிபன் வடகரைப்புலி வாகைமா
35. லை புயனான ஸ்ரீமது திருமலை ராய தொண்டைமானார் பௌ
36. த்ரந் திருமலையப்ப ராய தொண்டைமானார் புத்ரந் ஸ்ரீரா
37. சா விசைய ரெகுனாதராய பாதற்த் தொண்டைமானாரவற்கள் வயித்
38. தீசுரன்கோவில் ஸ்ரீ வையித்தினாத சுவாமிக்கும் தைய்யல்னாயகி
39. அம்மனுக்கும் காலசந்தி கட்டளைக்கும் ஸ்ரீமுத்துக் குமார சுவா
40. மிகாற்த்திகை நட்சத்திர மண்டகபடிக்கும் பங்குனி உத்திரத்தில் தீற்
41. த்தவாரி மண்டகபடிக்கும் வயித்தீசுவரன்கோவில் தற்மபுரம் ஆ
42. தீனம் திருஞானசம்பந்த தேசிகற் சந்நதியில் கட்டளை அட்சயலிங்க த
43. ம்பிரானவாள் பாரிசமாயி வயித்தீசுவரன் கோவில் வயித்தினாதசுவ
44. ாமி கட்டளைக்கி தாம்பிர சாதன பட்டையாங் கொடுத்தபடி கிளாங்க
45. ாடு ம(ர)காணச் சேற்கையில் முதலிபட்டிக்கி பிறிதினாமமான வயித்
46. தினாதபுரம் தாராபூறுவமாக சறுவமானியமாக தாம்பிர பட்டையாங்
47. கொடுத்தபடி முதலிபட்டிக்கிப் பிறிதினாமமான வயித்தினாதபுரம் எல்
48. லையாவது கீள்பாற்கெல்லை கோனூற் கறுக்காடிபத்தை நில
49. த்துக்கு மேற்கு தென்மபாற கெல்லை வடக்குளூற் செங்கமோ
50. டு நிலத்துக்கும் கல்லுமடை நிலம் ஒடப்பமனை ஆத்துக்கு வடக்கு தாளையடி உள்

51. பட மேல்பாற்க்கெல்லை கிளாங்காடு உள்ளூற் மோட்டுப் புஞ்சை சதிறப் பனைய
52. டி வெட்டிக்காட்டு ஆத்துக்கு கிழக்கு வடபாற்க்கெல்லை கோனூற் ஆதன
53. கோட்டையெல்லைக்குத் தெற்கு. யிந்தப் பரினாங்கெல்லை வாமன மு
54. த்திரைக் கல்லுக்கு உள்ப்பட்ட நஞ்சை புஞ்சை திட்டுத் திடல் நத்தம் படுவை
55. க தோப்புத் துறவு மாவடை மறவடை சொற்ன்னாதாயம் வகையறுப்பு
56. யெடங்கையி வலங்கையி பலசுவந்திரம் யிதுமுதலாகிய யெப்பேற்ப்ப
57. ட்ட வரியும் கீள்னோக்கிய கிணறும் மேல்னோக்கிய விறுட்சமும் செல த
58. று பாஷாணம் நிதி நிட்சேபம் சறுவ மான்னியமாக தாம்புர சாதன
59. பட்டையம் கொடுத்தபடியினாலே சந்திறாதித்தியாள் உள்ளவரைக்
60. கும் கல்லும்ங் காவேரியும் புல்லும் பூமியும் உள்ளவரைக்கும் யெங்
61. கள் புத்திர பவுத்திர பாரம்பறியமாகவும் தங்கள் சந்ததி பாரம்பறி
62. யமாகவும் அனுபவித்துக்கொண்டு தற்ம்மத்தை உத்திறோத்திரம
63. ாக நடத்திவச்சுக்கொண்டு சுகத்துலே யிருக்கக்கடவாறாகவும். இ
64. ந்த தற்ம்மத்துக்கு வ(ா)க்கு சகாயம் சரீர சகாயம் அர்த்த சகாயம் பண்
65. ணின பேர்கள் காசியிலே கெங்கைக் கரையிலே கோடி சிவலிங்க
66. பிரிதிஷ்ட்டை பண்ணின பலனை அடைவார்களாகவும். யிந்த தற்ம்
67. மத்துக்கு அகிதம் பண்ணின பேற்கள் கெங்கைக் கரையிலே கோடி
68. காறாம்பசுவை கொண்ண தோஷத்திலே போவார்களாகவும்.
69. யிந்த சாஸனம் எளுதினது பழணியப்ப வாத்தியார் குமாரன் வடமலை
70. வாத்தியார் கையிஎளுத்து.

21. திருச்சிராப்பள்ளிச் செப்பேடு

இருக்கும் இடம்	:	முதலியார் எஸ்டேட், திருச்சிராப்பள்ளி
அரசர்	:	ராசா விசையரகுநாதராய பாதர் தொண்டைமானார் (1789 – 1807)
காலம்	:	3-12-1805
மொழி	:	தமிழ்
அளவு	:	37.5 செ.மீ. × 21 செ.மீ.

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேட்டில் கைப்பிடியின் முன்பக்கத்தில் மேல் பகுதியில் சந்திர சூரியன் வரையப்பட்டுள்ளது. அதன்கீழ் ஒருகையில் குடையும் ஒருகையில் கமண்டலமும் தாங்கிய வாமனாவதார உருவம் வரைகோட்டு ஓவியத்தில் வரையப்பட்டுள்ளது. முதல் பக்கம் நடுப்பகுதியில் ஸ்ரீ ராமஜெயம் என்று தெலுங்கு எழுத்தில் பெரிய அளவில் எழுதப்பட்டுள்ளது. இச் செப்பேட்டைப் பழனியப்ப வாத்தியார் மகன் வடமலை வாத்தியார் எழுதியுள்ளார். இச்செப்பேட்டை மைய அரசு தொல்லியல் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவினர் படி எடுத்துள்ளனர்.[1]

இச் செப்பேட்டைக் கொண்டும், பிற புதுக்கோட்டைச் செப்பேடுகளைக் கொண்டும் இச் செப்பேடு எழுதியவரின் கொடிவழியை எழுதலாம்.

பழனியப்ப வாத்தியார்
↓
ரகுநாத வாத்தியார்
↓
பழனியப்ப வாத்தியார்
↓
ரகுநாத வாத்தியார் — வடமலை வாத்தியார்

1. ARE (A) 2 of 1911.

எல்லாச் செப்பேடுகள் போலவே அரசர்களைப் பற்றிய புகழ் மொழிகளும், சில விசயநகர அரசர்கள் பெயரும் கூறப்பட்டுள்ளன. புதுக்கோட்டைத் தொண்டைமான் வம்சப் புகழ்மொழிகளும் சில கூறப்பட்டுள்ளன.

3-12-1805 அன்று ராசா விசயரகுநாதராய பாதர் தொண்டைமான் அவர்கள் (1789-1807) காலத்தில் தேவனாம்பட்டணம் இருசப்ப முதலியார் பேரனும், கஞ்சமலை முதலியார் அவர்கள் மகனுமாகிய இருசப்ப முதலியார் என்பவர் திருசுரபுரத்தில் (திருச்சிராப்பள்ளி) பாலக்கரைக்குத் தென் பக்கம் இருசப்ப முதலியார் சத்திரம் என்ற பெயரில் 'பிராமணாள் போசனம் முதலாகிய தர்மத்துக்கு' அளித்த கொடையை இச் செப்பேடு கூறுகிறது.

ஓரண்டக்கொடி என்ற ஊர் இருசப்ப முதலியார் அவர்களால் சத்திரத்துக்குக் கொடையாகக் கொடுக்கப்பட்டது. அவ்வூர் கிழக்கே மண்டையூர் எல்லையையும், தெற்கே அவ்வையார்பட்டி தாயுமான ஊரணி தென்கரையையும், மேற்கே செங்களக்கொடி எல்லையையும், வடக்கே அரசு வயலையும் கொண்டிருந்தது.

ஓரண்டக்கொடிக் கிராமத்தைச் சேர்ந்த ஓரண்டக்கொடிக் குளமும் கொடையாக அளிக்கப்பெற்றது. ஓரண்டக்குளத்தில் நன்செயில் 16 அடிக்கோலால் அளந்து 4400 குழி செய் 16 நிலமும், புன்செயில் 16 அடிக்கோலால் அளந்து 32280 குழி விரையடி 64 கலம் 4 மரக்கால் 1 ஆழாக்கு நிலமும்,

சங்குளாகுடிஎலலையில் வாவு புஞ்சையில் 16 அடிக்கோலால் அளந்து 5525 குழி விரையடி 104 கலம் நிலமும்,

அவ்வையார்பட்டியில் (புன்செயில்) 16 அடிக்கோலால் அளந்து 1553 குழி விரையடி 21 கலம் 1 மரக்கால் நிலமும்,

மண்டைஊர் அரசு வயலில் நன்செயில் 16 அடிக்கோலால் அளந்து 3600 குழி செய் 9ம்

ஓரண்டக்கொடியில் நன்செயில் 16 அடிக்கோலால் அளந்து 10000 குழி செய் 25ம், புன்செயில் 16 அடிக்கோலால் அளந்து 48358 குழி

விரையாடி 96 கலம் 5 மரக்கால் 1 ஆழாக்கு நிலமும் வாமனமுத்திரைக்கல் நட்டுக் கொடையாக அளிக்கப்பெற்றது.

இவ்வெல்லைக்குட்பட்ட நன்செய், புன்செய், திட்டு, திடல், நத்தம், படுகை, தோப்பு, துரவு, மாவடை, மரவடை, சொர்னஆதாயம், வகையிருப்பு, இடங்கை வலங்கை, பல சுதந்திரம் முதலான எல்லா வரியும், கீழ்நோக்கிய கிணறும், மேல்நோக்கிய விருட்சமும், சல தரு பாஷாணம் நிதி நிசேஷபமும் சர்வமானியமாகச் சந்திர சூரியர் உள்ளவரை அனுபவிக்கக் கொடையாக அளிக்கப்பட்டது.

இதைக் காப்போர் பெறும் புண்ணியமும், அழிப்போர் அடையும் பாவமும் இறுதியில் கூறப்பட்டுள்ளது.

மூலம்

முதல்பக்கம்

ஸ்ரீராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேஸ்வரன், அரியராயதள விபாட
2. ன், பாஷைக்கு தப்புவராயர கண்டன், மூவராயிர கண்ட
3. ன், கண்டரகண்டன், கண்டையப்பிறதாபன், கட்டாரிச்
4. சாளுவன், கண்டநாடு, கொண்டு கொண்டநாடு கொடா
5. தான், ஒருபரி கொண்டு திரள்பரி வெட்டு முபையகுலோத்து
6. ங்கன், எம்மண்டலங் கொண்டு யீளமுந் திறைகொண்ட
7. ராசாதிராசன், ராசபரமேஸ்வரன், ராசமாற்த்தாண்ட
8. ன், ராசகண்டீரவன், ராசாக்கள் தம்பிரான், கோட்டத்து
9. மன்னியர் கண்டன், சொரிமன்னியர் சூரியன், கெடிமன்னி
10. யர் காலாந்தகன், தொண்டமண்டல ஸ்தாபனாசாரியன், சோ
11. சாழமண்டலப் பிறதிஷ்ட்டாபனாசாரியன், பாண்டிம
12. ண்டலத்து பத்மனாசாரியன், படைகண்டு தத்தளிப்பார்
13. கள் கண்டன், பஞ்சபாணாவதாரன், துலுக்கர்தள விப
14. ாடன் துலுக்கர்மோகந் தவிழ்த்தான், அரியர்தள விபாடன்,
15. அரியர்மோகந் தவிழ்த்தான், தொட்டியர்தள விபாடன், தெ
16. ாட்டியர்மோகந் தவிழ்த்தான், ஒட்டியர்தள விபாடன், ஒ
17. ட்டியர்மோகந் தவிழ்த்தான், தற்க்காற்க்கு தற்க்கன், தற்

18. க்கவினோதன், தண்டுவார்மிண்டன், சண்டப்பிறசண்
19. டன், ஸகல குணாபிராமன். துங்காபிராமன், துர்கரேபந்த
20. ன், சொல்லுக் கரிச்சந்திரன். வில்லுக்கு விசையன், பரிக்கு
21. நகுலன், குடைக்கு கற்னன், பொருமைக்கு தர்ம்மர், பூறுவ
22. தெட்சண பச்சிம உத்தர ஸத்த ஸமுத்திராதிபதி அசுபதி ெ
23. கசபதி தனபதி நரபதி நரவேட்டை கண்டருளிய மம்
24. லிகார்ச்சுன
25. தேவ மகாரா
26. யர், பிறபுடே
27. தவ மகாராயர், ஆனைகுந்திதேவ மகாராயர், விருப்பாச்
28. சிதேவ மகாராயர், கிஷ்ணதேவ மகாராயர், ராமதேவ மக
29. ாராயர், அரிகரதேவ மகாராயர், நரசிங்கதேவ மகாராய
30. ர், புசங்கதேவ மகாராயர், திருமலைதேவ மகாராயர், ஸ்ரீரெ
31. ஙகதேவ மகாராயர் பிறுதிராச்சியம் பண்ணியருளாநி
32. ன்ற சாலிவாஹன சாகார்த்தம் 1727 கலியுக சாக
33. ார்த்தம் 4906 இதின்மேல் செல்லாநின்ற குரோ
34. தன வருஷம் கார்த்திகை மீ 20உ மங்களவாரமும் துவாதெ
35. சியும் அசுபதி நட்செத்திரமும் வரியாநாம யோகமும் பவ
36. கரணமும் ராகத சேயமையில் யிருபடிக்கொத்த சுபதினத்தி
37. ல் ராசராசவளநாடு, ஸ்ரீ ராசேந்திரசோழவளநாடு பண்
38. குளநாடு அன்ம்பில் தெற்குலூரிலிருக்கும் காணியுடை
39. டய அரசர் மக்களில் காசிப கோத்திரத்தில் விளங்கு
40. ம் இந்திரகுல வங்கிஷன் அன்ம்பில்நாடன் தெனாங்
41. கோடியாதிபன் வடகரைப்புலி வாகைமாலை புயனா
42. ன ஸ்ரீமது திருமலைராய தொண்டைமானார் பவுத்தி
43. ர திருமலையப்பராய தொண்டமானார் புத்திர ராசஸ்ரீ ர
44. ாசா விசய ரெகுநாதராய பாதர் தொண்டமானார
45. வர்கள் தேவணாம்பட்டணம் இருசப்பமுதலியார் பவு
46. த்திர கஞ்சமலை முதலியார் புத்திர இருசப்பமுதலியார்
47. திருசுரபுரம் பாலக்கரைக்கி தெட்சண பாரிசம் மேற்படி
48. ார் சத்திரம் தர்மம் பிராமணபோசன முதலாகிய தர்ம
49. த்துக்கு தாம்பிரசாதன பட்டையம் பண்ணிகொடுத்
50. தபடி, ஓரண்டக்கொடி கிராமம் மூலமாக தாராபூருவமாக ச
51. ருவமானியமாக தாம்பிரசாதன பட்டையங் கொடுத்த
52. படி ஓரண்டக்கொடிக்கி யெல்லையாவது கீள்பார்க்கெல்லை

53. யாவது மண்டையூர் யெல்லைக்கி மேற்க்கு தென்ம்பார்க்கெ
54. கல்லையாவது அவயார்பட்டி தாயுமானஊரணி தெ
55. ங்கரைக்கி வடக்கு மேல்பார்க்கெல்லையாவது செங்க
56. ளக்கொடி யெல்லைக்கி கிளக்கு வடபார்க்கெல்லையாவது
57. அரசுவயலுக்கு தெற்க்கு இந்த பரிநாங்கெல்லைக்கு உள்
58. ப்பட்ட ஓரண்டக்கொடி கிராமத்தைச் சேந்தது ஓரண்டக்குளம்
59. ஒண்ணுக்கு நஞ்சை 16 அடிக்கோலால் குளி 4400க்கு
60. செயி 16 புஞ்சை 16 அடிக்கோலால் குளி 322
61. 80க்கு விரையடி 64 கலம், 4 மரக்கால் 1 ஆழாக்கு மேற்படி பிரகாரமத்தில் (சே)சத்
62. துக்குடுத்தது சங்குளாகுடியெல்லையில் வாவு புஞ்ை
63. சயில் 16 அடிக்கோலால் குளி 5525க்கு விை
64. ரயடிய் 104ம், மேற்படி அவயார்ப்பட்டியில்ச் சேத்துக் குடுத்தது
65. 16 அடிக்கோலால் குளிய் 1553க்கு விரை அடி 21
66. கலம் 1 மரக்கால், மேற்படி மண்டைஊர் அரசுவயலில் விட்டுக் கொடுத்தது நஞ்
67. சை 16 அடிக்கோலால் குளி 3600க்கு செயி 9, ஓர
68. ண்டக்கொடியில் சேத்நது 16 அடிக்கோலால் குளி 10000க்கு
69. செயி 25 புஞ்சை 16 அடிக்கோலால் குளி 483
70. 58க்கு விரையடி 96 கலம் 5 மரக்கால் 1 ஆழாக்கு இந்த பரினாங்கெல்லை வாமன
71. முத்திரைகல்லுக் குள்பட்ட நஞ்சை புஞ்சை திட்டுத் திடல் நத்தம் படு
72. கை தோப்புத் துரவு மாவடை மறவடை சொற்ன்னஆதா
73. யம் வகையிருப்பு இடங்கை வலங்கை பலசுவந்திரம் இ
74. துமுதலான எப்பேர்ப்பட்டவரியும் கீழ்நோக்கிய கிண
75. ரும் மேல்நோக்கிய விருஷ்ஷமும் சல தரு பாஷாணம் நி
76. தி நிஷ்ஷேப சருவமானியமாக தாராபூருவமாக தாம்பர ச
77. ாதன பட்டையம் குடுத்தபடியினாலே சந்திராதித்தாள் உள்
78. ளவரைக்கும் எங்கள் புத்திர பௌத்திர பாரம்பரைய்யமாகவு
79. ம் தங்கள் சந்ததி பாரம்பரயமாகவும் அநுபவித்துக்கொண்டு
80. தர்மத்தை உத்திரகோத்திரமாக நடத்திவச்சிக்கொண்டு சுகத்திலே
81. இருக்கக் கடவார்களாகவும். இந்த தர்மத்துக்கு வாக்குசகாயம் சரீர
82. சகாய அர்த்தசகாயம் பண்ணினபேர்கள் காசியிலே கங்கை
83. க் கரையலே கோடி சிவலிங்கப்பிரதிஷ்ட்டை பண்ணின பல

84. னையடைவார்களாகவும். இந்த தர்ம்மத்துக்கு அகிதம் பண்ணி
85. னபேர்கள் கெங்கைக்கரையிலே அநேகம் கோஅத்தி பண்
86. ணின தோஷத்திலே போவார்களாகவும். இந்த பட்டையம் எ
87. ழுதினது பளணிப்பவாத்தியார் குமாரன் வடமலை வா
88. த்தியார் கையிஎழுத்து.

22. தூவூர்ச் செப்பேடு

இருக்கும் இடம் :		**அரசு அருங்காட்சியகம், திருக்கோகர்ணம், புதுக்கோட்டை**
அரசர்	**:**	**ராச விசயரகுநாதராய பாதர் தொண்டைமானார் (1789 – 1807)**
மொழி	**:**	**தமிழ் (கிரந்தச் சுலோகங்களுடன்)**
அளவு	**:**	**40 செ.மீ. × 23.5 செ.மீ.**

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு ஒரு செப்பேட்டின் பிற்பகுதியாகும். முற்பகுதியில் அரசர் பெயரும் சத்திரம் கட்டி வைத்த செய்தியும் இருந்திருக்க வேண்டும். அப்பகுதி கிடைக்கவில்லை. கைப்பிடியில் துளைக்கு மேல்பகுதி உடைந்துள்ளது. வாமனாவதார உருவத்தின் கழுத்தின் கீழ்ப்பகுதி மட்டும் உள்ளது. பிள்ளையார் சுழியுடன் இப்பகுதி தொடங்குகிறது.

ஏனைய அமைப்புக்களை வைத்தும், கைப்பிடி வரைகோட்டு ஓவியத்தைக்கொண்டும் இச் செப்பேடு ராசா விசயரகுநாதராய பாதர் தொண்டைமானார் காலத்தைச் சேர்ந்தது என்று கொள்ளப்பட்டது. இச் செப்பேட்டை மைய அரசு தொல்லியல் அளவீட்டுத்துறையின் கல்வெட்டுப் பிரிவினர் படி எடுத்துள்ளனர்.[1]

சத்திரத்திற்கு அளிக்கப்பெற்ற 50 உருப்படிகளில் 35 மட்டும் இப்பகுதியில் உள்ளது. ஏனைய 15 உருப்படிகள் முன்பகுதியில் இருக்கவேண்டும்.

நூறு பசுமாடுகளும், முன்னூறு ஆடுகளும் சத்திரத்திற்குக்

1. ARE (A) 20 of 1950

கொடுக்கப்பட்ட செய்தியும் கூறப்பட்டுள்ளது. நார்த்தாமலைச் சீமையிலும், புதுக்கோட்டைச் சீமையிலும் சூரியகிரகண காலத்தில் தூவூரில் அய்யவாரய்யன் அவர்கள் கையில் குறுணி நிலம் கொடையாக அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது. கடம்பவனஈசுவரர், பெரியநாயகியம்மன், மாதுருபூதேசுவரர், அரங்கநாயகர், வரதராசப்பெருமாள் இவர்கள் சாட்சியாகக் கொடை என்றென்றும் நின்று நிலைக்கவேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது.

இறுதிப்பகுதியில் கொடைகளைக் காப்பதால் வரும் புண்ணியத்தைக் கூறும் வடமொழிச் சுலோகங்கள் கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன.

மூலம்

1. உ னச்சருவம் னாலு, பித்தளைச்சருவம்
2. ஒண்ணு, செப்புச்சருவம் ரெண்டு, பெ
3. ரிய வெங்கலப்பானை ரெண்டு, இட்டு
4. வட்டி னாலு, பித்தளைச்சொம்பு அஞ்சு,
5. செப்புச்சொம்பு அஞ்சு, கறண்டி நாலு, செப்
6. புக்கொடம் னாலு, சந்தணக்கிண்ணி
7. கமலம் விளக்குத்தாளி உருப்படி னா
8. லு ஆக உருப்படி 50க்கு படி
9. பசுமாடு னூறு ஆடு முன்னூறு இந்தபடிக்கு
10. கல்லும் காவேரியும் புல்லும் பூமியும்
11. யுன்றாந மட்டுக்கும் னாறுத்தாமலைச் சீமை செ
12. யிக் குறுணியும் புதுக்கோட்டை சீமைக்கு
13. றுணியும் ஸுர்யோபராக புண்ணிய காலத்
14. திலே தூவூரில் அய்யவாரய்யன் கய்யிலே
15. தாரபூருவமாக கடம்பவன யீசுரரும் பெரியனா
16. யகி அம்மனும் மாதுருபூதேசுரர் ரெங்கனாயகர்
17. வரதராசப் பெருமாள் யிவர்கள் சாச்சியாக யிந்த
18. தறுமத்தை சந்திரா சூரியாள் யுள்ளமட்டும் ப
19. ரிபாலனம் பண்ணிக்கொண்டு வர சொல்
20. லி குடுத்தோம் யிந்த தற்மத்துக்கு யாதாமொருவர்
21. விகாதம் பண்ணுறார்களோ அவர்கள் காசிலே

22. கெங்கை கரயிலே காராம் பசுவை கொண்
23. ண தோசத்திலே போககடவோராகவும் யிந்
24. த தற்மம் யாதாமொருதர் பரிபாலநம் பண்
25. ணுறாகளோ அவர்களுக்கு அசுவமேத யாக ப
26. லமும் கெங்காஸ்நாந பலமும் அடயகடவோரா
27. கவும் தாந பாலநை யோமயே தாநா ஸ்ரயோ
28 நு பாலநம் தாநாத் ஸ்வர்க்க மவாப்நோதி பாலா
29. நாதச்சுதம் பதம்: ஸ்வதத்தாவி குணம் புண்யம்
30. பரதத்தாநு பாலநம் பரதத்தாப ஹரேண
31. ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது. எ கைவ பஹிநி பே
32. லாகே சர்வேஷா மேவ பூவுஜாம் நகோஜ்யா நக
33. ர ராஹ்யா விப்ர தத்தா வஸுந்தரா.

23. சிங்கத்தாகுறிச்சிச் செப்பேடு

இருக்கும் இடம்	:	**புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், மண்டையூர் சிங்கத்தாகுறிச்சி சஞ்சீவிராயர் கோயில்**
அரசர்	:	**விசைய ரகுநாத ராயத் தொண்டைமான்**
காலம்	:	**1804, ரத்தாட்சி ஐப்பசி, 8ஆம் தேதி**
மொழி	:	**தமிழ்**

அமைப்பும் செய்தியும்

விசயநகர அரசர் சிறப்புக்களுடன் புதுக்கோட்டை மன்னர் பெருமைகளும் கூறப்பட்டுள்ள வழக்கமான செப்பேடுபோல் இது அமைந்துள்ளது. சஞ்சீவிராயர் சுவாமிகோயில் நித்தப்படிக் கட்டளைக்கும், திருப்பணி, அபிசேகம், நெய்வேத்தியம், அன்னதானம் ஆகியவற்றிற்கும் குளத்தூர்ச் சீமை ராசிபுரம் சேர்க்கையில் உள்ள பீடம்பட்டி என்னும் ஊர் சருவமானியமாக அளிக்கப்பட்ட விபரத்தை இந்தச் செப்பேடு கூறுகிறது.

கொடையளிக்கப்பட்ட ஊருக்கு மிகவும் விரிவாக எல்லைகள் கூறப்படுகின்றன. இந்தச் செப்பேட்டை எழுதியவர் பழனியப்ப வாத்தியார் மகன் வடமலை வாத்தியார் என்பவர் ஆவர். இச்செப்பேட்டை விராலிமலை இரா. இராமமூர்த்தி, மேலப்பனையூர் கரு. இராசேந்திரன்

ஆகியோர் படி எடுத்துத் தமிழகத் தொல்லியல் கழக ஆவணம் இதழ் மூன்றில் பதிப்பித்துள்ளனர். (பக். 48 – 51 ; 1993 சூலை).

மூலம்

முதல் பக்கம்

1. உ ஸ்வஸ்திஸ்ரீ மன் மகாமண்ட லேசுவரன், அரியராய தளவிபாட
2. ன், பாஷைக்கு தப்புவராயர் கண்டன், மூவராயர் கண்டன்,
3. கண்டர் கண்டன் கண்டைய பிறதாபன், கட்டாரிச் சாளுவ
4. ன், கண்டநாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான், ஒருபரி கொ
5. ண்டு திரள்பரி வெட்டு முபைய குலோத்துங்கன், எம்மண்ட
6. லங்கொண்டு யீளமுந் திறைகொண்ட ராசாதிராசன், ராசபர
7. மேசுவரன், ராசமாத்தாண்டன், ராசகண்டீரவன், ராசாக்கள்
8. தம்பிரான், கோட்டத்து மன்னியர் கண்டன், சொரிமன்னிய
9. ர் சூரியன் கெடிமன்னியர் காலாந்தகன், தொண்டமண்டல
10. ஸ்தாபனாசாரியன், சோழமண்டலப் பிறதிஷ்டாபனாசாரியன்
11. பாண்டிமண்டலத்து பத்மனாசாரியன் படைகண்டு தத்தளிப்பார்
12. கள் கண்டன் பஞ்சபாணாவதாரன் துலுக்கர்தள விபாடன்
13. துலுக்கர்மோகந் தவிழ்த்தான், அரியர்தள விபாடன் அரியர் மோ
14. கந் தவிழ்த்தான், தொட்டியர்தள விபாடன், தொட்டியர் மோ
15. கந் தவிழ்த்தான், ஒட்டியர்தள விபாடன், ஒட்டியர்மோகந் தவி
16. ழ்த்தான் தற்க்காற்கு தற்க்கன் தற்க்கவிநோதன் தண்டுவார் மி
17. ண்டன் சண்டப்பிரசண்டன் ஸகலகுணாபிராமன் துங்கா
18. பிராமன் துர்கரேபந்தன், சொல்லுக் கரிச்சந்திரன் வில்லு
19. க்கு விசையன் பரிக்கு நகுலன், குடைக்கு கற்னன், பொறுமை
20. க்கு தற்மர், பூறுவ தெட்சண பச்சிம உத்தர ஸத்த ஸமுத்தி
21. ராதிபதி அசுபதி கெசபதி தனபதி நரபதி நரவேட்டை கண்ட
22. ருளிய மல்லிகார்ச்சுனதேவ மகாராயர், பிறபுடதேவ மகா
23. ராயர், ஆனைகுந்திதேவ மகாராயர், விருப்பாச்சிதேவ மகா
24. ராயர், கிஷ்ணதேவ மகாராயர், ராமதேவ மகாராயர் ரெங்
25. கதேவ ம
26. காராயர்
27. பிறுதிவி
28. ராச்சிய

29. ம் பண்ணியருளா நின்ற சாலிவாகன சாகார்த்தம் 1726
30. கலியுக சகார்த்தம் 4905 யிதின்மேல் செல்லாநின்ற
31. ரத்தாட்சி வருஷம் அர்ப்பிசி மீ 8உ செதுர்த்தி சோமவாரமும் ரோ
32. கினி நட்சத்திரமும் வயித்திரிதிநாம யோகமும் பாலவா
33. கறணமும் இப்படிக்கொத்த சுபதினத்தில் ராசராசவளநா
34. டு ராசேந்திரசோழ வளநாடு பண்டிசூள்நாடு அன்ம்பில் தெ
35. ற்க்குலூரிலிருக்கும் காணியுடைய அரசர்மக்களில் இந்திரகு
36. ல வங்குஷன் தென்கோடியாதிபன், வடகரைப்புலி, வாகை
37. மாலை புயனான காசிப கோத்திரத்தில் விளங்கும் ஸ்ரீமது
38. திருமலைராய தொண்டமானார் பவுத்திரன், திருமலையப்ப
39. ராய தொண்டமானார் புத்திரன் ராச ராசவிசை ரெகுணாத ரா
40. ய பாதர்த் தொண்டமானார்ரவர்கள் சஞ்சீவிராயசுவாமி
41. கோவில் நித்தப் படிக்கட்டளைப் பூசைக்கும் திருப்பணி
42. அபிஷேகம் நெயிவேத்தியம் அன்னதான முதலாகிய தற்
43. மங்களுக்கு குளத்தூர்ச் சீமையில் ராசிபுரம்ஞ் சேறக்கை
44. யில் பீடம்பட்டி கிராம மூலமாக தாம்பிரசாதன பட்டயம் பண்ணி
45. கொடுத்தபடி தாம்பிரசாதனமாவது பீடம்பட்டி நஞ்சை
46. புஞ்சை யெல்லைக்கி விபரம் கீள்பார்க்கெல்லை யீசா
47. னிய மூலையில் ராசிபுரம் ஈசுரன்கோவில் கட்டுக்கரை
48. கடவயலுக்கு மேற்க்கு, யிதின் தெற்க்கு மேற்படி கட்டுக்கரை

இரண்டாம் பக்கம்

49. கொள்வாயி மேல்மூலை ராயப்புடையான் கட்டுக்கரை மேல்வரப்பு
50. க்கு வடக்கு மூலைக்கு மேறக்கு யிதின் தெற்கு
அய்யான்ங்குட்டி பு
51. ஞ்சை தெற்க்கி மூலைக்கு மேறக்கு, தென்ம்பார்க் கெல்லையாவ
52. து சிங்கத்தாகுறிச்சி எல்லைக்கு வடக்கு பறையன்புஞ்சை
53. தெற்க்கு பொளிக்கு வடக்கு யிதின் மேறக்கு வேப்படி புஞ்சைக்கு
54. தெற்க்கு பொளிக்கு வடக்கு யிதின்வடக்கு சிங்கத்தாகுறிச்
55. சி மூறானாயக்கன் புஞ்சை கீள்ப் பொளிக்கு கௌக்கு யிதின் மேற
56. க்கு சிங்கத்தாகுறிச்சி போறசு அடிப்புஞ்சை கீள்ப் பொளிக்கி
57. கௌக்கு யிதின்வடக்கு பீடம்பட்டி புதுக்கொளத்து மேல்கலி
58. ங்கிக்கு கௌக்கு யிதின் வடமேற்க்கு திருமலை சமுத்திரம்
59. யெல்லைக்கி கெழக்கு நல்லபெருமாள் புஞ்சை மேல்பொளிக்கி

60. கெளக்கு யிதின் வடக்கு திருமலைசமுத்திரம் யெல்லைக்கி கெழக்
61. கு குமாறமங்கலத்து யெல்லைக்கி தெற்க்கு யிதின்வட கெழக்கு
62. வடபார்க்கெல்லை கோவில்புஞ்சை வடக்கு பொழிக்கு தெற்க்கு யி
63. தின் கெழக்கு மேற்படி புஞ்சை ஈசானியமூலை யிதின் தெற்கு பாலைய
64. டி புஞ்சை வடக்கி பொளிக்கு தெற்க்கு யிதின் தென்ங் கெழக்கு
65. குமாறமங்கலத்து யெல்லைக்கி தெற்க்கு முருகன் கட்டுக்க
66. ரை ஈசானியமூலைக்கி மேற்க்கு யிந்த நான்ங்கெல்லையும்
67. வீர அனுமார் முத்திரைக் கல்லுக்குள்பட்ட நஞ்சைபுஞ்சை
68. திட்டுத்திடல் நத்தம் படுகை தோப்புத்துரவு மாவடை மரவடை
69. சொற்னாதாயம் வகையறுப்பு யிடங்கை வலங்கை பலசுவந்தி
70. ரம் யிதுமுதலான யெப்பேர்ப்பட்ட வரியுங் கீழ்நோக்கிய கிண
71. றும் மேல்நோக்கிய விருச்சமும் செல தரு பாஷாணம் நிதி நிட்
72. சேபம் சறுவமானியமாக தாராபூறுவமாக தாம்புர சாதனப் ப
73. ட்டையம் வெங்கிடதாசரி பாரிசமாக கொடுத்தபடியினா
74. லே யிந்த தற்மம் சந்திராதித்தியாளுள்ள வரைக்கும் பில்லும்
75. பூமியும் கல்லும் காவேரியும் உள்ளவரைக்கும் தற்மத்தை ந
76. டப்பிவிச்சுக் கொண்டு தற்மத்தை உத்திரோத்தமாக ந
77. டப்பிவச்சுக்கொண்டு சுகத்திலேயிருக்க கடவாறாகவும். யிந்த
78. தற்மத்துக்கு வாக்கு சகாயம் சரீர சகாயம் அர்த்த சகாயம்
79. பண்ணினபோர்கள் காசியிலே கங்கைக் கரையில் கோடி சிவ
80. லிங்கபிரதிஷ்டை பண்ணின பலனை அடைவார்களாகவும்
81. யிந்த தற்மத்துக்கு அகிதம் பண்ணினபேறகள் கெங்கைக்கரை
82. யிலே கோடி காராம்பசுவை கொண்ண தோஷத்திலே
83. போவார்களாகவும் யிந்த சாஸனம் யெளுதினது பழணியப்ப வாத்தி
84. யார் குமாரன் வடமலை வாத்தியார் கையெளுத்து உ.

24. நாஞ்சியூர்ச் செப்பேடு

இருக்கும் இடம்	:	புதுக்கோட்டை மாவட்டம், நாஞ்சியூர்.
அரசர்	:	விஜய ரங்க சொக்கநாத ராமசாமித் தொண்டைமான்
காலம்	:	கி.பி. 1734, ஆனந்த வருஷம் சித்திரை மாதம் 26–ஆம் தேதி

மொழி : தமிழ்
அளவு : 55 செ.மீ. × 27 செ.மீ.

அமைப்பும் செய்தியும்

செப்பேட்டின் தலைப்புப் பகுதியில் வாமனாவதார உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. நாஞ்சியூர் என்ற ஊருக்குப் புதுக்கோட்டை மன்னர் பரம்பரையில் முதல்வர் ஒருவரின் பெயரால் நமணராய சமுத்திரம் என்று பெயரிட்டு 50 வீடுகள் ஏற்படுத்தி அக்கிரகாரம் ஆக்கி 50 பிராமணர்கட்குப் பிரித்துக் கொடுத்ததை இச்செப்பேடு மிகவும் விரிவாகக் கூறுகிறது.

50 பங்குக்கு உரிய பல்வேறு நிலைகளிலுள்ள பிராமணர்கள் பெயர் கூறப்பட்டுள்ளன. ஸ்ரீராமஜெயம் என்று தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மன்னர் பரம்பரையில் இப்பெயருடைய மன்னர் எவரும் குறிக்கப் பெறவில்லை. மதுரை நாயக்கர் ஆதரவில் அதிகாரம் செலுத்திய புதுக்கோட்டை மன்னர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவராக இவர் இருக்கலாம்.

இச்செப்பேட்டை கி.ஸ்ரீதரன் அவர்கள் படி எடுத்து ஆவணம் இதழ் 13 இல் (20[illegible]லை) அச்சிட்டுள்ளார். (பக். 91–94).

மூலம்

ஸ்ரீராம ஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீ மகாமண்டலே
2. ஸ்வரன். அரிய விபாடன், பாஷை
3. க்குத் தப்புவராய கண்டன். மூவராய கண்டன்.
4. கண்டர் கண்டன். கண்டையப் பிறதாபன். கட்டாரி
5. ச் சாளுவன். கண்டநாடு கொண்டு கொண்டநாடு
6. கொடாதான். ஒருபரி கொண்டு திரள்பரி வெட்டு முடை
7. ய குலோத்துங்கன். எமமண்டலமும் கொண்டு மீழமு
8. ந் திறைகொண்ட ராசாதிராசன். ராசமாற்றத்தான்
9. டன். ராசகண்டீரவன். கோட்டத்து மன்னியர்கள். சொரிமன்னிய

10. ரவன், கெடிமன்னியர் காலாந்தகன், தொண்டைமண்டல ஸ்
11. தாபனாச்சாரியன், சோழமண்டல பிரதிஷ்டாபனாச் சாரியன்
12. பாண்டிமண்டலத்து பிரதிஷ்டாபனாச்சாரியன், மறுமன்னி
13. யர் கோடரி, குறுமன்னியர் கோளரி, ஒட்டியர்தள
14. விபாடன், ஒட்டியர் மோகந் தவிழ்த்தான், துலுக்கர் மோகந் தவிழ்த்தான், ப
15. டைகண்டு தத்தளிப்பார்கள் மிண்டன், பஞ்ச ப
16. ரணாவதாரன், தற்காற்குத் தற்கன், தற்கவிநே
17. ாதன், தண்டுவார் மிண்டன், சண்டப்பிறசண்டன், பூறு
18. வ தெட்சண பச்சிம உத்தர சத்த சமுத்திராதிபதி, அசு
19. பதி கெசபதி, நரவேட்டை கண்டருளிய மல்லிகா
20. ர்ச்சுனதேவ மகாராயர், பிறபுடதேவ மகாராயர், ஆ
21. னைகுந்திதேவ மகாராயர், கிஷ்ணதேவ மகாராயர்,
22. ராமதேவ மகாராயர், விருப்பாச்சிதேவ மகா
23. ராயர், சீரங்கதேவ மகாராயர் பிறுதிவி ரா
24. ச்சியம் பண்ணியருளாநின்ற சாலியவாக
25. ன சகாப்தம் 1656 மேல் செல்
26. லாநின்ற ஆனந்த வருஷம் சித்திரைமீ 26 அட்சய தி
27. றிதிகையும் புதன்கிழமையும் ரோகணி நட்சத்திரமும் கூ
28. டின சுபதினத்திலே ராசராச வளநாடு ராசேந்திர சோ
29. ழவளநாடு பன்றிசூழ்நாடு அன்பில் தெற்குலூரிலிருக்கும்
30. யிந்திரகுல குலோத்பவரான காணியுடைய அரையர்மக்க
31. ளில் ராயரால் பேர்பெற்ற ஸ்ரீமது ராய தொண்டைமானார் பே
32. ரனார் ராய ஸ்ரீரெங்க கிஷ்ண முத்துவீரன் மன்ன தொண்டைமானா
33. ர் குமாரனான ஸ்ரீவிசையரெங்க சொக்கநாத ராமசு
34. வாமித் தொண்டைமானார் அக்கிரகார தானசாசனம் பண்
35. ணிக் குடுத்தபடி, நம்முடன் கெப்பனாசி ரெங்ககிஷ்ண முத்துவீர மன்
36. ன தொண்டமானார் பேரிலே சொல்ல நமக்கு சொந்தமாக நடக்
37. கிற நாறுத்தாமலைச் சீமையில் சேறுவாசி நாட்டில் விள
38. ங்கும் நாஞ்சியூரை நமணராய சமுத்திரமென்று பிறதி நா
39. மமாகப் பண்ணித் தேவதாயமுட்படப் பங்கு 50 மனை 50
40. சகிரண்யோதக தாராபூருவமாகக் குடுத்தபடியினாலே யிந்த
41. நாஞ்சியூர் நஞ்சை புஞ்சை நான்கெல்லைக்குட்பட்ட மாவலை

42. ட கோசஞ்சார பூமிசல மாறாக பூமி நிதி நிக்ஷேப ஜல
43. தரு பாஷாண அக்ஷிணி ஆகாமி சித்தசாத்திய அஷ்டபோக
44. சுவாமியங்களும் சறுவமானியமாக புத்திரபவுத்திர பார
45. ம்பரியமாக ஆசந்திரார்க்கமாக தானாதி விற்கிறய வினிம
46. யோக்கியமாக அனுபவித்துக் கொள்ளவும். யிந்தப் பங்
47. கு 50க்கும் பாகை விபரம்
48. நமணராய சமுத்திரம் கினசங்கை பங்கு 50 பேருவழி
49. வாத்தியார் வைத்திய அய்யர் பங்கு1
50. உதையாத்திரி வாத்தியார் பங்கு1
51. விசுபதி வாத்தியார் பங்கு1
52. ரெங்கய்யன்மார் பங்கு1
53. புரோகித வைத்திய அய்யன் பங்கு1
54. சீத்தாராம அய்யன் பங்கு1
55. கோகருண்ண சாத்திரியார் பங்கு1
56. அய்யப்பரசய்யன் பங்கு1
57. வெங்கிட்டராயர் ரெங்கய்யங்கார் பங்கு1
58. ஆதிநாராயணய்யன் பங்கு1
59. திருமலையராமய்யன் பங்கு1
60. ராயசம் ரெங்கய்யன் பங்கு1
61. ராமய்யங்கார் பங்கு1
62. ஆந்தை ரெங்கய்யன் பங்கு1
63. தினசேரி ராமசாமியய்யன் பங்கு1
64. சீட்டு நாரப்பய்யன் பங்கு1
65. காந்தபதானி சுப்பய்யன் பங்கு1
66. வெசிர வெங்கிட்டாரய்யன் பங்கு1
67. ரம பிங்கய்யன் பங்கு1
68. வீணை அய்யவாரய்யன் பங்கு1
69. திருவமுடையார் பாஷராயர் பங்கு1
70. வெங்கிட்ட நரசிங்கய்யன் பங்கு1
71. தனுக்கோடி அய்யன் பங்கு1
72. பூசை ரெங்கய்யன் பங்கு1
73. தேவதாயம் பங்கு1
74. ராமச்சந்திரய்யர் பங்கு1
75. வெங்கிட்டய்யர் பங்கு1
76. நத்தம் சீனிவாசய்யர் பங்கு1

77. தன்மாச்சாரியர் பங்கு1
78. குப்பா பட்டாச்சாரி பங்கு1
79. சோணாத்திரி சாத்திரியார் பங்கு1
80. சின்ன கிஷ்ணய்யங்கார் பங்கு1
81. சிங்காச்சாரியார் பங்கு1
82. வெங்கடாசலய்யன் பங்கு1
83. கோபாலசாமி அய்யன் பங்கு1
84. அழகிரி அய்யன் பங்கு1
85. சூரிய நாராயண அய்யன் பங்கு1
86. தச்சாணி ராமய்யன் பங்கு1
87. வேங்கை வெங்கிட்டய்ய நாராயணன் பங்கு1
88. சீட்டு வெங்கடாசலமைய்யன் பங்கு1
89. ராணுவ நாராயய்யன் பங்கு1
90. ராமா பண்டிதரய்யன் பங்கு1
91. துக்கைபூசை ராயரங்கய்யன் பங்கு1
92. பூசை சேஷகிரி நாரண பட்டன் பங்கு1
93. ராயபுரம் தருமி அய்யன் பங்கு1
94. சுப்பய்யர் பாகவதர் பங்கு1
95. புல்லதரு வேங்கடசாமி பங்கு1
96. பூசை முத்தய்யன் பங்கு1
97. ரெங்கபோகிய்யன் பங்கு1
98. ஆகக் கிணசங்கை பங்கு 50
99. தான பாலன யோர்மத்யே தானா ச்ரயோனு பாலனம்
100. தானாத் ஸ்வர்க்க மவாப்நோதி பாலநாத் அச்சுதம் பதம்:
101. ஸ்வத்தாம பரதத்தாம் வா பூமிம் விப்ரஸ்ய யோகரேத்
102. ஷஷ்டி வர்ஷ ஸஹஸ்ராணி விஷ்ட்டாயாம் ஜாயதே க்ருமி:
103. இந்த தர்மத்துக்கு யாதாமொருவன்
104. விகாதம் பண்ணுகி
105. றான் அவன் கெங்கைக் கரையிலே நல்ல பிராமண
106. னையும் பசுவையும் கொன்ற தோஷத்தி
107. லே போவான்.

1. திருப்பெருந்துறைச் செப்பேடு I

இருக்கும் இடம்	:	திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்.
அரசர்	:	இரண்டாம் மாறவர்மன் குலசேகரபாண்டியன் – (உய்யவந்தான் திருநோக்கழகியார் தொண்டைமானார்)
காலம்	:	2-2-1327
மொழி	:	தமிழ்
அளவு	:	32 செ.மீ. × 9 செ.மீ.

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு நீள்சதுர வடிவில் கைப்பிடியும், துளையும் இன்றி முற்காலப் பாண்டியர் செப்பேட்டு அமைப்பில் உள்ளது. இது ஒரு கல்வெட்டின் படியாகவே தோன்றுகிறது. ஒரு செப்பேட்டின் இடையில் ஆறாவது வரியின் நடுவே தொடங்குகிறது. எழுத்துக்கள் 17ஆம் நூற்றாண்டு எழுத்துக்கள் போல் உள்ளன.

இரண்டாம் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் (கி.பி.1314 – 1362) பதினான்காம் ஆட்சியாண்டில் மிழலைக்கூற்றம் கீழ்க்கூறு மஞ்சக்குடியுடையான் உய்யவந்தான் திருநோக்கழகியார் தொண்டைமானார் என்பவர் திருப்பெருந்துறை ஆளுடைய தம்பிரானார்கோயில் தேவகம்மிகள் வசம் அளித்த ஒரு கொடையை இச் செப்பேடு விளக்குகிறது.

இவர் அறந்தாங்கி அரசு தொண்டைமானார் மரபில் ஒரு பிரிவினர் போலும்.

திருப்பெருந்துறைக் கோயிலில் திருஅந்திக்காப்பு, திருவிளக்கு, அமுதுபடி, கறியமுது முதலியவைகளை நாள்தோறும் அளிப்பதற்கும், மாதாமாதம் திருநோக்கழகியார் தொண்டைமானாரின் பிறந்தநாளான சுவாதிநாள் அன்று திருவாதவூராகிய மாணிக்கவாசகரை எழுந்தருளச் செய்யவும், அவருக்குமுன் திருவாசகம் ஓதிச் செல்லவும் ஏயூர்மங்கலம் என்ற ஊர் தொண்டைமானாரால் கொடையாக அளிக்கப்பெற்றது. அவ்வூர் வடவெள்ளாறான சுந்தரபாண்டிய வளநாட்டில் உள்ளதென்றும், தொண்டைமானார் உரிமையாகக் கொண்டு அனுபவித்து வருகிற ஊர் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளலாம் என்றும் சம்மதித்துப் பிடிபாடுபண்ணிக் கொடுத்தோம் என்றும் கூறப்பட்டு இறுதியில் தொண்டைமானார் எழுத்து அம்பலக்காரர் எழுத்து என இச்செப்பேடு முடிகிறது.

இக் குலசேகர பாண்டியனின் கல்வெட்டுக்கள் தஞ்சை, திருச்சி மாவட்டப் பகுதிகளில் கிடைக்கின்றன. தஞ்சை மாவட்டம், நன்னிலம் வட்டம் திருமீயச்சூர்க் கல்வெட்டில் தில்லைநாயகன் தொண்டைமான் உடையான் என்பவன் குறிக்கப்பெறுகின்றான்.[1]

மூலம்

1. ஸ்வஸ்திஸ்ரீ கோ மாறபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள்
ஸ்ரீகுலசேகர தேவற்க்கு யாண்டு பதின்னா
2. லாவது கும்பநாயற்று பூர்வபக்கத்து நவமியும்
சோமவாரமும் பெற்ற ரோகணிநாள் மிழலைக் கூ
3. ற்றத்து பிரம்மதேசம் தனியூர் திருப்பெருந்துறையான
பவுத்திர மாணிக்க சதுர்வேதி மங்கல
4. த்து ஆளுடைய தம்பிரானார் தேவகம்மிகளுக்கு கீழ்க்கூற்று
மஞ்சக்குடி யுடையான் உய்யவ
5. ந்தான் திருநோக்கழகியார் தொண்டைமானேன்
இற்றைநாள் பிடிபாடு பண்ணிக்கு
6. டுத்த பரிசாவது ஆளுடைய தம்பிரானார்க்குத் தலத்தில்
திருவந்திக் காப்புத் திருவிளக்கு அமுதுபடி
7. கரியமுது வேண்டும் நித்ய நிமன்தகளுக்கும் இக்கோயிலில்
திருவாதவூரரை என் பிறந்த நா
8. ள் மாதாமாதம் யித்தீவத்துநாள் எழுந்தருளபண்ணவும்
திருமுன்பு திருவாசகமு ஓதி நிச்செயி
9. த்த நியமத்துக்கும் தானமாக குடுத்த ஊராவது
வடவெள்ளாறான சுந்திர பாண்டிய வழனாட்
10. டு நான் கொண்டு அனுபவித்து வருகிற ஏயூர்மங்கலம்
காராண்மையாகக் குடுத்தவூரில் சதுசீமை
11. யில் எப்பேற்பட்ட சர்வமும் சர்வ மாந்யமாக
சந்திராதித்யவற்ச் செல்ல கல்லிலும் செம்பிலும்
12. வெட்டிக் கொள்ளவும் இப்ப(டி) சம்மதித்து பி(டி)பாடு
பண்ணிக்குடுத்தேன் ஆளுடைய பரமசாமி

1. தெ.இ.க. தொகுதி 8 எண் 243, 244.

13. தேவ கம்மிகளுக்குத் தொண்டைமானேன் இப்படிக்கு திருநோக்கழகியரான தொண்டைமா
14. ன்னார் எழுத்து. அம்பலக்கா(ர)ர் எழுத்து.

2. பிள்ளைவயல் செப்பேடு

இருக்கும் இடம்	:	திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்.
அரசர்	:	மாறவர்மன் பாண்டியதேவன், சூரியதேவர்த் தொண்டைமானார்
காலம்	:	ஆட்சியாண்டு 58
மொழி	:	தமிழ்
அளவு	:	32 செ.மீ. × 9 செ.மீ.

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு நீள்சதுர வடிவில் கைப்பிடியும், துளையும் இன்றி முற்காலப் பாண்டியர் செப்பேட்டு அமைப்பில் உள்ளது. இதுவும் ஒரு கல்வெட்டின் படியாகவே தோன்றுகிறது. ஒரு செப்பேட்டின் இடையில் தொடங்கி அடுத்த ஏட்டின் இடையில் முடிகிறது.

மாறவர்மன் பாண்டிய தேவனின் 58ஆம் ஆட்சியாண்டில் வடவெள்ளாறான சுந்தரபாண்டிய வளநாட்டு இளங் கோனாட்டு அறந்தாங்கி அரசு சூரியதேவர்த் தொண்டைமானார் அவருடைய தர்மமாக சதயநாள் முதல் திருவாதிரைநாள் வரைக்கும் பத்துநாட்கள் திருநாள் செலவுக்கு அறந்தாங்கி அரசு பற்றில் உள்ள பிள்ளைவயல் என்னும் பகுதியைத் திருப்பெருந்துறைக்குத் திருநாமத்துக்காணியாக அளித்ததை இச்செப்பேடு கூறுகிறது.

பிள்ளைவயலின் நான்குபக்க எல்லைகளில், புதுவயற்கரைக்குளம், மஞ்சக்கரைக்குளம், கூத்தங்குடி எல்லை, கும்மல் எல்லை, திருப்பை வயல், கலையன் வயல், துத்தாக்குடிக்குளம் ஆகியவை கூறப்பட்டுள்ளன. கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்ளுக என்று கூறப்பட்டுள்ளது.

செப்பேட்டில் மாறவர்மன் பாண்டியதேவன் என்று மட்டுமே எழுதப்பட்டுள்ளது. இப்பகுதியில் மாறவர்மன் வீரபாண்டியன் என்பவன் கல்வெட்டுக்கள் சில கிடைத்துள்ளன.[1] இவ் வீரபாண்டியன் கி.பி.1443 முதல் 1497 வரை 54 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான் எனக் கூறப்படுகிறது.[2] எனவே இம்மாறவர்மன் பாண்டியதேவனை அதே வீரபாண்டியனாகக் கொள்ளலாம். இச்செப்பேட்டின் தமிழ் ஆண்டு கி.பி.1500 இவ் வீரபாண்டியனின் 58ஆம் ஆட்சியாண்டாகிறது. இச்செப்பேட்டில் ஆட்சியாண்டு 58 குறிக்கப்பெறுவது பொருத்தமுடையதாகவே தோன்றுகிறது. நீண்ட ஆட்சியாண்டைக் கொண்டு மாறவர்மன் வீரபாண்டியர் இருவர் என்று வரலாற்றறிஞர் கொண்ட ஐயம்[3] இதனால் நீங்கி ஒருவனே என்ற கருத்து உறுதிப்படுத்துகிறது.

15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சூரியதேவர் குலசேகரத் தொண்டைமானார் கல்வெட்டுக்களும் இப்பகுதியில் கிடைக்கின்றன.[4] அவர்களும் அறந்தாங்கி அரசைச் சேர்ந்தவர்களே. அவர்கள் இருவரும் சகோதரர்களாக இருக்கலாம் எனப் பெயர் அமைப்புக் காட்டுகிறது. சேலம் மாவட்டம் இராசிபுரம் கைலாசநாதர் கோயில் கல்வெட்டில் விக்கிரமபாண்டியத் தொண்டைமான் என்பவர் குறிக்கப்பெறுகின்றார்.[5] இவை அனைத்தும் தொண்டைமானார்கள் குடும்பத்துக்கும் பிற்காலப் பாண்டியர்கட்கும் உள்ள நெருங்கிய தொடர்பைக் காட்டுகின்றன.

இளங் கோனாடு என்பதை மையக் கல்வெட்டுத்துறையினர் இளங்கோ னாடு என்றும், இலங்கே(சுர)னாடு என்றும் படித்துள்ளனர்.[6]

---

1. புதுக்கோட்டை சமஸ்தானக் கல்வெட்டுக்கள், எண் 461-464
2. வேதாசலம்.வெ., பாண்டியநாட்டில் வாணாதிராயர்கள், மதுரை, ப.173.
3. சேதுராமன்,என்., பாண்டியர் வரலாறு, கும்பகோணம், 1990, ப.246
4. ARE 221 of 1942;299 of 1914; 238 of 1930 இவர்கள் இருவரும் சகோதரர்கள் என்ற கருத்து ஆண்டறிக்கையில் குறிக்கப்பட்டுள்ளது.
5. கிருட்டினன்,அ., சேலம் மாவட்டக் கல்வெட்டுக்கள், தஞ்சாவூர்,எண்.70
6. ARE 212, 222 of 1942, 299 of 1914 புதுக்கோட்டை சமஸ்தானக் கல்வெட்டுக்கள், எண்கள் 728, 794, 844, 845 ஆகியவற்றிலும் இளங் கோனாடு குறிக்கப் பெறுகின்றது.

மூலம்

1. ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் 1325ன் மேல் செல்லா
2. நின்ற ஸ்ரீ கோமாறபன்மந் திரிபுவனசக்ரவத்திகள் ஸ்ரீ பாண்டியதேவற்கு யாண்டு 5
3. 8ன்மேல்ச் செல்லாநின்ற ரௌதி(ரி) சம்வத்சரத்து தநு நாயற்று பௌர்ணை(மை)யும் பிரகஸ்ப
4. திவாரமும் பெற்ற திருவாதிரை நாள் மிழலைக் கூற்றத்து நடுவிற்கூறு பிரமதேயம் தனியூர் திரு
5. ப்பெருந்துறையான பவித்திர மா(ணி)க்க சதுர்வேதிமங்கலத்து நா(ய)னார் ஆளுடை
6. ய பரமசுவாமிகளுக்கு வடவெள்ளாறான சுந்திரபாண்டிய வழநாட்டு இளங் கோனாட்
7. டு அறந்தாங்கி அரசு சூரியதேவர்த் தொண்டைமானாரேன் உதகபூர்வ பிரமா
8. ணம் பண்ணி கல்வெட்டிக் குடுத்தபடி. ந (ம்)முடைய தம்மமாக நடத்தி யெப்போதும்
9. சதையம் முதல் திருவாதிரை நாள் பத்துக்கும் திருநாள் சிலவுக்கு விட்ட இன்னாட்டு
10. நம்மரசு பற்றில் திருநாடாத்துக் காணியாகக் குடுத்த பிள்ளை வயலுக்கு பெருநான்
11. கெல்லையாவது கீழ்பாற்கெல்லை புது வயற்கரைக் குளத்துக்கு(ம்) மஞ்சக்கரைக் குளத்து
12. க்கும் மேற்கு, தெந்பாற்கெ(ல்லை) கூத்தங்குடி எல்லைக்கும் கும்மல் எல்லைக்கும் வடக்கு, மே
13. ல்பாற்கெல்லை திருப்பை வயலுக்கு கிழக்கு, வடபாற்கெல்லை கலையன் வய
14. லுக்கும் துத்தாக்குடி குளத்திற்கும் தெற்கும் ஆக இசைய்ந்த பெருநான்கெ
15. ல்லைக்கு யுட்பட்ட சகல சமஸ்த பிராப்திகளும் சர்வமும் சர்வமா
16. ந்யமாக திருநாமத்துக்குக் காணியாக சந்திராதித்தவற் செல்ல செம்பிலும்
17. கல்லிலும் வெட்டிக் கொள்ளவும். இந்த திருநாமத்துகாணிக்கு
18. அகிதம் பண்ணினவர்கள் கங்கைக் கரையிலே கபிலையு காராம்பசு

19. வையும் குருவையும் பிராமணரையும் ம(ா)தா பிதாவையும் கொந்ந
20. பாவத்திற் போவார்களாகவும். இந்த தம்ம சாதன பட்டையம் சூரிய
21. தேவர்த் தொண்டைமானார் எழுத்து.

3. திருப்பெருந்துறைச் செப்பேடு II

இருக்கும் இடம்	**:**	**திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்**
அரசர்	**:**	**பொன்னம்பலத் தொண்டைமானார்**
காலம்	**:**	**10-8-1516**
மொழி	**:**	**தமிழ்**
அளவு	**:**	**32 செ.மீ. × 9 செ.மீ.**

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு நீண்ட சதுர வடிவில் கைப்பிடியும் துளையும் இன்றி முற்காலப் பாண்டியர் செப்பேட்டின் அமைப்பில் அமைந்துள்ளது. இரு ஏடுகளில் எழுதப்பட்டுள்ளன.

அறந்தாங்கி அரசு பொன்னம்பலத் தொண்டைமானார் அவர்களுக்கு நோய் உண்டாயிற்று. நோய் அதிகமாகி மரணம் ஏற்படுவதுபோல இருந்தது. அந்நோய் நீங்கும்பொருட்டு வடவெள்ளாறான சுந்தரபாண்டிய வளநாட்டுப் பனைங்கயநாட்டு வத்தனூருக்குப் பொன்னம்பலநல்லூர் என்ற பெயரிட்டு நாற்பால் எல்லைக்குட்பட்ட அவ்வூரைத் திருப்பெருந்துறை ஆளுடைய பரமசுவாமிகளுக்குச் சர்வமானியமாக அளிக்கப்பெற்றதை இச்செப்பேடு கூறுகிறது. பொன்னம்பலநல்லூரின் எல்லைகளும் கூறப்பட்டுள்ளன. கூபம் (கிணறு), தடாகம்(குளம்) உட்பட அட்டபோக உரிமைகள் யாவும் திருப்பெருந்துறைக் கோயிலுக்கு அளிக்கப்பெற்றன.

பொன்னம்பலநல்லூர்க் கொடை அளிக்கப்பட்ட ஆவணித்திருவோண நாள் பொன்னம்பலத் தொண்டைமானாரின் பிறந்தநாள் என்பது குறிப்பிடத்தக்கது. புதுக்கோட்டை மாவட்டப் பரமண்டூர்க் கோயிலுக்கு 18-8-1537 அன்று தான் பிறந்த ஆவணித் திருவோண நாளில் மிழலைக் கூற்றத்து மேல்கூறு தனியூர் ஆன நுளம்பூரைப் பொன்னம்பலநாதநல்லூர்

என்று பெயர் மாற்றிக் கொடையாக அளித்து அக்கோயிலில் பொன்னம்பலநாதன் சந்தி என ஒரு கட்டளையையும் ஏற்படுத்தினார்.

மூலம்

1. ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் 1438ன் மேல் செல்லாநின்ற தாது சம்வத்சர
2. த்து தக்ஷணாயநத்து வ(ரு)ஷ ரிதுவில் சிம்மநாயற்று
பூர்வபட்சத்து திரயோதசியும் ஆதித்ய வாரமும் ஸ்ர
3. வண நக்ஷதரத்து நாள் மிழலைக் கூற்றத்து நடுவிற் கூற்றம்
தனியூர் திருப்பெருந்துறையா
4. ன பௌத்திர மாணிக்க சதுர்வேதி மங்கலத்து நாயனார்
ஆளுடைய பரமசுவாமிகளுக்
5. கு அறந்தாங்கி அரசு பொன்னம்பலத் தொ(ண்)
டைமானாரோம் நமுடைய தேகத்திலே வந்த மர
6. ணரோகம் சத்ய ச்ராத்தமாக உதகபூர்வமாக குடுத்த
வடவெள்ளாறான சுந்தர பாண்டிய வ
7. ளநாட்டு பலனங்கய நாட்டு வத்தனூரான
பொன்னம்பலநல்லூர் சதுசீர்மையும் ச
8. கிரண்ணியஉதக தாராபூர்வமாக ஆசந்த்ராக்கத்யாகிஆக
சர்வ மான்யமாக அனுபவித்துக் கொள்ளவும்.
9. யிவூற்கு யிசைந்த பெருனாந் கெல்லையாவது
கீழ்பாற்கெல்லை மஞ்சள்க்கரை எல்லைக்கு மேற்
10. கு. தென்பாற்கெல்லை மேலைப்பட்டுஎல்லைக்கு வடக்கு.
மேல்பாற்கெல்லை திருப்பை வய
11. ல் எல்லைக்கு கிழக்கு. வடபாற்கெல்லை மேப்படியூர்ற்கு
தெற்கும் ஆக இசைய்ந்த பெருனா
12. ந்கெல்லை உட்பட்ட சகல சமுதாயபிராப்திகளும் சர்வ
மானியமாக அனு(பவித்து)க் கொள்ளவு
13. ம் நிதி நிட்சேப ஜல பாஷாண கூப தடாகாஷ்ட போக
ஸ்வாமியங்களும் சந்திராதித்யவற் செ
14. ல்ல சர்வமும் சர்வமாந்யமாக அனுபவித்துக் கொள்ளவும்.
இந்த தம்ம(த்து)க்கு அகிதம் பண்ணின
15. வர்கள் கங்கைக்கரையில் கபிலையும் கராம்பசுவையும்
பிராமணரையும் சிசுவையும் மாதாபி
16. தாவையும் கொன்ற பாவத்துலே போவார்களாகவும். சுபம் உ.

4. திருப்பெருந்துறைச் செப்பேடு III

இருக்கும் இடம்	:	திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, தஞ்சை மாவட்டம்.
அரசர்	:	கிருஷ்ணதேவராயர் – பொன்னம்பலத் தொண்டைமானார்
காலம்	:	8–11–1518
மொழி	:	தமிழ்
அளவு	:	32 செ.மீ. × 9 செ.மீ.

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு நீண்ட சதுர வடிவில் கைப்பிடியும் துளையும் இன்றி முற்காலப் பாண்டியர் செப்பேட்டு வடிவில் அமைக்கப் பெற்றுள்ளது.

வடவெள்ளாறான சுந்தரபாண்டிய வளநாட்டு இளங் கோனாட்டு அறந்தாங்கி அரசு அச்சம் அறியாதான், ஆளுடைய தம்பிரானார் ஸ்ரீபாதசேகரன் ஏகப்பெருமாள் தொண்டைமான் (கி.பி.1481–1499) அவர்கள் மகன் பொன்னம்பலத் தொண்டைமானார் (கி.பி.1508–1569) என்பவர் திருப்பெருந்துறை ஆளுடைய தம்பிரானார்க்குத் தம்முடைய பிறந்த நட்சத்திரமான திருவோணம்தோறும் 'பொன்னம்பலநாதச் சிறுகாலைச் சந்தி' என்ற பெயரில் ஒரு கட்டளை ஏற்படுத்தியதை இச்செப்பேடு கூறுகிறது.

வடவெள்ளாறான சுந்தரபாண்டிய வளநாட்டுப் பனைங்கயநாட்டுக் கீழை விஜயபுரம் என்ற ஊர் தொண்டைமானாரால் கொடையாக அளிக்கப்பட்டது. கொடையாக அளிக்கப்பட்ட கீழை விஜயபுரத்தின் நாற்பாங்கு எல்லைகள் கூறப்பட்டுள்ளன. அவ்வூர் திருநாமத்துக்காணியாக அளிக்கப்பட்டதெனக் கூறப்பட்டுள்ளது.

இத்தொண்டைமானாருக்கு அச்சம் அறியாதான் அலைவில் அஞ்சாதான் என்ற பட்டப்பெயர்களுண்டு.[1] திருவரங்குளம் அரதீர்த்தேசுவரர் கோயிலில் கி.பி.1514ஆம் ஆண்டு அலைவிலஞ்சாதான் சந்தி என்ற பெயரில் கட்டளை ஒன்றை ஏற்படுத்தினார்.[2] ஒரு கல்வெட்டு நாட்டுக்கு உடையவர் என்று

1. புதுக்கோட்டை சமஸ்தானக் கல்வெட்டுக்கள் 728.
2. மேலது, ARE 312 of 1914; ARE 240 of 1930.

இவரைப் பாராட்டுகிறது.[3] கிருஷ்ணதேவராயர், அச்சுததேவராயர் ஆகியோரின்கீழ் இவர் ஆட்சி புரிந்துள்ளார்.[4]

மூலம்

முதல் பக்கம்

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவரன், அரியராயர் விபாடன், பாஷைக்குத் தப்புவராயிர க
2. ண்டன், சதுசமுத்ராதிபதி, ஸ்ரீ வீரப்பிரதாபன், கிருஷ்ணதேவ மகாராயன் பிருத்வி ரா
3. ஜ்யம் பண்ணி அருளாநின்ற சகாப்தம் 1440ன் மேல் செல்லாநின்ற பகு
4. தாந்ய சம்வத்சரத்து தட்சிணாயநத்து சரத்ரிதுவில் ஜித்ரகமான புண்ய நாயற்று பூர்வப
5. க்ஷத்து சஷ்டியும் சோமவாரமும் பெற்ற திருவோணத்து நாள் மிழலைக் கூற்றத்து நடுவி
6. ற் கூற்றம் பிரம்மதேசம் தனியூர் திருப்பெருந்துறையான பவித்திர மாணிக்க நல்லூ
7. ர் சதுர்வேதி மங்கலத்து நாயனார் ஆளு(டை)யபரம சுவாமிக்கு வடவெள்ளாறான சுந்
8. திரபாண்டிய வழநாட்டு இளங் கோனாட்டு அறந்தாங்கி அரசு, அச்சமறியாதா
9. ன் ஆளுடையதம்பிராநார் ஸ்ரீபாதசேகரன் ஏகப்பெருமாள் தொண்டைமான்
10. பொன்னம்பலத் தொண்டைமானார் தமுடைய ஜன்மநட்சத்திர காலத்திலே ஆளுடை
11. யதம்பிரானாற்கு பொன்னம்பலநாதச் சிறுகாலச்சந்தி என்று ஆசந்தி ரார்க்க
12. ஸ்தாயிஆக நைவேத்யம் நடக்கும்படிக்கு சகிரண்யஉதக தாரா பூர்வமாக குடு

---

3. மேலது, 737. 4. மேலது, 737, 750.

இரண்டாம் பக்கம்

13. த்த வடவெள்ளாறான சுந்திரபாண்டிய வளநாட்டு
பனைங்கய நாட்டு கீழைவி
14. ஜயபுரத்துக்கு பெருநான்கெல்லைஆவன பனைஞ்குளத்து
புரவுக்கு மேற்கு, குறுங்கரக்
15. கோட்டை புரவுக்கு வடக்கு, மேலைவிஜயபுரத்து புரவுக்கும்
பள்ளி வயல்னு
16. க்கும்(க்கும்) கிழக்கு, மங்கலனாட்டு புரவுக்கும் தெற்கும் ஆக
இசைந்த பெருநான்கெ
17. ல்லைக்கு உட்பட்ட நிதி நிட்சேப சல பாசாண அட்சிணி ஆகாமி சி
18. த்தே சாத்யம் என்கிற அஷ்டபோக தேஜஸ்வாமியங்கள்
மகோ சகிரண்யாதியும்
19. உட்பட்ட தாநாதி விநிமய விக்கிரயங்களுக்கும்
யோக்யம்ஆக ஆசந்திரார்க்க
20. ஸ்தாயிஆக சர்வமும் சர்வமாந்யமாக திருநாமத்துக்
காணியாக சந்திராதித்யவற்ச்
21. செல்ல அநுபவித்துக்கொள்ளக் கடவதாகவும்.

5. திருப்பெருந்துறைச் செப்பேடு IV

இருக்கும் இடம்	:	திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்
அரசர்	:	பொன்னம்பலத் தொண்டைமானார்
காலம்	:	4-5-1519
மொழி	:	தமிழ்
அளவு	:	32 செ.மீ. × 9 செ.மீ.

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு நீண்ட சதுர வடிவில் கைப்பிடியும் துளையும் இன்றி முற்காலப் பாண்டியர் செப்பேடுகளின் அமைப்பில் உள்ளது. மூன்று பக்கங்களில் எழுதப்பெற்றுள்ளது. திருவாவடுதுறை ஆதீனத்தில் கிடைத்த கல்வெட்டுச் செப்பேடுகளில் நீளமானது இதுவேயாகும்.

வடவெள்ளாறான சுந்தரபாண்டிய வளநாட்டு இளங் கோனாட்டு அறந்தாங்கி அரசு பொன்னம்பலத் தொண்டைமானார் திருப்பெருந்துறை ஆளுடைய பரமசுவாமிகள் கோயிலில் 7000 பொன்னும், கலியுகராமன் பொன் 700ம் கடன் வாங்கினார். சுக்கில வருடம் முதல் நடப்பு பிரமாதி வரை 10 ஆண்டுகளில் பல வகையாகத் திருப்பெருந்துறைக் கோயில் பண்டாரத்தில் அவர் அளித்த பொன் 2883 பணம் 9. இன்னும் கோயிலுக்குச் செலுத்த வேண்டிய பாக்கி 4116 பொன் பணம் 1, கலியுகராமன் பொன் 700 ஆகும்.[1]

கொடுக்கவேண்டிய பாக்கிக்காக வடவெள்ளாற்று நாட்டு மையூர், களக்குடி, பனைங்கயநாட்டு மருந்துவயலான ஏகப்பெருமாள் நல்லூர், மேலை விஜயபுரம் ஆகிய ஊர்களையும், ஒக்கூரில் ஒருபகுதி நிலத்தையும் விற்ற செய்தியை இச்செப்பேடு கூறுகிறது.

ஊர் நிலங்களுக்கு எல்லைகள் கூறப்பெறும்போது சுட்டப்பெறும் வானவநல்லூர், வானாதிராயர் பெயரால் ஏற்பட்ட ஊராகவும், ஏகப்பெருமாள்நல்லூர் பொன்னம்பலத் தொண்டைமானார் தந்தை ஏகப்பெருமாள் தொண்டைமானார் (1481-1499) பெயரால் ஏற்பட்ட ஊராகவும் இருக்கலாம்.[2] ஏகப்பெருமாள் தொண்டைமானாரின் மூன்று மக்களில் பொன்னம்பலத் தொண்டைமானார் மூன்றாமவர். பொன்னம்பலத் தொண்டைமானார் கல்வெட்டுக்களில் பொன்னம்பலநாதத் தொண்டைமானார் என்றும்[3] பொன்னம்பலங் காத்த தொண்டைமானார் என்றும்[4] அழைக்கப்பெறுகிறார்.

மூன்றாம் சடையவர்மன் வீரபாண்டியனுக்கு (கி.பி.1297 – 1342) 'கலியுகராமன்' என்ற பட்டப்பெயர் உண்டு.[5] இம்மன்னன் திருப்பைஞ்ஞீலிக் கோயிலில் 'கலியுகராமன் சந்தி' என்ற கட்டளையை

1. இதன்மூலம் 10 பணம் கொண்டது 1 பொன் என்பதை அறிகிறோம்.
2. ARE 233 of 1930
3. History of Pudukkottai State, P.84.
4. S.I.I. VIII 434; ARE 146 of 1903
5. ARE 181, 182, 183 of 1939. என். சேதுராமன், பாண்டியர் வரலாறு, பக்.154

நிறுவினான். திருவரங்கத்தில் கலியுகராமன் மதில் என்னும் ஆறாம் திருமதிலை எடுத்தான். இம்மன்னன் பெயராலேயே கலியுகராமன் பொன் எனும் காசு வழங்கப்பெற்றது. திருவரங்கத்திற்கு அருகில் கலியுகராமச் சதுர்வேத மங்கலம் என்ற ஊரை ஏற்படுத்தி அந்தணர்களைக் குடியேற்றினான்.[6]

கலியுகராமன் பெயர் ஒரு பக்கம் பொறிக்கப்பட்டும். மறுபக்கம் விஷ்ணுவின் இரு திருவடிகள் பொறிக்கப்பட்டுமுள்ள செப்புக் காசுகளை அறிஞர்கள் கண்டுபிடித்து ஆய்வு செய்துள்ளனர்.[7] இச் செப்பேட்டில் குறிக்கப் பெற்றவை பொற்காசுகள் போலும். இவை நீண்ட காலம் வழக்கில் இருந்துள்ளன.

கி.பி.1421இல் முடிசூடிய மாறவர்மன் வீரபாண்டியனும் கலியுக ராமன் என்று சிறப்புப்பெயர் பெற்றிருந்தான். அம்மன்னன் திருநெல்வேலிப் பகுதியை மட்டும் அரசுபுரிந்தான்.[8]

இச்செப்பேட்டில் சாலிவாகன சக ஆண்டு 1448 எனப் பொறிக்கப்பட்டுள்ளது. தமிழ் ஆண்டு பிரமாதி 1441க்கு உரியது. கல்வெட்டைச் செப்பேட்டில் பொறிக்கும்போது இப்பிழை ஏற்பட்டிருக்கலாம்.

மூலம்

1. ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் 1448ன் மேல்ச் செல்லாநின்ற
பிரமாதி சம்வத்சரத்து உத்தராயநத்து வஸ
2. ந்தரிதுவான ரிஷபநாயற்று பூர்வபக்ஷத்து சஷ்டியும்
புதவாரமும் பெற்ற புஷ்யம் நட்க்ஷத்திரத்
3. து மிழலைக் கூற்றத்து நடுவிற்க்கூற்று பிரமதேயம் தனியூர்
திருப்பெருந்துறையான பவி
4. த்திர மாணிக்கச் சதுர்வேதிமங்கலத்து நாயனார்
ஆளுடைய பரமசுவாமிகளுக்கு வ

---

6. S.I.I. Vol XXIV 209, 210, 211
7. என்.சேதுராமன். பாண்டியர் வரலாறு. பக்.154
8. என். சேதுராமன்.என்., பாண்டியர் வரலாறு. பக்.155

5. டவெள்ளாறான சுந்திரபாண்டிய வழன்னாட்டு இளங்
கோநாட்டு அறந்தாங்கி அரசு
6. பொன்னம்பலத் தொண்டைமானார்ரேன் நாமுன்னாள்
கோயிற் பண்டாரத்தில் கடனாக வாங்கின பொ
7. ன் 7000 பொன் உ. கலியுகராமன் பொன் 700. ஆக இந்த
வகைப்படி பொன்னுக்கு சுக்கில வருஷ
8. முதல் நாளதுவரைக்குப் பல வ(கை)யாலும் கோயிற்
பண்டாரத்தில்க் குடுத்த பொன் 2
9. 883 பொன்னும் பணம் 9 உ. இத(ற்)குச் செல்லவேண்டும்
பொன் 4116 பொன்னும்
10. பணம் 1உ. கலியுக இராமன் பொன் 700. இதுக்கு யிந்நாள்
இப்பொன்னுக்கு விலைப்பிறமான
11. ம் பண்ணிக்குடுத்த யூராவது வடவெள்ளாற்றுநாட்டு
மைய்யூருக்கு பெருநான்
12. கெல்லையாவது, கீழ்ப்பாற்கெல்லை சனாத்தனூர் எல்லைக்கு
மேற்கு, தென்பாற்கெல்லை
13. வானவநல்லூர்ப் புரவுக்கு வடக்கு, மேல்பாற்கெல்லை
வானவநல்லூர் எல்லைக்கு
14. ம் அமஞ்சாத்த வயலுக்கும் கிழக்கு, வடபாற்கெல்லை
தென்னூர் வயலுக்கு வடக்கு ஆக
15. இசையிந்த பெருநான்கெல்லைக் குட்பட்டதும் களக்குடிக்கு
பெருநான் கெல்லைக்கு
16. கீழ்பாற்கெல்லையாவன தென்னூர்க் குளத்து வெளிக்குங்
கீட் குளத்து வயல் எல்லைக்
17. கும் மேற்குத் தென்பாற்கெல்லை வானவர்நல்லூர்
எல்லைக்கும் பாக்கத்தில் எல்லைக்குங் கரு
18. ங்குழிக் குளப்பரப்புரவுக்குங்கீழ் நெடுங்குளப் புரவுக்குங்
குடிக்கு மேல்பாற்கெல்லை கருங்
19. குழி நெடுங்குளப் புரவுக்குங் கிழக்கு, வடபாற்கெல்லை
விரைப் புரவுக்குந் தெற்கு ஆக இசை
20. ந்த பெருநான்கெல்லைக்கு உட்பட்டதும் பனைஞ்சய நாட்டு
மருந்து வய
21. லான ஏகப்பெருமாள்நல்லூர்க்கு
பெருநான்கெல்லையாவன கீழ்பாற்கெல்லை குறு

22. ஙகரக் கோட்டைப் புரவுக்கும் குருவிப்பட்டுப்(பட்டுப்) புரவுக்கும் மேற்குத் தெ
23. ன்பாற்கெல்லை மண்ணகுடிபுரவுக்கு வடக்கு, மேல்பாற்கெல்லை சுந்திரபாண்
24. டியன்நல்லூர் எல்லைக்கு கிழக்கு, வடபாற்கெல்லை அரையர் குளத்து எ
25. ல்லைக்கு தெற்கு ஆக இசைந்த பெருநான்கெல்லைக்கு உட்பட்டனவும்
26. மேலை விஜையபுரத்துக்கு பெருநான்கெல்லைக்கு உட்பட்டதுக்கு (பொ)
27. மேலை விஜையபுரத்துக்குப் பெருநான்கெல்லையாவன கீழ்பாற்கெல்லை த
28. ம்பிரானார் *திருநாமத்துக் காணிக்குங் கீழை* விஜயபுரத்துக்கு மேற்கு, தென்பாற்கெல்லை கலுங்
29. கரையன் தோட்டப்புரவுக்கு வடக்கு, மேல்பாற்கெல்லை ஆண்டான்புரவுக்குக் கிழக்கு
30. வடபாற்கெல்லை பள்ளிக்காட்டு எல்லைக்கு தெற்கு ஆக இசைந்த பெரு நான்கெல்லைக்கு உட்ப
31. ட்ட நிதி நிக்ஷேப ஜல பாஷாண அக்ஷிணியாகாத்மி ஸித்த ஸாத்யங்களும் இந்த வற்த(னை)படி பொன்னுக்கு
32. ஒக்கூர்ப் புரவில் முட்டவிற்றபொன் உ 4116. பணம் 1க்கும், கலியுக ராமன் பொ
33. ன் 700க்கும் இந்த ஊர்களும் ஒக்கூர் விபோகமும் இந்தப் பொன்னுக்கு விலையாக சந்திராதித்தவல்ச்
34. செல்ல *திருநாமத்துக்*காணியாக ஸகல ஸமுதாய ப்ராப்திகளும் சர்வமான்யமாக ஸஹி
35. ரண்யோதக தாராபூர்வமாக உதகம்பண்ணிக்குடுத்தபடி சர்வம் சர்வ மான்யமாக சந்திராதித்ய
36. வற்ச் செல்லத் *திருநாமத்து*க்காணியாக பற்றி அனுபவித்துக் கொள்ளவும். இப்படி விற்ற ஊர்களு
37. க்கு அஹிதம் பண்ணினவர்கள் கங்கைக்கரையிலே குராலையும் கராம் பசுவையும்
38. குருவையும் பிராமணரையும் மாதா பிதாவையும் கொண்ண பாவத்திலே போவார்க
39. ளாகவும்.

6. திருப்பெருந்துறைச் செப்பேடு V

இருக்கும் இடம்	:	**திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை. தஞ்சாவூர் மாவட்டம்.**
அரசர்	:	**பொன்னம்பலநாதத் தொண்டைமானார்**
காலம்	:	**12-10-1526**
மொழி	:	**தமிழ்**
அளவு	:	**32 செ.மீ. × 9 செ.மீ.**

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு நீண்ட சதுர வடிவில் கைப்பிடியும் துளையும் இன்றி முற்காலப் பாண்டியர் செப்பேட்டு வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக மூன்று பக்கங்கள் எழுதப்பட்டுள்ளது.

ஏகப்பெருமாள் தொண்டைமானார் (கி.பி.1481 - 1498) மகன் பொன்னம்பலநாதத் தொண்டைமானார் (கி.பி.1508-1569) திருப்பெருந்துறைக் கோயிலுக்கு மிழலைக்கூற்றத்து மேல்கூறு வீரமங்கலப் புரவில் வெள்ளாற்றுக்கு வடகரையில் கீழ்கரத்தூர் என்னும் ஊரைத் திருநாமத்துக்காணியாக 500 சக்கரம் பொன் கொடுத்து வாங்கி ஊர்விலைப் பிரமாணம் பண்ணிக் கொடுத்துச் சர்வமானியமாக அளித்த செய்தியை இச்செப்பேடு கூறுகிறது.

அறந்தாங்கி அரசு என்னும் பெயருடன்,

அச்சமறியாதான்
அலைவிலஞ்சாதான்
அடியார் வேளைக்காரன்
ஆட்டுக்கு ஆனைவழங்கும் பெருமாள்
ஏழு நாளையில் ஈழந்திறை கொண்டான்
முகிலின் கீழ்திரியும் இளவன்னியர் மீசுரகண்டன்
வழுதியிடு கழலான்
வளவனிடு கழலான்
சேரன் கவிபாட செந்தமிழ்கொண்ட பெருமாள்
ஆவுடைய தம்பிரானார் சீர்பாத பத்தன்

என்னும் பல சிறப்புப் பெயர்கள் பொன்னம்பலநாதத் தொண்டைமானாருக்குக் கூறப்படுகின்றன.

கீழ்கர்த்தூரில் காய்மரம், குழைமரம், நிதி, நிக்ஷேபம், ஜலம், பாஷாணம், நத்தம், குளம், செத்தலைக்கலம், நஞ்சை, புஞ்சை, படுகை, பட்டமரம், குளவாய்த்தலை, கோயில் சுவந்திரம், குளச்சுவந்திரம், வலையடிமை, பறையடுமை, பட்டடை, தலைவரி, செக்கிறை, அட்டபோக சுவாமியங்கள், தொண்டைமானார் கொள்ளும் இறை உபாதிகளும் மானியமாக அளிக்கப்பெற்றன.

பழங்கல்வெட்டுக்களில் மாறன்சடையன் என்றால் மாறன் மகன் சடையன் என்றும், சடையன் மாறன்என்றால் சடையன் மகன் மாறன் என்றும் பொருள் கொள்ளுகிறோம். மகன் என்ற சொல் இடையில் இல்லாவிடினும் இவ்வாறே பொருள் கொள்ளுகிறோம். அதே அமைப்பு இச்செப்பேட்டிலும் காணப்படுகிறது. ஏகப்பெருமாள் தொண்டைமானார் மகன் பொன்னம்பலநாதத் தொண்டைமானார் என்பது ஏகப்பெருமாள் தொண்டைமானார் பொன்னம்பலநாதத் தொண்டைமானார் என்றே எழுதப்பட்டுள்ளது. பிற அரச மரபுகளிலும் இப்பண்டைய வழக்கம் பின்பற்றப்பட்டுள்ளது.

மூலம்

1. ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் 14
2. 48 உ இதன்மேல் செலாநின்ற வெய வருஷத்து தெட்சணாயணம்
3. துலா நாயறு பூறுவபட்சத்து சுக்குரவாரமும் சத்தமியும் பெற்ற உரோகிணி நாள்
4. மிழலைக் கூற்றத்து நடுவில் கூற்றத்து பிரமதேயம் தனியூர் திருப்பெருந்துறைஆன
5. பவித்திரமாணிக்க சதுர்வேதிமங்கலத்து நாயனார் ஆளுடைய பரம சுவாமியளு
6. க்கு வடவெள்ளாறான சுந்திரபாண்டிய வளநாட்டு இளங் கோனாட்டு அறந்தா
7. ங்கி அரசு. அச்சமறியாதான். அ(லை)லவில் அஞ்சாதான், அடியா(ர்)வேளைக்காறன்
8. ஆட்டுக்கு ஆனை வழங்கும் பெருமாள் ஏழுநாளையில் ஈழந்திறை
9. கொண்டான் முகிலின்கீழ்த் திரியும் இளவன்னியர் மீசுரகண்டன். வழுதியிடு

10. கழலான், வளவனிடு கழலான், சேரன்கவிபாட செந்தமிழ் கொண்ட பெரும்மா
11. ள் ஆவுடையதம்பிரானார் சீர்பாதபத்தன், ஏகப்பெருமாள் தொண்ை
12. டமானார் பொன்னம்பலநாத தொண்டைமானாரோம் ஊர்விலைப் பிரமாண
13. ம் பண்ணிக்குடுத்தபடி மிழலைக் கூற்றத்து மேல்கூறு வீரமங்கல புரவில் வெ
14. ள்ளாறுக்கு வடகரையில் கீழ்கரத்து ஊற்க்கு பெருநான்கெல்லைக்கு உள்ப
15. ட்ட காய்மரம் குழைமரம் நெதி நிக்ஷேபம் செல பாஷாணம் நத்தம் குளம் செத்தலை
16. க்கூல நஞ்சை புஞ்சை படுகை பட்டமரம் குளம் குளவாய்த்தலை கோயில் சுவந்திர
17. ம் குளச் சுவந்திரம் வலையடிமை பறையடிமை பட்டடை தலைவரி செக்
18. கிறைமரம் அட்டபோக சுவாமியங்களும் மற்றும் நாம் கொள்ளும் இறை உ
19. பாதிகளும் பலவகைகளும் சர்வமும் சர்வ மானியமாக உபக்ஷே தாரா பூர்வமாக திருநாமத்து.
20. காணியாக விற்பதற்கு இசைந்து விலை நிச்சைத்த சக்கரம் பொன் 500 இப்பொன் ஐஞ்ஞூற்
21. க்கும் விலைக்குற விற்றுப் பொருளறப் பற்றின கீழ்க்கரத்தூர் சர்வமும் சர்வமான்யம்
22. ஆக செம்பிலும் கல்லிலும் வெட்டிக் கொள்ளவும். இந்த திருநாமத்து காணிக்கு அகி
23. தம் பண்ணினவர்கள் கங்கைக் கரையிலே கபிலையையும் கராம் பசுவையும் குருவையு
24. ம் பிராமணரையும் மாதா பிதாவையும் கொன்ற பாவத்திலே போவாராகவும். சுபம்.

7. திருப்பெருந்துறைச் செப்பேடு VI

இருக்கும் இடம் : திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்.

அரசர் : பொன்னம்பலநாத தொண்டைமானார்

காலம் : 26-10-1526
மொழி : தமிழ்
அளவு : 32 செ.மீ. × 9 செ.மீ.

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு நீண்ட சதுரவடிவில் கைப்பிடியும் துளையும் இன்றி முற்காலப் பாண்டியர் செப்பேட்டு அமைப்பில் அமைந்துள்ளது.

திருப்பெருந்துறை ஆளுடைய பரமசுவாமிகளுக்கு அறந்தாங்கி அரசு தொண்டைமானார் அவர்கள் 3000 சக்கரம் பொன் கொடுத்து

(அ) மிழலைக் கூற்றத்து மேல் கூற்றத்துப் பெருநாவலூர்
(ஆ) வடவெள்ளாற்று நாட்டுப் பனைங்கயநாட்டு
அரையர்குளப் பற்று வேங்கூர் எழுவனேரி
(இ) வடவெள்ளாற்று நாட்டுப் பனைங்கயநாட்டு
அரையர்குளப்பற்று ஸ்ரீகண்ட மங்கலம்

ஆகிய ஊர்களை விலைப்பிரமாணம்பண்ணிக் கொடுத்தார்.

இவ்வூர்களிலிருந்து பொன்னம்பலநாதத் தொண்டைமானார் கொள்ளும் இறைகளையும் உபாதிகளையும் சர்வமானியமாகத் திருப்பெருந்துறைக் கோயிலுக்கே அளிக்கச் செய்தார்.

இதே நாளில் தொண்டைமானார் மிழலைக் கூற்றத்துப் பழந்தரா மங்கலத்துப் புரவை குடிநீங்காத் தேவதானமாக அளித்தார். இதனைச் செம்பிலும் கல்லிலும் வெட்டிக்கொள்ளச் செய்தார். இச் செப்பேட்டுச் செய்தியின் இறுதியில் 'இது சத்யம்' என எழுதப்பெற்றுள்ளது.

இறுதியில் கொடுத்த கொடைகளைக் காப்பது தொடர்பாக உள்ள நான்கு வடமொழிச் சுலோகங்கள் கிரந்த எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

அச்சுலோகங்களின் பொருள்

(1) அறம் செய்தல், பிறர் செய்த அறத்தைப் பேணுதல் ஆகிய இவ்விரண்டில் பிறர் செய்த அறத்தைப் பேணுவதே சிறந்தது. அறம்

செய்தால் தேவருலகு மட்டுமே கிடைக்கிறது. ஆனால் அறத்தைப் பாதுகாப்பதால், காப்பவன் விட்டுணுவின் பதத்தையே அடைகின்றான்.

(2) தானே அறம் செய்வதைவிடப் பிறர் கொடுத்ததைக் காத்தல் பலமடங்கு சிறந்த நல்வினையாகும். பிறர் அளித்தவைகளைக் கவர்ந்து கொண்டால், தான் கொடுக்கும் கொடையும் பயனற்றதாகிவிடும்.

(3) தான் அளித்ததையோ அல்லது பிறர் கொடுத்ததையோ ஒருவன் கைப்பற்றக்கூடாது. அவ்வாறு தரப்பட்ட நிலத்தைக் கைப்பற்றுகிறவன் அறுபதினாயிரம் ஆண்டுகள் இவ்வுலகில் புழுவாகப் பிறந்து உழல்வான்.

(4) உலக மன்னர் அனைவருக்கும நிலமகள் உடன்பிறந்தவளாக விளங்குகிறாள். அதனால் அந்தணர்களுக்காக அளிக்கப்பட்ட இந்த நிலம் மற்றவர்களால் கைப்பற்றப்படுவதற்கும் துய்க்கப்படுவதற்கும் உரியதாகாது.

மூலம்

1. சகாப்தம் 1448ன் மேல் செல்லாநின்ற விய சம்வத்சரத்து து
2. லாநா(ய)ற்று பூர்வபக்ஷத்து சுக்ரவாரமும் பெற்ற புணர்பூசத்துநாள் மிழ .
3. லைக் கூற்றத்து நடுவிற்கூற்று தநியூர் திருப்பெருந்துறை ஆளுடைய
4. பரம சுவாமியளுக்கு அறந்தாங்கி அரசு ஏகப்பெருமாள் தொண்டை
5. மானார் பொன்னம்பலநாத தொண்டைமானாரவர்கள் உபக்ஷய தா
6. ராபூர்வமாக விலைப்பிறமாணம் பண்ணிக்கொடுத்த ஊர்களாவன. மி
7. ழலைக் கூற்றத்து மேல்கூற்றத்து பெருனாவல்லூர்க்கும் யிதுக்கு உட்பட்ட
8. புரவுக்கும் பெருநான்கெல்லை ஆவன கீழ்பாற்கெல்லை திருபெருந்துறை
9. எல்லைக்கு மேற்கும். தென்பாற்கெல்லை பழந்தாமரைக் குளத்துக்கும் வாயித்தலைக்கு
10. ம் சிற்றடம்பூர் மருதங்குடி எல்லைக்கும் வடக்கும். மேர்பாற்கெல்லை வாமங்

11. கலக்கல்[1] எல்லைக்குக் கிழக்கும், வடபாற்கெல்லை வெள்ளாற்று தெற்கும் ஆக இசை
12. ந்த பெருநாற்கெல்லைக்கு உட்பட்ட பெருனாவல்லூருக்கும் வடவெள்ளா
13. ற்று நாட்டுப் பனைங்கையநாட்டு அரையர்குளப்பற்று வேங்கூர் எழுவனேரி பெரு
14. னாற்கெல்லைக்கு உள்பட்டனவும், யின்னாட்டில் யிந்த பற்று ஸ்ரீகண்ட மங்கலம் ச
15. து சீமைக்கு உள்பட்டனவும் ஆக யிந்த ஊர்களுக்கு உண்டான சகல சமுதாய
16. பிராப்திகளும் மற்றும் நாமங் கொளும் யிறை யுவாதிகள் மற்றும் எப்பேற்ப
17. ட்டனவும் சர்வமும் சர்வ மாந்யமாக உபக்ஷய தாராபூறுவமாக விலைப் பிரம
18. ாணம் பண்ணி விலை நிச்சை(யி)த்த சக்கரம் பொன் 3000. யிப் பொன் முவ்வாயிரத்
19. துக்கும் யிந்த ஊர்கள் சந்திராதித்தவரை செல்ல தாராபூர்வமாக கொடுத்தோம்.
20. ஆளுடைய பரமஸ்வாமிக்கு பொன்னம்பலத் தொண்டைமானாரோம். யின்னா
21. ளில் மிழலைக் கூற்றத்து பழந்தராமங்கல புரவு அருகில் குடிநீங்காத் தேவதானமாக ச
22. ந்தராதித்யவரை செல்லக் குடுத்தமைக்கும் செம்பிலும் கல்லிலும் வெட்டிக் கொள்ள
23. க் (கெ) கடவாராகவும். யிது சத்யம். தாந பாலன யோர்மத்யே தாநாத் ஸ்ரெயோநு பாலநம் தாநா
24. த் ஸ்வர்க்க மவாப்நோதி பாலநாதச்சுதம் பதம். ஸ்வதத் தாத்வி குணம் புண்யம் பரதத்தாநு பாலநம்
25. பரதத்தாப ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது. ஸ்வதத்தாம் பரதத்தாம் வாயோ ஹரேத் வசுந்
26. த்தராம் ஷஷ்டி வர்ஷ ஸஹஸ்ராணி விஷ்டாயாம் ஜாயதே க்ருமி. எகைவ பகநீ லோகே.
27. ஸர்வேஷா மேவ பூபுஜாம் ரயோஜ்யா நகரக் ராஹ்யா விப்ரதத்தா வசுந்தரா.

1. வாமனக்கல்

8. குமணப்பிள்ளை காணியாட்சிச் செப்பேடு

இருக்கும் இடம் : திருவாவடுதுறை ஆதீனம்,திருவாவடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்.
அரசர் : வணங்காமுடி ஆதொண்டைமானார்
காலம் : 16-7-1530
மொழி : தமிழ்
அளவு : 29 செ.மீ. × 22 செ.மீ.

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு அகலமான அழகிய கோபுரக் கலசம் போன்ற கைப்பிடியையும் அதன்மேல் பகுதியில் துளையையும் கொண்டுள்ளது. கைப்பிடியின்கீழ் எழுதத் தொடங்காமல் அடிப்பகுதியிலிருந்து எழுதப்பெற்றுள்ளது. இச் செப்பேட்டில் குறிக்கப்பெற்ற ஏழு கிராமங்களை விற்பனை செய்தவர்கள் நால்வர் பெயரும் கைப்பிடியின்கீழ் இடப்புறம் நேராக எழுதப்பட்டுள்ளது.

இச் செப்பேட்டில் பிழைகள் அதிகம் காணப்படுகின்றன. இச்செப்பேட்டுச் செய்தியை எழுதியவர் மலையான் தவமுனி அவர்கள் காரியத்துக்குக் கர்த்தரான சின்ன ஆவுடையப்பன் என்பவர். செப்பேட்டில் பொறித்தவர் அறந்தாங்கி அருணாசலப்பத்தர் மகன் சுப்பிரமணியன் என்பவர். செய்தி எழுதியதை நெட்டெழுத்து என்றும், செப்பேட்டில் பொறித்ததை வெட்டெழுத்து என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

இச்செப்பேட்டில் காலக்குறிப்பு தவறாக உள்ளது. இதே செப்பேட்டில் குறிக்கப்பெற்றுள்ள செங்கால்பிள்ளை, குமணப்பிள்ளை ஆகியோர் 1617ஆம் ஆண்டு செப்பேடொன்றில் குறிக்கப்பெறுகின்றனர். இச் செப்பேட்டில் பொறிக்கப்பெற்ற விகாரி ஆண்டைச் சரியான ஆண்டாக எடுத்துக்கொண்டால் இச்செப்பேடு 1640ஆம் ஆண்டைச் சேர்ந்ததாகக் கருதலாம்.

வணங்காமுடி ஆதொண்டைமானார் அவர்கள்
கற்றவர் புகழும் கலியுகராமன்
அன்னசத்திர சோமன்

சமரில் சறுக்காத கண்டன்
இரவிகுல துரந்தரன்

என்று பலவாறு புகழப்படுகிறார். அவர் 'மனுநீதி முறைமை தப்பாமல் செங்கோல் செலுத்தி' நிலவுலகை ஆட்சிபுரிவதாகக் கூறப்பட்டுள்ளார்.

வணங்காமுடி ஆதொண்டைமானார் அவர்கள் குரு மிழலைக்கூற்றத்துத் துஞ்சனூர் உடையான் குமுளூர் உடையான் அச்சுதப்ப ஆதொண்டைமானார் குடியாகிய குமணப்பிள்ளை என்பவர். அவருடைய குடிஆன குமணப்பிள்ளை என்பவருக்கு அமரடக்கி மங்கலத்தைச் சேர்ந்த பொன்பற்றி உடையான் மறிக்கவொண்ணான், ஆவின நயினான், உலகுய்ய வந்த பெருமாள், சின்ன ஆவின நயினான் ஆகிய நால்வரும் காணியாட்சியாகச் சில ஊர்களைச் சுளி மின்னல்பணம் 650க்கு விற்பனை செய்த செய்தியை இச் செப்பேடு கூறுகிறது.

விற்கப்பட்ட ஊர்கள்

(1) அமரடக்கியைச் சேர்ந்த பருவூர்ப்பற்றில் கோனாபட்டி உள்க்கிடை உட்படத் தாளைஏந்தல்
(2) கானுக்குறிச்சி உள்க்கிடை உட்பட பரிவூரு மங்கலம் கிராமம்
(3) மாபனைக் கிராமம்
(4) சின்ன மாபனைக்கிராமம்
(5) மேல்க்கானாடு கிராமம்
(6) ஏம்பல் கிராமம்
(7) புள்ளான் ஏம்பல் கிராமம்

என்பனவாகும்.

இந்த விற்பனை திருப்பெருந்துறை (ஆவுடையார்கோயில்) ஆத்ம நாதசுவாமிகள் முன்பாகச் செங்கால்ப்பிள்ளை மன்றிலேற்றிக் கோயிலில் உள்ள ரெகுனாத பூபால ஆதொண்டைமானார் மண்டபத்தில் மலையான் தவமுனியவர்கள் முன்னிலையில் நடந்துள்ளது. விற்பனைத் தொகை 650 பொன்னும் ஒரு கிழிப்படக்காட்டியேற்றி கைச்சிலவறப் பற்றிக்கொண்டோம் என்று கூறப்பட்டுள்ளது.

கிராமத்தில் எல்லா உரிமைகளும் விற்கப்பட்டுள்ளன. ஆவிரை கொளுஞ்சி, அறுகு, தாளிவயிப்பு, செப்பு, மாவடை, மரவடை, மேல் நோக்கிய விருட்சம், கீழ்நோக்கிய கிணறு, கோயில், குளம், பெருநீர்நிலை, சிறுநீர்நிலை, நீர்வரும் ஆறு, தான் போகும் குளக்கால், பறைமை, வலைமை உட்படப் பதினெண் சுதந்திரமும் அம்பலம், உம்பளம், சொல் சுதந்திரம் சகல சமுதாயப் பிராப்திகளும் என்றென்றும் பரம்பரையாக ஆண்டனுபவித்தல், சீதனம் கொடுத்தல், சினேகதானம் பண்ணல், விற்றல், ஒற்றி வைத்தல், உபயங் கொடுத்தல் முதலிய எவ்வகையாகவும் கிராமத்தைப் பயன்படுத்தலாம் என்று கூறப்பட்டுள்ளது.

விலைக்கு வாங்கியவர்கள் நெருஞ்சி தூர்த்துக் குடியேற்றித் திரவியப்பிரகரமாகக் கிராம பரிபாலனம் செய்து கொள்ளலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

பொன்னமங்கலம்பற்று உடைய சூரியபிள்ளை, விளத்துப் பற்றுடைய வெகுழானிராயர் ஆகியோர் சாட்சிக் கையொப்பமிட்டுள்ளனர். கிராமத்தை வாங்குவோர் விற்போர் சொல்ல நெட்டெழுத்து எழுதப்பட்டதென்றும், துரையவர்கள் (வணங்காமுடி ஆதொண்டைமானார்) உத்தரவின்பேரில் செப்பேடு வெட்டப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. தொடக்கத்தில் ஆளுடைய பரமசுவாமியார் துணை என்று தொடங்கி இறுதியில் ஆதிகேசவர் துணை என்ற தொடருடன் இச் செப்பேடு முடிகிறது.

தனிப்பட்டவர்கள் விற்பனைகூட கோயில் மண்டபத்தில் இறைவன் முன்பாக அரசர் சமய அடியார்கள் அறிய நடைபெற்றுள்ளது. அக்காலக் கிராம அமைப்பு, விற்பனைமுறை, மொழிநடை இவைகளை அறிந்துகொள்ள இச்செப்பேடு மிகவும் உதவும்.

மூலம்

1. உ ஆளுடைய பரமசுவாமியாற் துணை உ ஸ்சமஸ்தமன் மகாமண்டலேசுர
2. ன், ஆரியதள விபாடன், பாசைக்கு தப்புவராத கண்டன், மூவராயிர கண்டன் க

3. ண்டநாடு கொண்டு கொண்டனாடு குடாதான், பாண்டிமண்டலத் தாபனாசா
4. ரியன், சோழமண்டல பிறதிட்டாபனாசாரியன், தொண்டமண்டல பிறசண்டன்,
5. பூறுவ தெட்ஷண பச்சிம உத்தர சமுத்திராதிபன், யீளமும் கொங்குமி யாழ்ப்
6. பாண பட்டணமழித்து கெசவேட்டை கண்டருளிய ராசாதிராசன், ராச பர
7. மேசுரன், ராசகெம்பீரன், பரராசசிங்கம், தேவபதியான், தரியலர்களிடியேறு, தாலி
8. க்குவேலி, சொரிமத்திரள்படை துலைத்திடு சிங்கம், சிங்ககொடியான், சினப்புலி, வீர
9. தண்டையான், கற்றவர் புகளும் கலியுக ராமன், ரவிகுல தீரன், முன் காயம் வாஙகி மு
10. னை செயிவார் கண்டன், அன்னசத்திர சோமன், ஜவாய்ப்புலி, எவ்விருது முடையோ
11. ன். சமரிர்ச் சறுக்காத கண்டன், பரிமேல் நகுலன், கரிமேலுதையன் யின்னமும் அநே
12. க பிறதிட்டா பரிபாலகன், கச்சிப் பதியான், ரவிகுல துரந்தரன், ரா வணங்காமுடி
13. ஆதொண்டைமானாரவர்கள் மனுநீதி முறமை தப்பாமல் செங்கோல் செலுத்தி பிற
14. திவிராச்சிய பரிபாலனம் பண்ணியருளாநிண்ட[1] சாலிவாகன சகாற்த்தம் 14
15. 52ந்மேற் செல்லாநிண்ட விகாரி வருஷம் ஆடி மீ 17 உ யெனது குருவான மிழலைக் கூற்
16. றத்து துஞ்சனூர் உடையான் குமுளூர் உடையான் ஆன ரா அச்சுதப்பால ஆதொ
17. ண்டமானாரவர்கள் குடிஆகிய குமணப் பிளைக்கி[2] அமர(ட்)டக்கி மாங்கலம் பொன்(ெ)ப
18. த்திஉடையான், மறிக்கவொண்ணான் ஆவின நயினான் உலகுஉய்ய வந்த பெருமாள்

---

1. நின்ற 2. குமணப்பிள்ளைக்கு

19. சின்ன ஆவின நயினான் உள்பட்டாரோம் காணியாட்சி தாம்புரசாதன பட்டயம் செங்கால்
20. பிள்ளையவர்கள் மண்டிலேற்றி[1] ஆற்ப்பனாத[2] சுவாமி முன்ம்பாக ரா ரெகுனாத பூபால
21. ஆதொண்டமானாரவர்கள் மண்டபத்தில் மலையாந் தவமுனியவர்கள் முன்னிலை நா
22. ம் சித்தூர் ஏத்தி பண்ணிகுடுத்த பரிசாவது, நாங்கள் விக்கிண்ட[3] கிறாமம் அமரடக்கிலை
23. யசேந்த பருவூருபத்தில் கோனாப்பட்டி உள்க்கடை உள்பட தாளை ஏந்தல் கிறாமம் 1,
24. கானுக்குறிச்சி உள்க்கடை உள்பட பரிவீருமங்கலம் கிறாமம் 1, மாபனை கிறாமம் 1, சின்ன
25. மாபனை கிறாமம் 1, மேல்க்கானாடு கிறாமம் 1, ஏம்பல் கிறாம 1, புள்ளான்ஏந்தல் கி
26. றாமம் 1 ஆக ஏழு கிறாமமும் நாங்கள் சகல சன சம்மதியாயி விற்ப்போம்எண்டு[4] வி
27. ற்ப்பதர்க்கிசந்து அவர் கொள்வோம்எண்டு[5] கொள்வதர்க்கி (லை) சந்து நால்வர்முன்
28. பாக சாவி விலை நிட்ஷெயித்தது சுலிமின்னல்பொன் 650 இந்த அறுனூத்தி அன்ம்
29. பது பொன்னும் ஒரு கிளிப்பட காட்டி யேத்தி கயிச்சிலவறப் பத்திக் கொண்ட ப
30. டியினாலே யிந்த ஏழு கிறாமத்துக்கும் னால்பாக்கெல்லைக் குள்பட்ட ஆவ(ர்)
31. ரை கொளுஞ்சி அறுகு தாளிவயிப்பு செப்பு மாவடை மரவடை மேனோக்
32. கிய விருட்சம் கீனோக்கிய கிணறு கோவில் குளம் பெருநீர்நிலை சிறுநீர் நிலை நீர்வ
33. ரும் ஆறு தான்போகும் குளக்கால் பறமை வலமை பதினெண் சிவந்திரமுஉ
34. ம் அம்(ப)லம் உம்பளம் சொல் சுவந்திரம்[6] சகலசமுதாய பிராத்தியளும்[7] கல்லும்

1. மன்றிலேற்றி 2. ஆத்மநாத 3. விக்கின்ற 4. என்று
5. என்று 6. சுதந்திரம் 7. பிராப்திகளும்

35 காவேரியும் புல்லும் பூமியும் சந்திராதித்தவரைக்கும் புத்திரர் பவுத்திர ப

36. ாரம்பரைக்கும் ஆண்டும் அனுபோவித்தும் சீதனம் குடுத்தும் சினேகத

37. ானம் பண்ணியும் வித்தும் ஒத்திவயித்தும் உபய(ங்)குடுத்து ஆண்டு அனுபவித்

38. துக்கொள்ளக் கடவராகவும், இந்தப்படிக்கி ஏழு ஏந்தலும் கிறயசாதனம் பண்

39. ணிக் குடுத்துயிருப்பதால் நெரிஞ்சி தூத்துக் குடியேத்தி திரவியப்பிறயிர

40. ாமாயி கிறாம பரிபாலனம் பண்ணிக்கொள்ளக் கடவராகவும். யிந்தப்

41. படி நாங்கள் அனைவரும் குமுணப்பிள்ளைக்கி கிறயசாதன ப(ட்)டயம்பண்ணிக்

42. குடுத்தோம். யிந்தபடி சாட்சி பொன்னமங்கல பத்துடைய சூ

43. ரியபிள்ளை விளத்துப் பத்துடைய வெகுமானிராயர் இந்தபடி செ

44. ங்கால் பிள்ளை மண்டில்[8] கூடிய அனவரும் கொள்கிண்ட[9] பேர் விக்கி

45. ண்ட[10] பேர்களும் சொல்ல எழுதினேன் மலையாந் தவமுனி காரியத்து

46. க்கு கற்றனான[11] சின்ன ஆவுடையப்பன் கையி நெட்டெழுத்து. யிப்

47. படிக்கி-ரா-துரையவர்களுட உத்தரவின் பேரில் அறந்தாங்

48. கியிலிருக்கும் அறுனாசல பத்தர் மகன் சுப்பிரமணியன் வெட்டெ(ட)ளுத்து ஆதிகேசவர் துணை.

49. மறிக்கவொண்ணான்

50. ஆவண நயினான்

51. சின்ன ஆவண நயினான்

52. உலகுஉய்ய வந்தான்.

---

8. மன்றில் 9. கொள்கின்ற 10. விற்கின்ற 11. கர்த்தரான

9. திருப்பெருந்துறைச் செப்பேடு VII

இருக்கும் இடம்	:	திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்
அரசர்	:	பொன்னம்பலத் தொண்டைமானார்
காலம்	:	20-2-1534
மொழி	:	தமிழ்
அளவு	:	27செ.மீ. × 19 செ.மீ.

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு துளையில்லாத கோபுரக் கலசம் போன்ற 6.5 செ.மீ. உயரமுடைய அழகிய கைப்பிடியுடன் இருபுறமும் எழுதப்பட்டுள்ளது, செப்பேட்டின் தொடக்கத்தில் திருப்பெருந்துறையில் சிவபெருமான் குருந்த மரத்தின் அடியில் உயர்ந்த பீடத்தில் அமர்ந்து, பணிவாக வணங்கிச் சிவவேடப் பொலிவுடன் நின்றுகொண்டுள்ள மாணிக்கவாசகருக்கு வலக்கையில் சின்முத்திரை காட்டி உபதேசிக்கும் காட்சி அழகிய வரைகோட்டு ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது.

சிவபெருமான், மாணிக்கவாசகர் இருவருடைய மழிக்கப்பெற்ற தலையிலும் கழுத்திலும் உருத்திராட்ச மாலைகள் அழகுடன் காணப்பெறுகின்றன. இருவரும் கைகளில் கடகமும், தோள்களில் வாகுவலயமும், கால்களில் கழலும் அணிந்துள்ளனர். அவர்களின்கீழ் ஸத்யம் என்று பெரிய எழுத்துக்களில் கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது.

இரண்டாம் பக்கத்தில் செப்பேட்டுச் செய்தி முடிந்தவுடன் உள்ள வெற்றிடத்தில் 5செ.மீ உயரம் ஒரு பீடத்தின்மேல் முத்தலைச் சூலம் வரையப்பட்டுள்ளது.

ஏகப்பெருமாள் தொண்டைமானார் மகன் பொன்னம்பலத் தொண்டைமானார் அவர்கள் திருப்பெருந்துறைக் கோயிலுக்குச் சாயரெட்சை, அர்த்தசாம பூசைகளுக்கும் நெய்வேதனத்துக்கும் பிறாந்தனியைச் சேர்ந்த ஏந்தல்கள், குறிச்சிகள் ஆகியவைகளைச் சர்வமானியமாகக் கொடுத்ததை இச் செப்பேடு கூறுகிறது.

நம்மைச் சார்ந்த மனுஷர், மக்கள் எல்லோரும் இத்தர்மங்களுக்குத் தீங்கு செய்யாமல் பாதுகாக்கவேண்டும் என்று தொண்டைமானார் குறிப்பிட்டுள்ளார்.

இச் செப்பேட்டெழுத்துக்களை ஆவுடையப்ப ஆசாரி என்பவர் வெட்டியுள்ளார்.

இச் செப்பேட்டில் தொண்டைமானாரின் பல பட்டப்பெயர்களின் (விருதுகள்) சொற்களை மாற்றியும் சில புதிய பெயர்களையும் குறித்துள்ளனர்.

ஆட்டுக்கு ஆனை வழங்கும் அதுலன் (ஆட்டுக்கு ஆனை வழங்கும் பெருமாள்), சேரன் பாட செந்தமிழ் புனைந்த பெருமாள் (சேரன் கவிபாட செந்தமிழ் கொண்ட பெருமாள்), கருதும் ராசாக்கள் குலதிலகன், தன்னை அடைந்தாரைத் தான்காக்கும் அபிராமன், நடை கற்ற போதே கொடை கற்ற தீரன், ஏழு நாழிகையில் ஈழந் திறைகொண்ட பெருமாள் (ஏழு நாளையில் ஈழந் திறை கொண்டான்), தலைமலை கண்டான், பிணமலை கண்டான், முகிலின் கீழ்திரியும் இளவன்னிய மகாகண்டன் (முகிலின் கீழ்திரியும் இளவன்னியர் மீசுர கண்டன்), திருமிழலைத் திருநாடன், மல்லையாதிபதி, மயிலையாதிபதி, அவ்வைகவி கொண்டவன், சேமனை வென்ற செயதுங்கன், பட்டனுக்கு முதுகு சாய்த்தான், மறைபுத்திரர் காவலன், காஞ்சிபுராதீசுவரன் என்பன அவற்றுள் சிலவாம்.

இஃதொன்றே பொன்னம்பலத் தொண்டைமானார் அளித்த செப்பேடு ஆகும். இவ்வரசர் பெயரிலுள்ள பிற செப்பேடுகள் கல்வெட்டுக்களின் படிகளேயாகும். இரண்டிற்கும் அமைப்பில் வேறுபாடுகள் காணப்பெறுகின்றன.

குறிச்சி என்பது ஊர்ப்பகுதியையும், ஏந்தல் என்பது நீர்நிலையையும் குறிக்கும். சில இடங்களில் ஏந்தல் ஊர், இடப்பெயராகவும் மருவியுள்ளது.

மூலம்

முதல் பக்கம்

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1427 யிதன்
2. மேல்ச் செல்லாநின்ற விசைய நாம சம்வஸ்ஸரத்து உத்
3. தராயணத்து சிசிர ரிதுவில் மாக மாசத்து பூறுவபட்சத்து
4. சுக்கிரவாரமும் ஸப்தமியும் ரோகிணி நக்ஷத்திரமும் சுபே
5. யாக சுபகறணமும் பெற்ற சுபதினத்தில் ஸ்வஸ்திஸ்ரீமகா
6. மண்டலேசுவரன், அரிஅரதள விபாடன், பாசைக்கு த
7. ப்பு வராத கண்டன், மூவர(ா)யிர கண்டன், கண்டநாடு கெ
8. ாண்டு கொன்றநாடு[1] குடாதான், பூறுவ தெக்ஷிண பச்சி
9. ம உத்தர திக்குவிசயஞ் செயிது ஈழமண்டலமும்ந் தி
10. றைகொண்டருளிய ராசாதிராசன், ராசபரமேஸ்வரன்.
11. ராசகெம்பீரன், துலுக்கர்தளவிபாடன, துலுக்கர் பே
12. மாகத் தவிள்த்தான், ஒட்டியர்தள விபாடன், ஒட்டியர்
13. மோகந் தவிள்த்தான், பாண்டிமண்டல பிறிதிட்டாப
14. னாசாரியன், சோளமண்டல பிறிதிட்டாபனாசாரியன்
15. தொண்டைமண்டல துரந்தராதிபன், கீற்த்திபிறதாப
16. ன், வீரப்பிறதாபன், பூலோகவீரன், சிவபூசா துரந்திரன், சி
17. வகாரிய துரந்திரன், வடவெள்ளாறான சுந்தரபாண்டிய
18. வளநாட்டு இளங்கோளநாட்டு[2] அறந்தாங்கி அரசு, அச்
19. சமறியாதான், ஆட்டுக்கு ஆனைவளங்கு மதுலன், பே
20. சரன் பாட செந்தமிள் புனைந்த புங்கவன், கருது
21 ம் ராசாக்கள் குணதிலகன். தன்னையடைந்தாரை த
22. ான் காற்குமபிராமன். நடைகற்ற போதே குடை கத்
23. த[3] தீரன், ஏளு நாளிகையில் ஈளந் திறைகொண்ட பெ
24. ருமாள், தலைமலை கண்டான், பிணமலை கண்டான், முகி
25. லின் கீள்த்திரியும் மிளவன்னிய மகாகண்டன், திருமி
26. ளலைத் திருநாடன், மல்லையாதிபதி, மயிலையாதிபதி
27. அவ்வைக்கவி(க்) கொண்டவன், சேமனை வென்றவன், பட்
28. டனுக்கு முதுகு சாய்த்தான், மறைபுத்திரர் காவலன், அடி
29. யார் வேளைக்காறன், காஞ்சீபுராதீசுவரன், ஆளுடை

1. கொண்டநாடு 2. இளங் கோநாட்டு 3. கொடை கற்ற

30. டய தம்பிரானார் ஸ்ரீபாதபதன்,[1] ஸ்ரீமது ஏகப்பெரு
31. மாள்த் தொண்டைமானார் பொன்னம்பலத் தொண்
32. டைமானாரவர்கள் மிழலைக் கூற்றத்தில் நடுவில்க்கூ
33. த்தம்[2] தனியூர் திருப்பெருந்துறை பவித்திர மாணிக்க
34. (மான) சதுருவேதமங்கலத்து நாயனார் ஆளுடையஸ்வ
35. ாமியளுக்கு சாயரெட்சை அற்த்தசாம பூசை நெய்
36. வேதனத்துக்கு ஸகிரண்ணியோதக தானபூறுவ
37. மாக சறுவமானிய தற்ம சாஸநபட்டயம் பண்
38. ணி குடுத்தபடி தற்மசாசனமாவது பிறாந்தனி ே
39. மல்ப் படியில்ச் சேற்ந்த யேந்தகளுங்[3] குறிச்

இரண்டாம் பக்கம்

40. சிகளும் சகிரண்ணியோதக தானபூறுவமாக
41. சறுவமானியமாக தற்மத்துக்கு தாநசாசனம் ப
42. ண்ணி குடுத்தபடியினாலே பிறாந்தனி யேந்தல்க
43. ள் குறிச்சிகளுக்கும் பெருநாங்கெல்லையாவன கீள்
44. பாற்க்கெல்லையாவன பூவலூர் கண்மாயி தென்க
45. ாலில் சவளத்தான்வயல் மறுகால் ஆற்றுக்கும் பூவலூ
46. ர் தென்வயல் எல்லைக்கல்லுக்கும் மேற்க்கு, தென்பா
47. ற்க்கெல்லை பலாகொள்ளியாற்றுக்கு வடக்கு, மேல்
48. பாற்க்கெல்லை பூங்குடிக்கி கொட்டகத்துக்கும் கி
49. ளக்கு, வடபாற்க்கெல்லை கருங்காட்டுக்கு தெற்க்கு
50. ஆக யிசைந்த பெருநாங்கெல்லைக் குள்ப்பட்ட
51. பிறாந்தனி யேந்தல்களுக்கும், குறிச்சிகளுக்கும் ச
52. றுவ மானியமாக திருநாமற்றுக்[4] காணியாகச் சகல
53. இறைவரி முதலான ஊழியமுள்பட சகலமும் ச
54. றுவமானியமாகக் கட்டளையிட்டோம். ஆளு
55. டைய நாயனார் ஸ்ரீபண்டாரக் கடவுளருக்கு ஆச
56. ந்திராக்கஸ்தாயியாக அனுபவித்துக்கொள்ளக் கடவ்
57. வாராகவும், நம்மைசாற்ந்த மனுசர் மக்களெல்லோரும்
58. யிந்த தற்மத்துக்கு ஒரு சில்லறையளும் வராமல் தற்மத்தை
59. த பரிபாலனம்பண்ணி உத்திரோத்திரமாக நடப்பிவிக்க

1. ஸ்ரீபாத பக்தன் 2. கூற்றம் 3. யேந்தல்களுங் 4. திருநாமத்துக்

60. க் கடவோராகவும். யிந்தப்படிக்கு ஆளுடைநாயனா
61. ர் ஸ்ரீபண்டாரக் கடவுளருக்கு மனப்பூறுவமாக அபிமானி
62. ச்சு சறுவமானிய பட்டையம் பண்ணிக்கொடுத்தோம்
63. யிந்த தற்மத்தை பரிபாலனம் பண்ணினவர்கள் கெங்
64. கைக்கரையிலும் ஆதிசேதுவிலும் புண்ணியக்ஷேத்
65. திரங்களிலும் அனேகங்கோடி பிறமபிறதிட்டையும் அ
66. னேகங்கோடி சிவலிங்கபிறிதிட்டையும் பண்ணி
67. ன தற்மத்தையடைய்வாராகவும். யிந்த தற்மத்துக்கு
68. யாதாமொருவர் விகாதஞ் சில்லறையள் பண்ணினவ
69. ர்கள் கெங்கைக் கரையிலும் ஆதிசேதுவிலும் அனேக
70. ங்கோடி கோவதை பண்ணின தோஷத்திலும் மாதாபி
71. தாவை வதைசெயித தோஷத்திலும் பிறமகத்தி
72. பண்ணின தோஷத்திலும் போகக்கடவோராகவும்.
73. இந்தப்படிக்கு தற்மத்துக்கு தற்மசாசன பட்டயம்
74. பண்ணிகொடுத்தோம். ஏகப்பெருமாள்த் தொண்டைமா
75. னார் பொன்னம்பலத் தொண்டைமானாரவர்கள் ஸ்ரீஆ
76. ளுடைய நயினார் ஸ்ரீபண்டாரக் கடவுளருக்கு. யிந்
77. தபடிக்கி ஆவடையப்பாசாரி வெட்டெளுத்து

10. திருப்பெருந்துறைச் செப்பேடு VIII

இருக்கும் இடம்	**: திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்.**
அரசர்	**: ரகுநாதத் தொண்டைமானார்**
காலம்	**: 14-1-1563**
மொழி	**: தமிழ்**
அளவு	**: 23 செ.மீ. × 15.5 செ.மீ.**

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேட்டின் மேல்பகுதியே கைப்பிடிபோல அமைக்கப்பட்டுள்ளது. மேல்பகுதியில் உள்ள துளையில் ஒரு வளையம் கோர்க்கப்பட்டுள்ளது.

செப்பேட்டின் முன்பக்கம் மேல்பகுதியில் திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகப் பெருமானுக்குச் சிவபெருமான் உபதேசம் செய்யும்

காட்சி மிகவும் சிறப்பான முறையில் வரைகோட்டு ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது.

குருந்த மரத்தின் அடியில் அழகான பீடம் ஒன்றில் சிவபெருமான் கம்பீரமாக அமர்ந்துள்ளார். தலையில் குடுமி காணப்படுகிறது. கழுத்து, மார்பு. கை, கால்களில் ஆபரணங்கள் அணிந்துள்ளார். இடுப்பில் ஆடையும் உள்ளது. வலக்கை சின்முத்திரையுடன் உபதேச நிலையில் உள்ளது. இடக்கையில் ஓலைச்சுவடி உள்ளது. கீழே தரையில் குருந்தமரத்தின் பின்புறம் இரு அடியவர்கள் அமர்ந்துள்ளனர். உச்சிக்குடுமியுடன் காணப்படும் அவர்கள் இருவர் கைகளிலும் நீண்ட ஓலைச்சுவடிகள் உள்ளன. அவர்கள் இருவரும் சிவபெருமான் உபதேசம் செய்யும் காட்சியைப் பார்த்தவண்ணம் உள்ளனர். அவர்கள் குருவுக்குத் துணைசெய்யும் கற்றுச்சொல்லிகள் போலும்.

சிவபெருமானுக்கு எதிரில் கோவணத்துடன் இருகரம் கூப்பி வணங்கும் நிலையில் நின்ற திருக்கோலத்தில் மணிவாசகப் பெருந்தகையார் நின்று கொண்டுள்ளார். மாணிக்கவாசகருக்குச் சிவபெருமான் அருள்பாலித்தது திருப்பெருந்துறையிலே குருந்தமரத்தடியில்தான் என்பதை இச் செப்பேட்டுக் காட்சி மிகத் தெளிவாக விளக்குகிறது. செப்பேட்டில் செழுமலர்க் குருந்தில் எழுந்தருளியிருக்கப்படாநின்ற ஆவுடைய பரம சுவாமியார் என்று சிவபெருமான் கூறப்படுகிறார்.

செப்பேட்டின்இரண்டாம் பக்கத்தில் நடுவே பின் இரு கைகளில் சங்கு சக்கரத்துடனும் முன்னிரு கரங்களில் புல்லாங்குழலை ஏந்தி வாசிக்கும் நிலையிலும் திருமால் அழகிய வரைகோட்டு ஓவியமாக வரையப்பட்டுள்ளார். தலையில் அழகான கீரிடம் காணப்படுகிறது. திருமால் இடுப்பில் வட்டுடை அணிந்துள்ளார். ஆடை இருபுறங்களிலும் அழகாகத் தொங்குகிறது. கால்களை மடித்துத் திருமால் நிற்கும் நிலை மிக அழகுடன் வரையப்பட்டுள்ளது.

திருமாலின் இருபுறங்களிலும் இரண்டு மாடுகள் நிமிர்ந்து நின்று 'கோவிந்தன் குழல் கொண்டு ஊதுவதை' உற்றுக் கேட்கிறது. இது இடையர் சமூகப் பெருமக்கள் அளித்த செப்பேட்டுக் கொடை ஆதலால் அதற்கேற்ப இக்காட்சி வரையப்பெற்றுள்ளது.

பொதுவாகக் கூறப்பெறும் அரசர்களின் புகழ்மொழிகட்குப் பின்னர் சில விசயநகர அரசர் பெயர்கள் கூறப்பெறுகின்றன. ராயர் காரியத்துக்குக் கர்த்தரான அச்சுதப்ப நாயக்க அய்யனவர்களின்கீழ் ஆதொண்டைமானார் வம்சத்தில் ரகுநாதத் தொண்டைமானாரவர்கள் ஆண்டுவரும் நாளில் 1563ஆம் ஆண்டு 56 தேசத்தில் இருக்கும் நந்தகோபாலர் அனைவரும் (இடையர்கள்) சதுர்வேதமங்கலம் சிவபுரம் ஆன திருப்பெருந்துறைச் சிவபெருமாள் ஆவுடையடபரம சுவாமிகளுக்கு அபிடேகம், நெய்வேத்தியம், திருமாலை, திருவிளக்கு, திருக்கட்டளை. திருமண்டபம், திருநந்தவனம். திருமடம் இவைகட்காக அளித்த கொடையை இச்செப்பேடு கூறுகிறது. இச்செப்பேட்டின் மூலம் அறந்தாங்கித் தொண்டைமானார் தஞ்சை நாயக்கர் ஆட்சிக்குட்பட்டிருந்தது தெரியவருகிறது.

நந்தகோபாலர்களின் சிறப்புக்கள் பல இச்செப்பேட்டில் கூறப்படுகின்றன.

பாவம் இல்லாத குலத்தார்
மாயனை வளர்த்தவர்
ஆயர் குலத்தோர்
அகதிகவி கொண்டவர் (அதிககவியாக இருக்கலாம்)
ஆயர்பாடித் தலைவர்
பொங்கிய மதுரையில் சங்கத்தை வென்றவர்
முல்லைக்கு அதிபர்
முல்லையந்தார் மார்பர்
கெருடக்கொடியாதிபர்
அவ்வையாடல் கொண்டோர்
துர்க்கை பாத சேகரர்
முருகனுக்குக் குலவை அளித்தவர்
அரசர் மூவருக்கு அன்னங்கொடுத்தவர்
சோழனுக்கு முடிசூட்டினவர்
தக்கனுக்கு கிறவிடை கொடுத்தவர்
கோகுலம் காவலர்

நந்தகோபாலர்களோடு போவிண்டமாரும் சேர்ந்து கொடையளித்துள்ளனர்.

திருப்பெருந்துறையிலிருக்கும் நயினார் அடியாரில் ஏகாம்பர பிறைசூடும் பெருமாள் பண்டாரம் என்பவரிடம் கொடை அளிக்கப்பட்டது.

நந்தகோபாலர் குடிக்கு ஒருபணமும், எழுத்தாணிக்கு ஒருபணமும், கயிறு கலசம் பிடித்தவன் அரைப்பணமும், பெரியவாசல் பல்லக்குக்கு சனத்துக்கு ஒருபணமும், சில்லறைவாசல் ஐந்துபணமும், பாளையக்காரர் வாசல் பத்துப் பணமும், திருக்கலியாணத்துக்கு மாப்பிள்ளை ஒருபணமும், பெண்வீடு ஒருபணமும் சகலரும் சந்திரசூரியர் உள்ளவரை பரம்பரையாகக் கொடுக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இக்கொடையைப் பாதுகாத்தவர்கள் அறுபத்துமூவரும், மாணிக்கவாசகரும் சண்டேசுரப் பிள்ளையாரும், பன்னிரு ஆழ்வாரும் பெற்றபேறு பெறுவர் என்றும், தீங்கு செய்தோர் காசி கங்கை பிரயாகை திருவேணி சங்கமத்தில் சேது தனுஷ்கோடியில் காராம்பசுவையும் பிராமணரையும் மாதா பிதாவையும் குருக்களையும் கொன்ற தோஷம் அடைவர் என்றும் கூறப்பட்டுள்ளது.

இச்செப்பேட்டை எழுதியவர் திருப்பெருந்துறை மாணிக்கக்கூத்த முதலியார் என்பவர்.

செப்பேட்டின் கடைசியில் சில பகுதிகளை அழித்து அவ்விடத்தில் 'பணம் குடாதபேரையும் தற்ம்மத்திலே யீதைபாதை வராமல் நடப்பிக்கவும்' என்ற தொடர் எழுதப்பட்டுள்ளது. இத்தொடர் சற்றுப் பிற்காலத்து எழுத்தாகக் காணப்படுகிறது. இக்கொடை கொடுக்க முடியாதவர் சார்பில் யாரோ எழுதியிருக்கவேண்டும்.

மூலம்

முதல் பக்கம்

1. ஸ்வஸ்திஸ்ரீமந் மகாமண்டலேஸ்வரந், அரியராயதள வி
2. பாடந், பாஷைக்குத் தப்புவராயிர கண்டன், மூவராயர்
3. கண்டன், கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடாதா
4. ன், பூர்வ தக்ஷண பச்சிம உத்தர ஸப்த ஸமுத்திராதிபதி, ஸம்
5. மண்டலமுங் கொண்டு (ஈ) ழுந் திறகொண்டருளிய ரா
6. ஜாதிராஜந், ராஜபரமேஸ்வரந், ராஜமாத்தாண்டந், ரா
7. ஜகெம்பீரந், ராஜாக்கள் தம்பிரான், சகலகுண சம்

8. பந்நந், சப்தபாஸராயந், சகலகலா ப்ரவீணன், ஸங்கீத
9. சாயுஜ்ய வித்யாவினோதன், கெடிகோட்டு மல்லன், கெடி கோ
10. ட்டு ராயந், துலுக்கர்தள விபாடன், துலுக்கர்மோகந் தவிழ்
11. த்தான், வடவரசர் மணவாளர், இளைவரசர் குலைகாறன், ராஜ
12. ாதிராசன், ராஜபரமேஸ்வரன், மேதினியீஸ்வர கண்டந்.
13. கட்டாரி சாளுவன். ஒட்டியர்தள விபாடன், ஒட்டியர்மே
14. ாகந் தவிழ்த்தான், வீரப்ரதாபன், அதல விதல ஸுதல
15. நிதல ரசாதல மகாதல பாதாள வேழு லோக பிரச
16. ண்டன், பாண்டிமண்டல பத்மாசனத்தோன், சோழமண்
17. டல ஸ்தாபனாசாரியன். தொண்டமண்டல பிரதிஷ்டாபனாச
18. ாரியன், மத்தகெஜ பரி சுத்த நகுலன், கிரிதுர்க்க வனதுர்க்க
19. ஜலதுர்க்க பரராசகேஸரி அஸ்வபதி கெசபதி தனபதி
20. நரபதியான குமார மல்லிகாற்சுன ராயர், விரூபா
21. க்ஷிராயர், குமார மகாராயர், அதிபல ராயர், ஸ்ரீ வி
22. ஷ்ண ராயர், தேவ ராயர், அச்சுததேவ மஹாராயர், தம்ம
23. ராயர், ஸதாசிவ ராயர், கிருஷ்ணதேவ மஹாராயர், ராமதே
24. வ மஹாராயர், பிருதிவி ராஜ்யம்ண்ணி அருளாநின்ற
25. சகாப்தம் 1505 இதன்மேல்ச் செல்லாநின்ற பிர
26. மோதூத்த வருஷம் தைய் மீ 17 உ குருவாரமும் அனுஷ ந
27. க்ஷத்திரமும் பஞ்சமியும் சுபநாம யோகமும் பெற்ற
28. சுபதினத்திலே ராயர் காரியத்துக்கு கற்த்தரான அச்
29. சுதப்ப நாயக்கர்அய்யனவர்கள், ஆதொண்டைமா
30. னார் வங்கிஷத்தில் ரெகுனாதத் தொண்டைமானாரவர்க
31. ள் ராஜ்யம்பண்ணி வருகுற னாளையில் அம்ன்பத்தாறு
32. தேசத்தில் இருக்கப்பட்ட பாவமில்லாத குலத்தார், மா
33. யனை வளத்தவர், ஆயகுலத்தோர், யகதிகவி கொ

இரண்டாம் பக்கம்

34. ண்டவர், ஆ(ய)ற்பாடித் த(லை)லவர், பொங்கிய மதுரையில்ச் சங்
35. கத்தை வென்றவர், முல்லைக்கதிபர், முல்லையந்தார் மா
36. ர்பர், (கெருடக்) கெருடக்கொடி யாதிபர், அவ்வை பாடல் கெ
37. ாண்டோர், துற்கைபாத சேகரர், முருகனுக்கு குலைவை ய
38. ளித்தவர், அரசர் மூவருக் கன்னாங் கொடுத்தவர், சோழனு
39. க்கு முடிசூட்டினவர், தக்கனுக்குக் கிறவிடை கொடுத்தவர்,

40. கோகுலம் காவலராகிய அன்பத்தாறு ராஜ்யத்தில் இருக்கு
41. ற நந்த கோபாலர் அனைவரும் போவிண்டமாரும்
சதுர்வேத மங்
42. கலம் சிவபுரமான திருப்பெருந்துறையிலிருக்கும் நயினாரடியாரில்
43. ஏகாம்பர பிறைசூடும் பண்டாரத்துக்கு தற்ம்ம சாதனப்பட்டை
44. யம் குடுத்த பரிசாவது சகல உறவின்முறையார் புண்ணியமா
45. க செழுமலற் குருந்தில் எழுந்தருளி இருக்கப்படான்ற[1]
ஆவுடைய பர
46. மசுவாமியார்கது அபிஷேகம் நெய்வேத்தியம் திருமாலை
திருவிளக்கு திருக்க
47. ட்டளை திருமண்டபம் திருனந்தவன திருமடமும்
கட்டளையிட்ட படியினாலே
48. ல நடக்கும் சுவத்தியத்துக்கு குடிக்கு ஒருபணமும்,
எழுத்தாணிக்கு ஒருப
49. ணமும், கவுறு கலசம் பிடித்தவன் அரைப்பணமும், பெரிய
50. வாசல் பல்லக்குக்கு சனுத்துக்கு ஒருபணமும், சில்லறைவாசல்
51. அஞ்சுபணமும், பாளைக்காறர் வாசல் பத்துபணமும், திருக்கலியா
52. ணத்துக்கு மாப்பிள்ளை ஒருபணமும், பெண்வீடு
ஒருபணமும், சோ
53. பனத்துக்கு ஒருபணமும், சீமந்த கலியாணத்துக்
கொருபணமும், இ
54. ந்தப்படிக்கு சகலரும் குடுக்கக் கடவராகவும். இந்தப்படிக்கு தி
55. ருமாலை (திருமாலை) திருவிளக்கு திருநந்தவனம் திருமண்
56. டபம் திருமடமும் சந்திராதித்த வரைக்கும் புத்திற பவுத்துற பா
57. ரம்பரையும் நடப்பிச்சுக் கொள்ளக் கடவராகவும். இந்த தற்ம்
58. மத்தை யாதாமொருவர் பரிபாலனம் பண்ணன[2] பேர்கள்
59. அறுவத்து மூவரும் மாணிக்கவாசகரும் சண்டேசுரப் பிள்
60. ளையாரும் பன்னி(த்தி)ரு ஆழ்வாரும் பெற்றபேறு பெறக்கடவர
61. ாகவும். இந்த தற்மத்துக்கு விகாதம் பண்ணின பேர்கள் காசி
62. கெங்கை பிரயாகை திருவேணி சங்கமத்தில் சேது தனுஷ்க்
63. கோடியில் காராம்பசுவையும் பிராமணரையும் மாதாபித
64. ாவையும் குருக்களையும் கொன்ற தோஷத்திலே போக கட
65. வோராகவும். இந்த படிக்கு நந்த கோபாலரும் போவிண்

1. இருக்கப்படா நின்ற
2. பண்ணின

66. டமாரனைவருஞ் சொல்ல இந்த தற்ம சாதனப் பட்டையம்
67. எழுதினேன் திருப்பெருந்துறை மாணிக்கக்கூத்த முதலி
68. யார் எழுத்து. உ சுபமஸ்து. இந்த பட்டையப் படிக்கு யெ
69. ங்கள்ச் சாதி புத்திரான கண்டியத் திருக்கோடி தேவரம்ப
70. ம் குடாத பேரையும் தற்ம்மத்திலே யீதை பாதை
71. வராமல் நடப்பிக்கவும் உ.

11. திருப்பெருந்துறைச் செப்பேடு IX

இருக்கும் இடம்	: திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை தஞ்சை மாவட்டம்.
அரசர்	: மாறவர்மன் ஸ்ரீவல்லபதேவர்–மெய்நின்ற பெருமாள் தொண்டைமானார்
காலம்	: 16ஆம் நூற்றாண்டு
மொழி	: தமிழ்
அளவு	: 32 செமீ. × 9 செ.மீ

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு நீண்ட சதுர வடிவில் ஈ கப்பிடியும் துளையும் இன்றி முற்காலப் பாண்டியர் செப்பேட்டு வடிவில் அமைக்கப் பெற்றுள்ளது. இரு பக்கங்களில் எழுதப்பெற்றுள்ளது.

பாண்டியன் மாறவர்மன் ஸ்ரீவல்லபதேவர் ஆட்சிக்காலத்தில் வடவெள்ளாறான சுந்தரபாண்டிய வளநாட்டு அறந்தாங்கி அரசு மெய்நின்ற பெருமாள் தொண்டைமானார் அதிகாரம் செய்யும்போது மிழலைக் கூற்றத்து விக்கிரமபாண்டிய நல்லூர் பொன்பற்றியுடையாரான கவரிப் பெருமாள் உலகுடையார் பிள்ளையார் பல்லவராயர் என்பவர் திருப்பெருந்துறைக் கோயிலுக்குச் சுந்தரபாண்டிய வளநாட்டுத் தனியூர் திருப்பெருந்துறையான பவித்திர மாணிக்கச் சதுர்வேதி மங்கலத்துக் கீழ்ப் பிடாகை மாவயலான சுந்தரபாண்டிய நல்லூரை விலைக்கு வாங்கி அளித்து விலைப்பிரமாணம் பண்ணின செய்தி இச்செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது.

சுந்தரபாண்டிய நல்லூர் எல்லைக்குட்பட்ட நஞ்சை, புஞ்சை, காடு, களம், நத்தம், ஊறணி, குளவாய்த்தலை, சுடுகாடு, படுதுறை,

மேல்நோக்கிய மரம், கீழ்நோக்கிய கிணறுட்பட அனைத்தும் ஆகவராமன் பணம் 100 கொடுத்து வாங்கிச் சர்வமானியம் திருநாமத்துக்காணியாகத் திருப்பெருந்துறைக்கு அளிக்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம் குறும்பூர் சித்தநாதேசுவரர் கோயிலில் மாறவர்மன் திருபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீவல்லபதேவரின் 5ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்றில் அறந்தாங்கி அரசு மெய்நின்ற பெருமாள் என்பவர் குறிக்கப்படுகிறார்.[1] புதுக்கோட்டை மாநிலக் கல்வெட்டுத் தொகுதியிலும் மாறவர்மன் ஸ்ரீவல்லபதேவர் என்பார் குறிக்கப்படுகிறார்.[2] மாறவர்மன் என்ற அடைமொழி யின்றியும் சில சீவல்லதேவர் கல்வெட்டுக்கள் புதுக்கோட்டைப் பகுதியில் காணப்படுகின்றன.[3] அவ்வரசர்களுள் எவரேனும் ஒருவர் இச் செப்பேட்டில் குறிக்கப்பெற்றிருக்கலாம்.

ஆகவராமன் பணம் ஸ்ரீவல்லபனின் 25ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் திருமீயச்சூரிலும்,[4] விசயநகரமன்னர் அரியப்ப உடையார் காலத்தில் திருவாய்ப்பாடியிலும்[5] குறிக்கப் பெறுகிறது.

ஆகவராமன் – சடையவர்மன் ஸ்ரீ வல்லபன்[6]

மூலம்

1. ஸ்வஸ்திஸ்ரீ கோமாறபன்மரான ஸ்ரீவல்ல தேவற்குயாண்டு பத்தாவதினெ
2. திர் மூன்றாவது பூர்வபக்ஷத்து மேஷ ஞாயிற்று அஷ்டமியும் பெற்ற ரேவதிநாள். வட
3. வெள்ளாறான சுந்திரபாண்டிய வளனாட்டு அறந்தாங்கி அரசு மெய்நின்ற
4. பெருமாள் தொண்டைமானார் கவரிப்பெருமாள் மிழலைக்கூற்றத்து செய்யான்

---

1. ARE 227 of 1942
2. புதுக்கோட்டை சமஸ்தான கல்வெட்டுகள் 635, 636
3. மேலது 637 - 645
4. தெ.இ.க.தொகுதி.8 க.எண் 243.
5. ARE 81 of 1932
6. என்.சேதுராமன் பாண்டியர் வரலாறு ப.171, 172

5. முதலி விக்கிரபாண்டியநல்லூர்ப் பொன்பற்றியுடையாரான உலகுடை
6. யார் பிள்ளையாரான பல்லவராயனேன் காணி விலைப்பிரமாணம் பண்ணிக் குடுத்த
7. பரிசாவது இந்நாட்டுத் தனியூர் திருப்பெருந்துறையான பவித்திர மாணிக்க
8. சதுர்வேதி மங்கலத்து கீழ் பிடாகையாந மாவயலான சுந்தர பாண்டிய நல்லூ
9. ர் விற்பதற்கு இசையிந்து பெருநான்கெல்லை கீழ்பாக்கெல்லை கருங்காட்டுக்குள
10. நீர்நிலைக்கு மேற்கு, தென்பாற்கெல்லை பூங்குடி எல்லை (க்கு) வடக்கு, மேல்பாற்கெல்
11. லை கண்ணன் தோட்டத்துக்குக் கிழக்கு, வடபாற்கெல்லை வெள்ளாற்றுக்குத்
12. தெற்கு ஆக இசைந்த பெருநான்கெல்லைக்கு உட்பட்ட நஞ்சை புஞ்சை காடு கள
13. ம் நத்தம் ஊரணி குளவாய்த்தலை சுடுகாடு படுதுறை மேல்நோக்கிய மரமு கீழ்
14. நோக்கிய கிணறும் மற்றும் எப்பே(ர்ப்)பட்ட சகல சமுதாய பிராப்திகளும் விற்
15. பதற்கு இசைந்து விலை நிச்சையித்த ஆகவராமன் பணம் 100. இப்பணம் நூற்றுக்கும் விற்ற
16. மாவயலுக்கு சர்வமும் சர்வ மான்னியமாக திருநாமத்துக்குக் காணியாக விற்று வி
17. லைப் பிறமாணம்பண்ணிக் குடுத்தோம். ஆளுடைய தம்பிரானார்க்கு சகிர்ரோ
18. ண்யாஉதக தாராபூர்வமாக தானம் பண்ணிக்குடுத்தேன் மெய்நின்ற பெருமாள்
19. தொண்டைமானார் கவரிப் பெருமாளேன் உலகுடையார் பிள்ளையார் பல்லவராயரேந். இ
20. ப்படிக்கு செம்பிலும் கல்லிலும் வெட்டிக் கொள்ளவும். கவரிப்பெருமாள் ஆளுடைய
21. தம்பிரானார்க்கு உதகம் பண்ணிக் குடுத்த மாவயல்லுக்கு அகிதம் பண்ணிநவர்கள் கங்

22. கைக் கரையிலே கபிலையும் கார் பசுவையும் குருவையும் பிராமணரையு
23. மாதா பிதாவையும் கொன்ற பாவத்தில் போவார்களாகவும்.

12. களக்குடிச் செப்பேடு

இருக்கும் இடம்	**: திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்**
அரசர்	**: ஆளுடைய ரகுநாத வணங்காமுடித் தொண்டைமானார்**
காலம்	**: 1603**
மொழி	**: தமிழ்**
அளவு	**: 23 செ.மீ. × 17 செ.மீ.**

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேட்டைச் சுற்றிலும் நான்கு பக்கங்களிலும் இரு இணைக்கோடுகள் அழகாக வரையப்பட்டுள்ளன. வளைந்த அடுக்கடுக்கான இரு இணைக்கோடுகள் கைப்பிடியிலும் வரையப்பட்டுள்ளன. கைப்பிடி மிகவும் அழகிய முறையில் அமைக்கப்பட்டுள்ளது. எழுத்துக்களும் பெரியனவாக அழகாக வெட்டப்பட்டுள்ளது. சில சொற்கள் பிழையாகப் பொறிக்கப்பட்டுள்ளன. பிள்ளையார் சுழியுடன் இச்செப்பேடு தொடங்குகிறது. காலக்குறிப்பில் சக ஆண்டும், தமிழ் ஆண்டும் உத்தராயணமும் மட்டுமே குறிக்கப்பட்டுள்ளது. பிற செப்பேடுகளைப் போல் முதலிலோ அல்லது இடையிலோ காலக் குறிப்பைக் குறிக்காமல் இறுதியில் குறிக்கப்பட்டுள்ளது. கொடையைக் காப்பது பற்றிய ஒரு வடமொழிச் சுலோகத்துடன் இச்செப்பேடு முடிவடைகிறது.

அறந்தாங்கி அரசு தொண்டைமானாரில் ஆளுடைய ரெகுனாத வணங்காமுடித் தொண்டைமானார் அவர்கள் திருப்பெருந்துறை ஆளுடைய பரம சுவாமிகளுக்குத் திருமிழலைநாடன்கட்டளைக் காலைச்சந்தியின் இரண்டாங்காலப் பூசைக்கு அம்பலத்தாடும் பண்டாரம் அவர்கள் வசம் அரசர்குளப்பற்றில் களக்குடி என்ற ஊரை 1603ஆம் ஆண்டு சர்வமானியமாக அளித்ததை இச்செப்பேடு கூறுகிறது.

களக்குடியின் எல்லைகளில் காரைக்காடு, கீழ்க்குடி, ஆமாஞ்சி, மானவநல்லூர், பொதுக்காடு, அரியாமொழி குல்லாரிவயல், சீனமங்கலம், நாகுடி ஆகியன இருந்தமை குறிக்கப்படுகிறது.

அம்பலத்தாடும் பண்டாரம் அவர்கள் மாணிக்கவாசகர் தோற்றுவித்த திருமடத்திற்குத் தலைமை தாங்குவாருக்குள்ள பொதுப்பெயர். அம்பலத்தாடும் பண்டாரம் அவர்கள் பெயரில் பாண்டிச்சேரி, கடலூர், மயிலாடுதுறை, பண்ருட்டி, சிதம்பரம் ஆகிய ஊர்களில் திருமடங்கள் உள்ளன. சிதம்பரத்தில் அம்பலத்தாடுவார் மடம் உள்ள இடத்தில்தான் திருவாசகம் எழுதப்பட்டது என்பர்.

மூலம்

முதல் பக்கம்

1. உ ஸ்வஸ்திஸ்ரீ மகாமண்டலேசுவரன், அரிகரதள வி
2. பாடன், பாசைக்கி தப்புவராத கண்டன், க
3. ண்டநாடு கொண்டு கொன்றநாடு[1] குடாதான், ரா
4. சாதிராசன், ராசபரமேசுவரன், ராசமாற்த்தா
5. ண்டன், ரண சுத்தவீரன், குடைக்கி கறுணன், அழ
6. குக்கு மன்மதன், ஆறிலொரு கடமை கொண்ட
7. சேர சோள பாண்டியன், சிவபூசா துரந்திரன்.
8. சிவகாரிய துரந்திரன், வடவெள்ளாறான சுந்
9. தர பாண்டிய வளநாட்டு இளங் கோளநாட்டு[2]
10. அறந்தாங்கி அரசு, ஆளுடைய தம்பிரானார்
11. ஸ்ரீபாதபக்த(ர)ரான ஸ்ரீ ஆளுடைய ரெகுநாத வண
12. ங்காமுடித் தொண்றைமானாரவர்கள்[3] திரு
13. ப்பெருந்துறை ஆளுடைய பரமசுவாமியா
14. ருக்கு திருமிழலைநாடன் கட்டளைக் காலசெ
15. ந்தி யிரன்றாங்[4] கால பூசைக்கி அம்பலத்த
16. ாடும் பண்டாரம் பாரிசமாக சகிமுறணி
17. ய உதக தாராபூறுவமாக சறுவமா

---

1. கொண்டநாடு
2. இளங்கோநாட்டு
3. தொண்டைமானாரவர்கள்
4. யிரண்டாங்கால

18. ணியமாக தன்னம்[5] பண்ணி குடுத்தபடி.
19. அரசர்குளப் பற்றில் களக்குடிக்கி நான்
20. ங்கெல்லையாவன கீழ்பாற்க் கெல்
21. கயாவது காரைக்காட்டுக்கும் கீழ்க்குடி
22. க்கும் மேற்க்கு, தென்பாற்க்கெல்கையா
23. வது ஆமாஞ்சிக்கும் மானவ நல்லூருக்
24. கும் பொதுக்காட்டுக்கும் வடக்கு, மே
25. ல்பாற்க்கெல்லையாவது அறியாமெ
26. ாளி குல்லாரி வயலுக்கும்க் கிழக்கு, வட
27. பாற்க்கெல்லையாபது சீனமங்கலத்
28. துக்கும் நாகுடிக்கும் காரைக்காட்டுக்கு
29. ம் தெற்க்கு யிந்த பெருநாங்கெல்லைக்

இரண்டாம் பக்கம்

30. குள்பட்ட களக்குடி கிறாமம் சற்வமாணியம
31. ாக தானம்பண்ணிகுடுத்தோம். ஆசந்திராக்க
32. த்தாயியாகயான்று[6] அனுபவித்துக் கொள்ளுவ
33. ாராகவும். யிந்த தற்மம் பரிபாலனம் பண்ணி
34. னவற்களுக்கு கெங்கைக்கரையிலும், ஆதி சே
35. சதுவிலும், ஆயிரம் சிவலிங்க பிரதிட்டை
36. டயும் ஆயிரம் கோதானம் பண்ணின பல
37. னை அடைவாராகவும். யிந்த தற்மத்தக்கு ய
38. ாதாமொருவர் அகுதம் நினைத்தவர்களுக்கு
39. கெங்கைக் கரையிலும், ஆதி சேதுவிலும்
40. ஆயிரம் கோவதையும் ஸ்ரீவதையும் செ
41. யித தோஷத்தில்ப் போக கடவோ
42. ராகவும். சகாற்த்தம் 1525க்கு ஸ
43. காத்தம் மேல்ச் செல்லாநின்ற பவ ஸம்
44. வஸ்ஸரத்து உத்தராயணத்தில், ஸ்வற்
45. த்தாத்வி குணம் புந்யம் பரதத்தாநு பால
46. நம் பரதத்தாப ஹாரேண ஸ்வற்தத்த
47. ா நிஷ்பலம் பவேது.

5.தன்மம் 6.ஆண்டு

13. கணக்கன்வயல் செப்பேடு

இருக்கும் இடம்	: திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்
அரசர்	: திருமலைச் சேதுபதி காத்த தேவர்–இரகுநாதத் தொண்டைமானார், ஏகாம்பரத் தொண்டைமானார்
காலம்	: 15–6–1654
மொழி	: தமிழ்
அளவு	: 21 செ.மீ. × 11 செ.மீ

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு கைப்பிடி. துளை முதலியன இல்லாமல் முற்காலச் சோழர், பாண்டியர் செப்பேட்டு அமைப்பில் உள்ளது. பிள்ளையார் சுழி மட்டும் தொடக்கத்தில் காணப்படுகிறது. இச்செப்பேட்டை வீரப்பிள்ளை ஆவான் என்பவர் எழுதியுள்ளார்.

திருமலைச்சேதுபதி காத்ததேவர் அவர்களின் காரியத்துக்குக் கர்த்தரான அட்டவணை வேலப்பிள்ளை மகன் குமாரசாமிபிள்ளை மணலூரில் இருந்தவர். அவருக்கு அறந்தாங்கியிலிருக்கும் பிள்ளைப் பேரில் சுவன்காரித்தேவன், சிந்தான் புலியத்தேவன் இருவரும் தங்கள் காணிபாட்சியான கணக்கன்வயல் என்ற நிலப்பகுதியை மதுரை மின்னல்பணம் 76க்கு விற்பனை செய்த விவரத்தை இச்செப்பேடு கூறுகிறது.

கணக்கன்வயலுக்கு எல்லைகளாகப் பேசமங்கலக்குளம், ஆயித்தப்பட்டி, நாயிலிவயல், நெட்டி ஏம்பல் கருங்குழித்தாவு ஆகியன கூறப்படுகின்றன.

நிலவிற்பனை அறந்தாங்கி நாட்டார் முன்பாகவும், திருப்பெருந்துறை பலநடுவர் முன்பாகவும் நடைபெற்றது. நில உடைமையாளர் 'கொள்வார் உளரோ' என்று முற்கூற வாங்குபவர் பிற்கூறும் பழங்கால விற்பனை முறை பின்படுத்தப்பட்டுள்ளது. 76 பொன்னையும் எல்லோருக்கும் காட்டி அவையில் ஏற்றி அளிக்கப்பட்டது. வாங்கியோர் ஆண்டு அனுபவித்தும் விற்றும் ஒற்றிவைத்தும் சீதனங்கொடுத்தும் எப்படி வேண்டுமானாலும் நிலத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது.

இந்நிலம் திருப்பெருந்துறைக் கோயிலுக்குத் திருவனந்தல் கட்டளைக்கு வாங்கியோரால் கொடையளிக்கப்பட்டது. ஆடிய பாதபண்டாரத்தின் கட்டளைக்கு ராவுத்த பண்டாரத்தின்வசம் நிலம் அளிக்கப்பட்டது.

விற்ற பணம் 76 பொன்னில் விற்பனையாளர் இருவரும் பெற்றுக் கொண்டது 26 பொன்தான். மீதி 50 பொன் ஏகாம்பரத் தொண்டைமானார் என்பவருக்கு அளிக்கப்பட்டது. அதனால் ஏகாம்பரத் தொண்டைமானார் அப்பகுதி நிலங்களுக்கு உரியவர் என்றும் அனுபவ உரிமை மட்டும் சுவன்காரித் தேவனுக்கும், சிந்தான் புலியத்தேவனுக்கும் உள்ளதெனவும் அறிகிறோம்.

இவ்விற்பனைக்கும், அனுபவிக்கும் உரிமைக்கும் யாரேனும் இடையூறு செய்தால் திருமலைச் சேதுபதி காத்ததேவரின் காரியத்துக்குக் கர்த்தரான அட்டவணைப் பிள்ளைமாரும், ரகுநாதத் தொண்டைமானாரின் காரியத்துக்குக் கர்த்தரான பாண்டித்தேவனும் தர்மத்தை நிலைநாட்ட வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி ஆட்சியாளர் ரகுநாதத் தொண்டைமானார் என்பதும்அவர் திருமலை சேதுபதி காத்த தேவருக்கு உட்பட்டு ஆட்சி செய்தார் என்பதும் தெரிகிறது.

சேதுபதி-அறந்தாங்கித் தொண்டைமானார் தொடர்பை விளக்கும் இச் செப்பேடு மிகவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. ஏகாம்பரத் தொண்டைமானார் நில உரிமையாளராகவும், இரகுநாதத் தொண்டைமானார் அதிகாரம் செய்பவராகவும் குறிக்கப்பெறுவதால் இச்செப்பேடு தொண்டைமானார் செப்பேடுகளில் ஒன்றாகக் கருதப்பட்டு இத்தொகுதியில் சேர்க்கப்பெற்றது.

மூலம்

முதல் பக்கம்

1. உ சகாப்த்தம் 1575 இதன்மேல் செல்லாநின்ற செய ஆனி மீ 17உ ஸ்ரீமது திரு
2. மலைச்சேதுபதி காத்ததேவரவர்கள் காரியத்துக்கு கத்தரான மணலூரில்லிருக்கும் அட்டவணை

3. வேலப்பபிள்ளை மகன் குமாரசுவாமிக்கு
அறந்தாங்கியிலிருக்கும் பிள்ளைப்பேரில்
4. கூன்காரித்தேவனும் சிந்தான் புலியத்தேவனும்
இருவகைபேரும் எங்கள் காணியாவுது
5. கணக்கன்வயல் விலைப்பிறமாணம் பண்ணிக்குடுத்த
பரிசாவுது. ஊரது புரவு பெருநா
6. ன்ங்கெல்லை பேசமங்கலகுளத்துக்கு மேற்கு
வடபாற்க்கெல்லை ஆயித்தப்பட்டிக்கு தெற்கு மேற்பாக்
7. கெல்லை னாயிலிவயலுக்கு கிழக்கு தென்பாக்கெல்லை
நெட்டி ஏம்பல் கருங்குழிதாவுக்கு வடக்கு இந்த பெ
8. ருநான்ங்கெல்லைக்குள்பட்ட நஞ்சை புஞ்சை உள்பட
கொள்வாருளரோ கொள்வாருளரோவென்று
9. நான் முற்க்கூற அவர் பிறக்கூற என்மொழிகேட்டு
எதிர்மொழி மொழிந்து விற்பதுக் கிசைந்து
10. அறந்தாங்கி நாட்டார் முன்பாகவும் திருப்பெருந்துறை
பலநடுவர் முன்பாகவும் விலைநிட்சயம் பண்
11. ணின மதுரைமி(ன்)னல் பொன் 76. இந்த பொன்
எழுபத்தாறு பொன்னும் ஏகாம்பர தொண்டமானார்.
12. க்கு வாங்கி குடுத்தது பொன் 50. கூன்காரித்தேவனும்
சிந்தான் புலியனும் வாங்கினது பொன் 26. ஆக பொன்
13. 76 பொன்னும் காட்டி ஏத்தி ஒருமுதலாக என்கய் கீளும்
அவர்கை மேலாகவும் பத்திக்கொண்ட
14. படியினாலே யிதுவே ஓலையும் சாதனமாக ஆண்டும்
அனுபவித்தும் வித்தும் ஒத்திவைய்
15. த்தும் சீதனப்பிறாத்தி கொடுத்தும் சந்திராதித்தவரைக்கும்
ஆண்டு கொள்ளக் கடவதா
16. கவும் இதாளுமிடத்தில் தடையிடை வந்தால் நானே தடை
தீத்துக் குடுப்போமாகவும்
17. இந்தபடிக்கு ஆடியபாத பண்டாரத்தின் கட்டளைக்கு காரிய
கத்தரான ராவுத்த பண்டாரத்தின்
18. பாரிசமாக திருவனந்த கட்டளைக்கு சேத்து கட்டளை
யிட்டோம். இந்தபடிக்கு அட்டவணை வே
19. லப்பபிள்ளை மகன் குமாரசுவாமியா பிள்ளைக்கு
கூன்ங்காரித் தேவனும் சிந்தான்புலியத்

20. தேவனும் சம்மதித்து கிறாமம் சாதனம் பண்ணிக்குடுத்தேன். இந்த சாதனம் எழுதின
21. து வீரப்பபிள்ளை ஆவான் எழுத்து. இந்தபடிக்கு சாஷ்ச்சி மலையந்த முதலியார். அறந்தா
22. ங்கியிலிருக்கும் காமாட்சித்தேவன். ஆவுடையார்கோவில் செல்லப் பெருமாளய்யன்.
23. இந்த கிறாமத்துக்கு யாதாம் ஒருத்தர் தடைகிடை பண்ணினால் திருமலை சேதுபதி காத்த தேவர்
24. காரியத்துக்கு கத்தரான அட்டவணைபிள்ளைமாரும், ரெகுனாதத் தொண்டைமானாரவர்
25. கள் காரியத்துக்குகத்தரான பாண்டித்தேவனும் தன்மத்துக்கு இடக்கடவதாகவும். இந்த தன்மம்
26. ஆவுடைய பரமசுவாமியார்க்கு திருவனந்தல் கட்டளைக்கு கட்டளையிட்டோம்

இரண்டாம் பக்கம்

27. இந்த தன்மம் யாதாம்ஒருவர் பரிபாலனம் பண்ணினவர் நூறு லிங்கப் பிறதிட்டையும் நூறு
28. கண்ணியாதானமும் நூறு கோதானமும் நூறு பூதானமும் பண்ணினபலன் அடைவார்
29. கள். இந்த தன்மத்துக்கு யாதாம்ஒருவர் அகிதம் பண்ணினவர்கள் கெங்கைக்கரையிலே
30. காராம்பசுவையும் மாதாபிதாவையும் குருவையும் கொண்ண தோஷத்திலே போகக
31. டவராகவும்.

14. புதுவைக்கோட்டைச் செப்பேடு

இருக்கும் இடம் : திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்

அரசர் : திருமலைசேதுபதி ரகுநாதத் தேவர் – அழகப்பத் தொண்டைமானார்

காலம் : 22-11-1680

மொழி : தமிழ்
அளவு : 25 செ.மீ. × 12 செ.மீ.

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு துளையில்லாத அடிப்பகுதி விரிந்து உயரம் குறைவான கைப்பிடியை உடையது. கைப்பிடியின் கீழ்ப்பகுதியில் வலப்பக்கம் சிறிய சிவலிங்கம் ஒன்று வரையப்பட்டுள்ளது. கைப்பிடியின் மையத்தில் குருந்தமரம் காட்சியளிக்கிறது. கைப்பிடியின் இடப்பக்கம் குருந்தமரத்தடியில் சிவபெருமான் அமர்ந்து மாணிக்கவாசகருக்கு உபதேசம் செய்யும் காட்சி சிறிய அளவில் வரையப்பட்டுள்ளது. மாணிக்கவாசகரும் அமர்ந்துள்ளார். இருகரம் கூப்பிச் சிவபெருமானை வணங்கிக் கொண்டுள்ளார். வரிகளின் இடையில் ஏதோ எழுதப்பட்டுள்ளது. செப்பேடு முற்றுப்பெறவில்லை. சி என எழுதி நிறுத்தப்பட்டுவிட்டது சிவமயம் என எழுதத் தொடங்கியிருக்கலாம்.

இது சேதுபதி செப்பேடாயினும் அறந்தாங்கி அரசு தொண்டைமானார் மரபில் வந்த அழகப்பத் தொண்டைமானார் பெயரில் கட்டளை ஒன்று திருப்பெருந்துறையில் ஏற்பட்டது என்றும், அதற்குப் புதுவைக்கோட்டை, புல்லங்குடி, காடுகுடி, நரிக்குடி, எட்டிசேரி, உள்ளூரில் உள்க்கிடையும், பிறவூர் உள்க்கிடை ஏந்தலும் கொடைகளாக விடப்பெற்றன என்ற செய்தியும் கூறப்பட்டுள்ளது.

அறந்தாங்கி அரசு தொண்டைமானார்கள் இராமநாதபுரம் சேதுபதி அவர்கள் ஆட்சிக்குச் சில காலம் உட்பட்டிருந்தனர் என்பதற்கு இச்செப்பேடும் முன் செப்பேடு போல் சான்றாக உள்ளது. அறந்தாங்கி அரசு அழகப்பத் தொண்டைமானார் பெயர் பொறிக்கப் பெற்றுள்ளமையால் இச் செப்பேடு தொண்டைமானார் செப்பேட்டுடன் சேர்க்கப்பெற்றுள்ளது.

மூலம்

முதல் பக்கம்

1. ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் 1602 மேல் செல்லாநின்ற ரௌத்ரி தக்ஷிணாய

2. ணத்து வருஷரிதுவில் காத்திகை மீ உ 23 சோமவாரமும் திறியோ தெசியும்
3. அசுபதியும் பெத்த புண்ணியகாலத்தில் தேவை நகராதிபன், சேதுமூல ர
4. க்ஷாதுரந்தரன், ராமநாதசுவாமி காரியதுரந்தரன், சிவபூசா துரந்தர
5. ன், பரராசசேகரன், ரவிகுலசேகரன், மூவராயிர கண்டன், கண்ட
6. னாடு கொண்டு கொண்டனாடு குடாதான், வீரவளனாடன், வேதியர்
7. காவலன், அந்தம்பிற கண்டன்,சுவாமித்துரோகி மிண்டன், பஞ்சவன்ன
8. ராய ராவுத்தன், வைகை வளநாடன், அடைக்கலங்காத்தான், வன்னிய ராட்டந் தவி
9. ர்த்தான், கீற்திப்பிறதாபன், தொண்டியந்துறை காவலன், விசையலெ
10. ஷ்மி காந்தன், சத்திய அரிச்சந்திரன், சேதுங்கராயன், வங்கிஷாதிபனான துக
11. வூர்க்கூத்ததில் காத்தூரான குலோத்துங்கச்
12. சோழ நல்லூர் கீழ்ப்பால் விரையாத கண்டநிலிருக்கும் தளவா
13. ய் சேதுபதி புத்திரன் ஶ்ரீதிருமலை யிரணிய கெற்பயாதி சேது
14. பதி ரகுநாதத் தேவரவர்களுக்கு புண்ணியமாகச் சாத்தங்காளாயி
15 தம்பியாயி அவர்கள் புண்ணியமாக ஆவுடைய பரமசுவாமிக்கு குருபூசைக் கட்ட
16. ளை வாமதேவன் அறைக்கட்டளை தம்பாபண்டாரத்தின் கட்டளை
17. யும் ஒருசேகரமாகக் கட்டளையிட்டோம். சின்னவன் கய்யில்

இரண்டாம் பக்கம்

18. அழகப்ப தொண்டமானார் கட்டளையும் கிறாமமும் தன்மமும்
19. நம்முட புண்ணியமாகக் கட்டளையிட்ட கிறாமமாவது புதுவை
20. க்கோட்டை புல்லங்குடி காடுகுடி நரிக்குடி எட்டிசேரி உள்ளூரில் உள்க்கிடையும்
21. பிறவூர் உள்க்கிடை ஏந்தலும் தாராபூறுண்யமாகக் கட்டளையிட்டோம்

22. யிதுவும் கட்டளையுடனே சேந்த பசு அறைமண்டகம் தோப்பு உள்படக் கட்
23. டளையிட்டோம். யிந்த தன்மத்துக்கு யாதாமொருத்தர் பரிபாலனம் பண்ணி
24. நடத்திநோர்கள் கோடி சிவலிங்கப்பிறதிட்டை பண்ணின
25. சுகிற்தத்தை அடைவாராகவும். யிந்த தன்மத்துக்கு யாதாமொ
26. ருத்தர் அகிதம் பண்ணினபேர் கெங்கைக்கரையிலும் சேது
27. விலும் மாதாபிதாவையும் குருக்களையும் காராம்பசுவையும்
28. கொண்ணதோஷத்திலே போகக்கடவராகவும். பலவரி முதலாகி
29. ய சறுவவரியும் வேண்டாமென்று கட்டளையிட்டோம். உ
30. சி.....

15. சங்குபட்டணம் காணியாட்சிச் செப்பேடு

இருக்கும் இடம் : அரசு அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை.
அரசர் : ஆண்டவராய வணங்காமுடித் தொண்டைமானார்
காலம் : 14-1-1696
மொழி : தமிழ்

அமைப்பும் செய்தியும்

அறந்தாங்கி அரசு ஆண்டவராய வணங்காமுடித் தொண்டைமானார் அவர்கள்தம் உயர் அலுவலர் பெரியதம்பி காலிங்கராசர் பண்டாரத்தார் அவர்களுடன் சங்கு பட்டணத்தில் தங்கி இருந்தார். அவர்களிருவரையும் காண்பதற்கு நல்லமாப்பிள்ளைகாவரவர் அவர்களும் அம்பலகாரன் இருவரும் வந்தனர். வந்த அவ்விருவரும் தொண்டைமானாருக்கு முத்துமாலையைக் காணிக்கை வைத்து மரியாதை செலுத்தினர்.

தொண்டைமானார் மகிழ்ந்து அவர்கள் இருவருக்கும் ஆணமச்சி ஆற்றுக்கு வடக்கும், வெள்ளாற்றுக்குத் தெற்கும் நெடுந்தாவைக்குக் கிழக்கும், சமுத்திர பாகத்துக்கு மேற்கும் ஆண்டு அனுபவித்துக் கொள்ளும்படிக் காணியாகக் கொடுத்தார்.

அப்போது வலைச்சிப் பெரியானும், பள்ளன் வெகுமானியும் தங்களுக்கும் ஏதேனும் கொடுக்கவேண்டுமென்று கேட்டனர்.

வலைச்சிப் பெரியானுக்கு மஞ்சக்கொல்லைக்குக் கிழக்கு, வெள்ளாற்றுக்குத் தெற்கு. நெடுந்தாவைக்கு மேற்கு, மறுசனிமேட்டுக்கு வடக்கு இந்த எல்லைக்குட்பட்டவைகளைக் கொடுத்தார்.

பள்ளன்வெகுமானிக்கு சங்குபட்டணம் முதல் சந்தயாபட்டணம் வரைக்கும் தரகு, முத்திரைப்பலகை, களத்துக்கோல், காவல் இவைகளையெல்லாம் அனுபவித்துக் கொள்ளும் உரிமைகளைக் கொடுத்தார்.

இச்செப்பேட்டை நாட்டுக்கணக்கு வீரப்பிள்ளை என்பவர் எழுதியுள்ளார். மைய அரசு தொல்லியல் அளவீட்டுத்துறையின் கல்வெட்டுப் பிரிவினர் இச்செப்பேட்டைப் படி எடுத்துள்ளனர்.[1] அவர்கள் அளித்த படியைக் கொண்டே இங்கு இச்செப்பேடு பதிப்பிக்கப்படுகிறது.

மூலம்

முதல் பக்கம்

1. உ யுவ(ா) வருஷம் தை மீ 16உ ரா ஆண்டவ
2. ராயற் வணங்காமுடி தொண்டமா
3. னாரவற்களும். பெரியதம்பி கா
4. லிங்கராசற் பண்டாரத்தாரவ
5. ற்களும் சங்குபட்டணம் குடிஏறி
6. னது பார்க்கவந்த விடத்தில்
7. துறையவற்களக் காணவேணுெ
8. மன்று நல்மொர்ப்பிள்காவரவர்
9. அம்பலகாரன் இவகளிருபேரும்
10. துரையவற்களுக்கு முத்துமா
11. லை வச்சு கண்டவிடத்து ராரா துரை
12. யவற்கள் சந்தோசமாகி இவற்க
13. ளுக்கு சாதனம் பண்ணிக்கொ
14. டுத்தது. ஆணமச்சி ஆத்துக்கு வடக்
15. கு. வெள்ளாத்துக்கு தெற்க்கு. நெடுந்தாவை

1. ARE (A) 35 of 1946.

16. வக்கி கிளக்கு, சமுத்திரமகாபாகத்துக்
17. கு மேற்க்கு ஆண்று[1] அனுபகபண்ணிக்கெ
18. ாள்ளவும். வலைச்சிப் பெரியானு பள்ளவெ
19. குமானியும் எங்களுக்கு என்னபுத்தி என்
20. று துரையவர்களிடத்தில் கேள்க்குமிடத்தி
21. ல் வலைச்சிப்பெரியானுக்கு சாதனம் பண்
22. ணிக்கொடுத்தது; மஞ்சக்கொல்லைக்கிக் கி
23. ளக்கு, வெள்ளாத்துக்கு தெற்க்கு, நெடுந்
24. தாவைக்கி மேற்க்கு, மறுசனிமோட்டுக்
25. கு வடக்கு இந்த னாங்கெல்லைக்கி உள்பட்ட
26. நிலமையை அனுபக பண்ணிக்கொள்ள
27. வும். பள்ளவெகுமானிக்கி சாதனம் ப

இரண்டாம் பக்கம்

28. ண்ணிக் கொடுத்தது சங்கு பட்டணம்
29. முதல் சந்தயாபட்டணம் வரைக்கும் த
30. ரகு முத்திரைப்பலகை களத்துக்கோ
31. ல் காவல் இதுகளெல்லா அனுபக ப
32. ண்ணிக் கொள்ளவும். இந்தபடி முன் பெ
33. ரிய துரையவற்கள் சொன்னபடிக்கி
34. முத்திரத்தாரு றாசியுடனே இருந்து சந்தி
35. றாள் சூரியாள் கல்லும் காவேரியும் பு
36. ல்லும் பூமியும் உள்ளமட்டுக்கு ஆண்டு அ
37. னுபவித்துக் கொள்ளக்கடவதாக. இந்தபடிக்
38. கி னாட்டு கணக்கு வீரப்பிள்ளை கை
39. நெட்டெழுத்து.

16. ஏனாதிச் செப்பேடு

இருக்கும் இடம் : அரசு அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை.
அரசர் : அருணாசல வணங்காமுடித் தொண்டைமானார்
காலம் : 12-4-1716

---

1. ஆண்டு

மொழி : தமிழ்
அளவு : 29.5. செ.மீ. × 20.5. செ.மீ.

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு உயரம் குறைந்த அகலமான துளையுடைய கைப்பிடியை உடையது. கைப்பிடியின் கீழ்ப்பகுதியில் ஸ்ரீராமஜெயம் என்றும் ஸ்வஸ்தி என்றும் ஒன்றன்கீழ் ஒன்றாகக் கிரந்தத்தில் எழுதப்பட்டுள்ளது. தானங்களைக் காப்பது பற்றிய சுலோகம் இரண்டாம்பக்க இடையிலும் மற்றொரு சுலோகம் இரண்டாம் பக்க இறுதியிலும் எழுதப்பட்டுள்ளது. இச் செப்பேட்டை எழுதியவர் தஞ்சாவூர் சில்பாசாரி நாராயணன் என்பவர். இச் செப்பேட்டை மைய அரசு தொல்லியல் அளவீட்டுத்துறையின் கல்வெட்டுப் பிரிவினர் படி எடுத்துள்ளனர்.[1]

பொதுவாகப் பிற்காலச் செப்பேடுகளில் காணப்படும் அரசர்களின் மெய்க்கீர்த்திப் புகழ்மொழிகளின் பின் அறந்தாங்கித் தொண்டைமானாருக்குரிய புகழ்மொழிகள் பல கூறப்படுகின்றன. இத்தொண்டைமானார் சூரியகுல வங்கிச திலகன் என்று பாராட்டப் பெறுகிறார். 'அறந்தாங்கி அரசு' என்ற தொடர் 'அறந்தாங்கித் தொண்டை அரசர்' என்று குறிக்கப்பட்டுள்ளது.

ஆண்டவராய ரெகுநாத ஆவுடைத் தொண்டைமானார் மகன் அருணாசல வணங்காமுடித் தொண்டைமானார் அவர்கள் 12-4-1716 அன்று பலகோத்ரம் பல சூத்திரங்களைச் சேர்ந்த கற்றறிந்த அந்தணர் பலருக்கு (அஷேஷ வித்வந் மகாஜனங்கள்) ஏனாதி என்ற ஊரை 'அருணாசல சமுத்திரம்' என்ற பெயர் மாற்றிப் பூதானமாகக் கொடுத்த செய்தி இச்செப்பேட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

அருணாசல சமுத்திர அக்கிரகாரம் 50 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு 50 அந்தணர்கள் குடியேற்றப்பட்டனர். அவ்வூர் (ஏனாதி)அஞ்சுரெண்டு சீமையில் கொடிவளநாட்டில் உள்ளதென்று கூறப்பட்டுள்ளது. ஏனாதியுடன் ஒச்சகுடி, காட்சிகொடுத்தான் வயல், ராவுத்தன் வயல்,

1. ARE (A) 24 of 1946.

பள்ளகுடி ஏந்தல், சுள்ளுக்குஞ்சி வயல், நென்மேலி ஆகிய பகுதிகளும் அருணாசல சமுத்திரத்தோடு இணைக்கப்பெற்றன.

கொடையாக அளிக்கப்பெற்ற பெரு நிலப்பகுதிகட்குச் சமுத்திரம், பெருங்கோளியாறு, ராவுத்தன்வயல் தெற்குப் பாடோடி, பள்ளுகுடி வயல் தெற்குப் பாடோடி, அரும்பழிச்சி அய்யனார் கோயில், நன்மருங்கூர் வயல், ஒட்டச்சாத்தன் வயல், அழகன் வயல், காரியுடையான் வடவாய்க்கால் பாடோடி, திருவப்பாடி, லக்கமங்கலம் வாய்த்தலை, திருமான்சோலை ஏகப்பெருமான் நல்லூர், அத்தாணிபுத்தகுளம் ஆகியவை எல்லைகளாகக் கூறப்பெற்றுள்ளன.

மூலம்

முதல் பக்கம்

ஸ்ரீராம ஜெயம்

1. ஸ்வஸ்தி
2. ஸ்ரீமன் மகாமண்டலேசுபுரன். அரியராயரதள விபாடன். பாஷைக்குத் தப்புவராத
3. மூவ ராயிர கண்டன். கண்டனாடு கொண்டு கொண்ட னாடு குடாத மண்டலீகர் க
4. ண்டன். எம்மண்டலமுங் கொண்டு யீழந் திறைகொண்டருளிய ராசாதிராச
5. ன். ராசமாற்தாண்டன். ராசகெம்பீரன். ராசவேசியர் புசங்கரன். ராசாக்க
6. ள்தம்பிரான். துலுக்கர்மோகந் தவிழ்த்தான். ஒட்டியர்தள விபாடன்
7. ஒட்டியர்மோகந் தவிழ்த்தான். அசுவபதி கெசபதி நரபதி ராமராயர். கிஷ்
8. ணராயர். ராமதேவ மகாராயர். திருமலைராயர். கோவிந்தராயர். அச்சுதராய
9. ர். செலுவிதராயர் இவர்கள் ராச்சிய பரிபாலனம் பண்ணிச் செல்லா நின்ற ஸ்வஸ்தி
10. ஸ்ரீ சாலிவாஹந சகாப்தம் 1638 இதன்மேல்ச் செல்லாநின்ற தும்மு
11. ஹி நாம ஸம்வத்ஸரமும் உத்தராயணமும் வசந்தருதுவும் சைத்ரமாஸமும்

12. அபரபக்ஷமும் பதினாலாந்தேதியும் ஸௌம்யவாஸரமும் சர்வமாவா
13. ஸ்யையும் அஸ்வதி நக்ஷத்ரமும் ப்ரீதிநாமயோகமும் நாகவாகரண
14. மும் கூடின இப்படிக்கொத்த சுபதிநத்தில் சூர்யோபராக புண்ய
15. காலத்தில் மறுமன்னியாபிகர் கண்டன், துஷ்ட்டரில்த் துஷ்
16. ட்டன், துஷ்ட்டர்மோகந் தவிழ்த்தான், வங்கிநாறாயணன்
17. வெட்டிலும் பச்சை வெதுப்பிலுங் கோணல், கோணலி
18. ல்க் கோணல் இருமுடி கோணல், துஷ்ட்டராட்டந் த
19. விழ்த்தான், தலைமலைகண்டான், பிணமலைகண்டான்,
20. ஆத்தியும் புத்து மசையிலு மசையாதான், ஈழந்திறைகொண்ட
21. ருளிய ராசாதிராசன், திருவேங்கடவர் கய்யில்த் திருச்சக்கர
22. ம் பெத்தவன், அருங்குளநாத ரடியிணை தொழுவோன், பழம்பதி
23. நாதர் பாத மறவாதான், ஆதிகேசவர்பாத மனுதின மறவாதவன்,
24. ஆவுடையார்பாதம் அடியிணை தொழுவோன், மலையாந்தவமுனி
25. வர்பாத மறவாதான், இளங் கோனாடு மிழலைக்கூத்தத்தில் வெ
26. ள்ளாறுடையவன், ஆட்டுக்கு யானை குடுத்தவன், அனுமக்கொ
27. டி புலிக்கொடி கெருடக்கொடி விருது உடையவன், ஆதண்டை
28. மாலை யணிந்தோன், ஆழ்வார்பாட லவ்வைதமிழ்க் கொண்ட
29. வன், கச்சி மயிலை மல்லை ஆறை ஆதிபன், தொண்டமண்ட
30. ல ஸ்தாபனாசாரியன், சூரிய வங்கிச திலகன், அறந்தாங்கித்
31. தொண்டை அரசர் ஆண்டவராய ரெகுநாத ஆவுடைத் தொண்
32. டைமானார் புத்திரன் ஸ்ரீமது அருணாசல வணாங்காமுடித் தெ
33. தாண்டைமானாரவர்கள் நாநா கோத்ரத்து நாநாசூத்ரத்து நாநாச
34. ாகாத்யாயராந ஸேது மார்க்கத்தில் ஏனாதிக்கி ப்ரதிநாமம
35. ான அருணாசல ஸமுத்ரம் அசேஷ வித்வந் மஹாஜநங்களுக்கு
36. ஸஹ்ரண்யோதக தாராபூர்வமாக பூதாந தர்ம்ம சாஸ
37. ந பட்டயம் பண்ணிகுடுத்தபடி. இத்தனாள்த் தங்களுக்குக் கட்ட
38. ளையிட்ட கணாஸங்கை பாகம் 50. இந்த பாகம் அன்பது
39. க்கு அஞ்சுரெண்டுசீமை யிக் கொடிவளநாட்டில் ஏனாதி. ஓ
40. ச்சகுடி. காட்சிகுடுத்தான்வயல். மேல்ப்படி உள்வாய் ராவுத்த
41. ன்வயல். பள்ளகுடியேந்தல். மேல்படி யுள்வாயேந்தல் சுள்ளு
42. க்குஞ்சி(வ)யல். நெனமேலி இதற்கு எல்லையாவது சமுத்திரத்துக்குமேற்
43. கு. பெருங்கோளியாத்துக்கு வடக்கு. ராவுத்தன்வயல்த் தெற்குப்ப

44. ரடோடிக்கும் பள்ளுகுடிவயல்த் தெற்குப் பாடோடிக்கும் வடக்கு. அ
45. ரும்பழிச்சி அய்யனார் கோவிலுக்கும் நன்மருங்கூர் வயல் எல்லைக்கு
46. ம் கிழக்கு, ஒட்டச்சாத்தன் வயலுக்குக் கிழக்கு, அழகன்வயலுக்குக்கி
47. ழக்கு, காரியுடையான் வடவாய்க்கால்ப் பாடோடிக்குத் தெற
48. கும், நென்மேல்க்கெல்லையாவது திருவப்பாடிக்கு மேற்கு, லக்க
49. மங்கலம் வாய்த்தலைக்கு வடக்கு, திருமான்சோலைக்கும் ஏகப்பெரு
50. மாள்நல்லூருக்கும் கிழக்கு, அத்தாணி புத்தகுளம் தென்கரைக்குத் தெ
51. தற்கு, இன்னான்கெல்லைக்குள்ப்பட்ட நஞ்சை புஞ்சை மாவடை மர
52. வடை நத்தம் படுகை செய்த்தலை திடல் மேல்னோக்கியமரம் கீழ்
53. நோக்கிய கிணறு எப்பொருள்ப்பட்ட சகல சமுதாய ப்ராப்தியும்

இரண்டாம் பக்கம்

54. நிதி நிக்ஷேப ஜல தரு பாஷா ணாக்ஷிண்ய ஸித்த ஸாத்யமென்று செ
55. சால்லப்பட்ட அஷ்டபோக தேஜ ஸ்வாமியங்களுக்கும் தாநாதி விநிமய
56. விக்ரயங்களுக்கு யோக்யமாக ஆசந்திரார்க்க ஸ்தாயியாக புத்ர பௌத்ர ப
57. ாரம்பரைக்கும் ஸர்வமானியமாக அநுபவித்துகொள்ள கடவராகவும். இ
58. ந்தபடிக்கு அருணாசல சமுத்திரம் அசேஷ வித்வந் மஹாஜநங்களுக்கு அரு
59. ணாசல வணங்காமுடி தொண்டமானாரவர்களோம். இந்த தற்
60. மத்தை பரிபாலனம் பண்ணினவர்கள் காசியிலேயும் ஸேதுவி
61. லேயும் கோடி சிவலிங்க ப்ரதிஷ்டையும் கோடி ப்ரம ப்ரதிஷ்
62. டையும் கோடி விஷ்ணு ப்ரதிஷ்டையும் யக்ஞா திருதிகள் பண்ணின
63. பலங்களையும் அடைவாராகவும். ஸ்வதத்தாத்வி குணம் புண்யம் பரதத் த
64. ாநு பாலநம் பரதத்தாபஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவே
65. து : தாந பாலந யோர்மத்யே தாநா ஸ்ரயோநு பாலநம் தா

66. நாத் ஸ்வர்க்க மவாப்நோதி பாலநாதச்சுதம் பதம் : ஏகைவ ப
67. ஹிநி லோகே ஸர்வேஷா மேவ பூபுஜாம் நஹோஜ்யா நகர
68. க் ரஹ்யா விப்ர தத்தா வஸுந்தரா: இந்த தற்மத்துக்கு யாதாமொ
69. ருத்தர் அஹிதம் பண்ணினவர்கள் கெங்கைக்கரையிலே கார
70. ாம் பசுவைக்கொண்ண தோஷத்திலேயும் பிரமஹத்யாதி மஹா
71 பாதகங்களையும் பண்ணின தோஷத்தில் போகக்கடவர்
72. இந்த தற்(ம)த்தை பரிபாலனம் பண்ணினவர்கள் ஸகல சாம்ராஜ்யா
73. திபத்யத்தையும் ஸகல விஜயத்தையும் அடையக்கடவராகவும்
74. ஸத்யம்
75. தஞ்சவூர்[1] சில்பாசாரி
76. னாறாயணன் கையி
77. யெழுத்து
78. பூமிம்ய: ப்ரதிக்ருண்ணாதி பூமிம்யஸ்துப்ரய
79. ஸ்வதி தாவுபௌ புண்ய கர்ம்மாணௌ வம்சந்தி பா
80. லநபாலநௌ.

17. ஏம்பல்வயல் செப்பேடு

இருக்கும் இடம் : ஆர் முத்துராம அய்யர், அரிவாலூர், மயிலாடுதுறை வட்டம், தஞ்சை மாவட்டம்
அரசர் : அருணாசல வணாங்காமுடித் தொண்டைமானார்
காலம் : 22-1-1726
மொழி : தமிழ்

அமைப்பும் செய்தியும்

ஸத்யம் என்ற சொல்லோடு தொடங்கும் இச்செப்பேட்டை மைய அரசு தொல்லியல் அளவீட்டுத்துறையின் கல்வெட்டுப் பிரிவினர் படி எடுத்துள்ளனர்.[2]

பொதுவாக வழங்கும் மெய்க்கீர்த்திச் சொற்றொடர்களுடன் தொண்டைமான் மரபுக்குரிய சில தனிப் புகழ்மொழித் தொடர்களும் இச்செப்பேட்டில் பொறிக்கப்பட்டுள்ளன.

1. தஞ்சாவூ
2. ARE (A) 19 of 1925.

பொய் சொல்லா வேந்தன்
எதிர்த்தவர்கள் மார்பில் ஆணி
நெல்முடி வேந்தன்
நவரத்ன முடியாதிபன்
வெட்டிலும் பச்சை
வெதுப்பிலும் கோணல்
கோணலில்க் கோணல்
மும்முடி கோணல்
கடாரம் கலிங்கம் கப்பமே கொண்டோன்
அவ்வை பொய்கையாண்டான் கம்பன் ஒட்டக்கூத்தன்
உரைதமிழ் புனைந்தோன்
மதம்பகர்கின்ற கதம்பனை வென்றோன்
திருப்பதி மாயன் செங்கையில் சக்கரம்
அஞ்சாக் கிருபையால் அளித்திடப் பெற்றோன்
நேரிமலை காவலன்

என்ற புகழ்மொழிகளுடன் அச்சமறியாதான், அலைவில் அஞ்சாதான் போன்ற தொடக்ககாலத் தொண்டைமானார் பட்டப்பெயர்களும் இச்செப்பேட்டில் குறிக்கப்படுகின்றன.

ஆவுடை இரகுநாத வண்ணங்காமுடித் தொண்டைமானார் அவர்கள் வெள்ளாம்பத்தில் மிழலைக் கூற்றத்தில் இளங் கோனாட்டில் மஞ்சக்குடி மாகாணத்தின் பெரிய ஏம்பல் வயல், ஆசான்வயல் ஆகிய ஊர்ப்பகுதிகளை 17 பங்குகளாகப் பிரித்து அந்தணர்களுக்கு அக்கிரகாரம் சர்வ மானியமாக அளித்ததை இச்செப்பேடு கூறுகிறது.

தொண்டைமானார் காசிப கோத்திரம் போதாயண சூத்ரத்தைச் சேர்ந்தவர் என்று குறிக்கப்பட்டுள்ளது.

அக்கிரகாரத்திற்கு அளிக்கப்பெற்ற ஏம்பல்வயல், ஆசான்வயல் ஆகிய இருபகுதி நிலங்களுக்கு எல்லையாகச் சமுத்திரம் மறவனேந்தல் குளக்கால், சந்தைவெளி, குட்டம் விருதுசாலூரணி, சித்தேம்பல்வயல், ஏரிக்கரை ஆகியவை கூறப்பட்டுள்ளன.

தானத்தைக் காப்பது பற்றியும், அக்கிரகாரம் ஏற்படுத்துவது பற்றியும் சுலோகங்கள் கிரந்த எழுத்துக்களில் எழுதப்பெற்றுள்ளன.

இச்செப்பேட்டை எழுதியவர் முத்தப்ப பத்தர் மகன் வேலாயுதம் என்ற குறிப்பு செப்பேட்டின் இறுதியில் உள்ளது.

மூலம்

ஸத்யம்

1. ஸ்வஸ்திஸ்ரீமந் மகாமண்டலேசுவரன், அரியராயதள விபாடன், பாஷைக்குத்
2. தப்புவ ராயர் மூவ ராயிர கண்டன், கண்டநாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான்,
3. பாண்டியமண்டல ஸ்தாபனன், சோழமண்டல ப்ரதிஷ்டாபநன், பூர்வ தக்ஷிண பச்சிம உத்தர ஸ
4. ப்த ஸமுத்ராதிபன், ஈழமும் யாழ்ப்பாணமும் ராயர்பட்டணமு மழித்து கஜவேட்டை க
5. ண்டருளிய ராஜாதிராஜந், ராஜபரமேஸ்வரந், ராஜமார்த்தாண்டன், ராஜாக்கள் கொ
6. ட்டந் தவிழ்த்தான், ராஜகுலோத்துங்கன், ராஜமன்னிய வசீகரந், ராஜஸமேள
7. ன், கட்டாரிசாளுவன், மன்னியமீசரகண்டன், துஷ்டநிக்ரகி சிஷ்டபரி பாலநன்,ஒ
8. ட்டியர்தள விபாடன், ஒட்டியர்மோகந் தவிழ்த்தான், சிங்களதள விபாடன், சிங்களமோ
9. கந் தவிள்த்தான், எம்மாதமு மும்மாரிபெய்ய மேகந் திறைகொண்டோன், அஸ்வ
10. பதி கஜபதி நந(பந்)பதி தாந்யபதி, ஸ்தோநகதிவுடையோன், அஷ்ட லக்ஷமியுடையோ
11. ன், பூலோக முதலான ஸத்யலோகமுடையோன், பொய்சொல்லா வேந்தன், எதிர்த்தவ
12. ர்கள் மார்பிலாணி, சொல்லுக் கரிச்சந்திரன், வில்லுக்கு விசையன், வாளுக்கு பீமன்,
13. குதிரைக்கு நகுலன், பொறுமைக்கு தர்மர், விருதுபெருமை யுடையோன், மும்முரசுடை
14. யோன், மறுமன்னியர் காலாந்தகன், அடைக்கலங்காத்தான், அபிமானங்காத்தான்

15. நெல்முடி வேந்தன், நவரத்ந முடியாதிபன், வெட்டிலும் பச்சை வெதுப்பிலுங் கோண
16. ல், கோணலில்க் கோணல் மும்முடி கோணல், ஆத்தியும் புத்து மசையினு மசையாத கண்டன், தலைமலை
17. கண்டான், புணமலை கண்டான், அலைவிலஞ்சாதான், அச்சமறியாதான், கடாரங் கலிங்கங்
18. கப்பமே கொண்டோன், ஏழுரை நாழிகையிலீழந் திறை கொண்டோன்,
19. இகலரசர் பணிபாதன், விருதரசர் மணவாளன், ஆட்டுக்கு யானையளித்தோன், முதலியர்
20. மூவர் முனி செயங்கொண்டோன், அவ்வை பொய்கை யாண்டான் கம்பன் ஒட்டைக்கூ
21. த்தனுரைதமிள் புனைந்தோன், செந்நனாள் முதலாய மன்னரை வணங்கா மன்னியன், மூவாந
22. ரசரை வென்றோன், வீராதிவீரன், வீரப்பிறதாபன், விசைய லைட்சுமி காந்தன், வண்
23. டகை மயிலைத் தண்டகை கல்வித் தொண்டை நன்னாடன், சோழகுலாதிபன், சூரிய குலத்திலுதித்த
24. தொண்டைமான் பெருமான், புலிக்கொடி மேழிக்கயல்க்கொடி யுடையோன், மதம்பகர்கின்ற
25. கதம்பனை வென்றோன், திருப்பதி மாயன் செங்கையிற் சக்கரம் அஞ்சாக் கிறுபையினா லளித்திடப்பெற்
26. றோன், ஆவுடைநாத ரடியினை மறவான், ஆதிகேசவர்தாள் அனுதினம் நினைவோன், மலையாந் தவ
27. முனி மலரடி பணிவோன், முன்றில்வாய் மாறா மும்முரசாளன், காளத்தி நேரிமலை காவலன்
28. ஸ்ரீமன் கிருஷ்ணராயர், அச்சுதராயர், வேங்கிடபதிராயர், வீரவசந்தராயர், குமாரராயர், து
29. ஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலகராயர், ப்ருத்விராஜ்ய பரிபாலனம் பண்ணியருளாநின்ற சா
30. லிவாஹந சகாப்தம் 1647 கல்யாப்தம் 4826 இதின்மேற் செல்லா நின்ற
31. விஸ்வாவஸு வருஷமும் உத்தராயநமும் ஹேமந்த ரிதுவும் புஷ்யமாஸமும் 23 உ

32. யும் க்ருஷ்ணபக்ஷமும் அமாவாஷ்யையும் ஸ்ரவண
நக்ஷத்ரமும் ஸித்தி நாம யோக
33. மும் சகுநகரணமும் இப்படிக்கொத்த சுபதிநத்தில் சோழ
குலாதிபன் அம்பல
34. வாணருக்கந்தரங்கப் பெட்டகங் கொடுத்தோன்,
திருவேங்கிடநாதர் திருச்சக்
35. கரம் பெற்றோன், தியாகராசர் திருவடிவாழ்வோன்,
சேமனை வென்று தவண்டை பறித்
36. தோன், பழம்பதினாதர் பதந்தனைப் பணிவோன்,
ஆறுகால்ப் பீடத்தில் அபிஷேகம் பெற்றோ

இரண்டாம் பக்கம்

37. ன், கண்டைய விமன், தொண்டைமான்பெருமாள்,
துரைகள் சிகாமணி காசிப கோத்ரத்தில் போதா
38. யந சூத்ரத்தில் மல்லை மயிலை ஆறை கச்சி காவலன் நாக
கன்னிகைக் குமாரனாகிய ஆவுடைய இரகுனாத
39. வணங்காமுடித் தொண்டமானாரவர்கள் புத்ரன்
அருணாசல வணங்காமுடித் தொண்டமானாரவர்கள்
பூமிதானம் பண்ணிக் குடுத்தது வெள்ளாம்பத்தில்
40. மிழலைக் கூத்தத்தில் இளங்கோலநாட்டில் மஞ்சக்குடி
மாகாணத்தில் பெரியஏம்பல்வயல் ஆசா
41. ன்வயல் உள்பட நானா கோத்ரத்தில் நானா சூத்ரத்தில் நானா
சாகையில் அக்ரஹாரம் ஸர்வ
42. மான்னியமாக அசேஷ வித்வன் மகாஜநங்களுக்கு
ஸஹிரண்யோதக தாரா பூர்வமா
43. க பூமிதாநம் பண்ணிக்குடுத்தபடியினாலே சர்வமாந்யமாக
ஆண்டு அனுபவித்துக்கொ
44. ள்ளக்கடவராகவும். இந்த ஏம்பல்வயல் ஆசான்வயலுக்குப்
பெருநான்கெல்லை கீழ்பார்க்
45. கெல்லை ஸமுத்ரத்துக்கு மேற்கு, தென்பார்க்கெல்லை
மறவனேந்தல் குளக்காலுக்கு வடக்கு, மேல்பா
46. ர்க்கெல்லை சந்தைவெளி குட்டத்துக்குக் கெளக்கு, விருது
சானூறணியுள்படக் கிளக்கு, வடபார்

47. க்கெல்லை சித்தேம்பல்வயல் ஏரிகரைக்குத் தெற்கு இந்தப்
பெருநான் கெல்லைக்குள்பட்ட
48. க்ராமமும் இதுக்குள்ள நஞ்சை புஞ்சை திட்டுத் திடல்
மாவடை மரவடை பட்டம் படுகை கீழ்னோக்கி
49. யகிணறு மேல்னோக்கிய மரமும் நிதி நிக்ஷேப ஜல தரு
பாஷாணாக்ஷிண் யாகாமியா
50. ந ஸித்த ஸாத்யமென்று சொல்லப்பட்ட அஷ்ட போக தேஜ
ஸ்வாம்யங்களும் தாநாதி விநிமய
51. விக்ரயங்களுக்கும் யோக்யமாக ஆசந்திரார்க்க ஸ்தாயி
ஸந்ததிப்ரவேசம் புத்ர பௌத்ரபாரம்
52. பரியமாக சர்வமாந்யமாக ஆண்டு அனுபவித்துக்கொள்ளக்
கடவராகவும். இந்த அக்ரஹாரம்
53. கணஸங்கையபாகம் பதினேழு. இந்த தர்ம்மத்தைப்
பரிபாலநம் பண்ணின பேர்க
54. ள் காசியிலே கயையிலே ப்ரயாகையிலே கோடி சிவ
ப்ரதிஷ்டையும் கோடி ப்ரம
55. ப்ரதிஷ்டையும். கோடி விஷ்ணு ப்ரதிஷ்டையம். கோடி
கந்நிகா தாநமும். அநேக கோதாந
56. மும். அநேக தர்ம்மங்களும் பண்ணின
பலத்தையடைவார்கள். இந்த தர்ம்மத்துக்கு யாதா
57. மொருத்தர் விகாதம் பண்ணினாலவன்
கங்கைக்கரையிலே காசியிலே அநேகம் பிராமணர்க
58. ளையும் அநேகம் பசுக்களையும் சிசுக்களையும் சிவாலயம்
விஷ்ணு ஆலயங்களிதுகளை வதித்துக்
59. கெடுத்தவனுக்கு யெந்த தோஷமோ அந்த தோஷத்தை
யடைவார்கள். இதர்க்கு ஸ்லோகம்.
60. தாந பாலந யோர்ம்மத்யே தாநா ஸ்ரெயோநு பாலநம்
தாநாத் ஸ்வர்க்கமவாப்நோதி பால
61. நாத்ச்சுதம் பதம் : ஸ்வதத்தாத்வி குணம் புண்யம் பரதத்தாநு
பாலநம் பரதத்தாப ஹா
62. ரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேத் உ திஸ்ரீ: கோடி பிர்
கோடி ச நிர்ம்மிதம் தேவமந்தி
63. ரம் ஏக விப்ர ப்ரதிஷ்டாப்யா ஸமயா யுதிஷ்டிரா உ
கணுதைவாம்ஸ வோது

64. மௌகணுதைவர்ஷ விப: க்ரஹப்ரதிஷ்டாய மர்ம ஸ்வகணாநாபந வித்யதே உ
65. திரிம்சத் கோடி ஸுவர்ணேந நிர்ம்மிதம் தேவ மந்திரம் தத் ஸமாத் சஹமாதிபம்
66. க்ருஹமேகம் ப்ரதிஷ்டிதம். இந்தப்படிக்கி சாசனம் எழுதினேன் முத்தப்ப பத்தர் மக
67. ன் வேலாயுதம் எழுத்து. உ.

18. கீழ்ப்பாப்பனூர்ச் செப்பேடு

இருக்கும் இடம் : காசிமடம், திருப்பனந்தாள், தஞ்சை மாவட்டம்
அரசர் : அருணாசல வணங்காமுடித் தொண்டைமானார்
காலம் : 16-9-1728
மொழி : தமிழ்
அளவு : 26 செ.மீ. × 20 செ.மீ.

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு அரைவட்ட வடிவில் அமைந்த சிறு கைப்பிடியும், மையத்தில் துளையும் உடையது. கைப்பிடியிலும், செப்பேட்டின் மேல்பகுதியிலும் (இலிங்க வடிவில்) காசி விசுவநாதரும் விசாலாட்சி அம்மனும் வரைகோட்டு ஓவியத்தில் இரட்டைக்கோடுகளின் உள் சிறுஅளவில் வரையப்பட்டுள்ளனர். விசாலாட்சி அம்மன் இருகரங்களுடன் வலக்கரத்தில் மலரேந்தி உள்ளார். செப்பேட்டின் இடையில் 'ஸத்யம்' என்று பெரிய வடிவில் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆண்டு என்று குறிப்பதற்குக் கொல்லம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பிற்காலச் செப்பேடுகளில் பொதுவாகக் காணப்பெறும் அரசர்களைப் பற்றிய புகழ்மொழிகளுடன், தொண்டைமான் மரபினருக்குரிய பட்டப் பெயர்கள் பல குறிக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில வேறுபாடுகள் காணப்பெறுகின்றன. (எடுத்துக்காட்டாக – ஆழ்வார் பாடல் அன்புடன் உகந்தோன் என்பதற்கு ஆழ்வார் பாடலில் அனுதினம் வந்தோன் என்று எழுதப்பட்டுள்ளது.)

காசிவாசி தில்லைநாயகத் தம்பிரான் அவர்கள் (அருளாட்சிக் காலம் கி.பி.1720 – 1756) திருப்பனந்தாள் காசிமடத்துத் தலைவராக இருந்தபோது அவர்கள்வசம் காசியிலேயுள்ள காசிமடத்தில் அன்னதானம் செய்வதற்காக வெள்ளாம்பற்றில் மிழலைநாட்டில் வெள்ளுர் மாகாணத்தில் உள்ள கீழ்ப்பாப்பனூர் என்ற ஊரை அறந்தாங்கி அரசு அருணாசல வணங்காமுடித் தொண்டைமான் 16–9–1728 அன்று சர்வ மானியமாக அளித்ததை இச்செப்பேடு கூறுகிறது. பாப்பனூர் நான்கெல்லைக்கும் உட்பட்ட ஊரதுபுரவு நன்செய் புன்செய் திட்டு திடல் மாவடை மரவடை உட்பட அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வூர் வருவாய் தானிய விளைச்சல் சொர்ணாதாயம் முதலியன கொண்டு காசியில் உள்ள காசிமடத்தில் பிராமண போசனம், மயேசுரபூசை நந்தவனம் ஆகியவற்றுக்காகச் செலவிடப்பட்டது.

காசி மடத்தார் சீஷ பாரம்பரியமாய் இவ்வூரை அனுபவித்துவர வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. திருப்பனந்தாள் காசிமடத்து அதிபர் காசிவாசி தில்லைநாயக சுவாமிகள் தருமபுரம் திருஞானசம்பந்த பண்டாரம் அவர்களின் சீஷர் என்று கூறப்பட்டுள்ளது.

தானத்தைக் காப்பது பற்றிய இரண்டு வடமொழிச் சுலோகங்கள் கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது. சுபமஸ்து என்ற மங்கலச் சொல்லோடு இச்செப்பேடு முடிகிறது.

பிற செப்பேடுகள் போலக் கொடை கொடுத்த ஊரின் எல்லைகள் குறிக்கப்பெறவில்லை.

மூலம்

முதல் பக்கம்

ஸத்யம்

1. உ ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹன சகாப்தம் 1651 யிதன்மேல்ச் செல்லாநி
2. ன்ற கொல்லம் கீகை வருஷம் புரட்டாசி மீ 16 உ சுக்கிரவாரமும் அஷ்டமியும் மூலாநஷ்செ

3. த்திரம் சுபயோக சுபகரணமும் கூடின சுபதினத்தில் சுவஸ்திஸ்ரீமன்
4. மகாமண்டலேசுரன், அரியராயதளவிபாடன், பாஷைக்கு த
5. ப்புவராய கண்டன், மூவராய கண்டன், கண்டநாடு கொண்டு கொண்ட
6. நாடு கொடாதான், பாண்டிமண்டல ஸ்தாபனாசாரியன், சோழமண்
7. டலா திஷ்ட்டாபநாசாரியன், ஈழமுங் கம்பளமும் யாட்பாணராயன் பட்டண
8. மும் எம்மண்டலங்கொண்டு கெசவேட்டையாடி அருளிய ராசாதிராசன்,
9. ராசபரமேசுரன், ராசமாத்தாண்டன், ராசகெம்பீரன், ஒட்டியர்தள விபாடன், ஒ
10. ட்டியர்மோகந் தவிள்த்தான், துலுக்கர்தள விபாடன், துலுக்கர்மோகந் தவிள்த்தான்
11. அசுவபதி கெசபதி நரபதி தனபதி ஸ்ரீ பூபதிராயர், ஸ்ரீபுசபெலராயர், ஸ்ரீராமராயர்,
12. ஸ்ரீகிஷ்ணராயர் யிப்படிப் பிறிதிவிராச்சியம் பண்ணிஅருளாநின்ற
13. தொண்டமண்டல பரிபாலநாகிய மல்லை மயிலை கச்சி ஆறையம்பதி
14. யான், பாலார்உடையோன், பாக்கியசம்பன்னன், வம்மலையுடையோன், சங்
15. கு சக்கரம் தரித்தோன், கெருடக்கொடி அநுமக்கொடி புலிக்கொடி சிங்கக்
16. கொடியுடையோன், அத்தியும் புத்தும் அசையினும் அசையான், அலையில் அஞ்
17. சாதவன், ஆதொண்டை மாலை புனைவோர், கலிங்கந் திறைகொண்ட கருணாகர
18. ன், சேமனை வென்ற செயதுங்கன், ஆட்டுக்கானை அளித்தவன், புத்தியில் யூகி, பொரு
19. மையில் தருமன், கொடைக்கு கர்ன்னன், குதிரைக்கு நகுலன், அவ்வை
20. பாடல் அன்புடன் பெத்தோன், ஆள்வார் பாடலில் அநுதினம் வந்தோன்,
21. சூரிய குலத்தில் தோன்றிய வள்ளல் ஸ்ரீமது அருணாசல வணங்காமுடி

22. தொண்டைமானாரவர்கள் தருமபுரம் திருஞான சம்பந்த பண்டாரமவர்
23. கள் சீஷரான காசிவாசி தில்லைநாயக தம்பிறான் பாரிசமாக

இரண்டாம் பக்கம்

24. காசியிலே நம்முடைய மடத்திலே அன்னதானம் பண்ணி
25. வரச்சொல்லி தாம்பிற சாதன பட்டையம் கட்டளையிட்டது. கிராமமா
26. வது வெள்ளாம்பத்தில் மிழலைநாட்டில் வெள்ளூர்மாகாணத்தில் சேர்ந்
27. த கீள் பாப்பனூர் ஊரது புரவு நஞ்சை புஞ்சை திட்டு திடல் மாவடை மரவ
28. ட உள்பட்ட நாங்கெல்லையும் சறுவமானியமாக கட்டளையிட்ட படியினாலே
29. காசியில் நம்முட மடத்திலே பிராமண போசனம் மயேசுரபூசை ளந்தவ
30. ானமும் சகலமும் தாஷ்சி வாறாமல் தர்மம் பரிபாலனம் பண்ணிக் கொண்டு
31. சுகத்திலேயிருக்கவும். யிந்த கிறாமத்தில் பெட்டி சொன்னாதாயம் உள்பட்ட சறுவம
32. ானியமாக கட்டளையிட்டபடியினாலே சந்திராதித்தர்வரைக்கும் கல்லுங்க
33. ாவேரியும் புல்லும் பூமியும் உள்ளவரைக்கும் ஆண்டு அனுபவித்துக் கொண்
34. டு தர்மம் பரிபாலனம் பண்ணிக்கொண்டு சீஷ பாரம்பரையாய்
35. வரக் கடவோமாகவும். உ யிந்த தற்மத்துக்கு யாதாமொருத்தர் யீதவு பண்ணி பரி
36. பாலனம் பண்ணினவர்கள் கோடி சிவலிங்க பிறதிஷ்டை கோடி பிற்ம
37. பிறதிட்டை பண்ணின பலத்தை அடைவராகவும். யிந்த தன்மத்துக்கு யா
38. தொருத்தர் அகிதம் பண்ணின பேர்கள் காசியிலேயும் சேதுவிலேயும் காறாம்

39. பசுவையும் பிறாமணரையும் வதைபண்ணின தோஷத்திலே போவாராக
40. வும். உ
41. ஸ்வதத்தாத்வி குணம் புண்யம் பரதத்தாநு பாலநம் பரதத்தாப ஹாரேண
42. ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது. ஸ்வதத்தாம் பரதத்தாம் வயோகரேத் வசுந்
43. தரா ஷஷ்டி வர்ஷ சகஸ்ராணி விஷ்டாயா ஜாயதே கிரிமி.
44. யிந்தப்படிக்கு தாம்பிற சாதனம் பட்டையம் கட்டளையிட்டோம் ஸ்ரீமது அருணா
45. ச்சல தொண்டைமானாரவர்கள் காசிவாசி தில்லை நாயக தம்பிரானுக்கு
46. சுபமஸ்து.

19. மணமேல்கொடிச் செப்பேடு

இருக்கும் இடம்	: திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, தஞ்சை மாவட்டம்.
அரசர்	: அருணாசல வணங்காமுடித் தொண்டைமானார்
காலம்	: 26-10-1731
மொழி	: தமிழ்
அளவு	: 23 செ.மீ. × 15 செ.மீ.

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு 5 செ.மீ. உயரமுள்ள தாமரை மொட்டுப் போன்ற அழகிய கைப்பிடியின் நடுவே சூலம் வரையப்பெற்றுச் சூலத்தண்டின் இடையில் துளையுமிடப்பெற்றுள்ளது. கைப்பிடியின் ஓரங்களில் ஒற்றைக்கோடு வரையப்பட்டுள்ளது. செப்பேட்டுச் செய்தியையும் கைப்பிடியையும் பிரிக்கும் வகையில் நீளக்கோடு ஒன்று வரையப்பெற்றுள்ளது.

இக்காலச் செப்பேடுகளில் பொதுவாகக் காணப்பெறும் புகழ் மொழிகளான மெய்க்கீர்த்திகளுக்குப் பின்னர்க் காலக்குறிப்பு உள்ளது. காலக் குறிப்பின்கீழ்த் தொண்டைமானாரின் மெய்க்கீர்த்திப்பகுதி தொடங்குகிறது.

தொண்டைமண்டல பரிபாலன்
மல்லை, மயிலை, கச்சி ஆறையம்பதியான்
பாலாறுடையான்
பாக்கிய சம்பன்னன்
ஆதொண்டை மாலை அன்புடன் புனைந்தோன்
சங்கு சக்கரம் தான்பெற் றுயர்ந்தோன்
ஆழ்வார் பாடல் அன்புடன் உகந்தோன்
கொடையில் கர்ணன்
குதிரைக்கு நகுலன்
பொறுமையில் தருமன்
புத்தியில் யூகி

என்றெல்லாம் பலவாறாகத் தொண்டைமானார் புகழ்ப்பெறுகிறார்.

திருவாவடுதுறைப் பண்டார சந்நிதியவர்களுக்குத் திருமடத்தில் மயேசுரபூசைக்காக மணமேல்க்கொடி மாகாணத்தில் மணமேல்க்கொடி என்ற ஊரை அருணாசல வணங்காமுடித் தொண்டைமானாரவர்கள் கொடையாக அளித்ததை இச்செப்பேடு கூறுகிறது. இக்கொடை அளிக்கப்பெற்ற காலத்தில் 12ஆம் பட்டம் தவத்திரு திருச்சிற்றம்பல தேசிகர் அவர்கள் பண்டார சந்நிதிகளாக எழுந்தருளியிருந்தனர். கொடையைக் காத்தோர் பெறும் புண்ணியமும் கொடைக்குத் தீங்கு செய்தோர் பெறும் பாவமும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

இப்பட்டையச் செய்தியை எழுதியவர் அட்டவணை வீரப்பன் என்பவர். செப்பேட்டில் பொறித்தவர் ஆவுடையார் கோயிலில் இருக்கும் மகிழ்ராவணம் ஆசாரி என்பவர்.

மூலம்

ஸத்யம்

1. சொஸ்துஸ்ரீமன் மகாமண்டலேசுவரன். அரியராயிரதள
விபாடன். பாஷைக்குத் த
2. ப்புவராத கண்டன். மூவராயிர கண்டன். கண்டனாடு
கொண்டு கொண்ட னாடு கொட
3. ாதான். பாண்டிமண்டலத் தாபானாசாரியன்.
சோழமண்டலத்திஷ்டாப னாசாரி

4. யன், ஈளமுங் கம்பளமும் யாட்பாணராயன் பட்டணமும் எம்மண்டலமுங் கொண்
5. டு கெசவேட்டையாடியருளிய ராசாதிராசன், ராசபரமேசுவரன், ராசமாத்த
6. ாண்டன், ராசகெம்பீரன், ஒட்டியர்தள விபாடன், ஒட்டியர்மோகந் தவிர்த்தா
7. ன், துலுக்கர்தள விபாடன், துலுக்கர்மோகந் தவிர்த்தான், அசுபதி கெசபதி நரபதி தன
8. பதி ஸ்ரீராமராயர், ஸ்ரீகிருஷ்ணராயர் இப்படிப் பிறிதிவிராச்சியம் பண்ணி அருளாநி
9. ன்ற சகாத்தம் உ 1654 இதின்மேல்ச் செல்லாநின்ற கொல்லம் வி
10. ரோதிகிறுதி வருஷம் அற்பசி மீ 24உ மங்களவாரமும் சத்தமியும் திருவோண ந
11. ட்செத்திரமும் சுபயோக சுபகரணமுங் கூடின சுபதினத்தில் தொண்டை
12. மண்டல பரிபாலன், மல்லை மயிலை கச்சி ஆறையம்பதியான், பாலாறு டையோன்,
13. பாக்கிய சம்பன்னன், ஆதொண்டை மாலை யன்புடன் புனைந்தோன், சங்கு
14. சக்கரமுந் தான்பெற்றுயர்ந்தவன், கெருடக்கொடி சிங்கக்கொடி புலிக்கொ
15. டி அனுமக்கொடி யுடையோன், அவ்வை பாடல் செவ்வித
16. ாய்ப் புனைந்தோன், ஆழ்வார் பாட லன்புட னுகந்தோன், கலிங்கந் தி
17. றை கொண்ட கருணாகரன், மழவரை வென்றோன், தலைகண்டோன், ஆத்தியும்
18. புத்தும் அசையினு மசையான், சேமனைவென்ற செயதுங்கன், கொடையி
19. ல் கற்னன், குதிரைக்கு நகுலன், பொறையில்த் தருமன், புத்தியில் யூகி, அரங்குள
20. ணாதர் பதம்பணிந்தேற்றுவோன், பழம்பதினாதர் பாதம்பணிவோன், ஆரூரர்பாதம் அனு
21. தினம் பணிவோன், ஆவுடையார்பதம் அனுதினம் மறவோன், சூரியகுலத்தில்த் தோ

22. ன்றிய வள்ளல் ஸ்ரீமது அருணாசல வணங்காமுடித் தொண்டைமானாரவர்கள் திருவா
23. வடுதுறைப் பண்டாரமவர்களுக்கு மயேசுர பூசைக்குக் கிறாமத்துக்குப் பட்டையம் கு
24. டுத்தபடி கிறாமமாவது மணமேல்க்கொடி மாகாணத்தில் மணமேல்க்கொடி
25. க்குத் தெற்கு, ஆயிப்பட்டண(த்து)க்கு மேற்கு, மண்ணச்சிப்பட்டணம் வெட்டும் பெருமாள் ே
26. காட்டைக்கு வடக்கு, மூலைவயலுக்குக் கிழக்கு தப்பாதான்வயல் நஞ்சை புஞ்சை தி
27. ட்டுத் திடலுள்பட ஊரதுபுரவு குளப்பிறமாணப்படிக்குச் சறுவமானியமா
28. கக் கட்டளையிட்டபடியினாலே இதுவே பட்டையமாகக் காட்டிக்கொண்டு கீழ்நோக்கி
29. ய[1] விருட்சமும் உள்ளவரைக்கும் சந்திராதித்தவரைக்கும் ஆண்டனுபவித்துக் கொண்
30. டு மயேசுரபூசை நடத்திவிச்சுக்கொண்டு சுகத்திலேயிருக்கவும். இந்த தற்மத்தை யா
31. தாமொருத்தர் பரிபாலனம் பண்ணினபேர்கள் அனேகம் கோதான பூதான கன்னிகாதானம்
32. அக்கிறாகரப் பிரதிஷ்ட்டை பண்ணினபலன் பெற்றுக் கயிலாசிவாசியா யி
33. ருப்பார்கள். இந்தப்படிக்கு இந்தப் பட்டையம் எழுதின நன்மைக்கு அட்டவணை வீரப்பன்
34. கைய்யெழுத்து. உ.

இரண்டாம் பக்கம்

35. இந்தத் தன்மத்தை யாதாமொருவர் பரிபாலனம் பண்ணி
36. னபேர் கோடி கன்னிகாதானம் பண்ணினபலன் பெறுவா
37. ர்கள். அகுதம் பண்ணினபேர் கெங்கைக் கரையிலே கார
38. ாம் பசுவையும், சேதுக்கரையிலே பிராமணனைக் கொன்ற
39. தோஷத்திலே போவாராகவும். உ. ஆவுடையார் துணை.

1. கிணறும் மேல்நோக்கிய - என்ற பகுதி இங்கு விடுபட்டுள்ளது.

40. இந்த பட்டையம் யெழுதி(ன)வன் ஆவு(டை)யார் கோவில்யிருக்கும்
41. மகிழ்ராவணம் ஆசாரி உ.

20. நாட்டாணிச் செப்பேடு

இருக்கும் இடம் : அரசு அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை
அரசர் : முத்து வணங்காமுடித் தொண்டைமானார்
காலம் : 17-9-1740
மொழி : தமிழ்

அமைப்பும் செய்தியும்

இச் செப்பேட்டின் முதல் பக்கம் நடுநாயகமாக அழகிய இரத்தின சிம்மாசனம் என்னும் பீடத்தின்மேல் திருவாரூர்த் தியாகராசரும் கமலாலய அம்மனும் எழுந்தருளியுள்ளனர். மலர் மாலைகள் பல சாத்திப் பெரும்பகுதி உருவம் மறைக்கப்பட்டுள்ளது. மேலே இருபுறமும் சூரியனும், சந்திரனும் வரையப்பெற்றுள்ளனர். தியாகராசருக்கு இருபுறமும் கணேசராகிய மூத்த பிள்ளையாரும், சுப்பிரமணியராகிய இளையபிள்ளையாரும் உள்ளனர். கீழே இருபுறமும் பதஞ்சலி முனிவரும், வியாக்ரபாதரும் வணங்கிய நிலையில் உள்ளனர். அனைவரும் வரைகோட்டுச் சிற்பத்தில் வரையப்பட்டுள்ளனர். இதேபோன்ற சிற்பம் வேறு சில திருவாரூர்ச் செப்பேடுகளிலும் உள்ளன. இச்செப்பேட்டை மைய அரசின் தொல்லியல் அளவீட்டுத்துறையின் கல்வெட்டுப் பிரிவினர் படி எடுத்துள்ளனர்.[1]

பொதுவான பிற்கால அரசர் புகழ்மொழிகளுடன் தொண்டைமான் மரபுப் புகழ்மொழிகள் பலவும் கூறப்பட்டுள்ளன.

சிதம்பர வணங்காமுடித் தொண்டைமானார் மகன் முத்துவணங்காமுடித் தொண்டைமானாரவர்கள் திருவாரூர்த் தியாகராச சுவாமியார் அபிடேகம் நெய்வேதனத்துக்குச் சர்வ கட்டளைப் பரதேசிமுத்திரை மாசிலாமணித் தம்பிரான் அவர்கள் வசம் ஆலத்தூர்

1. ARE (A) 27 of 1946; குடவாயில் பாலசுப்பிரமணியம், திருவாரூர்த் திருக்கோயில், தியாகராசசுவாமி திருக்கோயில் வெளியீடு, திருவாரூர், 1988, பக். 313 – 315

மாகாணத்தில் உள்ள நாட்டாணி என்னும் ஊரைச் சருவமானியமாக இறை, வரி, ஊழியம் உள்பட அளித்ததை இச்செப்பேடு கூறுகிறது.

மண்ணும் விண்ணும், கல்லும் காவிரியும் உள்ளமட்டும் சந்திரசூரியர் உள்ளவரை அக்கொடை நிலைக்க வேண்டிக் கொடுத்ததாகக் கூறப்பட்டுள்ளது. (பொதுவாக எல்லாக் கொடைகளும் இவ்வாறே கூறிக் கொடுக்கப்பெறும்.) தொண்டைமானார் தம் மரபினர் இத்தானத்தைப் பரம்பரை பரம்பரையாகப் பாதுகாக்கவேண்டும் என்றும் தம் விருப்பத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சாசனம் எழுதியவர் சோமாக்கந்த ஆசாரி என்பவர். சோமாஸ்கந்தர் என்று இறைவன் (தியாகராசர்) பெயரை அவ்வூர் ஆசாரியருள் ஒருவர் வைத்திருந்தமை சிறப்புக்குரியது. பிற செப்பேடுகளில் கூறப்படுவதுபோலக் கொடை அளிக்கப்பெற்ற கிராமத்தின் எல்லைகள் இச்செப்பேட்டில் குறிக்கப்பெறவில்லை.

மூலம்

முதல் பக்கம்

ஆவுடையாரே துணை

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சாகப்தம் 1662 இதன்மே
2. ல்ச் செல்லாநின்ற ரவுத்திரி நாம ஸம்வத்ஸரம் புரட்ட
3. ாசி மீ 16 தீப் பூறுவபட்சமும் சுக்கிறவாரமுஞ் சத்தமியும்
4. ரோகிணி நட்செத்திரமும் சுபயோக சுபகரணமும் பெற்ற பு
